# வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000

## மூன்றாம் பாகம்

அருள்நிதி
மன்னார்குடி பானுகுமார்

**விஜயா பதிப்பகம்**
*20, ராஜ வீதி,*
*கோயம்புத்தூர் - 641 001.*
vijayapathippagam2007@gmail.com

© விஜயா பதிப்பகம்

நூலின் பெயர் : **வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 - மூன்றாம் பாகம்**

ஆசிரியர் : மன்னார்குடி பானுகுமார்

முதல் பதிப்பு : ஆகஸ்ட் 2010

வெளியீடு : **விஜயா பதிப்பகம்**
20, ராஜ வீதி,
கோயம்புத்தூர் - 641 001.
✆ 0422 - 2382614 / 2385614

ஒளியச்சு / புத்தக வடிவமைப்பு : ஐரிஸ் கிராபிக்ஸ், கோவை.

அட்டை வடிவமைப்பு : ஆர்.சி. மதிராஜ், சென்னை.

அச்சாக்கம் : ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை - 5.

பக்கம் : 208

விலை : ரூ.100/-

**ISBN - 81-8446-282-4**

**VEDHADHRI MAHARISHIYIN PONMOZHIGAL 5000 PART - III**

Author : Mannarkudi Banukumar

First Edition : August 2010

Published By : **VIJAYA PATHIPPAGAM,**
20, Raja Street, Coimbatore - 641 001.
✆ 0422 - 2382614 / 2385614

Layout & Laser Type set : IRIS Graphics, Coimbatore.

Cover Design : R.C. Mathiraj, Chennai.

Printed At : Jothi Enterprises, Chennai - 5.

Pages : 208

Price : Rs.100/-

**புலவர். க. தியாகராஜன்** **அறிவுத் திருக்கோயில்**
**பேராசிரியர்** **ஆழியார்.**

# ஞானப்பெட்டகம்

அறிஞர்களின் கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்வது பொன் மொழியாகும். அந்த வகையில் அருட்தந்தையின் உபதேசங்களை பொன் மொழிகளாகத் தொகுத்துள்ளார் நமது ஞானச்செல்வர் பானுகுமார்.

கடமையைக் கடவுள் பணியாக ஆற்றி வருபவர். செய்வன வற்றைத் திருந்தச் செய்யும் பண்பாளர். அவர் எண்ணத்தால், சொல்லால், செயலால், எழுத்தால் பலருக்கும் உதவிவரும் பெருந் தகையாளர். அருட்தந்தையின்மீது அளவற்ற குருபக்தி கொண்டவர். இவரது குடும்பமே அருட்தந்தையின் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. குருவின் நூறாவது பிறந்த நாளுக்கு, குருகாணிக் கையாக, அருட்தந்தையின் ஐயாயிரம் பொன்மொழிகளை ஐந்து தொகுப்பாக வடிவமைத்து உள்ளார்கள்.

இந்நூல் மாணவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், சொற் பொழிவாளர்கள், வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு விடைதேடுபவர்கள் - வாழ்க்கை கல்வி பயில விரும்புபவர்கள் ஆகிய பலதரப்பட்ட மக்களுக்கும் நண்பனாக நல்லாசிரியராக வழிகாட்டும்.

உலக வாழ்க்கை, ஞானவாழ்க்கை மட்டுமல்லாது அரசியல் முதல் ஆன்மீகம் வரை, அனைத்துத் துறைகளிலும் மானுடத்திற்கு இந்நூல் வழிகாட்டிக் கொண்டிருக்கும். இந்நூல் ஒரு **ஞானக் களஞ்சியம்; ஞானப்பெட்டகம்; ஞான அகராதி; ஞானப்பட்டறை.** உலகம் உள்ள வரை மானுடத்தை வழிநடத்திச் செல்லும் என்பது உண்மை.

அன்புடன்
**புலவர். க. தியாகராஜன்**

*பானுகுமார் எம்.ஏ., எச்.டி.சி.*
FREELANCE JOURNALIST.,

***பி.58, ஏழாவது குறுக்குத்தெரு,***
***அண்ணாநகர், செங்கற்பட்டு.***
E-mail: banukumar.v@gamil.com

# குரு காணிக்கை

***“எந்தக் காட்சியை அகக்காட்சியாக, இறைவன் காட்சியாகக் கண்டேனோ, அந்த நிலைக்கு, என் அறிவைக் கொண்டு உங்களைத் தூக்கிக்கொண்டுபோய் அந்தக் காட்சியைக் கொடுக்கிறேன்”***

*- அருள்தந்தை.*

*அண்மையில், ‘வேதாத்திரிய சிந்தனைகள்’ என்ற புத்தக வெளியீட்டு விழாவிற்குச் சென்றிருந்தேன். ‘வேதாத்திரியத்தின் பெருமை உலகுக்கு எப்போது புரியும்?’ என்று அப்புத்தகத்தில் ஆசிரியர் வினா எழுப்பி இருந்தார். புத்தகத்தின் சிறப்பினை பேசி முடித்தபின், ஆசிரியரின் வினாவுக்குப் பதிலளித்தேன். இதனை இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.*

*“ஒரு மகானின் பெருமையை அல்லது அவரது கருத்துக்களை உலகம் உணர வேண்டும் என்றால், அந்த மகானுக்கு திறமைவாய்ந்த சீடர்கள் அமைய வேண்டும். அவரைப் பற்றி மற்றவர்கள் அதிகமாகப் புத்தகங்கள் எழுதவேண்டும்”.*

**இயேசுவிற்கு** *புகழ்பெற்ற 12 சீடர்கள் இருந்தனர்.* **ஸ்ரீராம கிருஷ்ணருக்கு** *விவேகானந்தர் உட்பட 16 சீடர்கள் இருந்தனர்.* **புத்தருக்கும்** *திறமை வாய்ந்த பல சீடர்கள் இருந்தனர். இந்த சீடர்கள் உலகம் முழுவதும் தங்கள் குருவின் கருத்துக்களை, பெருமைகளை பரப்பினார்கள். இந்தச் சீடர்களைப்போல் வேதாத்திரிய சீடர்களும் குருவின் கருத்துக்களை உலகம் முழுவதும் பரப்ப தன்னலமற்ற தொண்டு புரிய முன்வரவேண்டும்.*

*அடுத்து, ஒரு மகானின் பெருமையை உலகம் புரிந்து கொள்ள வேண்டுமாயின், அந்த மகானைப் பற்றிய நூல்கள் அதிகமாக வெளிவர வேண்டும்.*

*மகாத்மா காந்தி எழுதிய புத்தகங்கள் குறைவு. ஆனால் அவரைப் பற்றி எழுதியவர்களின் புத்தகங்கள் அதிகம். இராமலிங்க*

வள்ளலார் எழுதிய நூல்களைவிட, அவரது நூல்களைப் பற்றி வெளிவந்த நூல்கள் அதிகம். திருவள்ளுவர் எழுதிய நூல்களைவிட, அவரது ஒரு குறள் பற்றி வெளிவந்த நூல்கள் ஏராளம்.

**வேதாத்திரியத்தைப் பற்றி அதிகளவு புத்தகங்கள் வெளிவர வேண்டும். இம்முயற்சிக்கு அருட்தந்தையின் சீடர்கள் ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டும். வேதாத்திரியத்தைப் பற்றி ஏராளமான நூல்கள் பல மொழிகளில் வரவேண்டும்.**

***புத்தகங்கள் மாமனிதர்களை உருவாக்கி இருக்கின்றன. பகவத்கீதை, அரிச்சந்திரன் கதை, ஜான் சங்கினின் 'அண்டு டு தி லாஸ்ட்' ஆகிய புத்தகங்கள்தான், காந்திஜி என்ற மகாத்மாவை உருவாக்கியது. விவேகானந்தரைப் பற்றிய ஒரு புத்தகம்தான், சுவாமி சத்பவானந்தரை உருவாக்கியது. இதைப்போல் அருட்தந்தையின் கருத்துக்கள் அடங்கிய புத்தகங்கள் அதிகளவில் வந்தால்தான் மாமனிதர்கள் தோன்றுவார்கள்.***

வேதாத்திரியத்தின் புகழ் விரைவில் உலகெங்கும் சென்றுவிடும். அவரது கருத்துக்களை உலகம் ஏற்றுக்கொள்ளும். அவரது இலட்சியக் கனவான உலக சமாதானம் நிச்சயம் வந்துவிடும்.

அன்று பேசிய கருத்துக்களின் தாக்கம்தான் இந்தப் புத்தகம். உலகெங்கும் புகழ்பெற்றுள்ள மகான்கள், அறிஞர்கள் - சான்றோர்கள் ஆகியோர்களின் பொன்மொழிகள் அடங்கிய புத்தகங்கள் வெளி வந்துவிட்டன. நமது ஞானத்தந்தையின், ஞானகுருவின், ஞான வழிகாட்டியின் பொன்மொழிகள் மட்டும் இன்னும் வெளி வர வில்லையே என்ற ஏக்கம் என்னிடம் இருந்ததுண்டு. இப்பணியினை, என்னிடம்தான் குருநாதர் விட்டுச் சென்றுள்ளார் என்பதை இப்போது பெருமையாகக் கருதுகிறேன்.

சமய காழ்ப்புகள் மறைய, ஏற்றத்தாழ்வுகள் நீங்க, உயர்வு தாழ்வுகள் இல்லாத நிலை மலர, உலக சமாதானம் மலர்ந்திட, இறையை உணர்ந்து போற்றிய மகரிஷியின் மொழியும் அருளுரை களும் மானுடத்திற்குக் கிடைத்த பொற்குவியலாகும்.

குருவின் நூற்றாண்டு நினைவாக, குருவின் பொன்மொழிகளை தொகுத்து ஐந்து பாகமாக அருட்தந்தை வேதாத்திரி மகரிஷிக்கு இத் தொகுப்பினை அர்ப்பணிக்கிறேன்.

இந்நூல் பொன்மொழிகள் அடங்கிய பேழை மட்டுமல்ல; வேதாத்திரிய அறிவுக் களஞ்சியம், உபதேச மரிஞ்ச ஞானக் களஞ்சியம்.

**வேதாத்திரியத்திற்கு ஒரு அகராதி.** பொன்மொழிகளோடு கூடுதலாக இவற்றையும் சேர்த்திருப்பது இந்நூலுக்கு பெருமை சேர்க்கும் என்று நம்புகிறேன்.

இந்நூலை தொகுக்க அவ்வப்போது ஆலோசனை வழங்கிய புலவர் க. தியாகராஜன், அவ்வப்போது மலர்களைக் கொடுத்தனுப்பி வரும் அருள்நிதி தினகரன், வாழ்க்கைத் துணைவியார் அ.நி. பானுமதி குமார், ஞானச்செல்வங்கள் - பிரம்மஞானிகள் நிவேதிதா, நரேந்திரன், தவமைய அன்பர்கள் மற்றும் ஆர்வத்துடன் இந்நூலை வெளியிட்ட பாசமிகு சகோதரர் திரு. மு. வேலாயுதம் ஆகியோர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குருவின் புகழை, அவரது உபதேசங்களை உலகெங்கும் கொண்டு செல்வோம். குருவின் வாழ்த்தினைப் பெற்று வளமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

செங்கற்பட்டு
*25-05-2010*

குருவின் தொண்டில்
***பானுகுமார்***

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | அகத்தவம் | 15 |
| 2. | அகத்தவத் தொண்டு | 16 |
| 3. | அகத்தாய்வு | 17 |
| 4. | அகநோக்குப் பயிற்சி | 17 |
| 5. | அச்சம் | 18 |
| 6. | அடக்கி ஆளாதே | 18 |
| 7. | அடிப்படைத் தத்துவங்கள் | 18 |
| 8. | அடிமை நிலை | 19 |
| 9. | அடிப்பவனும் அடிபடுபவனும் | 19 |
| 10. | அத்வைதம் துவைதம் விசிட்டாத்வைதம் | 19 |
| 11. | அநாதி | 20 |
| 12. | அநீதி | 20 |
| 13. | அம்மா பொண்ணு | 20 |
| 14. | அமைதி | 21 |
| 15. | அமைதியான வாழ்க்கை | 23 |
| 16. | அயரா விழிப்பு | 23 |
| 17. | அயனாச பிரம்மம் | 23 |
| 18. | அய்யப்பன் | 23 |
| 19. | அரசாட்சி | 24 |
| 20. | அரசியல் | 24 |
| 21. | அரசியல் சட்டம் | 24 |
| 22. | அல்லவை நீங்க | 24 |
| 23. | அலை | 26 |
| 24. | அலை இயக்கம் | 26 |
| 25. | அலை நீளம் | 27 |
| 26. | அரண்கள் | 28 |
| 27. | அவமதிப்பு | 28 |
| 28. | அளவுமுறை | 28 |
| 29. | அள்ளுதல் கிள்ளுதல் துள்ளுதல் | 28 |
| 30. | அறம் | 29 |
| 31. | அற உணர்வு | 30 |
| 32. | அறம் செய்ய விரும்பு | 30 |
| 33. | அற உணர்வு | 31 |
| 34. | அறநெறிகள் | 31 |
| 35. | அறநெறி வாழ்வு | 32 |

36. அறம்பிழையாய் 33
37. அறிதுயில் 33
38. அறிஞர்கள் 33
39. அறிஞர்கள் பெருநோக்கம் 34
40. அறிஞர்கள் கடமை 35
41. அறிந்தோர் கடமை 35
42. அறிவாட்சித் தரம் 35
43. அறிவின் ஆதிநிலை 36
44. அறிவாட்சி மலர 36
45. அறிவறிந்தோர் 36
46. அறிவுச் சாதனை 36
47. அறிவு நிலையில் வேறுபாடு 37
48. அறிவின் உணர்நிலை 38
49. அறிவின் தெளிவு 38
50. அறிவு 38
51. அறிவுத் திருச்சபை 43
52. அறிவும் மனமும் 44
53. அறிவு வளர்ச்சி 44
54. அறிவு வறுமை 45
55. அறிவிற்கு ஓய்வேது 45
56. அறிவின் பருவங்கள் 45
57. அறிவை அறிய 46
58. அறிவு மலர 46
59. அறிவு நிலை 47
60. அறிவுரை 47
61. அறிவு நிறை 47
62. அறிவுத் திருக்கோயில் 47
63. அறிவே தெய்வம் 48
64. அறியாமை 48
65. அறியாமை - அலட்சியம் - உணர்ச்சிவயம் 49
66. அறிவாற்றல் 49
67. அருட்காப்பு 49
68. அருட்பேராற்றல் 49
69. அருட்பேராற்றலின் வடிவங்கள் 50
70. அருட்பேராற்றலின் அன்புக்குரல் 50
71. அருள்துறை 51
72. அருள்நெறி 51
73. அருள் வாழ்த்து 51
74. அன்பு 51
75. அன்பும் பாசமும் 52
76. அன்பு வள்ளல்கள் 53
77. அன்புரைகள் 53
78. அன்பு நிறை 54
79. அன்பும் கருணையும் 54
80. அன்பொளி 56
81. அனைவருக்கும் சொந்தம் 57
82. அனுமானம் 58
83. அணு 58
84. அணுசக்தி 60
85. அணுகுண்டு 60
86. அணுஉலை 64

87. அணுவிஷம் 64
88. ஆக்கத்துறை 64
89. ஆக்கினை 65
90. ஆக்கம் - தேக்கம் - ஊக்கம் - தாக்கம் 65
91. ஆதினங்கள் 66
92. ஆசை 66
93. ஆசை பேராசை கடும் பற்று 68
94. ஆட்டக்களம் 69
95. ஆதி 69
96. ஆட்சி 69
97. ஆட்சிமுறை 71
98. ஆடு கொடுத்த சாபம் 72
99. ஆஸ்திகம் நாஸ்திகம் 72
100. ஆவி 72
101. ஆயுள் 73
102. ஆராதனை 73
103. ஆராய்ச்சி 73
104. ஆலயம் 73
105. ஆளுமை வளம் 74
106. ஆறாவது அறிவு 74
107. ஆற்றல் 76
108. ஆறு சிறப்புகள் 76
109. ஆறு குணங்கள் 77
110. ஆஸ்துமா 77
111. ஆனந்தம் 77
112. ஆன்மா 77
113. ஆன்மாவின் மூன்று நிலைகள் 78
114. ஆன்மீகம் 79
115. ஆன்மீக அறிவு 79
116. ஆன்மீகக் கல்வி 79
117. ஆன்மீக நிலைகள் 80
118. ஆன்மீகப் பயணம் 80
119. ஆன்மீகப் போர்வையில் 80
120. ஆன்மீக ரகசியம் 81
121. ஆன்மீக வழி வாழ்வு 81
122. ஆன்மீக குரு 82
123. ஆன்ம நிலை 82
124. ஆன்மீக நூல் 82
125. ஆன்மீக நெறி 82
126. ஆன்மீகப் பயிற்சி 82
127. ஆன்மீக முயற்சி 82
128. ஆன்மீக விழிப்பு 83
129. ஆசிர்வாதம் 83
130. ஆன்மீக முன்னேற்றம் 83
131. ஆன்மீக மேம்பாடு 83
132. ஆன்மீக வளர்ச்சி 84
133. ஆன்மீக விளக்கம் 84
134. ஆன்மீக விழிப்புணர்ச்சி 84
135. ஆன்றோர் கடமை 85
136. ஆணவம் 85
137. ஆண்டவன் 85
138. ஆண்டான் அடிமை 86

139. ஆண்கள் 86
140. ஆண் பெண் 88
141. இசை 88
142. இயக்க நியதி 88
143. இயல்பு நிலை 88
144. இயற்கை 88
145. இயற்கையின் இயக்க வேறுபாடுகள் 92
146. இயற்கையின் இயக்க ஒழுங்கு 92
147. இயற்கை கருவூலம் 93
148. இயற்கைத் தத்துவம் 93
149. இயற்கையும் எண்ணமும் 93
150. இயற்கை நியதி 93
151. இயற்கை கம்ப்யூட்டர் 94
152. இயல்பூக்கம் 94
153. இன்சொல் 94
154. இன்ப துன்பம் 95
155. இன்பமயம் 95
156. இன்பம் 95
157. இன்ப உணர்வு 95
158. இலக்கியம் 96
159. இலக்கணம் 96
160. இல்வாழ்வு 97
161. இல்லறம் 97
162. இல்லறத்தார் 98
163. இல்லற நோன்பு 98
164. இல்லறமும் துறவறமும் 98
165. இறப்பு 99
166. இறை ஆற்றல் 99
167. இறைநிலை 99
168. இறைநிலை உணர்ந்த அறிவு 104
169. இறைநிலைத் தவம் 104
170. இறைநிலை தன்மாற்றம் 105
171. இறைநீதி 105
172. இறைவன் 105
173. இறைவனின் கம்ப்யூட்டர் 107
174. இறைவணக்கம் 108
175. இறைவெளி 108
176. இறையுணர்வு 109
177. இறைவழிபாடு 111
178. இறைத்துகள் 112
179. இறைவனின் பேச்சு 113
180. இருப்பு நிலை 113
181. இன்ப ஊற்று 114
182. ஈசன் 115
183. ஈகை 115
184. ஈட்டலினும் காத்தல் வேண்டும் 116
185. ஈரேழுலகம் 117
186. உடல் 117
187. உடல் கழிவு 120

188. உடல் காந்தம் 120

189. உடல் வளம் 121

190. உடற்பயிற்சி 121

191. உடல் நலம் 122

192. உதவி 123

193. உபநயனம் 124

194. உயர்ந்த இலட்சியம் 124

195. உயர்வு 125

196. உயர் கருத்து 125

197. உயர்வு தாழ்வு மனப்பான்மை 125

198. உயர்புகழ் 126

199. உயிர் 126

200. உயிர்நிலை 128

201. உயிராற்றல் 128

202. உயிர் உணர்வு 129

203. உயிரறிவு 129

204. உயிர்காந்தம் 130

205. உலகம் 130

206. உலகக் குடும்பம் 130

207. உலக அமைதி தோன்றிய விதம் 131

208. உலக சமாதானம் 131

209. உலக சரித்திரம் 131

210. உலகம் உய்ய 131

211. உலகப் பொது ஆட்சி 132

212. உலகப் பேரரசு 132

213. உலக சகோதரத்துவம் 132

214. உலக சமாதானத் திட்டம் 132

215. உலக சமுதாய சேவா சங்கம் 133

216. உலகயுத்தம் 134

217. உலகை அழிக்கலாமா? 134

218. உரிமை 134

219. உரிமைத் தத்துவம் 135

220. உருவ வழிபாடு 135

221. உவமை 136

222. உழைப்பு 136

223. உளப்பயிற்சி 136

224. உள்ளது உள்ளபடியே 136

225. உள்ளம் 137

226. உள்ளுணர்வு 137

227. உள்ளத்தை உணர்தல் - நல்லதைச் செய்தல் - அல்லதை விடுதல் 137

228. உரிமை 138

229. உறக்கம் 138

230. உறவு 139

231. உணர்வு 139

232. உணர்தல் 140

233. உணவு 140

234. உண்மை 141

235. உண்மை உணர்வுக்கு வழி 142

236. உண்மை விளக்கம் 142

237. உணர்ச்சி 143

238. ஊரல் - உரசல் - உறுத்தல் - ஒழுங்கிடுதல் 143
239. ஊற்று 143
240. ஊழ் 144
241. எத்தர்கள் 144
242. எதைவிடலாம் 144
243. எதிர்காலம் 145
244. எதிர்பார்த்தல் 145
245. எண்ணம் 147
246. ஏமாற்றம் 154
247. ஏமாற்றும் நிகழ்ச்சிகள் 154
248. எண்ண அலைகள் 155
249. ஏழ்மை 156
250. எழுத்து 156
251. ஏழு தலைமுறைகள் 156
252. ஏழு பிறவிகள் 156
253. ஐங்கரன் 157
254. ஐந்து துறைகள் 157
255. ஐந்து ஒழுக்கப் பண்பாடு 157
256. ஐவகை அறிவு 158
257. ஐம்புலன்கள் 158
258. ஐயுணர்வு 158
259. ஐயுணர்வும் மெய்யுணர்வும் 159
260. ஐந்து பழி 160
261. ஒத்துப்போதல் 161
262. ஒத்துழைப்பு 161
263. ஒப்புக்கொள்ளுதல் 161
264. ஓமம் - தருமம் - தவம் 161
265. ஒன்றுமில்லாதது 161
266. ஒழுக்கம் 162
267. ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள் 163
268. ஒழுங்கமைப்பு 163
269. ஒளி விளக்கு 163
270. ஒற்றுமை 164
271. ஒருமைத் தத்துவம் 164
272. ஓர் உலக ஆட்சி 165
273. ஓய்வு 165
274. ஒவ்வாமை 165
275. ஓவியம் 166
276. கடமை 166
277. கடன் 167
278. கடவுள் 168
279. கடவுள் வணக்கம் 168
280. கடவுளுக்கு மரியாதை 169
281. கடவுளைத் தேடாதே 169
282. கட்சி 169
283. கருத்து 170
284. கருத்துப் பிணக்கு 170
285. கருவிலே திரு 170
286. கருமையம் 170
287. கருமையப் பதிவுகள் 173
288. கலாச்சாரம் 173

289. கவலை 174
290. கலாசாலை 175
291. கல்வி 175
292. கற்பனை மயக்கம் 177
293. கற்பொழுக்கம் 177
294. கணவன் மனைவி 177
295. காசு 178
296. காந்தம் 178
297. காந்த அலைகள் 180
298. காதல் 180
299. காயகல்பம் 180
300. காயகல்ப விதிகள் 181
301. காயகல்பப் பயிற்சியின் நன்மைகள் 181
302. காய்கறி ஆகாரம் 183
303. குடும்பம் 183
304. குடும்ப அமைதியின்மை 183
305. குழந்தைகள் 184
306. குழந்தைகளுக்கு அறிவுரை 185
307. குரு 186
308. குருவின் சேர்க்கை 186
309. குருவின் உதவி 187
310. குறை 187
311. குறைபாடு 187
312. குறுகிய நோக்கம் 188
313. குற்றம் 188
314. குற்றங்கள் பிறக்குமிடம் 188
315. குற்றவாளி யார் 189
316. குண்டலினி யோகம் 190
317. கூர்தலறம் 190
318. கூலி 190
319. கூட்டுறவு 191
320. கூட்டு வாழ்வு 191
321. கூட்டுப் பண்ணை 192
322. கெட்ட எண்ணம் 192
323. கேடு 192
324. கொடுஞ்செயல்கள் 192
325. கொலைத் திருட்டு 192
326. கொள்கை 193
327. கோபம் 193
328. ஞானக்கன் 193
329. ஞானம் 193
330. ஞானவழி 195
331. ஞானயோகம் 195
332. ஞானியர்கள் 195
333. ஞாபகம் 195
334. சங்கற்பம் 195
335. சடங்குகள் 196
336. சட்டம் 196
337. சமத்துவம் 196
338. சமூகப்பிளவு 196
339. சந்தோஷச் செய்தி 197
340. சாதி 197
341. சினம் 197

| | | |
|---|---|---|
| *342.* | சீவகாந்தம் | *198* |
| *343.* | சிக்கல் | *198* |
| *344.* | சீர்திருத்தம் | *198* |
| *345.* | சுதந்திரம் | *198* |
| *346.* | செயல்விளைவு | *198* |
| *347.* | செல்வம் | *199* |
| *348.* | சொல்லெங்கே? செயலெங்கே? | *199* |
| *349.* | சொந்தம் | *200* |
| *350.* | சொரூபம் | *200* |
| *351.* | சோம்பேறி | *200* |
| *352.* | தத்துவங்கள் | *200* |
| *353.* | தமிழன் | *200* |
| *354.* | தவறு | *201* |
| *355.* | தவமுறை | *201* |
| *356.* | தள்ளவேண்டியவை | *201* |
| *357.* | தவிர்த்தல் | *202* |
| *358.* | தன்னடக்கம் | *202* |
| *359.* | தாவர இனங்கள் | *202* |
| *360.* | தானம் | *202* |
| *361.* | திருவிழா | *203* |
| *362.* | திரைப்படத்துறை | *203* |
| *363.* | திருமணம் | *203* |
| *364.* | தொழில் | *204* |
| *365.* | தொண்டு | *204* |
| *366.* | தொண்டு நிலையம் | *204* |
| *367.* | தெய்வம் | *205* |
| *368.* | தெய்வநிலை | *205* |

# வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 [மூன்றாம் பாகம்]

## 1. அகத்தவம்

- தியானம் என்ற வடமொழிச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் 'அகத்தவம்' ஆகும்.

- உயிர்மேல் மனத்தைச் செலுத்தி, அமைதி நிலைக்கு வந்து, அவ்வமைதியின் மூலம் சிந்தனையை சிறப்பித்து, அறிவை வளப் படுத்தி, வாழ்வில் நலம் காணும் ஒரு சிறந்த உளப்பயிற்சிதான் அகத்தவம் ஆகும்.

- ஆன்மாவை அறிந்து கொண்டால், அதன் உள்ளும் புறமும் இறைவனே இயங்குகின்றான் என்பதை உணர்ந்து கொள்ளலாம். அதற்கான பயிற்சிதான் எளியமுறை தியானம்.

- நமக்குள்ளாக இருப்பது ஆன்மா என்ற உயிர்சக்தி. அதற்கு அழுத்தம் கொடுத்து உணர வைப்பதைத்தான், குத்தி விளக்குவது என்று சித்தர்கள் கூறினார்கள். குத்து என்றால் அழுத்து என்று பொருள். புருவ மையத்தில் அழுத்தத்தை உணர்வாகக் காட்டி உயிரை உணரச் செய்யும் பயிற்சிதான் அகத்தவப் பயிற்சி.

- புலன்களில் இருந்து மனதை விடுவித்துக் கொண்டு, உயிர்மீது மனம் வைத்து உயிருக்கு மூலமான மெய்ப்பொருளை நோக்கிச் செல்லும் மனதின் உள்நோக்கிய உயர்நிலைப் பயணமே, அகத்தவம் ஆகும்.

- தோற்றப் பொருட்கள் பற்றி அறியும் விஞ்ஞான அறிவோடு - தோன்றாத மறைபொருட்களாக உள்ள மனம், உயிர், மெய் இம் மூன்றையும் அறிய வேண்டும். இதற்கு முறையான உளப் பயிற்சியான அகத்தவம் (தியானம்) ஒன்றுதான் சிறந்த வழி.

❖ வாழ்க்கைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள மக்கள் அனைவருக்கும், அகத்தவம் இன்றியமையாத் தேவையாகும்.

❖ அகத்தவம் என்றால் அகமாக உள்ள ஆன்மாவை உணர்ந்து அதன் மூலம் அறிவைத் தெளிவாக உணர்ந்து கொள்வது தான். அகத்தவம் அன்றி அறிவைப் பற்றி உணர்ந்து கொள்வது இயலாது. இத்தகைய அகத்தவம்தான் குண்டலினியோகம் எனப்படுகிறது.

❖ சிறந்த வழியில் மனச் சூழல் விரைவைக் குறைத்துப் பழக வேண்டும் என்பதே அகத்தவம் என்று பேசப்படுகிறது.

❖ கருமையத்திலிருந்து ஜீவகாந்த அழுத்தத்தைக் குருவின் மூலமாக கொண்டு வந்து புருவ மத்தியாகிய ஆக்கினையிலும், தலை உச்சியாகிய துரியத்திலும் அமர்த்தி, மன அலைகளை அதனோடு இணைத்து, கூர்ந்தும் ஆழ்ந்தும் வயமாகும் ஒரு பயிற்சியே அகத்தவம் ஆகும்.

❖ நல்ல முறையில் மனதுக்கும் அறிவுக்கும் உள்ள வேறுபாடு, ஒற்றுமையை உணர்வதற்கு, அதே மனதை உள்ளடக்கி, அறிவாக இருக்கக் கூடிய உயிர்ச்சக்தி மையத்தில் மனதை ஒடுக்கி, நிறுத்தி நிறுத்தி, மனதை அலை நிலை நிலையிலேயும் அறிவாக அறிந்து, அதே அறிவுதான் பிரபஞ்சம் முழுவதும் இறைவனாக இருக்கக் கூடிய நிலையை அறிந்து கொள்வதற்கு ஏற்ற பயிற்சிதான் அகத்தவம்.

## 2. அகத்தவத் தொண்டு

✠ இறைவா! உனது இருப்பு நிலை தூயவெளியென்று உணர்ந்து கொண்டேன். உன்னிலிருந்து நுண்துகளாக எழுந்த விண் துகளையும் அதன் சுழலால் ஏற்படுகின்ற விரிவலையையும் அந்த விரிவலையே காந்தமென்ற சிறப்படைந்து அழுத்தம் ஒலி ஒளி சுவை மணம் ஆகவும் பஞ்ச பூதங்களில் தன்மாற்றம் பெறுவதையும், உயிரினங்களில் அது தன்மாற்றம் மனம் ஆகவும் இயங்குவதையும் உணர்ந்து கொண்டேன். உனது காந்த ஆற்றலின் சிறப்பால் செயலுக்கு ஏற்ற விளைவு உண்டாகிறது. இந்த நீதியை ஒவ்வொருவருக்கும் உணர்த்தி விட்டாய். இந்த உண்மைகளை அறியாமல், தவறு செய்து துன்பம் அனுபவித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கும் மனித குலத்திற்கு, உன்னை

உணர்த்தி, நீதியை உணர்த்தி, அறவழி வாழச் செய்யும் அகத்தவத் தொண்டை என் கடமையாக ஏற்றுக் கொண்டு அறவழி வாழ்கின்றேன்.

## 3. அகத்தாய்வு

✡ காலையிலும் மாலையிலும் பத்து நிமிட நேரம் அமைதியாக உட்கார்ந்து உள்ளத்தை சோதனையிடும் பணியைத் தொடங்குங்கள். முப்பது நாட்களில் கிடைக்கும் வெற்றியை அனுபவத்தில் கண்டு மகிழுங்கள்.

✡ அகத்தாய்வை வாரம் ஒரு முறை, மாதம் ஒருமுறை என்று அவ்வப்போது செய்ய வேண்டும். கணத்துக்குக் கணமும் செய்ய வேண்டும். அப்போதுதான் குணநலப் பேறு வரும். முழுமைப்பேறு வரும்.

✡ ஒவ்வொரு செயல்முடிவிலும் விளைவைக் கணித்து, தான் செய்த முறை, அதில் விளைந்த தவறுகள் அல்லது நன்மைகள் இவற்றைச் சிந்தித்து உணர்வது: ஒவ்வொரு நாளும் இரவு படுக்கும்முன் அன்று தான் செய்த செயல்களனைத்தையும் நினைவிற்குக் கொண்டு வந்து தன் செயல்களைச் சோதிப்பது: செயலில் தவறு கண்டால் இனி அத்தவறு ஏற்படாது உறுதி கொள்வது: நலமாக இருந்தால் அந்த முறையை அழுத்தமாக மனத்தில் பதிவு செய்து கொள்வது: இவை அனைத்தும் இணைந்த முறையே அகத்தாய்வுச் செயலாகும்.

✡ அகத்தவத்தில் உயிர்மேல் மனம் வைத்து அறிவை அமைதி நிலைக்கு கொண்டு வருவது முதற்செயல். உயிரை உணர்வாய்ப் பெறும் இந்தத் தவமுறையைக் குருவின் மூலமே கற்றுக் கொள்ள வேண்டும். பிறகு இதுவரையிலும் அறிவிலே பதிந்துள்ள வினைப் பதிவுகளின் தன்மையுணர்ந்த நலம் விளைக்கும் புதிய முறையிலே திருப்பிப் பழக்கும் முறை அடுத்த தொடர்ச் செயல். இவற்றை முறையே மனமடக்க ஓர்மைப் பயிற்சி என்றும் அகத்தாய்வு என்றும் கூறுகிறோம்.

## 4. அகநோக்குப் பயிற்சி

✢ மனம், உயிர், உடல் என்ற மூன்றினது இயல்பையும் ஆற்றலையும் விளைவுகளையும் அறிந்து தெளிந்தாலன்றி வாழ்வினைப்

புரிந்து கொண்டு வாழ்வாங்கு வாழ்வதற்கு இயலாது. தன்னையும் இறைவனையும் உணர்ந்து கொண்ட ஆசான் மூலம், முறையாகப் பயிலுகின்ற அகநோக்குப் பயிற்சியே வாழ்வாங்கு வாழுகின்ற பேரறிவை அளிக்க முடியும்.

## 5. அச்சம்

✦ தவறான செயல்களின் விளைவைக் கண்டோ அல்லது தனது வாழ்வின் போக்கில் ஊறு விளைவிக்கும் என்று கண்டோ அல்லது தனது வாழ்வின் போக்கில் ஊறு விளைவிக்கும் என்று கற்பனை செய்து கொண்டோ துணிவிழந்து வருந்துதல் அச்சமாகும்.

## 6. அடக்கி ஆளாதே

✧ ஒவ்வொருவருக்கும் அறிவு இருக்கிறது. பொறுப்புணர்ச்சி இருக்கிறது. செயல் திறமை இருக்கிறது. வாழ்வின் அனுபவம் இருக்கிறது. இதை ஒத்துக்கொள். பிறரை மேய்ப்பதோ அடக்கி ஆள்வதோ இன்ப ஊற்றைக் கெடுத்து விடும். நலம் செய்வதோடு விட்டுவிடு. செய்த நலத்துக்கு ஈடாக எதையும் எதிர்பார்ப்பதை மறந்து விடு.

## 7. அடிப்படைத் தத்துவங்கள்

★ வாழ்க்கையை முழுமையாக நிறைவோடு வாழும் வகையில், வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களை அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சி, பிரபஞ்சத்தின் இயக்கம் இவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, நாம் உள்ளுணர்வாக உணரக் கூடிய மூன்று அடிப்படைத் தத்துவங்களான சுத்தவெளி, உயிர்ச்சக்தி, காந்தம் ஆகியவற்றின் சிறப்பை அறியலாம்.

★ சுத்தவெளி, உயிர்ச்சக்தி, காந்தம் இந்த மூன்றைப் பற்றியும் ஒருவர் தெளிவாகவும் சந்தேகம் இல்லாமலும் தெரிந்து கொள் வதற்குத் தவறினால் அவர் தத்துவ ஞானத்தையும் சரி - விஞ்ஞானத்தையும் சரி ஆழமாகவும் பூரணமாகவும் தெரிந்து கொள்ள முடியாது.

## 8. அடிமை நிலை

☆ ஒரு பெண் தன் உடலினையே அர்ப்பணித்து உணவு உடை வாடகை போல பெற்றுலாவும் ஒரு இழிந்த அடிமை நிலை பெண்ணினத்திற்கு உலகினிலே இனி வேண்டாம்.

## 9. அடிப்பவனும் அடிபடுபவனும்

✪ யாரையோ அடிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள். அந்த நினைப்புத்தான் வஞ்சம். எவ்வளவோ ஆராய்ச்சி செய்த தற்சோதனை என்று ஒரு பயிற்சி உள்ளது. அதைத்தான் அகத் தாய்வுகளில் கொடுக்கிறோம். பேராசை, கடும் பற்று, சினம், கற்பழிப்பு, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என்னும் ஆறு குணத்திலிருந்துதான் பஞ்ச மகாபாதகங்கள் வந்தன.

✪ ஒருவரை அடித்தால் அந்த அடி எங்கே போய் விழுகிறது? அந்த மனிதனுக்கு உள்ளே இருக்கக்கூடிய இறைவன் மேல்தான். எந்த உடலை எடுத்துக் கொண்டாலும் ஒவ்வொரு அணுவும் இறைவனுடைய நுண் பகுதிதான். அணுக்களால் கட்டப்பட்டு, இறைநிலை உடலாக இருக்கிறது. அப்போது இறைவனைத்தான் நேரடியாக அடிக்கிறோம். இறைவன் என்ன தப்பு செய்தான்?.

✪ நம்மை பிறக்க வைத்து, வாழ வைத்து, எல்லா வசதிகளையும் கொடுக்கிறான். நாம் யாருக்குத் துன்பம் செய்தாலும் அது இறைவனிடம்தான் போய்ச் சேரும். நீங்கள் ஒரு பொருளை வீசி எறியுங்கள். விமானத்தில் போய் மேலே இருந்து எறியுங்கள். அப்பொருள் எங்கே வந்து விழும்? கீழேதான் வந்து விழும். அதுபோல இறைநிலைதான் யாவற்றுக்கும் அடித்தளம். நீங்கள் யார்? இறைவன். அடிப்பது யாரை? இறைவனே இறைவனை அடிப்பது என்றால்?

## 10. அத்வைதம் துவைதம் விசிட்டாத்வைதம்

★ அறிய வேண்டும் அடைய வேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடு, தியானம் அறநெறி இவற்றைப் பின்பற்றி சிறுகச் சிறுக தன் முனைப்பைக் களைந்து, பழிச் செயல் பதிவுகளிலிருந்து விடுபட்டு, மயக்கம் ஒழிந்து, தெளிவு பெற்று வருவதற்குரிய பயிற்சி முறைகள் இருக்கின்றனவே, அவற்றை விசிஷ்டாத் வைதம் என்று சொல்வார்கள்.

☆ எங்கும் நிறைந்த ஒன்றே எல்லாமாக இருக்கிறது. நானுமாக இருக்கிறது என்ற ஒரு தெளிவு வந்துவிட்டால் அது அத்வைதம். அந்த நிலையை உணராமல் முன்னர் நம் முன்னோர்கள் சொல்லி வைத்ததை நம்பி, நாம் இறைசக்தியை வணங்கிக் கொண்டிருக் கிறோம் என்கின்ற பொழுது, அவன் வேறாக இவன் வேறாக வைத்துக்கொண்டு, ஆனால் அதே மதிப்போடு மனதால் நினைத்து வழிபட்டு வருவதுதான் துவைதம்.

## 11. அநாதி

☆ தன்னை அறிந்த பொழுது அறிவின் பூரணம் பெற்று விட்ட பொழுது அதை வீடுபேறு என்று சொல்லுவார்கள். வீடு என்றால் இடம் என்று பொருள். இடம் என்றால் எது இடம்? இப்பொழுது நாம் உட்கார்ந்து இருக்கின்றோம். நமக்குத் தரையானது இடமாக இருக்கிறது. இந்தத் தரைக்கு எது இடம்? இந்த உலக உருண்டைதான் இடம். இந்தப் பூமிக்கு எது இடம்? ஆகாசம்தான் இடம். ஆகாசம் மற்றும் அனைத்துக்கும் - அனை வருக்கும் வீடு சுத்தவெளிதான். அந்த சுத்தவெளிக்கு எது வீடு? எது இடம்? அப்படி எதுவுமே இல்லை. அதுவே அதற்கு வீடாகும். அதற்கு ஒரு வீடற்ற வீடாக இருப்பதனால் ஆதி என்று அதற்குப் பெயர். அதற்கு ஒரு ஆதி இல்லாததனால் அநாதி என்று மற்றொரு பெயர் ஏற்பட்டது. இந்த நிலையை உணர்ந்து கொண்ட பிறகு அந்த நிலையிலேயே நின்று மனம் லயிக்க முடியும்.

## 12. அநீதி

☆ திருமணத்திற்கு பிறகு புகுந்த வீடு வந்துவிட்ட பெண்ணைக் கணவனும் மற்றும் அவர் குடும்ப உறுப்பினர்களும் மனைவியாக - மருமகளாகக் கருதாமல் ஒரு வேலைக்காரியாகவே, அடிமை என்றே மதித்து நடத்துவது, பெரும்பாலான குடும்பங்களில் வழக்க மாகிவிட்டது. இந்த அநீதியான கருத்து மாற்றப்பட வேண்டும்.

☆ ‘நீ இந்த ஊரில் இந்த தேசத்தில் நுழையவோ வாழவோ கூடாது’ என்று யாராவது யாரையாவது தடுப்பது அநீதியாகும்.

## 13. அம்மா பொண்ணு

☆ நீயோ இன்றைக்கு அம்மாவோடு சண்டை செய்து வாழ்ந்து கொண்டு வருகிறாயே! இந்தத் தொந்தரவுகள் எல்லாம் அப்போது

உனக்கு வராமல் பார்த்துக்கொள். அவர்களை நல்ல மாதிரியாக உணர்ந்து கொள். உன் அம்மாவோடு நீ நன்றாகப் பழகத் தெரிந்து கொள்ளவில்லையென்றால், நீ போகும் இடத்தில் உன் குடும்பத்தில், நீ மற்றவர்களோடு பழகக் கூடிய பண்பாடு வருவது சிரமம். இங்கே வரவில்லையானால் மற்றெங்குமே வராது.

☆ எப்பொழுதுமே சில வீடுகளில் அம்மாவுக்கும் பெண்ணுக்கும் தகராறு இருந்து வருகிறது. அப்பாவுக்கும் பெண்ணுக்கும் அன்பிருக்கும். அம்மாவுக்கும் பெண்ணுக்குத் தகராறு இருந்து கொண்டிருக்கும். உண்மையில் அது ஒன்றும் பெரிய தகராறாக இருப்பதில்லை. மிதமிஞ்சிக் காட்டிய அன்பினால், நான் சொன்னபடிதான் அம்மா ஆட வேண்டும் என்ற அளவில் குழந்தைகள் நினைக்கிறார்கள்.

## 14. அமைதி

☆ அமைதியானது மனித குலம் அனைத்துக்கும் அவசியமே.

☆ அமைதி தான் மனிதனுக்கு அளிக்கத் தன்னிலை விளக்கம்.

☆ அமைதி சமுதாயத்தில் அமைய அறநெறி வாழ்வு.

☆ அமைதி உலகில் நிலவ அனைத்துலகப் பேரரசு.

☆ அமைதி மனித இன வாழ்வில் நிறைவைத்தரும் தெய்வீக இன்பம்.

☆ **இன்பமும் அற்று, துன்பமும் அற்று அறிவு மனம் உடல் என்ற நிலையிலே இருப்பதுதான் அமைதி.**

☆ உலகில் வாழும் மக்கள் எல்லோருக்கும் இந்தத் தெய்வீகமான பிறப்புரிமையும் சுதந்திரமும் ஒவ்வொருவருக்கும் கிடைத்தால் தான், உறுதி செய்யப்பட்டால்தான் மனிதன் வாழ்வில் அமைதி கிட்டும்.

☆ மனிதன் இறைநிலையுணர்ந்து, அறவழிகண்ட பொருட்களையும் பாலுறவையும் துய்த்து வாழ்ந்தால்தான், தனி மனிதனிடத்திலும் சமுதாயத்திலும் அமைதி நிலவும்.

☆ எதை அடைய வேண்டுமோ அதை அடையாதவரை, வேறெது கிட்டினும், மனக்குறை, மனிதன் உள்ளத்தில் தலையெடுத்துக் கொண்டேதான் இருக்கும். அடைய வேண்டியதை அடைந்து அமைதி பெறுவோம்.

☆ தனக்குச் சொந்தமென்ற பொருள் பெருகும் அளவொக்கத்தான் அமைதியை இழந்து தவிக்கின்றான் மனிதனவன்.

☆ இன்பமும் இல்லை, துன்பமும் இல்லை என்றால் அதுதான் அமைதி.

☆ பேரறிவு, சிற்றறிவு, புலனறிவு இவை மூன்றும் பிறழாது ஒன்றோடு ஒன்றிணைந்து செயலாகும். சீரமைப்பின் அளவொக்கச் சிந்தைக்கும் உடலுக்கும் சிறப்புண்டாம்: இனிமையும் அமைதியும் உளவாழ்வாம்.

☆ விஞ்ஞான அறிவு பெற்ற பலர் மெய்ஞானம் பெறுங்காலம் அண்மையில் உள்ளது. அப்போது எல்லா மக்களும் விடுதலை வழியில் வாழ்ந்து அமைதிபெற, ஏற்ற சமுதாய வாழ்க்கை நெறி உருவாகிவிடும்.

☆ ஆறாம் நிலையாக இயங்கும் அறிவுக்கு, இயற்கைத் தத்துவத்தை அறிந்து கொண்டே போகும் விஞ்ஞான ஆராய்ச்சியும், தெய்வ வணக்கம் என்ற முறைகளும்தான் அமைதி கொடுப்பவை.

☆ இயற்கை துன்பங்களை அவ்வப்போது சமன் செய்து கொண்டே இருப்போமானால் மிகுதி இருப்பது என்ன? அமைதியும் இனிமையும் தாமே? அமைதியே அறிவு ஆராய்ச்சிக்கும் - உயர்வுக்கும் ஒத்ததாகும். எனவே அமைதி காப்பது என்பதே மனிதனின் தலையாய செயல்.

☆ பிறர் குற்றத்தை பெரிது படுத்தாமையும், பொறுத்தலும், மறத்தலும் அமைதிக்கு வழிகளாகும்.

☆ பிறர் கூறும் கடுஞ்சொற்களையும், அவை சொல்லப்படாதது போல் பாவித்து ஒதுக்கிவிட வேண்டும். அப்போதுதான் அமைதி பிழைக்கும்.

☆ பிணக்கில்லாத வாழ்க்கையை எவன் அமைத்து அதன்படி வாழ்கிறானோ, அவன்தான் ஞானி. ஒருவர்பெற்ற ஞானத்தைப் பரிசோதிக்கக் கருவி ஒன்று இருக்குமானால் அது அவரது குடும்ப அமைதிதான்.

☆ இன்பங்கள் இறையருள் தந்திருக்கின்றது. அவற்றை எல்லாம் அனுபவிப்பதற்கு அமைதிதான் வேண்டும். சினம் அவற்றை யெல்லாம் உதறித் தள்ளிவிடும். அந்த இழப்பு நமக்கு வேண்டாம். இயற்கை இன்பத்தைப் பூரணமாக அனுபவிப்போம். அறிவையும்

அன்பையும் வளர்த்துக் கொள்வோம். அன்பு கருணையை பெருக்கிக் கொள்வோம். ஒருவரோடு ஒருவர் ஒத்தும் உதவியும் இனிமையாக வாழ்வோம்.

## 15. அமைதியான வாழ்க்கை

☆ உண்மையிலேயே அமைதியான வாழ்க்கைக்குப் பொருளாதார வசதிகள் அவசியமானவை. ஆனால் ஆன்மீக அறிவு இல்லாமல் பொருள் வசதிகள் மட்டும் வாழ்க்கையில் திருப்தியையும் அமைதியையும் கொண்டு வர முடியாது.

## 16. அயரா விழிப்பு

✱ அகத்தவத்தில் முழுமை பெற்றுவிட்டால் சித்தர்கள் விளக்குகின்ற மன நிலையான அயரா விழிப்பு நிலையில் உலக வாழ்வைத் துய்த்து எல்லையிலாப் பேரின்பமான இறைநிலையை தானாக உணருகின்ற அறிவினையும், இறைநிலையே தன்னிடம் அறிவாக இயங்கும் உண்மையினையும் அறியலாம்.

## 17. அயனாச பிரம்மம்

✲ அருட்பேராற்றலான இறைவெளி தனது முழுமைத் தன்மையான பூரண நிலையிலிருந்து, விரைவு அறிவு இரண்டாலும் பரிணாமத்தில் படிப்படியாக உயர்ந்து கொண்டே இருக்கிறது. விண் துகள்கள், பஞ்சபூதங்கள், அண்டங்கள், உயிரினங்கள் என்ற வரிசையினாலான இந்த உணர்மாற்றச் சிறப்புத்தான் அயனம் எனப்படும். இவ்வாறு பரிணாமமடையும் எல்லாத் தோற்றங் களுக்கும் மூலப்பொருளாக உள்ளது இறைவெளி எனும் தெய்வ நிலைதான் என்பதை விளக்கும் ஒரு வார்த்தைதான் அயனாம்சம் பிரம்மம். பிரபஞ்சப் பரிணாமத்தில் விளையும் ஒரு அங்கமாக இருப்பதை நிறைவுபடுத்துகின்றது இந்தச் சூத்திரம்.

## 18. அய்யப்பன்

✳ குத்தி விளக்கு என்பதுதான் குத்து விளக்கு என்றாகி விட்டது. அறிவுதான் எதையும் விளங்கிக் கொள்வதால் அறிவுக்குத்தான் ‘விளக்கு’ என்றே பெயர். உயிர் தன்னை உணரும்பொழுது

அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற பஞ்சதன் மாத்திரைகளையும் உணர்ந்து கொள்வதைக் காட்ட, குத்துவிளக்கில் ஐந்து முகங்களையும் வைத்தார்கள். அறிவேதான் தெய்வமாக உள்ளது. ஐந்து புலன்களுக்கும் அப்பனாக இருந்து, அறிவே ஆள்வதால் இறைவனுக்கு அய்யப்பன் என்று பெயர் வைத்தார்கள்.

## 19. அரசாட்சி

✳ கடன், வறுமை, கல்வியின்மை என்ற மூன்று களங்கங்கள் உழைப்போர்கள் வாழ்வில் தோன்றிக் கடன்தீர்க்க, பசியாற, முயற்சியோடு கடுமையாய் உழைக்கின்றார். பயனோ சொற்பம். கடன், வறுமை, ஐந்து பெரும் பழிகள் தோன்றக் காரணமாம். உலக சமுதாய நோயாம் கடன் முதலாம் களங்கங்கள் ஒழிய, என்றும் கட்சி முறையற்ற பொறுப்பாட்சி வேண்டும்.

## 20. அரசியல்

✳ ஒவ்வொரு நாட்டிலும் அரசியல் அமைப்பு உரிமைகளைச் செயல்படுத்துவதைத் தீர்மானிப்பதில் இரண்டு அரசியல் கட்சிகள் மட்டுமே போதுமானது.

✳ **அரசியல்வாதிகளுக்கும் அரசு நிர்வாகிகளுக்கும் கல்வி போதிக்கும் வகையில் பல்கலைக் கழகங்களில் தனியாக ஒரு துறை இருக்க வேண்டும். ஆன்மீகம், உளவியல், உடலியல், சமூகவியல், பொருளாதாரம், ஒழுக்கம், பண்பாடு, செயல்விளைவு தத்துவம் இவையனைத்தும் இக்கல்வி முறையில் அமையவேண்டும்.**

✳ பொதுவாக எல்லோருக்கும் வாழ்க்கையின் இன்பத்தைப் பாதுகாக்கவும், அதிகரிக்கவும், துன்பத்தைக் குறைக்கவும், போக்கவும், திட்டமிட்டுச் செயலாற்றவும், தனி மனிதனால் ஆகாத காரியத்தைப் பலரின் சக்தி கொண்டு நிறைவேற்றவும், பலமுடையான் பலமில்லானைத் துன்புறுத்தாதபடி பாதுகாக்கவும் ஏற்படுத்திக் கொண்ட கூட்டு வாழ்க்கை ஒப்பந்தமே, கட்டுப்பாடு விதிமுறைகளே அரசியல்.

✳ அரசியலுக்கு சிந்தனையாளர்களும், தொழில் நிபுணர்களும், அறிஞர்களும் முன்வரவேண்டும்.

✳ ஒரு சில ஆண்டுகளில் அரசியலுக்குரிய கல்வி கற்றவர்கள் மட்டுமே தேர்தலில் நிற்க வேண்டும் என்ற சட்டம் வரவேண்டும். அவர்களுக்குப் பிற வாழ்க்கைத் தொழில் பார்ப்பவர்களைப் போன்று நல்ல ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

✳ தனி மனிதனின் பேராசையினாலும் அறிவு செயல்களினாலும் விளைகின்ற விளைவுகள் அவனுக்கோ மற்றவர்களுக்கோ துன்பம் விளைவிக்குமேயானால் அதைக் குற்றம் என்று கூறி அத்தகைய மனிதன் திருத்திக் கொள்ளுமாறு தண்டனை அளித்து எல்லா மக்களும் அமைதியோடும் இனிமையோடும் வாழ ஏற்ற சமுதாயத் தொண்டாற்றுகின்ற சிறந்த நிறுவனமே அரசியல்.

✳ அரசியல் தவிர்க்க முடியாத ஒரு தேவை.

✳ ஒவ்வொருவரும் தனிப்பட்ட சக்தியை ஏற்படுத்திக் கொண்டு காத்துக் கொள்ள முடியாது. எனவே கூட்டுக் காப்புத் தேவை: அதற்கொரு நிர்வாகம் தேவை: அதுதான் அரசியல்.

✳ அரசியல் தொடர்புள்ள அரசியல்வாதிகளுக்கு வேறு எவ்விதமான தொழிலில் ஈடுபடவும் வாய்ப்பு இருக்கக் கூடாது.

✳ மனித இனம் அறிவின் திறத்தால் கண்டுபிடித்த கூட்டு வாழ்வு முறையே அரசியல் எனப்படுகிறது.

✳ அறிவிலும் செயல்திறமையிலும் மிகுந்த மனிதர்கள் அரசியலில் பங்கெடுத்துக் கொள்வதும் ஒரு கடமையேயாகும்.

✳ இந்திய தேசத்தில் மக்கள் அரசியல் துறையில் இன்னும் போதிய அளவு முன்னேற்றம் அடையவில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

✳ வாழ்வை வளப்படுத்திக் கொள்ளவும் பலமுடையோர்கள் பல மற்றவர்களைத் துன்புறுத்தாமல் பாதுகாத்துக் கொள்ளவும் மனித இனம் தனது அறிவின் திறத்தால் கண்டுபிடித்த கூட்டு வாழ்வு முறையே அரசியல்.

✳ மக்கள் வாழ்வை வளமுறச் செய்யும் பெருநோக்கத்தோடு சிந்தனையாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு கூட்டுறவு நிர்வாக முறைதான் அரசியல்.

## 21. அரசியல் சட்டம்

✶ அரசியல் சட்டம் என்பது ஆழ்ந்த அறிவோடு சிந்தித்து வகுக்கின்ற விரிந்த சமுதாய நல நோக்குடைய தொலை நோக்குத் திட்டமாகும். இந்தத் திட்டம் அமுலுக்கு வரவேண்டுமானால் முதலில் கட்சி ஆட்சிமுறை மாறவேண்டும்.

## 22. அல்லவை நீங்க

✣ அமைதி, அன்பு, கருணை என்ற முக்குணங்கள் இருந்தால் உணர்ச்சிவயப்பட்ட எண்ணங்கள் இருக்காது. தீமை செய்யக் கூடிய எண்ணமோ செயலோ வராது. தீமை செய்பவர்களுக்குத் தண்டனை கொடுக்கக்கூட எண்ணம் வராது. துன்பம் கொடுத்தவர் களுக்குக் கொடுக்கும் தண்டனையில் கூட கருணை இருக்கும்.

## 23. அலை

✷ நிலையாக இருக்கின்றது ஒரு பொருள். அதற்குப் பெயர் சுத்தவெளி. அதன் அசைவாக உள்ளது பரமாணு. இவை சேர்ந்த விகிதாச்சார வேறுபாட்டினால் காணும் விளைவுகளைக் கணிப்பது அறிவு. இந்த மூன்றுதான் பிரபஞ்சத்தில் உள்ளன. இந்த உண்மைதான் இருப்பு இயக்கம். உணர்வு என்ற தத்தவமாகச் சுருக்கிச் சொல்லப்படுகிறது.

✷ ஒன்பது கோள்களினுடைய தன்மையும், அதன் அலைகள் மூலம் நமக்கு வந்து கொண்டேயிருக்கும்.

✷ காணும் உலகமும் சரி, காணாத சுத்தவெளியும் சரி, இரண்டும் ஒன்றே என்பதையும் பக்தி நிலை பெறப் பெற்ற சூழல் இயக்கம் கொண்ட பரமாணு என்னும் பின்னமானது, அதன் இயக்க வேறுபாடுகள் அந்தந்த நிலைகளுக்கேற்ப விளைவு வேறுபாடுகள் இவற்றைக் கூர்ந்துணரும் அறிவு நுண்ம நிலையடைந்து, இயற்கை நிலை அடையும் அனுபவத்தை உணருபவர்கள் **'ஆதியே நானாக உள்ளது'** என்ற விளக்கம் தருகின்றனர்.

✷ நமது உடலுக்குள்ளாக இயங்கக் கூடிய உயிராற்றல் அலையாக ஜீவகாந்த சக்தியின் மூலம் எந்தப் பொருளோடு தொடர்பு கொண்டாலும் - அந்தப் பொருளின் தன்மைக்கேற்ப மாற்றம் பெறும்.

* நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ எப்பொழுதுமே கோள்களிடமிருந்தும் பொருட்களிடமிருந்தும் மக்களிடமிருந்தும் அலைகள் வந்து கொண்டேயிருக்கும். அந்த அலைகள் சாதக மாகவும் இருக்கலாம்.

* விண்ணில் முன்னமே சிறைப்பட்டிருக்கின்ற துகள்களானவை இறைவெளியின் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் உரசல் பெற்று விரைவாகக் கரைந்து வெளியேறுகின்ற நிகழ்ச்சிதான் பிரபஞ்சத்தில் உள்ள எல்லா வகையான அலைகளும் ஆகும்.

## 24. அலை இயக்கம்

✤ ஒரு வானொலி நிலையத்திலிருந்து ஒரு நிகழ்ச்சியை ஒலி பரப்புகிறார்கள். அது பாடல் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பாடல் வெளியிலே போகும்போது அலையாகத்தான் போகும். இங்கே உள்ள கருவியில் மோதும்பொழுது, மோதிப் பிரதிபலிக்கும் பொழுது, அங்கே எந்தெந்த உச்சரிப்பு எந்தக் கருத்து அங்கே சொன்னார்களோ அவையனைத்தும் வெளிப்படும். அதேபோல் எந்தப்பொருளும் உலகத்தில் அதன் அதன் இடத்திலிருந்து ஒரு அலை வீசிக் கொண்டேதான் இருக்கிறது.

✤ எந்த அலைக்கும், மோதுதல், பிரதிபலித்தல், சிதறுதல், ஊடுருவுதல், ஒன்றுடன் ஒன்று திருப்பித் திருப்பி இணைந்து பாய்தல், என்று பலவகையான இயக்கங்கள் உண்டு. எத்தனையோ அலைகளை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அவற்றையெல்லாம் நல்லவையாக ஆக்கிக் கொண்டு நாம் நல்ல அலையாக இயக்க வேண்டும். நலம் செய்து கொண்டே இருக்க வேண்டும். நன்மையேதான் செய்வேன் என்ற எண்ணத்தை உறுதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

## 25. அலைநீளம்

* நான்கு வானொலி நிலையங்கள் நான்கு விதமான வேறுபட்ட நிகழ்ச்சிகளை ஒரே நேரத்தில் ஒலிபரப்புகின்றன. நம் ரேடியோவை எந்த அலை நீளத்தில் வைக்கிறோமோ அது மாத்திரம்தான் இங்கே கேட்கும். மற்றவை எல்லாம் வந்து மோதும்: ஆனால் கேட்காது. அதுபோலவே தேவையற்ற அலைக்

கழிப்பும் பாதிப்பும் இல்லாமல் விட்டுவிலகி, எந்த நிலையில் இருக்கிறோமோ அந்த நிலைக்கு ஏற்ப, நமக்கு என்ன தேவையோ அது கிடைக்கும்.

## 26. அரண்கள்

☼ பொருளும் அருளும் ஆட்சியும் மனிதனைக் காக்கும் அரண்கள்.

## 27. அவமதிப்பு

✚ உன் காலடியில் கிடக்கும் சிறுதுரும்பைக்கூட அவமதிக்கலாகாது. ஏனெனில், அது உன் கண்ணுக்குள்ளே புகுந்துவிட்டால் மிகுந்த துன்பம் விளைவிக்கக் கூடும்.

## 28. அளவுமுறை

✜ எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அளவுக்கு அதிகமாக ஈடுபட்டால் உடல் வலுவிழந்து போகிறது. உடல் கெட்டால், மனம் கெட்டால் வாழ்வும் சீரழிகிறது. நாம் கெடுகிறோம். குடும்பம் பாதிக்கப்படுகிறது. சமுதாயமும் தப்புவதில்லை.

✜ உணவு சுவையாக உள்ளது என்று மேலே மேலே சாப்பிட்டுக் கொண்டே போனால் இன்றைக்கு வயிற்று வலி, நாளைக்கு வயிற்றுப்போக்கு என்றாகும். மருத்துவரிடம் போனால் நோய்க்கு மருந்து கொடுப்பார். குணமான மறுகணமே மீண்டும் அளவுக்கு அதிகமான உணவு நாடிப் போனால், வாழ்நாள் முழுவதும் வயிற்றுப்போக்கு என்ற நிலை ஏற்பட்டால், வாழ்க்கை என்ன ஆகும்? வேறு எந்தக் காரியத்தை நீங்கள் கவனிக்க முடியும்?

✜ நாம் வாழும்போதே வாழ்வு நலமாக, அமைதியாக, மகிழ்ச்சியாக அமைய வேண்டுமே தவிர, நாம் இறந்த பிறகு துறவானால் என்ன? எதுவானால் என்ன? அவ்வாறு வாழும்பொழுதே வாழ்வு திருப்தியாக மேன்மையாக இருக்க வேண்டும் என்றால் ஒவ்வொரு அனுபோகத்திலேயும் எல்லை கட்டிக் கொள்ள வேண்டும். அளவு இட்டுக் கொள்ள வேண்டும்.

- புலன் கவர்ச்சியினால் பொருட்களோடு உயிர்களோடு தொடர்பு கொள்வதில் அளவு மீறும்போது துன்பமே அதிகமாக விளைகின்றது.

## 29. அள்ளூதல் கிள்ளூதல் துள்ளூதல்

- சீவகாந்தமானது உடலில் உள்ள மலம் - மூத்திரம் போன்ற கழிவுகளை நெருக்கி அள்ளிக் கொண்டு வெளியேறும். இதுவே அள்ளூதல்.
- உள் செல்களில் சீவகாந்த ஓட்டம் தடைப்படும் பொழுது அங்கு நமைச்சல் - அரிப்பு முதலியன ஏற்படுகின்றன. இது உடல் கிள்ளூதல் உணர்வாகத் தோன்றுகிறது.
- உடலில் கழிவுகள் தேங்கி நிற்கும் பொழுது அவற்றை ஏப்பம், தும்மல் போன்ற வகையில் சீவகாந்தமானது அதைத் துள்ளிக் கொண்டு வெளியேறச் செய்யும். இதுவே துள்ளூதல்.

## 30. அறம்

- தன்முனைப்புத் தணிந்து மெய்யுணர்வாய் மாற தவம் ஒன்றே வழி. அதற்கு அறம் அரணும் ஆம்.
- விளைவறிந்த விழிப்போடு துன்பம் வராமல் காக்கும் செயல் முறையே அறமாகும்.
- இறையுணர்வினால்தான் அறம் செழிக்கும்.
- இயற்கை வளங்களை வாழ்வின் வளமாக உருமாற்றியும், அழகுபடுத்தியும், வாழ்ந்து வரும் மனித இனம், மற்றவர்களோடு பிணக்கின்ற வாழ வேண்டியது மிக அவசியமாகின்றது. இந்த நெறியே அறம் எனப்படுகிறது.
- துன்பம் போக்கும் தூயநெறியே அறமாம், அறிவின் உயர்வாம்.
- சிறிய அறத்தில் பெரிய புகழ் விருப்பம் கூடாது.
- அறம் என்றால் துன்பத்தைப் போக்கும் செய்கையாகும். அதைக் காக்க ஆட்சி, மதம், பொருள், மூன்றாகும்.

✢ அருள்நெறியின் இரண்டுறுப்பு அறநெறியும், இறையுணர்வும், பொருள் உணர்ந்தால் இறையுணர்வாம். இறையுணர அறம் விளங்கும்.

✢ ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்று உயர்நோக்கச் செயல்கள் இணைந்ததுதான் அறம்.

✢ பிற உயிர்படும் துன்பத்தை ஒத்து உணர்ந்து அதைப் போக்க வேண்டுமென்று எழுந்த கருணை உணர்வே அறமாகியது.

✢ துன்பம் செய்யாதிருப்பது ஒழுக்கம். துன்பத்திலிருப்பவர் களுக்கு உதவி செய்வது ஈகை. ஒழுக்கமும் ஈகையும் இல்லை யானால் அறம் கிடையாது. உயிர்கட்கு தொண்டாற்றுகின்ற ஒழுக்கம், கடமை, ஈகை ஆகிய மூன்றிணைப்பு நெறியே அறம் எனப்படுகிறது.

✢ செயல்களின் விளைவானது - 1. துன்பம் இல்லாதமுறையிலும் - 2. உயிர்களுக்கு ஏற்படுகின்ற துன்பத்தை நீக்குகின்ற முறையிலும் அமையும்படியாகப் பார்த்துக் கொள்ளுகின்ற முறையே அறம் ஆகும்.

✢ அறம் என்றால் முயற்சியையும் செயல்களையும் நலமே விளை விப்பவனவாக மாற்றும் பயிற்சி.

## 31. அற உணர்வு

◊ அற உணர்வு என்பது வாழும் நெறி.

◊ சிந்தனை ஆற்றல் உள்ள அத்தனை பேருமே இறை உணர்வைச் சரியாகப் பெற முடியும். அப்படி இறையுணர்வைச் சரியாகப் பெற்றுவிட்டால் அதிலிருந்து தானாக மலர்வது அற உணர்வு.

## 32. அறம் செய்ய விரும்பு

✲ உணவு சமைக்கும் பொழுது குக்கரில் உள்ள வால்வானது அங்கு உண்டாகும் அளவுக்கதிகமான அழுத்தத்தை வெளி யேற்றி குக்கர் வெடிக்காமலும் உணவு கெடாமலும் பாதுகாக்கும். அதே போன்று பொருள் அதிகம் வரும்பொழுது மனித மனம் அதனால் கெடாமல் இருக்கவும் உயிர் தூய்மை பெறவும் அறம் செய்தல் என்பது மனிதனுக்கு பாதுகாப்பாக அமையும்.

## 33. அற உணர்வு

✳ பிற உயிர் உணரும் இன்ப துன்ப இயல்பினைக் கூர்ந்து உணர்ந்து கொள்ளக்கூடிய ஒரு நுட்பமும் அப்படி உணர்ந்து கொண்ட பிறகு அதற்கு இரங்கி உதவும் ஒரு திருப்பமும், மனிதனிடத்து வந்து விடுமேயானால், மனிதனுடைய மனதிலே அறவுணர்வு என்னும் தெய்வீக உணர்வு கிட்டும்.

## 34. அறநெறிகள்

♬ அறநெறிகளை வாழ்விலே பின்பற்றிச் செயல்பட்டால் வாழ்வு இனிமையாகவும் அமைதியாகவும் சிறப்பாகவும் இருக்கும். அவை:

♬ வாழ்வின் நோக்கம் தேவைகள் விருப்பங்கள் இவற்றை மதிப் பிட்டுக் கொள்ள வேண்டும்.

♬ தனக்கு அமைந்துள்ள சூழ்நிலைகளையும் வாய்ப்புகளையும் கணித்துக் கொள்ள வேண்டும்.

♬ இயற்கையின் ஒழுங்கமைப்பையும் அதன் ஆற்றலின் விளைவான காரண காரிய விளைவு விதியைப் பற்றியும் உணர்ந்து கொண்டு, மதித்துப் போற்றி நடக்க வேண்டும்.

♬ இருப்பு ஆற்றலில் தெய்வமாக இருந்த அருட்பெரும் கடலே இப்பொழுது இயக்கத்தில் காந்தமாக இருக்கிறது. காந்தம் என்ற பாய்மப் பொருள் இல்லாத இடமோ பொருளோ இல்லை. இதைத் தெளிவாக நாம் உணர்ந்து கொண்டால், நாம் யாரைப் பார்த்தாலும் என்ன உணர்வான எண்ணம் தோன்றும்? இது இறை நிலையின் தன்மாற்ற உருவம்தான் என்பது நிச்சயமான அகக்காட்சி ஆகிவிடும். இந்த நிலையில் எந்தச் செயலிலும் அறநெறி சிறந்தோங்கும்.

♬ வாழ வேண்டிய முறைகளையும் ஆற்ற வேண்டிய செயல் களையும் வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

♬ இத்தகைய வாழ்வுக்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்வதற்கு உடல் வலிமையையும் திறனையும் அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

♬ விழிப்போடும் விடாமுயற்சியோடும் எண்ணம், சொல், செயல் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

♬ அவ்வப்போது வாழ்க்கையில் ஏற்படும் தவறுகளைத் தற்சோதனை, செயல்திருத்தம் என்ற இரண்டு வழிகளிலும் திருத்தித் தன்னைத் தூய்மையாக்கிக் கொண்டே இருத்தல் வேண்டும்.

♬ தவறு செய்தால் உடனே தண்டனை இருக்கிறது என்பதுதான் இறை ஆற்றல் உணர்த்தும் நீதி. அது கூர்தலறம் இதைத் தெரிந்து கொள்ள இறையுணர்வு வேண்டும். தெரிந்து கொண்ட பிறகு மக்களோடு ஒற்றுமையாக வாழ்வதற்கு அறநெறி வேண்டும். அறநெறிதான் உண்மையில் இறைவழிபாடு.

♬ இன்பம் வேண்டும் அமைதி, வேண்டும் என்றால் அதற்கு இறை யுணர்வு, அறநெறி இரண்டும் வேண்டும்.

♬ உங்கள் மனதை வளப்படுத்த ஆக்கினை, துரியம், துரியாதீதம் என்னும் தவமுறைகளும், செயல்களை ஒழுங்குபடுத்தி சிறப்பிக்க ஒழுக்கம், கடமை, ஈகையென்ற அறநெறிகளும் நீங்கள் அறிந்துள்ளீர்கள்.

♬ அறநெறியின்றி மனித குலம் வாழ்வில் நிறைவும் அமைதியும் பெற முடியாது. இறையுணர்வின்றி அறநெறி முழுமையாக இயல்பாக அமையாது. உண்மையில் இறை வழிபாடும் அறநெறியும் ஒன்றுதான்.

♬ அறநெறி நிற்க வேண்டும் என்றால் இறையுணர்வு வரவேண்டும். அது வந்தால்தான் அறநெறியைச் சரியான முறையில் உணர்ந்து கொள்ள முடியும்.

♬ இறையாற்றல் செயல் புரிகின்ற வழியில் நமது இயக்கங்கள் ஒத்திருக்கப் பார்த்துக் கொண்டு வாழ்வதே இறைவழிபாடு ஆகும். இவ்விறை வழிபாட்டால் செயல்கள் அனைத்தும் ஆக்க முறையில் ஒழுங்குபடும். இவ்வொழுங்கே அறநெறி ஆகும்.

## 35. அறநெறி வாழ்வு

♀ இன்றுள்ள விஞ்ஞான காலத்திற்கு ஏற்ப மக்களிடம் அறிவு வளர்ந்துள்ளது. தெய்வமென்ற நிலையைத் தெளிவுபட விளக்கினால் அந்த தெய்வ நிலையுணர்வினால், மாபெரும் ஆற்றல் எல்லா உயிர்களிடத்தும் ஒவ்வொரு விண்துகளைச்

சுற்றிலும் நிறைந்து நின்று இயங்கிக் கொண்டிருக்கும் காட்சியை, மக்கள் அக உணர்வாகப் பெறுவார்கள். அந்த உள்ளொளியில்தான் ஒவ்வொருவருக்கும் துன்பம் அளிக்கக் கூடாது. துன்பம் நீக்க என்னால் இயன்ற உதவி செய்ய வேண்டும் என்ற அறநெறி வாழ்வு மக்களிடம் இயல்பாகும்.

## 36. அறம்பிழையாய்

♀ பொருள் வளத்தில் நல்லறிவில் உணர்வு பெற்றால் அருள் ஆறும் வாழ்க்கையிலே அமைதி கிட்டும். பொருள் இன்றி அறிவுமிகு - அடிமை அண்டி அருள் இன்றி அறிவுமிக, அடிமைப் பொருட்கள் மிக, அறம் பிழையாய் போகும்.

## 37. அறிதுயில்

* பத்து நிமிடம் தவம் செய்தோமானால் அரை நிமிடம் மனம் நிலைத்திருந்தது என்றாலும் அதுவே லாபம்தான். போகப் போக ஒரு நிமிடம் கிடைக்கும். அது கூட லாபம்தான். அது மாத்திரம் இல்லை. நாம் உயிர்ச் சக்தியின் மீது மனத்தை நிலைக்க வைத்துத் தவம் செய்கின்றபோது பீட்டா வேவ் அலை நீளம் 14 - 40 என்ற நிலையிலிருந்து ஆல்பா வேவ் அலை நீளம் 8 - 13 என்ற நிலைக்கு மனம் வந்து விடும். தவமில்லாமல் மனதால் அலைநீள நிலைக்கு வர முடியாது என்றால் வந்து விடும். ஆனால் தூங்கிப் போய்விடுவார்கள். சாதாரணமானவர்களுக்கு விழிப்பு நிலையில் வருவதில்லை. அலை நீளம் வந்தது என்றால் தூங்கி விட்டிருப்பார்கள். அந்த நிலையில் நாம் இருக்கின்ற பொழுது எல்லோரும் தூங்கி விடக்கூடிய அலைநீளம் வந்தாலும் நாம் தவம்செய்யும் போது விழிப்பு நிலையில் இருக்கிறோம் அதனால் யோகத்தை அறிதுயில் என்பார்கள்.

## 38. அறிஞர்கள்

❍ மனிதவாழ்வின் பண்பாட்டிலும், வாழ்க்கைத் திறனிலும், வாழ்க்கை முறையிலும் சமுதாய ஒருமைப்பாட்டிலும் பல குழப்பங்கள் நிலவிவரக் காண்கின்றோம். இவையனைத்தையும் சீர்திருத்திக் கொண்டு செம்மையாக வாழ வேண்டிய பொறுப்பு

பொதுவாக இன்றுள்ள எல்லா மக்களுக்கும் தேவை. அதற்கு வேண்டிய முறையில் சிந்தனை செய்து நல்வாழ்விற்கான வழிகளை அமைத்துக் கொடுக்க வேண்டியது சமுதாயத்தின் தலைமை ஏற்றுள்ள அறிஞர்களின் பொறுப்பு.

- சமூகநலமே குறிக்கோளாகக் கொண்டு வாழும் அறிஞர்கள் அவ்வப்போது பலவிதத்தில் மக்களுக்கு நற்பயன் விளைவிக்கும் சன்மார்க்கங்களையும் வாழ்க்கை அனுபவ நுட்பங்களையும் போதனை செய்து வருகிறார்கள். அவர்கள் வாழ்வில் சந்தித்த முக்கிய நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்த இன்ப துன்ப விளைவறிந்து வாழ்க்கைக்கு வழிகாட்டி வருகிறார்கள். இந்தப் போதனைகள் அனைத்தும் மக்களின் சிந்தனையை உயர்த்தி செயல் திறமையை ஊட்டி வாழ்வை ஒழுங்குபடுத்தி வளப்படுத்துவனவாம்.

- கடந்தகால அனுபவங்கள், எதிர்கால விளைவுகள், தற்கால சூழ்நிலைகள் என்ற மூன்றும் இணைந்த யூகிக்கும் திறனான முக்கால ஞானம் என்ற அகன்ற நோக்கில் அவர்கள் திட்டங்களும் போதனைகளும் உருவாவதால் குறுகிய நோக்கமுள்ள மயக்க வாதிகளும் பாமரர்களும் அக்கருத்துக்களில் அடங்கியிருக்கும் நன்மைகளை உடனே எளிதில் புரிந்து கொள்ள முடியாது. சிறந்த சிந்தனையாளர்களும் நீண்ட எதிர்பாகமுமே அத்தகைய அறிஞர்கள் கருத்துக்களைத் தெளிவாக விளக்கம் செய்ய முடியும்.

- உலக மக்களுக்கு அறிஞர்களது அனுபவங்களை பேச்சாலும் எழுத்தாலும் கவியாலும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார்கள். அவர்கள் அந்தத் துறையில் அந்தந்த நிகழ்ச்சியில் அந்தந்தச் சமயத்தில் தாங்கள் அடைந்த இன்பங்களையும் துன்பங்களையும் உலக மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

- அறிஞர்களின் அனுபவசாலிகளின் கருத்துக்களும் சரித்திரங்களும் அவற்றைக் கற்கும் எல்லோருக்கும் பலவிதத்திலும் நற்பயனையே தருகின்றன.

## 39. அறிஞர்கள் பெருநோக்கம்

❖ புத்தனென்ற பெரியாரும், இயேசுநாதர், பொது நோக்கில் கவிபுனைந்த திருவள்ளுவர், உத்தராம் நபிகள் எனும் உயர்ந்த ஞானி, உண்மைக்கே உயிரளித்த சாக்கரட்டீஸ், நித்தியமாம்

நிலையறிந்த ஞானியர்கள், நில உலக மக்களுக்கு எடுத்துச் சொன்ன அத்தனையும் சேர்த்து ஒரு தொகுப்பாய்ச் செய்தால், அனைத்துமிணைந்து ஒரே கருத்தாய் இருக்கக் காண்போம்.

## 40. அறிஞர்கள் கடமை

♪ அறிஞர் பெருமக்களே நீண்ட நாட்களாக எனது உள்ளத்தில் தேக்கமுற்றிருந்த கருத்துக்கள் உலகைப்பற்றி நான் செய்த சிந்தனைகள் யான் பெற்ற விடைகள் அத்தனையும் உலகிற்கு உணர்த்தி கடமை செய்ய வேண்டும் என்பதே.

♪ சுழல் காற்றில் அகப்பட்ட கட்டுமரம்போல கப்பல்போல உலகெங்கும் மக்கள் குலம் தனியாகவும் நாடுகள் என்ற கூட்டாகவும் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் அவர்களுக்கெல்லாம் ஆறுதல் போன்று தெளிவான சிந்தனையின் முடிவுகளை அளித்து தொண்டு செய்ய வேண்டியது அறிஞர் பெருமக்கள் சிந்தனையாளர்கள் ஆகியோரின் கடமையேயாகும்.

♪ கல்வி கற்கும் காலத்திலேயே கல்வியில் ஒரு பகுதியாக நீதி உணர்வையும் உணர்த்த வேண்டியது அறிஞர்கள் கடமையாகும்.

## 41. அறிந்தோர் கடமை

⌘ கல்வி கற்றும் ஊதியம் பெற உத்தியோகம் தேடுவோர் பருவம் வந்தும் மணம் செய்துகொள்ள முடியாதோர், கொடுக்கல் வாங்கலில் நொடித்துப் போய் தத்தளிப்போர், நோய் நொடிகளால் பீடிக்கப்பட்டோர், குடித்துவிட்டுப் பிறரைத் துன்புறுத்துவோர், பராமரிப்பில் வாழ்வோர், குழந்தைகளை வளர்க்கத் திறமை இல்லாதோர் என்று அனைவரும் படுகின்ற துன்பத்தையும் வடிக்கின்ற கண்ணீரையும் நிறுத்தி அனைவருக்கும் நல்ல வழியை காட்ட வேண்டியது தன்னிலை அறிந்தோர் கடமை.

## 42. அறிவாட்சித் தரம்

☯ ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறப்பான தகுதி ஒரு தனித் தன்மை இருக்கிறதே அதுதான் அறிவாட்சித் தரம் ஆகும்.

☯ மனித வாழ்வில் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்று வகைச் செயல்கள் உள்ளன. அவற்றிற்கேற்ற விளைவுகளும் உண்டு. மீண்டும் மீண்டும் அவற்றையே செய்ய எண்ணமும் செயல்களும் எழும். இவையாவும் பதிவுகளாகி அறிவாட்சித் தரமாக அமைந்து விடும்.

☯ அறிவாட்சி தரமே ஒரு வாழ்வில் இன்ப துன்பம் அமைதி பேரின்பம் ஆகிய அனைத்தையும் அளிக்கவல்லது.

☯ சஞ்சிதபிராப்த கர்மங்கள் இரண்டின் கூட்டுத் தொகுப்பே மனித மனத்தின் மாண்பு ஆகும். இதுவே அறிவாட்சித்தரம்.

## 43. அறிவின் ஆதிநிலை

☸ விந்துவின் இருப்பிடம் அறிந்து அதிலேயே அறிவை நிலைக்க வைக்கச் சிறிது சிறிதாகப் பழக கருவிலே அறிவு லயமாகி அறிவின் ஆதிநிலை அந்த நிலை இயக்க நிலை என்பனவற்றை அறிந்து கொள்ளும் அளவுக்கு நுட்பமும் சக்தியும் பெற முடிகிறது.

## 44. அறிவாட்சி மலர

⚐ அறிவறிந்தோர் எண்ணிக்கை பெருகிவர வேண்டும். அன்பு, கடமை, ஆட்சி, அறம், தொண்டு எல்லாம் அறிவறிந்தோர் விளக்கும் வாறுணர்ந்துயர்ந்து போற்றி, அருள் நெறியில் மக்களெல்லாம் வாழ்ந்துய்ய வேண்டும். அறிவறிந்தோர் விளக்கத்தால் அறம் பழக்கமாகும். அறக்கல்வி இளைஞர்கட்கு எளிதில் கிட்ட வேண்டும். அறிவறிந்தோர் உள்ளுணர்வின் ஆழ்ந்த கருத்தெல்லாம் ஆட்சி முறையில் மலர்ந்து உலகம் உய்ய வேண்டும்.

## 45. அறிவறிந்தோர்

✲ தெய்வ நிலை மனிதரெல்லாம் உணர்ந்தால் அல்லால் திருத்தமுள வாழ்வேது? ஆற்றல் அற்றோர் தெய்வம் உண்டு என நம்பித் தினம் வணங்கித் தேர்வு பெற மதம் கண்டார் அறிவறிந்தோர்.

## 46. அறிவுச் சாதனை

✈ சுத்தவெளியான இருப்புநிலை, அதன் புத்தி நுண்ணியக்கமான விண்ணின் சுழலியக்கத்தால் பரவும் விரிவு அலை, இவ்வலை

இருப்பு நிலையில் ஊடுருவிக் காந்தமெனும் தன்மை பெறுதல் அணுக்களுடைய கூட்டத்தில் அழுத்தம், ஒளி, ஒலி சுவை, மணம் இவையாக மாற்றம் பெற்று இயங்குதல் இறைநிலையென்ற இருப்பு நிலையே அறிவாக எல்லாப் பொருட்களிலும் செயல் களிலும் ஒழுங்காற்றலாக அமைந்து இயங்குதல், உயிரின விரிவும் இயக்க நியதிகளும் மனிதத் தன்மையின் சிறப்பு இவற்றையெல்லாம் உங்கள் அகக் கண்ணால் ஒரே பார்வை யாகக் காணும் பேரறிவு பெறவேண்டும். இதுவரையில் பழகிய தவமுறை, கேட்ட தத்துவ விளக்கங்கள், தற்சோதனை முறையால் பெற்ற சிந்தனைகள் இவையெல்லாம் சேர்ந்து இந்த அறிவுச் சாதனையை எளிதாக்கி இருக்கும். இப்போது நீங்கள் ஊன்றிப் பிடித்து வாழ்வில் பயன் காண வேண்டியதே.

## 47. அறிவு நிலையில் வேறுபாடு

- உடலறிவு: மனிதனின் அறிவின் தரத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். பசி, தாகம், பாலுணர்ச்சி, வேகம் ஆகியவற்றைச் சமன்செய்து கொள்ளுதல் மட்டும்தான் வாழ்க்கை என்ற அளவில் சில பேருக்கு அறிவு நின்று விடும். இதுவே முதல்படி. முன்னோர் சொன்ன அன்னமய கோசம் இதுதான்.
- மனஅறிவு: உடல் தேவைகள் நிறைவு பெற்றுவிட்டன என்ற பிறகு அவற்றுக்கப்பால் மனதின் தேவை என ஒன்று வரும். இயற்கை அழகுகளை ரசித்தல், அவற்றைப்போல் போலி செய்தல் என்ற அளவில் சிலருக்கு அறிவு விரிந்து நிற்கும். இதுவே இரண்டாம் பிரிவு. இதனை முன்னோர் சொன்ன மனோமய கோசமாகக் கொள்ளலாம்.
- விஞ்ஞான அறிவு: அறிவின் தரம் இன்னும் ஒரு படி உயரும் போது இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் இயற்கை நியதிகளுக்கும் காரணம் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியாக அறிவு எழுந்து நிற்கும். இதுவே மூன்றாம்படி. இதனை முன்னோரின் விஞ்ஞானமய கோசம் எனலாம்.
- இசையறிவு: நியதி தவறாமல் இயக்கம் நடத்தும் அந்த இயற்கையின் தத்துவம் என்ன? அதனை ஆராயும் நான் யார்? எனக்கும் அதற்கும் தொடர்பென்ன? உறவென்ன? என்று ஆராயும் பக்குவம் பெற்ற அறிவின் நிலையே அதன் நான்காம் படி. இதனையே முன்னோர் சொன்ன பிராணமய கோசத்துக்கும் அதன் முடிவான ஆனந்தமய கோசத்துக்கும் ஒப்பிடலாம்.

## 48. அறிவின் உணர்நிலை

☼ சென்றதை நினைந்து வருந்துவதைக் காட்டிலும் இனி என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனையும் அதன் தெளிவில் காணும் விளக்கங்களையும் வைத்துக்கொண்டு வாழ்க்கையை சீரமைத்துக் கொள்வதுமே அறிவின் உயர்நிலையின் பயன் ஆகும். இந்தக் கடமையில் நாம் சிந்திக்கிறபோதுதான் மதம் அரசியல், பொருளாதாரம், சமூக நீதி இவற்றில் காணும் குறைகளைத் திருத்திக் கொள்ள முனைகிறோம்.

## 49. அறிவின் தெளிவு

● மனித இனப் பண்பாட்டில் இயற்கையாக உருவான வாழ்க்கை நெறியில் அமைந்த அடிப்படை நோக்கங்கள் இரண்டு. அவை: 1. அறிவைப் படிப்படியாக உயர்த்தி மெய்ப் பொருளை உணர்ந்து மனநிறைவு பெறுவதற்கு இறை வழிபாடு. 2 பொருளை ஈட்டிக் காத்து துய்த்து பிறர்க்கிட்டு சமுதாயத்தில் நட்புறவோடு மக்கள் வாழ்வதற்குத் தேவையான ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்று உறுப்புகளும் ஒன்றிணைந்த அறநெறி.

## 50. அறிவு

❄ அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானார்.

❄ அறிவு இல்லாத பொருட்களோ உயிர்களோ அல்லது இடங்களோ கிடையாது. ஏனென்றால் இறைநிலையானது அதன் உண்மையான இருப்பு நிலையிலும் அதன் வேறுபட்ட இயக்க நிலைகளிலும் எல்லா இடங்களாகவும் எல்லா பொருட்களாகவும் நிரம்பி இருப்பதால் அறிவு இல்லாத பொருட்களோ இடங்களோ உயிர்களோ இல்லை.

❄ அழுக்காறு, அவா, வெகுளி, கடுஞ்சொற்கள் எனும் நான்கு வேண்டாவற்றை அத்தனையும் மாற்றிவிட்டுத் தூய்மைப் பேறடைந்த பயன் அறிவறிந்தேன்.

❄ இறையுணர்வால் சிலர் முயன்று, வேத நூல்கள் மூலம் இவ்விறையே அறிவு என உணர முடியாமல், இறைவேறாய், அறிவு வேறாக எண்ணி எண்ணி எழும்பிணக்கில் புரண்டே மயக்கில் மாள்வர்.

- வல்லாய் உடலில் இயக்கமவன் வாழ்வில் உயிரில் அறிவுமவன்.
- அறிவென்ற வெளிச்சம் கொடு, அறியாமை இருள்தனை அகற்றிவிடு, தடைகளைத் தகர்த்துவிடு வெற்றிப் படிகளைப் பதித்துவிடு.
- சோதி சப்தம் சுவை மணங்கள் சொரூபம் இவை அனைத்தும் சக்தி தொடர்ந்தியங்கும் நிகழ்ச்சிகளாம். சுவை உணர்வே அறிவாகும்.
- அறிவின் குறைபாட்டினால் இயற்கை நியதி தெரிவதில்லை. செயல் விளைவுத் தத்துவம் புரிவதில்லை.
- தவத்தில் மனதை குவிக்கும்போது மனம் சுருங்குகிறது. மனம் உயிரில் ஒடுங்கும்போது உயிரின் இயக்க வேகம் குறைகிறது. தன் அலையின் மூலம் செயல்படும் உயிர், தன் அலை தன்னில் ஒடுங்கும்போது புலன்வழியே சென்று அழியும் தன்மை, அதாவது புலனுக்கும் மூளைக்கும் தொடர்பு கொள்பவர் அங்கு இல்லை. அதனால் புலன்கள் தூக்கத்தில் இருக்கும்போது செயல் இழப்பதைபோல் தொடர்ந்து நின்றுவிடுகிறது. அறிவு தன்னில்தான் நின்று தன்னை அறிந்து கொள்கிறது.
- காந்தமே ஒலி, ஒளியாய்த் திகழ்தல்போல கண் காணா உயிர் அறிவாம் ஆற்றலும் ஆம்.
- மனிதனிடம் உலகைப் பற்றி கடவுளைப் பற்றி மக்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் - அமைதியோடும் முறையோடும் வாழவும் ஏற்ற வழி வகைகளை அறிந்து கொள்ளும் அறிவின் திறன் முழுமையாக உள்ளது.
- அன்பும் கருணையும் இயல்பாக உடையதுதான் அறிவு.
- ஒளி அல்லது ஒலி எழுச்சி பெறும் பொருட்களின் நிலை இயக்கம் இவைகளுக்கேற்ப பலபேத அறிவாக இருந்த போதிலும் ஒளி ஒலி என்ற தத்துவத்தில் வேறுபட்டவை அல்ல. அதுபோலவே எல்லா சீவன்களிலும் உள்ள அறிவு, பல பேதநிலைகளில் இயங்கிய போதிலும், அறிவு என்ற தத்துவத்தில் ஒன்றே.
- அறிவு என்பது உண்டா இல்லையா? இல்லை என்று யாரும் சொல்லமுடியாது. ஆனால் அறிவு எப்படி இருக்கிறது? எந்த பொருளுக்காகிலும் எந்த விஞ்ஞானத்துக்காகிலும் எந்த கருவிக்காகிலும் அடக்கமா? புலன்களால் காண முடியுமா? முடியாது. அப்படியானால் அது என்ன? அரூபம்.

❊ அரூபம் இரண்டு இருக்க முடியாது. இரண்டு பூஜ்யம் என்ன வாகும்? ஒரு சைபர்தானல்லவா? அதுபோல அறிவும் பிரம்மமும் ஒன்றுதான்.

❊ விழிப்போடு உலகைத் துய்க்கும் இன்ப துன்ப இயல்பறிந்த உயிர்கட்குக் கடமை செய்து இனிமையாற்றி வாழும் அறிவே உயிர்வழி அறிவு.

❊ நம்முடைய செயலுக்கும் தன்மைக்கும் இந்தப் பண்பாட்டுக்கும் தக்கவாறு இந்த அறிவு எந்த எல்லையில் நிற்கிறது என்பதாக இருக்கிறது.

❊ அறிவு என்பது உயிரை மையமாகக் கொண்ட மெய்ப்பொருள். உடல் மூலம் ஆற்றிய வினைகளினால் பெற்ற அனுபவம் சிந்தனை கற்பனை இவற்றிற்கேற்ப பிரிந்தும் சுருங்கியும் செயல்புரியும் ஆற்றலுடையது.

❊ அறிவில் அடங்கியுள்ள இரகசியங்கள் எண்ணி அறிய முடியாதவை.

❊ எல்லாம்வல்ல முழுமுதற்பொருளான மெய்ப்பொருள் உயிராற்றலை மையமாகக் கொண்டு தனது அசைவினாலும் உயர்வாலும் ஆற்றிய வினைப்பதிவுகள் அனைத்தும் அடக்கம் பெற்ற கருவூலம் அறிவு ஆகும்.

❊ அழுத்தம் ஒளி ஒலி சுவை நாற்றம் ஐந்தும் உயிர் ஆற்றலே அது தனது ஆற்றல்தனை அளக்கும் விழுப்பமும் துய்த்தலும் உணர்தலும் அறிவாகும்.

❊ அறிவை அறிய ஆர்வம் எழுந்துவிட்டால் அது தன்னையறிந்து முடிக்கும் வரையில் அமைதி பெறாது.

❊ அறிவு நலமுடையோர் மேன்மேலும் பெருக வேண்டும்.

❊ ஒரு பொருளை உணர்ந்தால் எந்த அறிவைப் பெற்றால் எல்லாவற்றையும் உணர்ந்து கொள்ள முடியுமோ எல்லா வற்றையும் ஐயமின்றித் தெரிந்துகொள்ள முடியுமோ அந்தப் பொருள்தான் அறிவை அறிந்து கொள்ளக் கூடிய அறிவு எனும் பொருள்.

❊ அறிவை வைத்துக் கொண்ட, ஒருவர் இந்தப் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு இயக்கத்தில் உள்ள ஒவ்வொன்றையும் நுணுகி ஆராய்ந்து, அப்படி ஆராய்வதன் மூலமாக வலி, நோய்கள்,

பிணக்குகள், வாழ்க்கைச் சிக்கல்கள் மற்றும் குழப்பங்களைத் தவிர்த்து அமைதியோடும் பேரின்பத்தோடும் வாழக்கூடிய உயர் வாழ்க்கையைப் பெற முடியும்.

❄ இறையாற்றலின் பிரிக்க முடியாத ஒரு தன்மைதான் அறிவு.

❄ புதிர் போன்ற அறிவுநிலை புலன் இயக்குங்கால் தோன்றா.

❄ அனுபவ நினைவுகளும், சிந்தனையும், தெளிவும் அளிக்கின்ற நல்ல முடிவைக் கொண்டு உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் திறனே அறிவு எனப்படும்.

❄ உணர்ச்சியிலிருந்து முழுமை பெறும்வரையில் நடைபெறும் சிறப்பாற்றல்தான் மனம் என்றும் அறிவு என்றும் வழங்கப் படுகின்றது.

❄ அறிவு என்பது எங்கேயோ இல்லை. மனிதனே அறிவாகத் தான் இருக்கிறது.

❄ அறிவு என்பது இறைநிலையின் இருப்பாற்றலேயாகும்.

❄ அறிவினையே முயற்சி சிந்தனையாய் மாற்றி அதற்கேற்பச் செயலாற்ற நலம் விளைக்கும்.

❄ உணர்ச்சியாய்ச் சிந்தனையாய் உள்ளதே அறிவொன்றும் உணர்ந் திருந்தேன் பலநாள்: மேலும் உண்மை விளங்க உணர்ச்சிக்கும் முன்னம் விண்ணில் ஒழுங்காற்றலாய் விளங்கும் உனது திருநிலையும் அறிவே என உணர்ந்தேன்.

❄ தத்துவத்தில் அறிவு என்பது மனதின் உட்பொருளாகும்.

❄ மனத்தையும் அறிவையும் சேர்த்து நோக்கினால் மனம் சிறப்பு நிலையாக உள்ளது. அறிவோ உட்பொருள் ஆக இருக்கின்றது. உட்பொருளாக உள்ள அறிவானது இறைநிலையைத் தவிர வேறொன்றுமில்லை. எனவே, அறிவு என்பது இறைநிலையே ஆகும். இறைநிலையான அறிவையே பேரறிவு என்று சொல்கிறோம்.

❄ அறிவு என்பதை பேரறிவு என்பதை இறைநிலையின் தன்மை என்றே கொள்ள வேண்டும்.

❄ தத்துவத்தில் அறிவைப் பற்றி மொழியின் மூலம் விளக்குவது அவ்வளவு எளிதன்று. உணர்ந்தவர்கள் உணர்த்தித்தான் மற்ற சிந்தனையாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் உணர வேண்டும். உணரவும் முடியும்.

❄ சுருக்கமாகப் பேசுமிடத்து பேரியக்க மண்டலத்தில் இருக்கின்ற எல்லாத் தோற்றங்களும், நிகழ்ச்சிகளும் பேரறிவின் நுண் பகுதிகளே ஆகும்.

❄ அறிவு என்னும் தத்துவத்தை விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர் களும் ஆங்கிலத்தில் (Conscious) என்று கூறுகிறார்கள்.

❄ எந்தப் பொருளிலும் எந்த நிகழ்ச்சியிலும் அமைந்துள்ள ஒழுங்கமைப்புதான் அறிவு எனப்படுகிறது.

❄ அறிவு இல்லாத பொருளோ நிகழ்ச்சியோ இல்லை. எல்லாப் பொருட்களும் நிகழ்ச்சிகளும் ஒழுங்கமைப்பு என்ற இயற்கை யினுடைய நியதியின் படியே அமைந்தும் இயங்கியும் விளைவுகளை அறிந்து கொண்டும் உள்ளன.

❄ பேரியக்க மண்டல இயக்கத்திலும் தத்துவஞான விளக்கத்திலும் அறிவு என்பது மிகவும் முக்கியமானது.

❄ பேரியக்க மண்டலத்தையும் அதன் இயக்கச் சிறப்புகளையும் அறிவைக் கொண்டுதான் உணர்கிறோம்.

❄ அறிவையும்கூட அறிவால்தான் உணர்ந்தாக வேண்டும்.

❄ கூர்ந்த ஆராய்ச்சி உடையவர்கள் ஆழ்ந்த சிந்தித்துத் தெளிந்து தெரிந்து கொள்ள வேண்டும். தனக்குள்ளாக அறிவானது எவ்வாறு செயல்படுகிறது என்பதை இறைநிலையின் காந்த ஆற்றலைக் கொண்டு தானே தெரிந்து கொள்ள வேண்டும்.

❄ இறைநிலையே மனிதனிடம் அறிவாக விளங்குகின்றது.

❄ சொல்லாலும் எழுத்தாலும் அளிக்கின்ற விரிவுரைகளால் மட்டும் அறிவு என்ற தத்துவத்தைத் தெளிவாக உள்ளது உள்ளபடி உணரமுடியாது.

❄ அறிவை அறிய வேண்டும் என்கின்ற உண்மையான வேட்கை உடையவர்கள் ஜீவகாந்த ஆற்றலைத் தனக்குள்ளே உணர்வாகப் பெற்று அதனோடு லயித்து நின்று இறைநிலையையும் அதன் நிலையினையும் விளைவுகளையும் உணர வேண்டும்.

❄ ஒரு மகா சக்தியாக உள்ள எங்கும் நிறைந்து எல்லாவற்றிலும் ஊடுருவி இயங்கிக் கொண்டிருக்கக் கூடிய, அந்தச் சக்தியைப் பற்றிப் புரிந்து கொள்வது என்றால், முதலில் அறிவைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு அறிவுக்கு மூலமான ஒரு நிலையை நாடிச் செல்ல வேண்டும்.

❄ அறிவு என்பது எது? இவ்வளவு பெரிய பேரியக்க மண்டல மான பிரபஞ்சத்தில் கோடானு கோடி நட்சத்திரங்கள் தனித் தனியாகவும் அல்லது கூட்டமாகவும் இயங்கிக் கொண்டு முறைதவறாமல் முறை பிறழாது இயக்கம் நடத்தி வருகின்றனவே அதற்கெல்லாம் ஆதாரமான அடிப்படையான சக்தி யாது?

❄ எல்லோருடைய அறிவும் உடலையும் உயிரையும் அறிவையும் அறிந்து கொள்ள தகுதியுடையதாக இருக்கிறது.

❄ அறிவை விழிப்பு நிலைக்கும் சிந்தனைக்கும் கொண்டு வாருங்கள். தெளிவோடும் துணிவோடும் அறநெறியில் நிற்பதற்குப் பழகிக் கொள்ளுங்கள். உணர்ந்த எண்ணங்களாலும் சிறந்த சொல் செயல்களாலும் உங்கள் மனதையும் உடலையும் நலமாக வைத்துக் கொள்ளுங்கள்.

❄ அறிவு என்பது இறைவெளி என்னும் நிலை பொருள்.

❄ ஆன்மாவில் உள்ளடக்கமாக உள்ள அறிவானது ஆசையாகின்ற போது, தன் மையத்தைவிட்டு அது விலகி விடுகின்றது. அறிவின் ஆற்றல் இழந்துபட்டு விடுகிறது.

❄ உருவாக்கி, அறிவூட்டி, வாழ்வளித்து வருகின்ற சமுதாயத்திற்கு தனது அறிவு உடல் சக்திகளைத் தியாகம் செய்து வாழுகின்ற அளவுக்கு மனிதர்களில் பெரும்பாலோர் அறிவு பண்பட வேண்டும்.

❄ மனதுக்கு அடித்தளமாக இருப்பது இறைநிலை. இங்கே மனம் என்று எதை நினைத்துக் கொண்டிருக்கிறீர்களோ, அதுவேதான் அதன் முடிவிலும் மூலத்திலும் இறைநிலையாக அறிவாக இருக்கிறது.

## 51. அறிவுத் திருச்சபை

❀ கற்பனைச் சுவருக்குப் பின் மறைக்கப்பட்டிருக்கிறது தெய்வம் என்ற மெய்ப்பொருள். அச்சுவரை உடைத்து மக்களின் அறிவுக்குத் தெய்வ நிலையைக் காட்ட வேண்டியது இக்கால சிந்தனையாளர் களுடைய முதற் கடமையாகும். அறிவில் சிறந்த விஞ்ஞானிகளே தெய்வ நிலையைத் தெளிவாக உணர்ந்து கொண்டுள்ள தத்துவ ஞானிகளே ஒன்று கூடுங்கள். உலகப் பொதுவான ஓர் அறிவுத் திருச்சபை அமைப்போம். அனைவரும் மனம் விட்டுப்பேசி

தெய்வநிலையையும் அறநெறியையும் உணர்ந்து கொள்வதில் மக்களுக்கு உள்ள சந்தேகங்களைப் போக்கி, ஆன்மீக ஒளியை மக்கள் மனத்தில் பரப்பித் தொண்டாற்றுவோம். இதை உடனே செய்யவில்லையானாலும் இனியும் தாமதமானாலும் மக்களிடம் நிலவுகின்ற அறியாமை இருளைப் போக்க வேறு வழியே இல்லை.

## 52. அறிவும் மனமும்

✠ அறிவு என்பது இறைவெளி என்னும் நிலை பொருள். அலையும் நிலையும்தான் மனமும் அறிவும். இங்கு அறிவு இறைவனாகவும் மனம் மனிதனாகவும் அமைந்தும் இயங்கியும் வருகின்ற பேருண்மை அகக்காட்சியாகிறது.

## 53. அறிவு வளர்ச்சி

✡ அறியாமை என்ற மயக்கத்தில் வாழும் மக்களுக்கு மேலும் மயக்கத்தையூட்டி, அதன் மூலமே வயிறு வளர்த்து வாழும் ஒருவரை தவறுதலாக அறிவாளி என்றோ பெரிய மனிதர் என்றோ, அரசியல் தலைவர் என்றோ, சாது என்றோ, ஞானி என்றோ, மக்கள் கருதும் வழக்கம் உலகில் சிறிது சிறிதாக மாறிக் கொண்டே வருகிறது.

✡ யார் எந்தக் கருத்தை வெளியிட்டாலும் இயற்கையமைப்பு மனித இன வரலாறு, முன்னோர் கருத்து, தற்கால உலகப் போக்கு, தனது அறிவுநிலை, விஞ்ஞானம் இவைகளோடு அதை ஒப்பிட்டு ஆராய்ந்து தெளிவு காணும் அளவிற்கு, உலக மக்களின் அறிவு நிலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது.

✡ தனித்து ஒரு மனிதனையோ அவன் கருத்தையோ சிறப்பித்துப் பேசிக் கொண்டிருப்பதிலேயே காலம் கழித்து, தான் பயனற்றுப் போகும் அறியாமை இருள், சுய ஆராய்ச்சியால் மக்களிடமிருந்து விலகி வருகின்றது.

✡ மனிதன் மகத்துவத்தை மனிதன் அறிந்து மனிதனாகவே வாழத்தக்க சூழ்நிலைகள் உலக முழுவதும் குறுகிய காலத்திலேயே உருவாகிவிடும் என்பது திண்ணம்.

✡ மனித வாழ்க்கையில் அறிவு வளர்ச்சி நான்கு படித்தளங்களாக உயருகின்றன. அவை: 1. உடலுக்கு ஏற்படும் உணர்ச்சிகளாகிய

பசி வெட்பதட்ப ஏற்றம், உடல் கழிவுப் பொருள்களின் உந்துவேகம் இவைகளை தீர்த்துக் கொள்வதில் ஈடுபடுதல்; 2. இயற்கை எழில்களை கண்டுகளிக்கும் ஆர்வம் எழுச்சி பெறல்; 3. இயற்கை ரகசியங்களை கண்டுபிடிக்கவும் பிறருக்கு எடுத்து விளக்கவும் ஆர்வமாக வளர்தல்; 4. இயற்கை நிகழ்ச்சிகளுக்கு மூலசக்தி எது? அறிவிற்கு ஆதிநிலை எது? என்ற உண்மையினை விளங்கிக் கொள்ளும் ஆர்வமாக உணர்வு பெறுதல்.

## 54. அறிவு வறுமை

- சகிப்புத் தன்மை விட்டுக் கொடுத்தல் தியாகம் இருந்தால்தான் வாழ்க்கையில் உண்மையான நிகழ்ச்சி கிட்டும். அறிவு வறுமை நீங்காமல் பொருள் வறுமை நீங்காது. தேவைக்கு மேல் சேர்த்து வைப்பதும் அறிவு, வறுமைதான். தனக்கு என்ன வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று உணராமல், தன்மானமின்றி மற்றவரை எதிர்பார்ப்பதும் அறிவு வறுமைதான்.

## 55. அறிவிற்கு ஓய்வேது

- அறிவிற்கு ஓய்வு அளி. அதுவே உன் ஓய்வாகும்.
- அறிவிற்கு ஓய்வினால் ஆற்றல் பெருகிடும்.
- அறிவிற்கு அடித்தளம் அருள் நிலை வெளி தெய்வம்.
- அறிவிற்கு வெளி நினைவு ஒன்றேதான் முழு ஓய்வு.

## 56. அறிவின் பருவங்கள்

- மனிதனாகப் பிறந்தும், தான் மனித மனம் என்று அறிந்து கொள்ள முடியாத பருவம் ஒன்று.
- மனிதன் என்று அறிந்தும், மனிதனாக நடந்து கொள்ளத் தெரியாத பருவம் ஒன்று.
- மனிதனாக வாழத் தெரிந்தும், அதுவரையில் அறியாமையால் கொண்ட பழக்கங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள தெரியாததால், உணர்ச்சி ஆராய்ச்சி என்ற இருவகை போட்டி களுக்கிடையே வாழும் பருவம் ஒன்று.

✦ அறிவும் செயல்களும் ஒன்றுபட்டு மனிதன் மனிதனாகவே வாழும் பருவம் ஒன்று.

✦ தான் நெறியோடு வாழ்ந்தும், தெளிவற்றவர்களால் தனக்கும் சமுதாயத்திற்கும் விளையும் கேடுகளை நீக்கி, தன்னைப் போல உலக மக்கள் அனைவரும் நெறியுணர்ந்து வாழும் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்று முனைந்து செயலாற்றும் பருவம் ஒன்று.

✦ ஐவகைப் பருவங்களில் மக்கள் உலகில் வாழ்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு பருவத்திலும் பல நிலைகளில் உள்ளார்கள்.

## 57. அறிவை அறிய

✧ உனக்குள்ளாக இருக்கக் கூடிய அறிவினைத் தெரிந்து கொள்ள முடியவில்லை என்றால் அதற்கும் அப்பால் அதற்கு ஆதியாக இருக்கக்கூடிய ஐம்புலன்களால் உணரமுடியாத இறைவனை எப்படி அறியமுடியும்? அதனால் முதல் கட்டமாக அறிவை அறிந்து கொள்வோம்.

✧ ஒவ்வொரு நாளும் அனுபவத்தால் வாழ்க்கையிலே நம்முடைய அறிவு அந்த எல்லையை நோக்கிதான் வளர்ச்சி பெற்றுக் கொண்டு இருக்கிறது: எனவே இறைவனைப் புரிந்து கொள்வது என்றால் முதலில் அறிவைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு அறிவுக்கு மூலமான ஒரு நிலையை நாடிச் செல்ல வேண்டும். அந்த நிலைதான் இறைநிலை. எனவே அறிவை அறியாது இறைவனை அறிய முடியாது. ஏனெனில் இறைவன் தானே அறிவாக இருக்கிறான்.

## 58. அறிவு மலர

★ உலகத்தில் வாழ்கிறோம். நீர் தேவைதான். வெயில் தேவை தான். அனுபவிக்கிறோம். இத்தனையில் ஏதேனும் ஒன்றை நாம் செய்தோமா? எதற்காக இன்னொருவரிடம் போட்டியும் பொறாமையும் போரும் வேண்டும்? ஆனால் நீங்கள் எடுத்துக் காட்டினீர்கள் என்றால் அவர்களின் அறிவு மலர்ந்து விடும்.

## 59. அறிவுநிலை

✪ மனிதனின் வாழ்க்கைத் தரம் உயர்ந்த அளவிற்கு, அவனது அறிவு நிலை உயரவில்லை. அதனால்தான் இன்னும் கஷ்டப்படுகிறான்.

## 60. அறிவுரை

☆ அப்படிச் செய்ததை இப்படிச் செய்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்: இனிமேல் இந்தக் காரியத்தை இந்த விதமாகவே செய்து நன்மை அனுபவிப்போம் என்ற விதமாகத்தான் அறிவுரை இருக்க வேண்டும். கூடவே உங்கள் தவங்களில், அவர்கள் திருந்து வதற்கான வாழ்க்கை சங்கற்பத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

## 61. அறிவு நிறை

★ தன்னை அறிந்து தான் வாழுகின்ற உலகையும், உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்ற விண்வெளியையும், மேலும் பேரியக்க மண்டலம் முழுவதும் உள்ள புலன்களுக்குப் பிடிபடாத ஆனால் ஆறாவது அறிவினால் மட்டுமே உணரத்தக்க இயற்கை ரகசியங் களையும், அதன் இயக்க விளைவாக எழுகின்ற அதிசயங்களையும் உணருகின்றபோது தான், மனித அறிவு நிறைவு பெறுகிறது.

## 62. அறிவுத்திருக்கோயில்

✯ ஒவ்வொரு மனிதனும் ஒரு நடமாடும் அறிவுத்திருக்கோயிலாகும். மனித குலம் உடல் நலத்திலும் மனவளத்திலும் மேம்பட்டு அறிவில் உயர்ந்து வாழ வேண்டும். இதற்கு என்ன தேவை என்று பார்த்து, அதை பயிற்றுவிக்கும் நிலையங்கள்தான் அறிவுத் திருக்கோயில்கள். இங்கு மனித வாழ்விற்கு உணர்வை அளிக்கும் ஆன்மீகம் மற்றும் பண்பாட்டுக் கல்வியை அளித்து வருகிறோம். இவ் அறிவுத்திருக்கோயில்களின் தோற்றம் மனித வளமேம் பாட்டு சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

✯ பல கோயில்கள் உருவ வழிபாட்டிற்காகக் கட்டப்பட்டுள்ளன. அதன் பொருளை விளங்கிக் கொள்ளும் வண்ணம் இவ்வறிவுத் திருக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இங்கு வருபவர்கள் சாதி

மத இன மொழி வேறுபாடின்றி எளியமுறை உடற்பயிற்சியால் உடல் நலமும், எளியமுறை தியானத்தால் மனநலமும், காயகல்பப் பயிற்சியால் கருவளமும், அகத்தாய்வால் குணநலமும் பெற்று ஒழுக்கம் கடமை, ஈகையுடன் இம்மண்ணுலகில் வாழ்ந்து வாழ்வின் இறுதியில் இறைநிலையை அடைய வழிவகுப்பதே இவ்வறிவுத் திருக்கோயிலின் பணியாகும்.

✯ தெய்வத்தையும் மனிதனையும், இணைத்துக் காட்டும் அறிவின் பேரின்பக்களமான கருமையத்தின் பெருமையை, மதிப்பை, அதனைப் போற்றிக் காக்கும் முறையை, மக்கள் அனைவருக்கும் உணர்த்தி, மனிதகுலம் உய்ய, ஒரு ஒளி விளக்காக அமைந் திருப்பதே அறிவுத் திருக்கோயில். இதன் மூலம் ஒவ்வொரு வருமே ஓர் அறிவுத் திருக்கோயிலாகத் திகழ்வதை உணர்ந்து பிறவிப் பயனை அடையத் தொண்டாற்றுவதே அகத்தவச் சாதனையாளர்களின் வாழ்க்கை நெறி.

## 63. அறிவே தெய்வம்

✯ ஏற்கனவே கற்பனையால் உருவாக்கப்பட்டுள்ள தெய்வம் பற்றிய கருத்து உங்கள் அறிவாட்சித் தரத்தில் பதிவாகி இருப்பதால், நீங்கள் இங்கு பெற்ற உண்மை விளக்க ஒளியை மேகம் சூரியனை மறைப்பது போல பழைய கருத்துக்கள் மறைக்கும் விழிப்போடு தொடர்ந்து ஆராய்ந்து, அறிவேதான் தெய்வம் என்றுணர்ந்த உண்மையை உரைக்க மனம் கூசும். உறுதியாகவும் தெளிவாகவும் அச்சமின்றியும் இப்போது சொல்லுங்கள். அறிவே தெய்வம். அதே தெய்வம் வான் காந்தத்தில் இருப்பு நிலையாக உள்ளது.

## 64. அறியாமை

✰ தவறு செய்தால் இன்றோ - நாளையோ - அறிவிற்கோ - உடலுக்கோ துன்பம் விளையும் என்பது தெரிவதில்லை. இத்தகைய அறியாமையால் செய்த தவறுகளின் காரணமாகப் பெருக்கிக் கொள்ளும். துன்பங்களே, வியாதிகளாகவும், வாழ்க்கைச் சிக்கல்களாகவும் நம்முள் எழுந்து நிற்கின்றன.

✰ நுண் விண்துகள் முதல் பெருங்கோள் வரையிலான பருப் பொருள் களின் இயக்க ஒழுங்கையும் - பார்வைக்குப் புலப்படாத மறை பொருட்களாக உள்ள அவற்றின் இயற்கை ஆற்றலும் அறியாமை.

## 65. அறியாமை – அலட்சியம் – உணர்ச்சிவயம்

✭ அறியாமை என்பது இயற்கை ஒழுங்கமைப்பை உணராமல் ஒரு மனோ வேகத்திலேயே விளைவறியாது செயல்படுதல். சிறுவயதில் வேகம் அதிகரிக்கும். விவேகம் அடங்கி நிற்கும். பிறகு வயதாக விவேகம் உயர உயர வேகம் கட்டுப்படும்.

✰ அலட்சியம் என்பது அறிவின் குறைபாடே. இதை அறியாமை என்று பொருள் கொள்வார்கள். இது அறியாமை என்பதல்ல. விளைவு தெரிந்தும் அறியாமைபோல் நடந்து கொள்வது. ஒரே தவறை மீண்டும் மீண்டும் செய்து கொண்டே இருப்பது அலட்சியம்.

✰ உணர்ச்சிவயம் என்பது மன அலை வேகத்தில் ஒரு பொருளோடு, நபரோடு பற்றுக் கொண்டு விருப்பு வெறுப்பின் காரணமாக பல துன்பங்களை நாமாகவே தேடிக்கொள்வது.

## 66. அறிவாற்றல்

✱ அறிவாற்றல் கவலையினால் வீணாய்ப்போகும். அதையடுத்து உடல்நலமும் குன்றிப்போகும்.

## 67. அருட்காப்பு

✲ அருட்பேராற்றல் இரவும் பகலும் எல்லா இடங்களிலும் எல்லாத் தொழில்களிலும் உறுதுணையாகவும் பாதுகாப்பாகவும் வழி நடத்தியாகவும் அமையட்டும் எனும் அருட்காப்பை வேண்டும் போதெல்லாம் நினைத்துக் கொள்ளுங்கள். மனத்தூய்மை, வினைத்தூய்மை இரண்டும் சித்தியாகும். வாழ்வு வளம், நிறைவு, அமைதி பெறும் இன்பம் விரிந்து கொண்டேயிருக்கும்.

## 68. அருட்பேராற்றல்

✴ அனைத்தியக்க அருட்பேராற்றலாக உள்ளது சுத்தவெளி. அது பூரணம், பேராற்றல், பேரறிவு எனும் முத்தன்மைகளை அடக்க மாகப் பெற்று இருப்பு நிலையாக உள்ளது. இந்த இறை வெளி யானது தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் பேராற்றலாக விளங்கு கின்றது.

## 69. அருட்பேரோற்றலின் வடிவங்கள்

✳ இரும்பே ஒரு கரண்டியாக்கப் பட்டிருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு இரும்பு என்றாலும் கரண்டி என்றாலும் ஒரு பொருளையே குறிக்கும். அதுபோல தெய்வம் என்ற அருள்பேராற்றலே பேரியக்க மண்டலத்தில் இயங்குகின்ற எல்லாமாக இருக்கிறது.

## 70. அருட்பேரோற்றலின் அன்புக்குரல்

✶ அருட்பேராற்றலின் அன்புக் குரலை நலமுறை கேட்டு இருக்கிறேன். இப்போதும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். இதுதான் எனக்கு நிலைத்த பேரின்பத்தைக் கொடுக்கிறது.

✶ நான் பல ஆண்டுகளாக குண்டலினி யோகம் செய்து வருகிறேன். உயிர்ச்சக்தியை மூலாதாரத்தில் இருந்து எழுப்பி ஆக்கினைச் சக்கரத்திற்குக் கொண்டு வருவேன். தியானம் செய்யும்போது மன அலைச் சூழலை குறைத்துக் குறைத்து அமைதி நிலையை மனம் மெதுவாக எட்டும்.

✶ ஆழ்ந்த தியான நிலையில் புலன்களைக் கடந்து இப்பிரபஞ் சத்தைத் தாண்டி விரிந்த எல்லையில்லாத சுத்தவெளியில் கலந்து நிற்கும்போதுதான், அறிவு, இறைநிலை, கடவுள் என்பதெல்லாம் ஒன்றுதான் எனும் உண்மையை உணர்ந்தேன்.

✶ நான் அறிவாகவும் அந்த இறைநிலையாகவும் ஒரே சமயத்தில் இருப்பதை உணர்ந்தேன். மனம் எல்லையற்ற அமைதியிலும் ஆனந்தத்திலும் மிதக்கத் தொடங்கியது. ஒரு புது ஒளி பிறந்தது. அந்நிலையில் என் உள்ளத்துக்குள்ளிருந்து ஒரு குரல் கேட்பதை உணர்ந்தேன். அது அந்த இறையாற்றலின் அன்புக் குரலேதான் என்பதைக் கண்டு கொண்டேன்.

✶ பேராற்றல் - பேரறிவை என்ற ஒரு தன்மைகளைக் கொண்ட அண்ட சராசரமாக விரிந்துள்ளதையும் அதன் இன்னொரு தன்மையான அறிவே இயக்க ஒழுங்காகவும் இருப்பதை அந்தக் குரல் எனக்கு உணர்த்தியது.

✶ அருட்பேராற்றலின் அன்புக் குரலைக்கேட்ட அனுபவத்தைத் தொடர்ந்து பிறகு எப்பொழுது இந்தப் பிரபஞ்சத்தை நினைத்

தாலும் - பிரபஞ்சத்தின் எந்த ஒரு பொருளை நினைக்கும்போதும் அருட் பேராற்றலின் அன்புக் குரல் இன்னும் ஒலிப்பதை என்னால் கேட்க முடிகிறது.

## 71. அருள்துறை

✣ அருள்துறையில் வளர்ச்சியின்றி அமைதி, உலகில் கிட்டா. அருள்துறையோ இறையுணர்வும் அன்பின் உயர்வழிபாடாம்.

## 72. அருள்நெறி

✤ ஒத்ததிது உலகெங்கும் வாழ் மக்கட்கெல்லாம் ஒரே தெய்வம் சுத்தவெளி உயர் பேராற்றல் சுத்த சன்மார்க்க நெறி ஒத்துதவி வாழும் தூயகாந்தத் தத்துவமே இதற்கு வேதமாகும்.

## 73. அருள் வாழ்த்து

✷ அருள்துறையில் நிறைவு பெற்று அன்பு எங்கும் ஓங்கட்டும். பொருள் துறையில் நிறைவு பெற்று புவி முழுதும் பொங்கட்டும். மருள் ஒழித்து மனித குலம் மதிவழி வாத்துய்யட்டும். இருள் ஒழித்து நல்விளக்கம் எங்கெங்கும் பொங்கட்டும்.

## 74. அன்பு

☼ அருள் துறையில் நிறைவு பெற்ற அன்பு எங்கும் ஓங்கட்டும்.

☼ மனித மனம் தானே இறையாற்றலாக உள்ளதை உணர்ந்து தன்னால் இயற்கைக்குக் களங்கம் வராதிருக்க நல்லதையே எண்ணிப் பழக வேண்டும். முழுமையின் சின்னமாக மனிதமனம் முழுமையாலே இணைக்கப்பட்டுள்ளது. அங்கு முறைப்புத் தோன்றி அன்பு வறண்டு விடும்பொழுது இயற்கையின் சீர்மையும் ஒழுங்கும் கெடுகிறது. அவ்வாறு கெடாமலிருக்க மனிதன் உயிர்களிடம் வற்றாத அன்பு செய்தல் வேண்டும்.

☼ சூரியன் தனக்குத்தானே சுழன்று கொண்டிருக்கிறது. அதனால் இந்த உலகத்து ஜீவராசிகளையெல்லாம் அது வாழ வைக்கிறது. அவ்வாறு வாழ வைக்கிறோம் என்ற எண்ணம் அதற்கில்லை. எல்லாமும் செய்து கொண்டு ஒன்றும் செய்யாததுபோல

தோன்றுகிறது. அதற்கு இன்பமும் இல்லை. துன்பமும் இல்லை. கூடலும் இல்லை. பிரிதலும் இல்லை. ஏற்பும் முரணும் இல்லை. எதிர்பார்ப்பும் இல்லை. ஏமாற்றமும் இல்லை. உதவுகிறோம் என்ற எண்ணமும் இல்லை. கைமாறும் கருதுவது இல்லை. வேண்டுதலும் இல்லை. வேண்டாமையும் இல்லை. உயர்வும் இல்லை. தாழ்வும் இல்லை. அதுதான் உண்மையான அன்பு.

☼ உளநிலை அறிந்து உயர்ந்த அறிவில் உதிக்கும் ஆர்வமே அன்பு.

☼ அவனை அறிந்தால் நான் இல்லை. அறிவே அவனாய் அன்பாகும்.

☼ அன்புதான் நம் வாழ்வின் ஊற்று. சிறிது வெறுப்புணர்ச்சி யானாலும் நமது உள்ளத்தை இனிமை கெடச் செய்யும்.

☼ சிவம் என்ற ஒன்றை உணர்ந்தால் அன்பு மலரும் என்று சொல்வார்கள். அது சரியான கருத்து.

## 75. அன்பும் பாசமும்

✚ உருவ அளவிலே, பொருள் அளவிலே, ஞானம் குறுகி ஒரு பொருள் தனக்குச் சொந்தம் என்று கருதும் கற்பனைமீது எழும் பற்றுதல் நிலையை பாசம் என்று சொல்லுகிறோம்.

✚ ஆராய்ச்சி அறிவின் எல்லையிலே உயிர் நிலையை அறிந்த உயர்விலே பேதங்கடந்த பேரறிவின் பெருங்கருணையிலே ஜீவ இனங்களின் இன்ப துன்ப இயல்பறிந்து சிறப்பான ஞாபகத்திலே கருத்துக்கு எட்டிய துன்பங்களைக் குறைக்க வழிகாண வேண்டும் என்ற கனிவிலே ஏற்படும் பற்றுதலை அன்பு என்று சொல்லுகிறோம்.

✚ சமுதாயத்திற்கு நான் தொண்டு செய்வேன் எனும்போது அது அன்பு நிலையாகும். என் மனைவியை, என் குழந்தைகளைப் பாதுகாக்க முயற்சிப்பேன் எனும்போது அது பாசம் என்னும் நிலையாகும்.

✚ மனிதர்களுக்கு நிழல் கொடுக்க மரம் வைக்கிறேன் என்றால் அது அன்பின் செயலாகும். என் கிராமவாசிகளின் சவுகரியத்திற்காக மரம் நடுகிறேன் என்றால் அது பாசம் என்று சொல்லப்படும்.

✚ ஒரு எல்லைக்குட்பட்ட அறிவின் குறுகிய நிலையே பாசம் எனப்படும். அறிவு என்ற தத்துவத்தையும் அதன் இன்ப துன்ப

அனுபோக அனுபவங்களையும் அறிந்து பரந்த ஞாபகத்தில் செயல்புரிய எழும் ஆர்வமே அன்பு எனப்படும்.

## 76. அன்பு வள்ளல்கள்

❖ உழைப்பை முதலாய் வைத்து உழுது நெல் விளைவித்து தழைத்துள்ள உலகோரைத் தாய்போன்று காத்து என்றும் பிழைத்திருக்கத் தொண்டாற்றும் பெருந்தகையீர்! உங்களை நாம் அழைக்கின்றோம் அற ஊற்று அன்பு வள்ளல்கள் என்று.

## 77. அன்புரைகள்

✷ நீங்கள் உயிரறிவைப் பெற்று உண்மை விளக்க ஒளியில் விழிப்போடு வாழ வாழ்விலே ஒரு நல்லதோர் திருப்பத்தை ஏற்றிருக்கிறீர்கள். நீங்கள் மேன்மையுற வேண்டும். உங்களால் உங்கள் வாழ்வில் ஒழுக்கம் பின்பற்றி மனிதகுலம் மேன்மையுற வேண்டும். உலகம் அமைதி பெறவேண்டும்.

✷ ஆக்கினை, மூலாதாரம், துரியம், சக்தி களம், சிவ களம் என்னும் ஐவகைத் தவத்தாலும் அறிவை நுண்மைமிக்கதாயும் ஆற்றல் மிக்கதாயும் வளப்படுத்திக் கொள்ளுங்கள்.

✷ நுண்மாண் நுழைபுலன் - ஏற்பும் இணக்கமும் - தன்மை நலப்பேறு - தகைமை - ஆக்கம் எனும் ஐவகை குணநல உயர்வில் நீங்கள் அபார விழிப்புடன் வாழ வேண்டும்.

✷ எண்ணங்களை ஆராய்தல் - ஆசை சீரமைப்பு - சினம் தவிர்த்தல் - கவலையொழித்தல் - மெய்ப்பொருள் உணர்தல் என்னும் ஐவகையான தற்சோதனைப் பயிற்சியினால் மனிதப் பிறவியின் மாண்பைச் சிறப்பித்துக் கொள்ளுங்கள்.

✷ உங்களைப் பார்த்து இத்தகைய சீரிய வாழ்க்கை நெறியினை மற்றவர்களும் பின்பற்றும்படியாக உங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டு உயர்வு பெறுங்கள். இது நமக்கு மட்டுமல்ல மனிதகுல முழுமைக்கும் வாழ்க்கை நலத் தொண்டாக அமையும்.

✷ உலகின் மனிதகுல வாழ்வில் எத்தனையோ மாற்றங்கள் இது வரையில் ஏற்பட்டன. மனவளமும் உடல் நலமும் அமைதி வாழ்வும் அளிக்கக்கூடிய நமது குண்டலினியோக வாழ்வே

மனித குலத்துக்கு எல்லா வகையிலும் நலம் பயக்க வல்லது. நீங்கள் ஒவ்வொருவரும் அமைதிப்படையின் உறுப்பினராகத் திகழ வேண்டும்.

## 78. அன்பு நிறை

✢ கருப்பையில் விந்து நாதக் கலப்பு ஏற்பட்ட முதல் மாதத்தில் ஒன்று (1) போல் கம்பமாகவும், இரண்டாவது மாதத்தில் தலையும், மூன்றாவது மாதத்தில் கால்களும், நான்காவது மாதத்தில் மூக்கு முகம் மற்ற உறுப்புகளும், ஐந்தாவது மாதத்தில் செவி, நாக்கு, கண்கள் இவைகளும், ஆறாவது மாதத்தில் நகம், ஏழாவது மாதத்தில் நரம்பு எலும்போடு மூத்திரப்பை சுவாசப்பை இருதயம் இவைகளெல்லாம் உற்பத்தியாக, மூச்சுவிட வைப்பதும், எட்டாவது மாதத்தில் கரு வளர்ச்சி முழுமையடைவதும், ஒன்பதாவது மாதத்தில் தாய்க்கு ஆபத்து இன்றி குழந்தை வெளியேறு வதற்கு ஏற்றவாறு தலைகீழாகத் திருப்பிக் கொள்வதும், பத்தாவது மாதத்தில் குழந்தை வேறு கருப்பை வேறாக பிரித்தெடுப்பதும், எவ்வளவு கூர்மையான சீர்மையான அறிவு நுட்பத்தைக் கொண்ட நிகழ்ச்சிகளாகும். இவையெல்லாம் இறையாற்றலின் அன்பு நிறை அறிவினாலல்லவா நடைபெறுகின்றன.

## 79. அன்பும் கருணையும்

◊ நம் ஒவ்வொருவருடைய தேவையையும் - விருப்பத்தையும் உணர்ந்து எந்த இடத்தில் குறை இருக்கிறது. எந்த இடத்தில் நிறை இருக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டு உதவி செய்து வாழ்வதுதான் அன்பும் கருணையும்.

◊ சிவம் என்பது ஈர்ப்புசக்தி. எல்லாவற்றையும் சேர்த்து அணைத்துப் பிடித்துக் கொண்டுள்ளது. இந்தப் பேரியக்க மண்டலத்தில் உள்ள பரமாணு முதல் கோடானு கோடி நட்சத்திரங்கள் வரையில் அனைத்தையும் ஒரே கொத்து இயக்கமாக சேர்த்து பிடித்துக் கொண்டுள்ளதே அதுதான் அன்பு.

◊ இறைநிலையே அதன் ஆற்றல்களே அன்பும் கருணையுமாக மலர்ந்துள்ளது.

◊ அன்பு என்பது தன்னோடு மற்ற உயிர்களை இணைத்து நோக்குவது. கருணை என்பது ஒரு ஜீவன் மகிழ்ச்சியோடு நிறைவோடு வாழ்வதற்குரிய வசதிகளை அளிப்பது.

- ♢ பரிணாம வரிசையில் சிறந்த மனிதன் - விலங்கின குணங்களி லிருந்து விடுபட்டு அன்பும் - கருணையும் கொண்டு நட்புறவோடு ஒத்தும் உதவியும் வாழவேண்டும்.
- ♢ அன்பையும் கருணையும் இயல்பாக உடையதே இறைநிலையின் அறிவு ஆகும்.
- ♢ பணிவு, கனிவு, துணிவு மூன்றையும் அவற்றின் பயன் உணர்ந்து பழகி இயல்பாக்கிக் கொள்வோம். வாழ்வில் அன்பும் கருணையும் ஓங்கும். வெற்றி நிச்சயம்.
- ♢ அன்பும் கருணையும் என்ற மாயக்கயிறுதான் தெய்வ நிலையையும் எல்லாப் பொருட்களையும் உயிர்களையும் மனிதர்களையும் வழிநடத்திக் கொண்டிருக்கிறது.
- ♢ இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அன்பும் கருணையும்தான் எங்கும் எதிலும் அமைந்திருக்கக் காணலாம். அன்பு என்பது, எந்த ஒன்றையும் உடலாலோ மனத்தாலோ தன்னோடு இணைத்துப் பிடித்துக் கொண்டிருப்பது. அப்படி இணைந்துள்ள மற்றொன்றுக்குத் தனது ஆற்றலைத் தொடர்ந்து அளித்து அதனைக் காத்து வருவது கருணை.
- ♢ ஒவ்வொருவரும் அன்பையும் கருணையையும் எழுச்சி பெறச் செய்து அதன் வழியே வாழ முற்படும்பொழுது எல்லா உயிர் களோடும் ஓர் இனிமை ஏற்படும் அல்லவா? அந்த இனிமை தான் வாழ்வில் முழுமை தரும் அறிவை உயர்த்தி வைக்கும்.
- ♢ அன்பு என்றால் ஈர்த்துப் பிடித்துக் கொண்டிருப்பது. கவர்ந்து பிடித்துக் கொண்டிருப்பது.
- ♢ இந்தப் பேரியக்க மண்டலத்தில் உள்ள கோடான கோடி நட்சத் திரங்களை எல்லாம் கட்டிப் பிடித்து ஒன்றை விட்டு ஒன்று பிரியாமல் வைத்துக் கொண்டிருக்கிறதே. இதுதான் அன்பு.
- ♢ அன்புக்கும் மேலாக எல்லோரும் நலமாக இருக்க வேண்டி உதவி செய்வதுதான் கருணை.
- ♢ அன்பை உணர்ந்தால் தானாகவே கருணை பிறக்கும்.
- ♢ அன்பு என்றால் இணைத்துக் கொள்வது ஒரு குழந்தையைத் தாய் தன்னோடு இணைத்துக் கொண்டிருப்பது, விடாமல் பார்த்துக் கொள்வது அன்பு. அதற்கு மேல் அதை ஊட்டி வளர்ப்பது கருணை. அன்பை எல்லா இடங்களிலும் பார்க்கலாம்.

♢ மாமரத்தில் ஒரு பழம் தொங்கிக் கொண்டிருக்கிறது என்றால் அதைவிடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறதே அதுதான் அன்பு. அதற்கு மேலாக அது வளர்வதற்கு வேண்டிய ரசத்தை ஊட்டி பாதுகாத்துப் பெரிதாக்கிப் பழுக்கச் செய்கிறது பாருங்கள், அதுதான் கருணை.

## 80. அன்பொளி

✲ பெருநோக்கம் கொண்ட அறிஞர்களின் கருத்துக்களையும் செயல்திட்டங்களையும் உலக மக்களிடையே பயனுள்ள முறைகளில் பரப்பி தகுதியும் தேவையும் உடையவர்களுக்கு, அறிவு, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம் என்ற ஐவகையான வாழ்க்கை ஆதாரத் துறைகளில் விளக்கங்களைச் செய்து, சிந்தனைத் திறமைகளையும் செயலார்வத்தையும் ஏற்படுத்தி, எல்லோரும் எண்ணம் சொல் செயல்களை விளைவறிந்து பயன்படுத்துவதில் பண்பையும் பழக்கத்தையும் பெற வாய்ப்பு ஏற்படுத்தி, மனிதர்களைச் சிறந்த மனிதர்களாக வாழச் செய்ய வேண்டும் என்ற நமது பெருநோக்கத்தின் எழுச்சியே அன்பொளி என்ற பத்திரிக்கையாக உருவாகி வந்துள்ளது.

✲ உலக மக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டுள்ள அறிஞர்கள் ஐந்து துறைகளிலும் அவரவர்கள் பெற்றுள்ள அனுபவங்களையும் திறமைகளையும் கொண்டு, எழுத்து வடிவிலும் செயல் திட்டங்களின் மூலமாகவும் அன்பொளியின் வாயிலாகத் தங்கள் கடமைகளைச் செய்யலாம். அறிஞர்களின் மேடையாக இந்த அன்பொளி திகழ வேண்டுமென்பதே நமது நோக்கமாகும்.

✲ எந்த விதமான கருத்துக்களும், செயல்திட்டங்களும், தேச, இன, ஜாதி, மத, மொழி இவைகளின் பற்றுதல்களைக் கடந்ததாகவே இருக்க வேண்டும் என்பது நமது திடமான முடிவு.

✲ எந்தக் கட்சியும் மனித இனத்தின் நல்வாழ்வையே விரும்பி நிற்பதால் உலகில் உள்ள எல்லாக் கட்சிகளையும் ஏற்றுக் கொண்டும், எந்தத் தனிக் கட்சியையும் சார்ந்திராமலும் நமது அன்பொளி தன் கடமையை ஆற்றும்.

✲ ஏழ்மை, வியாதி, பஞ்சமகா பாதகங்கள் என்ற இவைகளை ஒழித்து மனிதர்கள் அன்போடும் சுகாதார முறைப்படியும் வாழ வேண்டுமென்பதே, எல்லா மதங்களின் அடிப்படைக் கருத்து.

இதை நாம் தெளிவாக அறிந்துவிட்டதால், இந்த நோக்கத்திற்கு ஏற்பத் தவம், தத்துவ விளக்கம், கடமை என்ற மூன்று வகையிலும் தெளிவான பாதையைக் காட்டி, உலக மக்கள் அறிவில் அன்பு ஒளி வீசச் செய்யப்படும் நமது அன்பொளி.

* நாடுகள் அனைத்தும் சேர்ந்த ஒரே உலக அரசாட்சி ஏற்பட வேண்டும். அதன் கீழே ஒவ்வொரு மனிதனும் வாழ்நாள் முழுவதும் அவசியமான உணவு, உடை, இட வசதி, கல்வி, தொழில், வாழ்க்கைத் துணை ஆகிய வாழ்க்கைத் தேவைகளைக் காலாகாலத்தில் பெற்று எல்லோரும் சமத்துவமாய் சுதந்திர மாய் சந்தோஷமாய் வாழ வேண்டும். வயதுக்கேற்ற அளவில் அறிவின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு இயற்கை தத்துவத்தை அறிந்து, தன் மூலமும் முடிவும் மறவாத ஞாபகத்துடன் விழிப்போடு வாழுகின்ற நிலையாகிய தன்னிலை விளக்கம் (ஆன்ம ஞானம்) பெற்று, எல்லாரும் ஓர் குலம் உயிரனைத்தும் ஒன்றே என்ற பரந்த மனப்பான்மையில், ஒருவருக்கொருவரும் சேவை செய்து அன்போடு அறத்தோடு, பண்போடு, அமைதியோடு வாழ வேண்டும் என்பதும், அதற்காக அவ்வப்போது கிட்டுகின்ற சூழ்நிலைகளைப் பயன்படுத்தித் தன்னால் முடிந்தவரையில் கடமையைச் செய்ய வேண்டுமென்பதே அன்பொளியின் பெருநோக்கமாகும்.

* அன்பொளி மேடைமீது வந்து அமர, உலக அறிஞர்களை அன்போடும் ஆர்வத்தோடும் அடைகின்றோம். அறிஞர்கள் பலரின் கருத்துக்களை அறிந்து கொள்ளவும், அவைகளை வாழ்வில் பயனாக்கிக் கொள்ளவும், உலக சகோதர சகோதரிகள் அனைவர்களையும் உள்ளக் கனிவோடு அழைக்கின்றோம்.

* உலக மக்களின் வாழ்வை வளமுறைச் செய்வதற்கு ஏற்ற வழிகளைச் சிந்தித்து அறிந்தவர்களும், அனுபவசாலிகளும், ஆகியவர்களின் சிறந்த கருத்துக்களைத் தேவையான இடத்தில் சேர்த்துப் பயன்படுத்தி, பயன் பெருக்கி மனித இன வாழ்வில் புத்தொளி மலரச் செய்வோம். வாரீர்.

## 81. அனைவருக்கும் சொந்தம்

* உலகைப் பற்றி - மனிதக் குலத்தைப் பற்றி - பிரபஞ்சத்தைப் பற்றி - இறைநிலையைப் பற்றி எவருடைய உள்ளத்தில் எந்தக் கருத்து எழுந்தாலும் அது உலக மக்கள் அனைவருக்கும் சொந்தமானதாகும்.

## 82. அனுமானம்

♬ புலன்களால் அறிய முடியாத எந்தப் பொருளையும் இயக்கத்தையும் விளைவுகளையும் உணர்ந்து கொள்வதற்கான ஐந்து புலன் உணர்வுகளுக்கு மேலாக ஆறாவது அறிவு ஒன்று அமைந்திருக்கின்றது.

♬ அனுமானம் என்ற ஆறாவது அறிவு எப்பொழுதுமே இயக்கத்தில் மனிதனிடம் இருந்து கொண்டு இருக்கிறது. எனினும் பொருள் பற்று மயக்கத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் மனிதனிடம் சில அனுமானங்கள் கற்பனையாகவும் வெளியாகும். அவையெல்லாம் உண்மையான ஆறாவது அறிவின் வெளிப்பாடு என்று எண்ண முடியாது.

♬ பேரியக்க மண்டலத்தில் நடைபெறுகின்ற இயக்கங்களை ஓர் அனுமானத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சரியாகவும் ஒத்தும் இருக்குமேயானால் அந்த முடிவைத்தான் ஆறாவது அறிவின் தேர்வு என்று கொள்ள வேண்டும்.

## 83. அணு

♀ அணுவில் பிரபஞ்சம் அடக்கம் பெற்றிருப்பதனை அறிந்தோர் அறிவர்.

♀ அணுவில் அண்ட பிண்டம் அனைத்தும் உண்டு.

♀ அணு என்ற நிலைக்கு மூலமான நிலையைப் பரமாணு என்று கூறுகிறோம்.

♀ எந்தப் பொருளை எடுத்தாலும் அணுக்களின் கூட்டாகக் காண்கிறோம். அணுவோ இறைத்துகள்களின் தொகுப்பு நிலையாகும். இறைத்துகளோ இறைநிலையின் நுண்பகுதி தானே!

♀ அணுக்கள் கூட்டு இயக்கத்தை விஞ்ஞானிகள் பேரணு என்று கூறி, அவ்வாறு உருவான கூட்டத்தில் எத்தனை அணுக்கள் அடங்கி இருக்கின்றனவோ அதற்குத் தக்கவாறு பெயரிட்டு, மொத்தம் 92 பேரணுக்கள் உள்ளன என்று கூறியுள்ளார்கள்.

♀ இறைத்துகள்கள் எப்பொழுதும் ஒரு அணுவை விட்டு வெளியேறிக் கொண்டே இருக்கும்.

- ♀ அணு என்ற ஒரு குறைநிலைக்கு மூலமும் முடிவும் இருப்பது ஒரே பூரணப் பொருள்தான் என்று விளங்குகிறது.
- ♀ பிரபஞ்சத்தில் காணும் எந்தப் பொருளும் அணுக்களின் கூட்டமே. சக்தி என்றாலும் வேகம் என்றாலும் ஒன்றே. வேகம் என்பது பிறக்குமிடம் அணுவேயாகும்.
- ♀ அணுவைக் கடந்து ஒரு பொருளோ அணு நிலையைக் கடந்து ஒரு தனி நிலையோ உண்டு எனில், அது வெட்ட வெளியைத் தவிர வேறொன்றுமில்லை.
- ♀ அணுவில் ஒரு வேகம் இருக்கின்றதென்றால் அது ஒரு குறை நிலையாக இருந்து, நிறைவான ஒன்றை நாடி எழுகிறது என்பது தான் பொருள்.
- ♀ ஈர்ப்பு எனும் சக்தி எழுமிடம் அணுவாகும் - இயங்குமிடம் அண்ட - பிண்ட -சராசரம்.
- ♀ ஒவ்வொரு அணுவும் அல்லது அணுக்கொத்தும் தன்னியக்கம் தொடரியக்கம் பிரதிபலிப்பு இயக்கம் விளைவு என்ற நான்கு வகையான தன்மைகளோடு இயங்குகின்றன.
- ♀ அணு என்ற வார்த்தைக்கு நுண்ணிய மூலக்கூறு என்பதே பொருள்.
- ♀ தத்துவ ஆராய்ச்சியிலும் விஞ்ஞானத்திலும் தேர்ந்த அறிஞர்கள் இந்த அணுவைத்தான் உலகத் தோற்றங்களுக்கெல்லாம் மூலக்கூறாக உணர்ந்தார்கள்.
- ♀ அணுவில் அடங்கியுள்ள மூலக்கூறுகளாக உள்ள இறைத் துகள்களை யூகித்துணரவோ செயல்பாடுகளை ஆராய்ச்சியினால் கணிக்கவோ (அவ்விருசாராலும்) முடியவில்லை. இவ்வாறு இறைத்துகள்களால் இணைக்கப்பட்ட, ஒரு சிறு கொத்தியக்கம் தான் விண் என்கின்ற அணுத்துகளாகும். அதற்கு வைத்த பெயர்தான் பரமாணு.
- ♀ பரிணாம வரிசையில் ஏற்பட்ட முதல்துகள் பரமாணுதான். இது அணு என்ற வார்த்தையாலும் தத்துவ ஞானத்தில் குறிக்கப்படும்.
- ♀ பரமாகிய அணு அல்லது அணுவாக இருக்கும் பரம். அணுவும் பரமேதான். ஆனால் இயக்கத்தில் இருக்கின்ற பரம்: அதன் இயக்கம் நின்று போனால் மீண்டும் அது இயக்க மற்ற பரமாகி விடும். அணுவுக்கு எப்போது இயக்கம் அற்றுப் போகிறது என்பதை விளக்கினால் நீளும்.

♀ ஹைட்ரஜன் என்ற நீரகத்தின் அணுதான் மிகவும் எளிமையான அணு. அதில் இரண்டேயிரண்டு பரமாணுக்கள்தான் உள்ளன. ஒன்று புரோட்டான் மற்றது எலக்ட்ரான் என்பார்கள்.

♀ அணுவின் தத்துவத்தை யான் ஆராய்ந்தேன். அண்டபிண்ட சராசரங்கள் அதன் கூட்டாகும். அணுவிலே சூடுண்டு, குளிருண்டு, காற்மென்ற உயிருமுண்டு, இருளுண்டு, ஒளியும் உண்டு, அசைவுண்டு, எழுச்சி கவர்ச்சிகளுமுண்டு, அண்டபிண்டம் அனைத்துமுண்டு, ஆலமரம் அதன் விதத்தில் உள்ளதுபோல.

♀ பிரபஞ்சத்தில் தோற்றமும் இயக்கமும் உடைய எந்தப் பொருளிலும் உள்ளும் புறமும் அரூபமாக நிறைந்து இயங்குகின்ற அல்லது இயக்குகின்ற சக்தி ஒன்று உண்டு அல்லவா? அதுவே ஆன்மீகத் துறையின் மெய் என்று பேசப்படுகிறது. அதன் எழுச்சி நிலையாகவும் இயக்க நிலையாகவும் உள்ளதே அணு என்பதாகும்.

## 84. அணுசக்தி

* இரும்பையும் மின்சாரத்தையும் கண்டுபிடித்த பின் பல துறை களிலும் வேகமாக முன்னேறி வாழ்வை வளமாக்கிக் கொண்டான். அறிவு மேலும் உணர்ந்து அணுசக்தியை கண்டுபிடித்த பின், வாழ்வில் முன்னேறிக் கொண்டே இருக்கும் பாதையில் ஒரு திருப்பம் வந்திருக்கிறது.

* மனிதன் அடைந்த முன்னேற்றங்கள் யாவும் பயனற்றே போகும் அளவுக்கு அணுசக்தியைத் தவறாக மனித இன வாழ்விற்குப் பாதகமாக உபயோகிக்க ஆரம்பித்து விட்டதால் மனித இனமே அழிந்துவிடக் கூடிய அபாயம் தோன்றிவிட்டது.

## 85. அணுகுண்டு

❍ ஒரு அணுகுண்டு செய்வதற்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாகின்றது. அணுகுண்டு சோதனையால் மக்களுக்கு உடல்நலக் கோளாறுகள் ஏற்படுகின்றன. நாட்டிற்கு நாடு அஞ்சி மக்களுக்கு விரோதமான செயல்களும் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

❍ அணுகுண்டு செய்வதை எல்லா நாடுகளும் நிறுத்திவிட வேண்டும். இருப்பதை அபாயம் இன்றி அழிப்பதற்கு ஐ.நா. ஸ்தாபனத்திடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

- உங்கள் நாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்காக உலகையே அழிக்கத்தக்க அளவு அணுகுண்டுகளைச் செய்யும் நீங்கள், மனித வர்க்க உரிமை எனப் பேசுவது எப்படிப் பொருந்தும்? எங்கள் நாட்டு மக்களும், நாங்களும் அழிந்தாலும் சரி எங்கள் கொள்கைகளைக் காப்பாற்றுவோம் பரப்புவோம். அவற்றின் மூலம் உலக மக்களின் வாழ்வில், புத்தொளி மலரச் செய்வோம் என்று நீங்கள் ஏன் முயலக் கூடாது.
- அணுகுண்டு வெடிக்கப்பட்டவுடன் அதில் வைத்திருக்கும் ரசாயன உலோக அணுக்களுடன் அதைத் தொடர்ந்து உலகிலுள்ள காற்று மண்டலத்திலும், பூமிப் பொருட்கள் இவற்றில் உள்ள அணுக்களும் உடனே காந்த சக்தியை ஒலி, ஒளி, சுவை, மணம் இவைகளாக மாற்றிவிட்டுச் சக்தியை இழந்து விடுகின்றன. இதனால் அவைகளெல்லாம் பூமியை விட்டுவிலகி அதது இழந்த சக்தியின் அளவுக்கு ஏற்ப ஆகாயத்தில் மிதந்து ஓடுகின்றன. இந்த நிகழ்ச்சியால் பூமிக்கோளம் முழுவதும் ஆகாய மண்டலத் திலும் அணுக்களின் நிலை மாறுபாடுகள் உண்டாகின்றன.
- பெருமளவில் சக்தியை இழந்த அணுக்களின் சாம்பல் வாயு மண்டலத்தைத் தாண்டித் தாண்டிப் பெரும்பாலும் சென்று விடுகின்றன. அவைகள் மறுபடியும் சுழன்று சுழன்று பூமியோடு இணையத்தக்க அளவு காந்த சக்தியைப் பெறுவதற்கு பல ஆண்டுகளாகும்.
- ஒரு அணுகுண்டு வெடித்தால் அதன் அதிர்ச்சி ஒலி, ஒளி இவைகளின் தொடரியக்கம் உலகிலுள்ள எல்லாப் பொருட் களையும் ஜீவராசிகளையும் அதனதன் அளவில் தாக்கும்.
- அணுகுண்டு வெடித்தால் அதன் தாக்குதலால் காற்று, நீர், உணவு, உடல் அனைத்திலும் ரசாயன மாற்றம் ஏற்பட்டு அதன் விளைவால் மனிதருக்குப் பல தீமைகள் ஏற்படுகின்றன.
- அணுகுண்டு வெடித்தால் பிரபஞ்சமும் ஒவ்வொரணுவும் புறத்தே நிகழும் ஒலி, ஒளி, சுவை, மணம் அழுத்தம் ஆகியவையும் தன்னகத்தே அடங்கியுள்ள காந்த சக்தியின் அளவுக்கும், பரிணாம நிலைமைக்கும் ஏற்ப, தனது கண்ணறைகளின் விரிவு சுருக்க இயக்கத்தால் பிரதிபலித்துக் காட்டும் வல்லமை பெற்றிருக்கிறது.
- அணுகுண்டு வெடிப்பதால் எல்லா உயிர்கட்கும் பொருட் களுக்கும் அதனதன் அளவிற்கும், தூரத்திற்கும் ஏற்றவாறு

அதிர்ச்சி ஏற்படத்தான் செய்கின்றது. அதன் விளைவாக உடல் அணுக்களில் மின்சார எழுச்சி ஏற்பட்டு, அசைவ ஓட்டம் இயக்கங்களால் உடல் ரசாயனமாக மாற்றமாகிறது. இது ரத்த ஓட்டத்தை எந்த அளவு பாதிக்கிறதோ அதற்கு ஏற்றவாறு வியாதியோ மரணமோ நேரிடலாம்.

- அணுகுண்டு வெடித்தால் ஒரு சிலருக்கு இந்த நிகழ்ச்சியால் நன்மையும் விளையும். மூளை மிகவும் சுறுசுறுப்படைந்து அறிவுப் பிரகாசம் அடையவும் முடியும். எப்படிப் பார்த்தாலும் நன்மையின் அளவை விடத் தீமையின் அளவே அதிகமாகையால் அணுகுண்டு வெடிப்பது மனித சமுதாயத்துக்கும் மனிதத் தன்மைக்கும் கெடுதலே தரும்.

- விஞ்ஞானிகள் அனைவரையும் அகில உலக பிரஜைகளாக்கி, அவர்கள் உலக மக்களின் நலத்திற்காகவே தங்கள் அறிவின் திறத்தை பயன்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் விஞ்ஞானம் உலக மக்கள் தன்மைக்கு பூரணமாக பயன்படும்.

- **இன்று உலகெங்கும் வளர்ச்சி பெற்ற நாடுகளில் கையிருப்பாக உள்ள அணுகுண்டுகள், இந்த உலகத்தை 200 தடவை முழுவதும் அழிக்கப் போதுமானவை. இந்த உண்மையைப் பத்திரிகையில் பார்த்த உடனேயே என் உடலில் உள்ள எல்லா செல்களும் ஆட்டம் கண்டுவிட்டன.**

- நான் அணுகுண்டால் ஏற்படவிருக்கும் அபாயத்தை கணிப்பது இதோடு நின்று விடாது. அன்று முதல் இன்று வரையில் உலகில் புதிதாகத் தோன்றிய அணுகுண்டுகள் எத்தனை இருக்கும் என்று தெரியவில்லை. அதோடு அன்றிருந்த அணுகுண்டின் ஆற்றலைவிட விஞ்ஞான நுட்பத்தால் இன்று பல மடங்கு பெருக்கப்பட்டும் உள்ளது.

- அணுகுண்டை வைத்துக் கொண்டு மற்ற நாடுகளைப் பயப் படுத்திவிடலாம் என்ற கணிப்பு சில நாட்டு மக்களிடம் இருந்த போதிலும் இது ஒருக்காலும் சாத்தியமாகாது.

- அணுகுண்டு உற்பத்தி நுண்திறன் விஞ்ஞானத்தில் வந்து விட்டபடியால் எதிர்காலத்தில் ஒரு தனி மனிதனோ, ஏழ்மையில் உள்ள ஒரு நாடோ, ஒரு முரட்டுத்தனமான ஒரு குழுவோ செய்ய முடியாது என்று நினைக்க முடியாது. இந்த உண்மையை உணர்ந்து அணுகுண்டு உற்பத்தியை நிறுத்திவிட வேண்டும் என்ற அறிவு உலக மக்களிடையே ஒளிவிட வேண்டும்.

- அழிவுப்பாதையை நோக்கிய செயல்கள் எவருக்கும் வெற்றி தராது.
- இன்று வரையில் செய்த அணுகுண்டுகளை அப்படியே இருப்பாக வைத்திருப்பதும் பேரபாயம்தான். அவைகளை எங்கே கொண்டு போய் கொட்டி அழித்து விடுவது என்பதை எதிர்காலத்தில் விஞ்ஞானிகள்தான் சிந்தனை செய்து முடிவெடுக்க வேண்டும்.
- எந்த வழியிலேயும் அணுகுண்டை அழித்துவிட்டால், அதில் அடங்கியுள்ள ஆற்றல் விஷக்கதிர்கள் பரவாமல் காத்துக் கொள்ள முடியாது.
- அணுகுண்டுகளை அழிப்பதைவிட செயலற்றுப் போகச் செய்வது எப்படி? என்ற ஆராய்ச்சியில்தான் விஞ்ஞானிகள் இறங்க, வாழ்வில் அச்சமும் அறிவும் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது.
- இயற்கையின் பேராற்றலை உணர்ந்து அதை மதித்து வாழக்கூடிய அறிஞர்களும் உயிரினங்களின் வாழும் உரிமையைப் பறிக்கவோ அழிக்கவோ கூடாது என்ற அன்பும் கருணையும் பெருக்கிக் கொண்ட அறிஞர் பெருமக்களையும் யான் வேண்டிக் கொள்வது, உடனடியாக அணுகுண்டு உற்பத்தியை நிறுத்திவிட வேண்டும். கையிருப்பில் உள்ள அணுகுண்டுகள் அனைத்தையும் செயலற்றுப் போகச் செய்ய வேண்டும் என்று தலை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.
- உலகில் ஒரு மனிதன் என்ற உரிமையோடு மனித வர்க்கம் சுவாசிக்கும் காற்றை விஷமாக்கி விடுகிறீர்களே! இது நீதியா? என்று கேட்கிறேன். நாகரிகத்தில் உயர்ந்து கொண்டே வருகிறது என்று சொல்லிக் கொள்ளும் ஒரு நாட்டின் பொறுப்புடைய செயலா இது? எனக் கேட்கிறேன்.
- அணுகுண்டைச் செய்கிறீர்கள் ஆகையால் இப்போது பரீட்சை செய்து பார்ப்பதால் காற்றைக் கெடுப்பது ஒரு குற்றம் பின்னர் சமயம் வாய்த்தால் பல லட்ச மக்களைக் கொன்று குவித்திட வேண்டும் என்று சதித் திட்டமிடுவது மற்றொரு குற்றம்.
- நீங்கள் விஞ்ஞானக் கலையில் அடைந்த முன்னேற்றம் மனிதர் களைக் கொன்று குவிப்பதுதானோ? ஒரு முள் பிறர் உடலில் தைத்தால், அதனால் அவருக்கு எவ்வளவு துன்பம் இருக்கும் என யூகித்துத் தாம் வருந்தும் அளவுக்கு மனோ உணர்ச்சியைப்

பெற்ற மனிதவர்க்கம் கும்பல் கும்பலாக மனிதர்களைக் கொன்று குவிக்குமளவுக்கு அணுவிஷம் எவ்வளவு கொடூரம்.

## 86. அணுஉலை

❖ அணு உலைக்களத்திலும் அணுக்கள் மோதிச் சூடேறி அதன் சக்தியை மின்சக்தியாக மாற்றி வெளியிட்டு விடுவதால் சக்தியை இழந்துவிட்ட அணுச் சாம்பல் காற்றில் பரவி மக்களுக்குத் தீமை பயக்கும்.

## 87. அணுவிஷம்

♪ அணுவிஷம் பெரும்பாலும் விந்து அணுக்களையே அதிகமாகப் பாதிக்கிறது. விந்து பக்குவமாகும் இடமாகிய மூளையையும் பாதிக்கிறது.

♪ மனித வர்க்கம் தொடர்ந்து வாழவேண்டுமானால் உடனே அணுகுண்டு விஷம் தடை செய்யப்பட வேண்டும்.

♪ அணுவிஷம் மக்கள் சுவாசிக்கும் காற்றிலும் உண்ணும் உணவிலும் ஓடும் ரத்தத்திலும் கலந்து நீண்ட நாட்களுக்குப் பலவிதமான வியாதிகளைத் தோற்றுவித்து துன்பங்களைத் தரும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

## 88. ஆக்கத்துறை

⌘ உங்களுக்குக் கிடைக்கக் கூடிய பாக்கியம் எல்லாம் முன்னே நீங்கள் இதுவரை செய்த வினையின் விளைவு, செயலின் விளைவு என்று தெரிந்து கொண்டு அதனுடைய பயனாக இனிமேல் நல்ல காரியங்களையே செய்வோம் என்று எண்ணிக்கொண்டு நலமுள்ள காரியத்தைச் செய்வேன், நலமுள்ள காரியத்தை நினைப்பேன் அதற்கு என்னுடைய ஆற்றல் முழுவதும் உடல் சக்தி முழுவதும் செயல்படட்டும் என்று எண்ணினீர்களானால் அதுதான் பாசிட்டிவ் திங்கிங் (Positive Thinking) தமிழில் ஆக்கத்துறை என்று பெயர்.

⌘ நெகட்டிவ் (Negative) என்றால் முறித்தல் எதிர்த்தல் என்று பொருள். எதிர்ப்பின்றி ஆக்கம் என்றால், மேலும் மேலும்

நலன் அளிக்கக் கூடியதுதான் அந்த ஆக்கம். அந்த முறையிலே நீங்கள் எப்படி எண்ணுகிறீர்களோ அப்படித்தான் நலம் விளையும்.

## 89. ஆக்கினை

☯ மெய்ஞ்ஞானம் என்ற அருட்கோயிலுக்குள் புகும் வாயில் ஆக்கினைச் சக்கர யோகமேயாகும். தனது இயக்க விளைவுதான் இன்பமும் துன்பமும் எனும் உண்மையை உணராமல் மயங்கி நிற்கும் நிலையிலிருந்து தெளிவுபெற்றுத் தன் ஆற்றலைப் பொறுப்புணர்ந்து செலவிடும் பண்பு ஆன்மாவுக்கு ஆக்கினைப் பயிற்சியினால் ஓங்கும்.

☯ தேவையுணர்ந்து தனது ஆற்றலைச் செலவிடவும், தேவை யில்லாதபோது செலவிலிருந்து தன்னை மீட்டுச் சேமிப்பு நிலையில் இருக்கவும், ஆக்கினைப் பயிற்சியினால் ஆன்மா விற்குத் திறமை பெருகும்.

☯ ஆசானால் எழுப்பப்பெற்ற குண்டலினி சக்தியின் இயக்க விரைவு நாளுக்குநாள் கூடிக்கொண்டேயிருக்கும். உடல்நலம் மனநலம் ஓங்கும்: முகம் அழகு பெறும்.

☯ அகநோக்குப் பயிற்சியில் புருவத்திடை மனம் செலுத்தி கரு மையமான ஆன்மாவை அங்கு நிலை நிறுத்தி அகத்துவம் ஆற்று கின்றபோது அதனை ஆக்கினைத் தவம் என்று கூறுகிறோம்.

## 90. ஆக்கம் – தேக்கம் – ஊக்கம் – தாக்கம்

☸ ஊக்கம் இருப்புநிலையில் பூரணம், பேராற்றல், பேரறிவு என்ற மூன்று ஒன்றிணைந்த தன்மைகளும் இறைவன் பிரபஞ்சமாக பரிணமிக்கக் காரணமாக இருந்ததே ஊக்கம்.

☸ தேக்கம், இருப்பு நிலையான இறைவெளி இயக்கமாக வந்து எத்தனை விதமான ஆற்றல்களை வெளிப்படுத்துகிறதோ அத்தனையையும் பிரபஞ்சமாக மலர்வதற்கு முன்னம் இறுக்கி - சுருக்கி - 'மரம் - வித்தில் இருப்பது போல' வைத்திருந்தே அந்த ஆதி நிலையே தேக்கம்.

☸ ஆக்கம், இறைநிலை தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தத்தால் தன்னைத் துண்டுபடுத்தி இயக்கமாகி அணு முதற்கொண்டு அண்ட

கோடிகள் - உயிரினங்கள் இவையாகப் பரிணாமமடைந்து ஒவ்வொரு பரிணாமத்திலும் அதற்கு வேண்டிய இயல்பூக்கச் சிறப்புடன் மாற்றம் பெறும் தன்மை ஆக்கம்.

☸ தூக்கம் பிரபஞ்சத்தில் பொருட்களோ அலைகளோ ஒன்றோடொன்று மோதும் பொழுதும் கூடும் பொழுதும் தக்கதோர் விளைவுதரும் இறைநீதி தாக்கம்.

## 91. ஆதினங்கள்

⚐ வாழ்வின் நோக்கமறிந்து வாழும் மக்களுக்கு அறிவை அறிவிக்க எழுந்து இயங்கிக் கொண்டிருக்கும் ஆதினங்களும் - மடங்களும் தகுதியான மக்களுக்கு அகநோக்குப் பயிற்சி மூலம் அறிவையறிவிக்கும் உயர் கடமையினை மறந்து விட்டிருக்கின்றன. தவப்பயிற்சி செய்யாத - தன்னை அறிந்து கொள்ளாத - அறிந்து உணர்ந்தவர்போல நடிக்கும் பக்தியும், இல்லாத ஞானமும் இல்லாத பலரிடம் ஆதினங்கள் - மடங்கள் இவற்றின் ஆளுமைப்பேறு சிக்கிக் கொண்டிருப்பதே காரணமாகும்.

⚐ தன்னையறிந்து தகுதி பெற்ற மக்கட்கும் அப்பேற்றை அளிக்க வழிகாட்டும் கல்வியில், பயிற்சியில் ஆதினங்களின் தலைவர்கள் தேற வேண்டும். இன்றைய உலகுக்கு அவசியமான தேவையது.

⚐ தன்னையறிந்து கொள்ளாத ஒருவர், மக்களை வழி நடத்தும் மதத்தலைவராகப் பொறுப்பேற்று செயல்புரிவது, ஒரு குருடன் பல குருடர்களை வழிப் பயணம் நடத்துவது போலாகும்.

## 92. ஆசை

⁕ சீரமைக்கப்படாத ஆசை செயலாகாமல் தடைபடும்போது, அத்தடையை நீக்க எழும் ஆர்வமே சினம்.

⁕ ஆசையின் இயல்பறிந்து அதை நலமே விளைவிக்கத்தக்க வகையில் பண்படுத்தி ஒழுங்குபடுத்திவிட்டால் அதுவே ஞானமாக வளரும்.

⁕ ஆசைக்கு எல்லைகட்டிவிட்டால் மனம் அமைதி பெறும்.

⁕ தேவையில்லாத ஆசை என்றால் அமைதியாகச் சிந்திப்பது நல்லது. இந்த ஆசை எழுந்ததே தவறு. இதை நிறைவு செய்தால் பல

துன்பங்கள் வருமே. எனவே இந்த ஆசையை நான் விட்டு விடுவேன் என்று தெளிவாக எண்ணி தவம் இயற்றிச் சங்கற்பம் மேற்கொள்ள வேண்டும்.

- நிறைவும் செய்யாமல் மாற்றவும் செய்யாமல் ஆசைகளை மனதில் சுமந்து கொண்டிருந்தால் மன அமைதி கெடும். உடலில் குன்மம் முதலிய நோய்கள் உண்டாகும்.
- ஆசையின் மறுமலர்ச்சியே ஆறு குணங்கள்.
- ஆசையின் இயல்பறிந்து அதை நலமே விளைவிக்கத்தக்க வகையில் பண்படுத்தி - ஒழுங்குபடுத்திவிட்டால் அதுவே ஞானமாகவும் மலரும்.
- ஆசை தடைபடும்போது அத்தடையை நீக்க எழும் ஆர்வமே சினம்.
- ஆசையுள்ள பொருட்களைத் தனக்கு வேண்டுமெனவும் பிறர் கவராமலும் பாதுகாத்துக் கொள்ளும் செயலே கடும் பற்று.
- ஆசை பிற பாலை நாடி எழுந்தால் அதுவே மோகம்.
- ஆசையானது பொருள், செல்வாக்கு, புகழ் இவற்றின்மீது அழுந்தி அதைக் கொண்டு மக்களை உணர்வாக அல்லது தாழ்வாகக் கருதும் பேதம் மதம்.
- சினத்தை முடிக்க வலுவையும் வாய்ப்பையும் நாடி நிற்கும் ஆசைதான் வஞ்சம்.
- ஆசை எழும்போது அதாவது ஏதோ ஒரு பொருளை நாம் விரும்பும்போது அறிவிலே விழிப்போடு இருக்க வேண்டும். தவறினால் பல தீய விளைவுகள் உண்டாகும். வாழ்க்கையில் எளிதில் தீர்க்க முடியாத பல சிக்கல்கள் தோன்றிவிடும்.
- ஒரு பொருள் மீது ஆசை எழும்போது அதனோடு உறவு கொண்டு - கண்ட முன் அனுபவம் தற்காலச் சூழ்நிலை எதிர்கால விளைவு இம்மூன்றையும் ஒன்றிணைந்து நோக்க வேண்டும்.
- நிறைவு செய்ய முடியாத நூறு ஆசைக் குப்பைகளை மனதில் சேர்த்து வைத்துக்கொண்டு திணறுவதில் யாருக்கு என்ன லாபம்: மன அமைதி முதலில் போயிற்று. மனதில் பலம் போயிற்று செயல் திறன் போயிற்று. உடல் நலம் போயிற்று. நற்குணங்கள் போயின: எரிச்சலும் கோபமும் அடிக்கடி வந்தன. முகத்தில் தெளிவு போய் சோகம் படிந்தது.

- ⁜ இன்னின்ன நிலைமைகளால் இந்தப் பொருள் மீது ஆசை கொள்ளுதல் தவறு. எனவே இந்த ஆசையை நான் நீக்கிக் கொள்கிறேன் என்று பலதடவை காலை மாலை அதற்கென உட்கார்ந்து தானே மனதிற்குள் உறுதி கூறிக்கொள்ள வேண்டும்.
- ⁜ ஆசை, திட்டமிடல், செயல் மூன்றும் சரியாக இருந்தால் வெற்றி மேல் வெற்றி வந்துகொண்டேயிருக்கும்.
- ⁜ ஆசையை அடக்கினால் அது பிதுங்கிக் கொண்டு வேறுவேறு துன்பங்களாக உருவாகும். ஆராய்ந்தால் பிறந்த இடத்திலேயே அது ஒடுங்கும்.
- ⁜ ஆசை நிறைமனமானால் மற்ற எல்லா நலன்களையும் பெறுவது எளிதாகச் சாத்தியமாகி வாழ்வின் இலட்சியமே நிறைவேறிய ஓர் உணர்வு உண்டாகும்.

## 93. ஆசை பேராசை கடும்பற்று

- ✈ தேவைகளின் பால் தோன்றும் துன்பத்தைப் போக்க அல்லது இன்பத்தைப் பெற எழும் இயற்கை எழுச்சியே ஆசை.
- ✈ ஒரு மனிதன் இயற்கையாக எழும் பசி முதலான உடல் துன்பங்களைப் போக்கவோ அல்லது இன்பத்தைத் துய்க்கவோ அனுபவத்தில் கண்ட பொருள் சூழ்நிலை அல்லது இன உறவை நாடுகிறான். இவ்விளைவே வேட்பு விருப்பம் அல்லது ஆசை எனப்படும்.
- ✈ புலன்களின் அனுபவத்தில் அறிவு மயங்கி தேவைக்குமேல் அளவுமுறை மீறி மாறித் துய்க்க அதில் மிதக்க நிலைக்கு அறிவின் மயக்க நிலையே பேராசை.
- ✈ நமது அறிவின் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகவோ வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகவோ அல்லது சமுதாய நலத்தை கூட்டுவிப்பதாகவோ அமையாமல் ஒழுக்கக் குறைவான தீய விளைவை தரக்கூடிய செயல்களே அறிவின் மயக்க நிலையாகும்.
- ✈ தனது தேவைக்கு மேலாக மிகுதியாக இருக்கும்போதும் அவை பிறர் நல்வாழ்விற்கு மிக இன்றியமையாத தேவை என அறிந்த பொழுதும், அப்பொருட்களை தனக்கே உரிமை என்ற உணர்வில்

தானே வைத்துக் கொண்டு தானும் அனுபவிக்காமல் பிறரையும் பயன்படுத்தவிடாமல் பாதுகாக்கும் ஓர் இறுகிய மனநிலையே கடும் பற்று.

## 94. ஆட்டக்களம்

- நாம் தாய ஆட்டமோ ஆடு புலி ஆட்டமோ ஆடுகிறோம். ஆட்டத்தில் காயை நகர்த்துகிறோம். வெட்டிப் போடுகிறோம். பிறகு போதும் என்றபோது ஆட்டத்தையே கலைத்து விட்டுப் போகிறோமல்லவா? அந்த மாதிரி இயற்கை என்ற போராட்டக் காரன் இந்த உலகத்தையே தன்னுடைய ஆட்டக்களமாக வைத்துக் கொண்டு அந்த ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கிறான்.

## 95. ஆதி

- ஆதியின் அசைவே பரம அணு. அவை ஒவ்வோர் அளவில்கூட. வேதம் கூறும் ஐம்பூதம் விண் முதல் மண் வரை வேறில்லை.
- உடலில் சுவாச ஓட்டம், இரத்த ஓட்டம் நின்றவுடன் அதனால் உற்பத்தியாகி இயங்கிக் கொண்டேயிருந்த காந்த அலைகளின் உணர்ச்சிச் செயல்பகுதி செயலற்றதாகி விடுகிறது. அலை அடங்கின நீராகும் தன்மை போலவும், நீராவி குளிர்ந்து விட்டால் தண்ணீராகிவிடும் தன்மை போலவும், அறிவு என்ற உணரும் சக்தியும் ஆதி என்ற மௌன சக்தியாகி விடுகிறது.

## 96. ஆட்சி

- ஆட்சி என்றால் மக்கள் தங்களுக்காகத் தாங்களே சட்டம் இயற்றி அந்தச் சடங்குகளுக்கு உட்பட்டு பிறருக்கும் மதிப்பு அளித்து - வாழும் சமுதாய நலக் கூட்டமைப்பே ஆட்சி முறை ஆகும். ஆதி காலம் தொட்டு இன்று வரையில் வந்த தடியாட்சி - முடியாட்சி - சர்வாதிகார ஆட்சி - சமுதாய நலநோக்கு ஆட்சி என்ற எந்த ஆட்சி முறைகளிலும் மேலே சொன்ன மக்கள் நல நோக்கு அமையவில்லை.
- நாடொன்றில் பல ஆட்சி இருக்குமானால், நாளுக்கு நாள் துன்பம் பெருகும் காணீர்.

- பிறர் நலம் காக்கும் பெருநோக்கு, அறிவு பெரும்பாலோர்க்குப் பெருகிய நாட்டில்தான் அறநெறி சான்ற ஆட்சிக் குடிகளால் அமுல் எளிதாகும் அமைதியும் உண்டாகும்.
- அருள் நிறைந்தோர் ஆட்சி மன்றத்தமர்ந்து தொண்டாற்ற அனைவருக்கும் பிறப்புரிமை சுதந்திரம் நன்கமையும் அருளறிவு பெரும்பாலோரிடை மலர்ந்தால் அல்லால் அருளாளர் ஆட்சிப் பொறுப்பேற்க வழியேது?
- கேப்டலிசம் - சோசலிசம் கம்யூனிசம் வேண்டாம். கெடுமதியால் வாங்கும் ஆட்சியாளர் வேண்டாம். ஓட்டுப்போட காசு வாங்கும் கொடுக்கும் ஆட்சி வேண்டாம். உழைப்போரை நசுக்கும் சர்வாதிகாரம் வேண்டாம்.
- கட்சி முறையற்ற பொறுப்பாட்சி வேண்டும்.
- ஞாலமிசை நடந்துவரும் கட்சி அரசாட்சி மாற வேண்டும்.
- இலாப நட்டம் பொதுமக்கள் அனுபவிக்கும் இன்ப துன்ப மெனக்கிணக்கும் ஆட்சி காண்போம். இலாபத்தில் நட்டத்தில் மனிதரெல்லாம் இணைந்த ஒரு கூட்டுறவே சிறந்த ஆட்சி.
- நீண்ட கால சமூகத் தொண்டின் மூலம் தகுதியும், திறமையும், பொறுப்புணர்ச்சியும், பெற்ற ஒரு சமுதாய நன்னோக்க வாதியைத் தங்கள் அரசியல் தலைவனாக நியமித்துக் கொள்ளும் அளவுக்கு மக்களிடம் சிந்திக்கும் ஆற்றல் உண்டாகும் வரைக்கும், எந்தநாட்டிலும் கயவர்கள் நயவஞ்சகர்கள், ஒழுங்கீனர்கள் இவர்கள் ஆட்சித் தலைவராகவோ அரசியல் கட்சி தலைவராகவோ வரும் வாய்ப்பு நீடிக்கும்.
- நாடுகள் பலசேர்ந்த இணைப்பு ஆட்சி நட்புபொருள் பண்பாடு வளரச் செய்யும்.
- உடன்பிறந்தார்போல் உள்ளம் ஒன்றி மக்களை உயர்நிலையில் வாழவைக்கும் ஆட்சி வேண்டும்?
- செல்வம், மதம், ஆட்சி இவை ஒன்றிணைந்து சிந்தனையில் உயர்ந்தோர் நிர்வகிக்க வேண்டும்.
- அருள் நிறைந்தோர் ஆட்சி மன்றத்தமர்ந்து தொண்டாற்ற அனைவருக்கும் பிறப்புரிமை சுதந்திரம் நன்கமையும்.
- இருள்நீக்கும் அறிஞர்களே அரசியலை எங்கும் ஏற்றுக் கொண்டால் உலகம் இன்ப வாழ்வெய்தும்.

- மனித குலத்தின் மேன்மையும் மனிதனின் தேவையையும் உணர்ந்து, மக்களுக்கு என்ன வேண்டும் என்ற அளவுக்குச் சிந்தித்துச் செயலாற்றத்தக்க அரசியல் வரவேண்டும். அதற்காக மக்களே ஏற்படுத்துவதுதான் ஆட்சி.

- தன்மீது விசுவாசம் கொண்ட மக்களைப் பாதுகாப்பதற்காக தனது நாட்டின் மீது படை எடுத்து வரும் பிற நாட்டு அரசனோடு போராடி தன் உயிரையே தியாகம் செய்தார்கள். முற்காலத்து ஆட்சித் தலைவர்களில் பலர். எதிரி என்ற பெயர் வைத்து மனிதரை அழித்து வந்த முறை அது.

- தான் ஒரு ஆட்சித் தலைவனாக வருவதற்காக தன் மீது விசுவாசம் கொண்ட மக்களையே, சமயம் வாய்ப்பின் பலியிடத் துணிந்து, வஞ்சகமாகத் திட்டமிட்டு செயலாற்றுகின்றார்கள். இன்னாளில், அரசியல் தலைவர்களில் பலர். பல மக்களைச் சுரண்டியும் கொன்று குவித்தும் ஒருவன் பொருள் புகழ், அந்தஸ்து, அதிகாரம் என்பனவற்றைத் தேடிக் கொள்ளும், பாதுகாத்துக் கொள்ளும் முறையில் நடைபெறும். அரசியலுக்கு ஜனநாயக ஆட்சி முறை என்ற பெயர் நீடித்திருப்பது அந்நாட்டு மக்களில் சிந்திக்கும் ஆற்றலுடைய அறிஞர்கள் வெட்கப்பட வேண்டிய ஒரு நிலைமையே.

## 97. ஆட்சிமுறை

- பொருளுடைமை என்ற முதலாளித்துவ முறையை அடிப் படையாகக் கொண்ட வாழ்க்கை முறைதான் போர்களைத் தோற்றுவித்தது. மேலும் நீடிக்கச் செய்கிறது. இந்த வாழ்க்கைத் தொடர் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் தடியாட்சி - முடியாட்சி - சர்வாதிகார ஆட்சி - என்று வளர்ந்து மக்கள் அனைவரும் சேர்ந்து தங்கள் பொருளை உற்பத்தி செய்யவும் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டிய சுதந்திரமான ஆட்சிமுறை உண்டாயிற்று.

- ஆட்சிமுறை என்பது புனிதமான சமுதாயத் தொண்டு.

- ஆட்சிமுறை திருந்தி மனிதப் பண்பாடு உயரவும் சிறக்கவும் தேவையான திட்டங்களை வகுக்கவும் அமுல் நடத்தவும் அறிஞர்கள் முன் வரவேண்டும்.

❄ ஒருங்கிணைந்த வாழ்க்கை முறையால் மனித இன வாழ்வில் அரசியல் என்னும் ஆட்சி முறை தவிர்க்க முடியாது ஒரு தேவையாயிற்று.

## 98. ஆடு கொடுத்த சாபம்

கிராமக் கோயில்களில் ஆடுகளை பலிகொடுக்கும் பழக்கம் இன்றும் உள்ளது. ஆட்டின் கழுத்தில் கயிறை கட்டி இழுத்துச் செல்வர். கூடவே ஒரு கையில் ஆடு தின்னத்தக்க தழைகளை அதற்கு காட்டிக் கொண்டே செல்வர். அந்த ஆட்டுக்கு தனக்கு உணவாகவுள்ள அந்தத் தழைகளைத் தவிர - நிகழ இருக்கிற பயங்கரம் தெரியாது! கோயில் வரை கொண்டு சென்று அதை அங்கு பலியிட்டு விடுவர். இருபதாயிரம் ஆண்டுகளாக வாழ்வின் அனுபவத்தை பார்த்துவிட்ட மனிதகுலம் - ஒருவரை ஒருவர் அழிப்பதற்காக இன்றும் உலகில் போர் செய்கிறான். இளமையும் துடிப்பும் மிக்க இளைஞர்கள் பலரை கூட்டி - பணத்தையும் உணவையும் காட்டி - ஒன்று திரட்டி - கொலைக்களமாகிய போர்க்களத்தில் நிறுத்தி பலிகொடுக்கிறான். மனிதகுலத்தைப் பிடித்த இந்த சாபம் என்று விடியும்?

## 99. ஆஸ்திகம் நாஸ்திகம்

✠ ஆஸ்திகம் - தன்னையும் - உலகையும் பொருளாகப் பாவிப்பது. (ஆஸ்தி - பொருள்).

✠ நாஸ்திகம் - தன்னையும் - உலகையும் அரூபமாகப் பாவிப்பது.

## 100. ஆவி

✡ ஜீவ வித்துக் குழம்பு, நுண்மை மிகுந்த உயிர்துகள்களின் தொகுதி, அதிலிருந்து விளையும் ஜீவகாந்தத் தொகுப்பு இந்த மூன்றும் ஒரு உருவாகக் கொண்ட நிலைதான் கரு மையம். அதுவேதான் ஆன்மாவும் ஆகும். உடலில் ஏற்படும் மின் குறுக்கானது வலி நோய் என்ற நிலைகளுக்கும்மேல் அதிகமாகி ஜீவ வித்துக் குழம்பிலும் மின் குறுக்கு ஏற்பட்டால் ஜீவவித்துக் குழம்பு வெளியேறிவிடுகிறது. இதுவே மரணம். மரணத்தின் பின் வித்திலிருந்த பருவுடலின் அம்சம் மண்ணில் விழுந்துவிட,

நுண்ணுடல் ஆகிய உயிர்த்துகளும் காந்த உடலாகிய ஜீவ காந்தமும் சேர்ந்து இணைந்த நிலையில் காற்றில் மிதப் பதையே ஆவி என்கிறோம்.

## 101. ஆயுள்

- அதிகமான அகங்காரம், கோபம், சுயநலம், தர்மம் செய்யாமல் இருப்பது துரோகம் செய்வது போன்றவற்றை ஒதுக்கினால் மனிதன் ஆயுளும் அதிகரிக்கும்.
- உலகம் நீண்ட ஆயுளை உடையது. மனித சமுதாயம் தொடர்ந்து நீடித்து வருகின்றது. ஒவ்வொரு மனிதனும் தோன்றி வாழ்ந்து மறைந்து கொண்டே இருக்கிறான்.

## 102. ஆராதனை

- இறைநிலை உணர்ந்த ஒரு குருவைப் பற்றி உயிரை உணர வழியில்லை. தாண் வாழ்வின் முடிவில் போகுமிடம் (வீடு பேறு) எது என்று தெரியவில்லை. நீ தேவனை இறைவனை வெறும் ஆராதனை செய்து கொண்டு என்ன செய்யப் போகிறாய்.

## 103. ஆராய்ச்சி

- ஆராய்ச்சி என்ற சொல்லே தமிழில் பெரும் மதிப்பிற்குரியது. ஆர - ஆய்வு - ஆராய்ச்சி. ஆர என்ற வார்த்தைக்குப் பொருள் அமைதியாக மனதைப் பொருத்திக் கொள்வதாகும். ஆய்வு என்பது உண்மைகளை உணர்ந்து கொள்வதாகும்.
- ஏன் நாம் இயற்கையை உணர்ந்து கொள்ளவும் வாழ்க்கையின் உண்மையை உணர்ந்து கொள்ளவும் முடியாமல் தடுமாறுகிறோம்? ஏன் அமைதியான சீரான வாழ்வைப் பெறமுடியாமல் அல்லலுறு கிறோம்? ஏன் இந்த நிலை என ஆய்ந்து பார்க்க வேண்டும்.

## 104. ஆலயம்

- புலன்களிலேயே இயங்கிப் பழகிய அறிவைப் புலன்கள் மூல மாகத்தானே முதலில் நிலைபெறச் செய்ய முடியும். அதற்காகவே

உருவம் - ஒலி என்ற இரண்டில் ஒன்றைத் தேர்ந்து எடுத்து அதிலேயே மனம் லயிக்கச் செய்து பழக்க வேண்டிய நிலை இருந்தது. இத்தகைய முறைக்கு ஏற்ற நிறுவனங்கள்தாம் நாம் காணும் எண்ணற்ற கோயில்களும் - மூர்த்திகளும் - மந்திரம் - பஜனை முதலியவைகளுமாகும்.

✧ ஆலயங்களில் மணி அடிப்பது - தோல் கருவிகள் இசைப்பது - மந்திரம் கூறுவது - கலை நிகழ்ச்சிகள் நடத்துவது முதலிய வழக்காறுகள் ஆலயங்களில் மனத்தை ஒருமுகப்படுத்துவதற்காகவே என்பது அறியத்தக்கது.

✧ ஓர்மைநிலை பெற்ற மன ஆற்றலைக் கொண்டு எனக்கு வாழ்வில் இன்ன இன்ன பேறுகள் வேண்டுமென்றும் இவற்றை அருள்வாய் என்றும், தனக்கு அப்பாலுள்ளதாகக் கருதப்படும் தெய்வங்களை வேண்டிக் கொள்வதும் வழக்கமாகிவிட்டது.

✧ ஆலயமாம் பயிற்சி முறை தேர்ந்தாற்றிப்பழக அறிவு உயிரை உணரும் மெய்ப்பொருளாம்.

## 105. ஆளுமை வளம்

★ நம்முடைய ஆளுமைவளம் பல்லாயிரம் தலைமுறைகளாகத் தொடர்ந்துவரும் கருத்தொடர் மூலமே அமைந்திருக்கிறது.

## 106. ஆறாவது அறிவு

☆ இந்த உடல் நமது தாய் தந்தையரின் விந்துநாதம். கருத் தொடராக வந்த இந்த உடல், எத்தனையோ பதிவுகளை உள்ளடக்கியுள்ளது. இறைநிலையே உயிர்களாகி இன்பம் துன்பம் அறிவாயும், இயங்கி நிற்கும் இரகசியங்களை அறியும் அறிவு ஆறாவது அறிவு.

☆ இல்லத்தில் கடமையுணர்ந்து இனிதாய் வாழ இறைநிலையும் அதனுடைய ஆற்றலையும் அதனால் எழும் தோற்றம் விளைவு அனைத்தையும் எண்ணி எண்ணி இன்புற்று அறிவதே ஆறாவது அறிவாகும்.

☆ அறிவையே அறிந்து கொள்ளக்கூடிய அறிவின் உயர்நிலை ஆறாவது அறிவு.

☆ ஐந்தாம் அறிவுக்கப்பால் அறிவு இறைநிலை நோக்கி எழுகிறது. அதன் வேகத்தைத் தடுத்து அதன் நோக்கத்தைத் திருப்பிப் புலனுணர்ச்சியில் விடும்போதுதான் முரண்பாடுகள் விளை கின்றன. இன்றைய உலகத்தின் சிக்கல்கள் குழப்பங்கள், துன்பங்கள் அனைத்துக்கும் காரணம் அறிவிற்குத் தன்லட்சியப் பூர்த்தி கிடைக்காத நிலைதான்.

☆ ஐந்து புலன்கள் மூலம் தோற்றப் பொருட்களை உணர்வது, ஐயறிவு புலன்கள் மூலம் உணரப் பெறும் பொருட்களுக்கு மூலமான மனம், காந்தம், விண், மெய்ப்பொருள் இவற்றை உணரக்கூடிய அறிவுதான் ஆறாவது அறிவு.

☆ ஆறாவது அறிவைக் கொண்ட இந்த மனிதனின் வாழ்வின் நோக்கம், அறிவு முழுமை பெற வேண்டும்.

☆ ஆறாவது அறிவில் கூர்மை, நேர்மை என்னும் இருவகை உயர் திறன்கள் அடங்கியுள்ளன.

☆ ஆறாவது அறிவால் பிரம்மம் தன்னைத்தானே அறிந்து கொள்கிறது. வேலை முடிந்து பரிணாமம் பூர்த்தியடைகிறது. பிரம்மம் தன்னைத்தானே அறிந்து கொள்வதுதான் பரிணாமத்தின் நோக்கம். அந்நோக்கம் நிறைவேறும் வரை மனிதர்களுக்கு அமைதியில்லை. அத்தகு மனிதர்களைக் கொண்டிருக்கும் சமுதாயத்திற்கும் உலகத்திற்கும் அமைதியில்லை. கடலில் இருந்த நீர் கடலுக்குத் திரும்பப் போய்ச் சேரும் வரை நீருக்கு அமைதியில்லை. இடையில் மேகமாக இருக்கிறது. மழையாக, அருவியாக ஆறாக, நதியாக இருக்கிறது. ஆனால் கடலை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. கடலை அடைந்தால் தான் அதற்கு ஓய்வும் அமைதியும்.

☆ பிரம்மமே அணுவாகிப் பஞ்ச பூதமாக ஜீவனாகி, மனிதனாகி, இருக்கிறது. இவையெல்லாம் இடைநிலைதான். மனிதனின் ஆறாவது அறிவு மேலோங்கப் பெற்று அவன் தன்னிலையை தான் பிரம்மம் என்ற நிலையை அடைந்தாக வேண்டும். அதுவரை மனிதனுக்கு அமைதி கிட்டாது.

☆ இதுவரையிலும் எல்லாவற்றையும் பார்த்து ரசித்து வாழ்ந்தவன் இப்படி ரசிக்கக் கூடியவனும் எண்ணக் கூடியவனுமான என்னை ஆக்கியவன் யார் என்று தன்னையே திரும்பிப் பார்க்கிறான் பாருங்கள் - இதுதான் ஆறாவது அறிவு.

☆ அவனேதான் எனது அறிவாகவும் அலை நிலையில் மனமாகவும் இருக்கிறான் என்று தெரிகின்றபோது இன்னொரு மனிதனுக்குத் துன்பத்தை ஏற்படுத்தியதால் அதே துன்பத்தை தானும் அனுபவிக்கிறேன். அந்தப் பதிவு எனக்கும் உண்டு. ஆகையால் நான் துன்பத்துக்குரிய காரியத்தைச் செய்யமாட்டேன் என்று உறுதி எடுத்துக்கொள்ளவும் அப்படி எடுத்துக் கொள்வதும் அதற்கு வேண்டியவாறு வாழ்க்கையை முறைப்படுத்திக் கொள்வதும் தான் மனிதன் ஆறாவது அறிவால் செய்யக் கூடியது.

## 107. ஆற்றல்

✪ ஒழுங்குபடுத்தப்பட்ட மனிதனுடைய ஆற்றல், அவன் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் வளம் பெருக்கும் ஊற்றாக அமையும்.

✪ மனித உருவில் மனம் விரும்பி செய்யும் செயல்களை, மனம் விரும்பி இயக்கம் நரம்பு மண்டல ஆற்றல் என்றும் இயற்கையால் நடைபெறும் மனித மனத்தால் கட்டுப்படுத்த முடியாத செயல் களைத் தானியங்கி நரம்பு மண்டல ஆற்றல் என்றும் வழங்கு கிறோம்.

✪ இறைவனுடைய எந்திரமாகவே இருக்கக் கூடிய மனிதனிடம் இறைவனுடைய கருவியாகவே இருக்கக் கூடிய மனிதனிடம் முழுமையாக ஆறாவது அறிவு வந்துவிட்டதால் இறை வனோடேயே கலக்கக் கூடிய அளவுக்கு மனிதனிடம் ஆற்றல் இருப்பது தெரியவரும்.

✪ இயற்கைத் தத்துவ ஆராய்ச்சியில் முழுமையும் தவத்தில் முழுமையும் சேருகின்றபோது மனிதனுடைய ஆற்றல் எல்லை கடந்ததாகிறது. சோதிடம் முதலியனவற்றால் குறிக்கப்பட்ட மரணத்தையுங்கூட தள்ளிப் போடலாம் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

## 108. ஆறு சிறப்புகள்

☆ காந்த ஆற்றலானது சடப் பொருட்களில் அழுத்தம் ஒலி, ஒளி, சுவை, மணம் ஆகிய ஐவகைத் தன்மாற்றமாகவும் ஜீவனில் மனம் எனும் தன் மாற்றமாகவும் சிறப்புற்று இயங்கும் நிலைகளே இறைவனின் சிறப்பு நிலைகளாகும்.

## 109. ஆறுகுணங்கள்

✪ *அதிகார ஆசை, பொருளாசை என்ற இந்த இரண்டு விதப் பற்றுக் களான இச்சைகளே அவ்வப்போது 1. பேராசை; 2. சினம்; 3. கடும் பற்று; 4. முறையற்ற பால் கவர்ச்சி; 5. உயர்வு மற்றும் தாழ்வு மனப்பான்மை; 6. வஞ்சம் என்னும் ஆறு குணங்களாக உரு வெடுத்து சந்தர்ப்பங்களை ஒட்டிச் செயல்களாக விளைகின்றன.*

## 110. ஆஸ்துமா

☆ ஆஸ்துமா உள்ளவர்கள் தவறாமல் காயகல்பப் பயிற்சி செய்து கொண்டு வந்தால் இந்நோய் வருவது குறையும். அதன் வேகமும் குறையும். அதிகமான தொந்தரவு கொடுப்பதும் குறையும்.

## 111. ஆனந்தம்

★ தன் மயமாய்த் தான் அதுவாய் தவறிடாது இயங்கும் உன் தன்மையினை எண்ண எண்ணத் தவமது ஆனந்தமே.

## 112. ஆன்மா

☆ சீவனில் ஏற்படுகின்ற உடல் இயக்க மன இயக்க சிறப்புகள் அனைத்தும் கருமையத்தின் தன்மைகளாகச் சிறப்புப் பெறுவதால் அந்தக் கருமையத்தை ஆன்மா என்று வழங்குகிறோம்.

☆ உணர்ச்சி நிலை உருவங்களில் நிறைந்திருக்கும் சீவகாந்த ஆற்றல் தான் ஆன்மாவாகும்.

☆ ஆன்மாவை அறிந்து கொண்டால், அதன் உள்ளும் புறமும் இறைவனே செயல்பட்டுக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்து கொள்ளலாம். அதற்கான பயிற்சிதான் குண்டலினி யோகம்.

☆ கரு மையம் என்பதேதான் சீவ இனங்களில் ஆன்மா எனப் படுகிறது.

☆ ஆன்மாவிற்கு அழிவு கிடையாது. பிறந்து வாழும் மனிதன் ஆற்றும் வினைகளையெல்லாம் பதிவு செய்து கொண்டே, வாழ்நாள் முழுவதும் பயனளித்துக் கொண்டிருப்பது ஒரு

மனிதனுடைய பிறவிக்கு முன்னும் பின்னும் பல்லாயிரம் பிறவிகள் தோறும் - ஒரு மாயக்கயிறு போல - தொடர்ந்து வருவது ஆன்மா என்னும் கரு மையமாகும்.

✯ உணர்ச்சி நிலை உருவங்களில் நிறைந்திருக்கின்ற சீவ காந்த ஆற்றல்தான் ஆன்மாவாகும். இது எல்லா வினைகளையும் தன்னில் பதிவு செய்து கொண்டு அதற்குத் தக்க விளைவுகளை அடைந்துகொண்டும் இருக்கிறது.

✯ மரணத்தால் உடலினைப் பிரிந்த பின் தனியே ஒரு அலை வடிவில் பிரிந்து, வான்காந்தத்தில் தங்கி, உலகில் வாழுகின்ற ஒத்த அறிவாட்சித்தரம் உடைய ஒருவருடைய ஆன்மாவோடு இணைந்து கொண்டு, அவரது ஆற்றலுக்குத் துணையாகவும் தனது பதிவுகளைத் தூய்மை செய்து கொண்டும் மற்ற ஆன்மாக் களுக்குத் தனது தன்மைகளைக் கலக்கவிட்டுக் கொண்டும் கடைசியாக வான்காந்தம் என்கின்ற பேரான்மாவோடு கலந்து விடுவதுமாக இருக்கிறது.

## 113. ஆன்மாவின் மூன்று நிலைகள்

✰ முதல் கட்டம் காமதேனு: ஆன்மீக உலகில் பசு என்ற சொல் ஆன்மாவைக் குறிக்கும். காமம் என்பது இச்சையைக் குறிக்கும் சொல். காமதேனு எனில் இச்சையை இயல்பாக உடைய ஆன்மா என்று பொருள். உடல்வரையில் எல்லை கட்டி புலன்கள் வழியே புறப்பொருள் கவர்ச்சியால் ஈர்க்கப்பெற்று ஆன்மா செயல் புரியும்போது விளைவுகள் பெரும்பாலும் சலிப்பும் துன்பமும் தரும். இவ்வகையில் இச்சைக்கே ஆன்மாவின் ஆற்றல் பயன்படும்.

✰ கற்பகம் - இது ஆன்மாவின் வளர்ச்சி நிலையில் இரண்டாவது கட்டம். இங்கு ஆன்மா உயிர்வரையில் உணர்ந்து, விரிந்து அற்றும் தகுதி பெற்ற நிலை. இச்சித்து இச்சித்து துய்த்துத் துய்த்து, சலிப்பும் துன்பமும் பெற்ற ஆன்மா, சிந்தனையில் ஆழ்கின்றது. புற இயக்கம் விடுத்து தன்னடக்கம் உண்டாகி, உயிர் நிலையின் சிறப்பை அறிகின்றது. அறிவைப் படர்க்கை ஆற்றலாகவே அறிந்து கொள்கிறது. விளைவறிந்து செயலாற்றும் தகைமை ஓங்குகிறது. செய்யத்தக்கன தகாதன இவற்றை விளங்கி விளக்க வழியில், தன்தேவை, பழக்கம் இவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளுகிறது. இந்த அளவில் அறிவு உறுதிபெற்றபோது

ஒழுங்கும் இயல்பாகின்றது. உறுதியும் ஒழுக்கமும் பெற்ற ஆன்மாவின் அந்த மதிப்புள்ள உயர்நிலைதான் கற்பு -அகம். அகம் என்றால் உள்ளம். கற்பு எனில் உறுதியும் ஒழுக்கமும் பெற்றநிலை.

✰ சிந்தாமணி: சிந்தை மணியான நிலை அதாவது சலனமற்று புலனடக்கம் பெற்று உறுதி பெற்றநிலை. தன் உயிர் பெற்ற நிலை. தன் உயிர் நிலை உணர்ந்தபின் அங்கு கிட்டிய ஆற்றலால் உயிருக்கு மூல நிலை அறியும் ஆர்வம் எழுகின்றது. சிந்தனை உயர்ந்து உயிர் விரைவைச் சிறிது சிறிதாகத் தவத்தின் மூலம் குறைத்துக் கொண்டே போய் முடிவாகத்தான் இயக்கமற்ற அமைதி நிலையைப் பெறுகின்றது. மெய்ப் பொருளாகி விடுகின்றது. தனது இருப்பு நிலை அணு முதற்கொண்டு அண்டங்கள் அனைத்துக்கும் அப்பாலுள்ள பெருவெளி வரையில் நிறைந்து இருக்கும் பெருமையின் உணர்ந்து கொள்கின்றது.

## 114. ஆன்மீகம்

✯ ஆன்மீக வெளிச்சம் குறைவாக இருக்கும் மனிதனோ - குடும்பமோ - ஊரோ - நாடோ - சமுதாய முழுமையுமோ வாழ்வில் வளமும் நலமும் காக்க முடியாது.

✯ மனதின் பெருமையை உணர்ந்தால் உயிரின் பெருமை விளங்கும். உயிருணர்வும் இறையுணர்வும் சேர்ந்ததே ஆன்மீகம்.

## 115. ஆன்மீக அறிவு

✱ தத்துவ ஞானத்தில் சிறந்தவர்களும், உலகளாவிய எண்ணங்களில் சிறந்த அறிஞர்களும், ஐக்கியநாடுகள் சபை ஆற்றும் நற்பணியைப் பாராட்டுகிறார்கள். இங்கே உலக அமைதிக்கு மிக முக்கியமான மற்றொன்றைக் குறிப்பிட வேண்டுகிறேன். அது மனித இனம் ஆன்மிக அறிவில் மேம்பாடு அடைவதாகும்.

## 116. ஆன்மீகக்கல்வி

✲ உண்மையை விளங்கிக் கொள்ளவும் பெறவும் உதவக்கூடிய ஆன்மீகக் கல்வி உலகமெங்கும் பரவ வேண்டும்.

* ஆன்மாவைப் பற்றி அறியக்கூடிய கல்விதான் ஆன்மீகக் கல்வி. கலைகளில் மிக உயர்ந்த கலை ஆன்மீகக் கலை.

## 117. ஆன்மீக நிலைகள்

* ஆன்மீகத்தில் நான்கு வகையான நிலைப்பாடுகள் உள்ளன. அவை சரியை - கிரியை - யோகம் - ஞானம்.

* சரியை: சமயச் சின்னங்கள் அணிவது. ஆலயங்களிலும் அடியார் கட்கும் தொண்டு செய்த சேஷத்திரங்களுக்குச் சென்று தரிசனம் செய்வது. இது ஆரம்பப் பள்ளி மாணவர் நிலையை ஒத்தது.

* கிரியை: இறைவனை உருவகப்படுத்தி பூஜை புனஸ்காரங்கள் செய்து வணங்குவது. இது உயர்பள்ளி மாணவர் நிலையை ஒத்தது.

* யோகம்: குண்டலினி சக்தியை எழுப்பி சகஸ்ராரம் கொண்டு சென்று இறைநிலையை உணர்வது. ஆக உணர்வு என்ற தியானத்தின் மூலமாக இறையை உணர்தல். இது கல்லூரி மாணவர் நிலையை ஒத்தது.

* ஞானம்: உருவ அருவ வழிபாடுகள் நீங்கப்பெற்று, தியானத்தில் முதிர்ச்சி நிலையும் பெற்று, இறைவனை அகண்டாகாரமாக அறிவினால் அறிந்து, அறிவே தெய்வம் என்ற முடிவு நிலையும் பெறுவது. இது ஆராய்ச்சி மாணவர் நிலையை ஒத்தது.

## 118. ஆன்மீகப் பயணம்

* உயிர் உய்வடைய வேண்டும். அறிவிற்கு முழுமைப்பேறு கிட்ட வேண்டும். உயிர் வீடுபேறு விடுதலை அடைய வேண்டும். அதற்கான ஆன்மீகப் பயணத்திற்கு இந்த உடல்தான் வாகனம். ஆகவே உடலை உயர்வாகக் கருதி சீர்கேடு அடையாமல் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் ஆன்மீகப் பயணத்தில் வெற்றி பெறமுடியும்.

## 119. ஆன்மீகப் போர்வையில்

* பணக்காரர்கள் பலர் சேர்ந்து ஏழையின் கண்ணீர் என்று திரைப்படம் எடுத்துக்காட்டலாம். ஒழுங்கீனத்தின் உச்சத்திலே வாழும் நடிகை கற்புக்கரசியாக நாடகத்தில் நடித்துக் காட்டலாம்.

பெற்ற தாயைப் பராமரிக்காமல் அலையவிட்டு - ஒழுக்கமுள்ள தன் மனைவியை அவள் தாய் வீட்டிற்கு துரத்திவிட்ட ஒரு எழுத்தாளன் பெண்மையின் சிறப்பு என்ற நூல் எழுதலாம். பொருள் - புகழ் - அதிகாரம் - அந்தஸ்து என்ற வகையில் பேராசை கொண்டு அலையும் மயக்கவாதிகளும் அகத்தூய்மை என்ற தலைப்பில் பேருரை ஆற்றலாம். இவைகள் அனைத்தும் கூட பெரிய அளவில் சமுதாயத்தில் தீமையை விளைவித்து விடா! சில சமயங்களில் ஓரளவு நன்மையைக்கூட விளை விக்கலாம்! ஆனால் தத்துவ ஞானம் இல்லாதவர்களும் - அளவு கடந்த பொருளாசை கொண்டவர்களும் - ஒழுங்கீனர்களும் ஆன்மீகப் போர்வையில் சேவை செய்வதாகக் கூறி வாழ்வது சமுதாயத்திற்கு நீண்ட காலத்திற்கு பலவிதத்திலும் தீமையை விளைவித்து விடும். இதில் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

## 120. ஆன்மீக ரகசியம்

✣ நாம் எண்ணுகிறோம். செயல்புரிகிறோம். இன்ப துன்ப உணர்வுகளை அனுபோகிக்கிறோம். சிந்திக்கிறோம். ஒருவருக் கொருவர் கருத்துப் பரிமாறிக் கொள்ள விவாதம் நடத்துகிறோம். இவையெல்லாம் மீண்டும் மீண்டும் நினைக்குந்தோறும், எவ்வாறு நினைவுக்கு அவரவர்கள் செய்த வழியே அவரவர் களுக்கும் அகக்காட்சியாகிறது என்பது ஓர் ஆன்மீக ரகசியமாகும்.

## 121. ஆன்மீக வழி வாழ்வு

✷ **மனித வாழ்க்கையைப் பற்றியே இளவயது முதல் சிந்தனை செய்து கொண்டிருக்கும் எனக்கு, வாழ்க்கை நெறியைப் பற்றி ஒரு தெளிவான வழியை மக்கள் சமுதாயத்திற்கு காட்ட வேண்டுமென்ற கடமை உணர்வு எழுந்தது. அதன் விளைவாக உருவானதே, மனித குலம் மொத்தத்துக்கும் பொதுவான உலக சமயம் அல்லது உலகப் பொது அருள்நெறி சமயம் என்னும் வாழ்க்கை நெறி, அந்த உன்னதமான வாழ்க்கை நெறியை உள்ளடக்கியதுதான் நாம் போதித்து வரும் மனவளக்கலை என்னும் ஆன்மீக வழி வாழ்வாகும்.**

✷ ஆன்மீக வாழ்வானது அவரவர் வயதுக்கும் ஒப்ப - பக்தி யோகம், கர்ம யோகம் ராஜ யோகம், ஞான யோகம் என நான்கு பகுதிகளாகும்.

## 122. ஆன்மீக குரு

✤ சமுதாயத்திற்கு ஓர் ஆன்மீக குருவாக என்னை அளித்துள்ளேன். நான் முழுமையான நிறைவோடு எனது அறிவைக் கொண்டு ஆன்மீகப் பணிகளை ஆற்றி வருகிறேன். நீங்கள் அனைவரும் அத்தகைய ஆன்மீக அறிவைப் பெற்றுள்ளீர்கள்.

## 123. ஆன்ம நிலை

✷ உறவு அளவில் மனதுக்கு எல்லைகட்டிக் கொண்டு, பல நாடுகளிலும் சிதறி வாழ்ந்து, தேசம், இனம், ஜாதி, மதம் என்னும் வேறுபாடுகளைக் கற்பித்துக் கொண்டு, அதனால் வாழ்க்கையில் பலவிதமான துன்பங்களையும் அனுபவித்து விட்டோம். ஆழ்ந்து ஆராய்ந்தபோது அறிவின் தத்துவமாகிய ஆன்ம நிலையை அறிந்துவிட்டோம். அந்நிலையில் அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்தோம். இந்த விரிந்த மனநிலையில் அனைவரும் வாழ வேண்டும்.

## 124. ஆன்மீக நூல்

☼ திருவள்ளுவர் ஞானநெறி காட்டிய பெரியார்களுள் சிறந்த ஒரு பேரறிஞர். அவர் படைத்த திருக்குறள் வெறும் கற்பனைப் படைப்பன்று: அது பரிணாமம் என்ற வாழ்வியல் வழியில் மெய்ஞ்ஞானத்தை மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் ஆன்மீக நூல்.

## 125. ஆன்மீக நெறி

✚ நேர்வழியே அறிவறியும் ஆன்மீக நெறி.

## 126. ஆன்மீகப் பயிற்சி

✜ ஆன்மீகப் பயிற்சிகளில் அனுபவமாக ஏற்கனவே தேறியவர் களின் மூலமே அவற்றைக் கற்க வேண்டியது அவசியம்.

## 127. ஆன்மீக முயற்சி

✷ தேவையற்ற தீய பதிவுகளை நாம் ஊக்குவிக்கும் பொழுது, அது மேலும் ஆழமாகப் பதிந்து நம் குணங்களை தீய பதிவுகளே

கட்டுப்படுத்துகின்றன. நேர்மையற்ற முரண்பாடான எண்ணங்களை மாற்றி தீய பதிவுகளை களைவது சிறந்த ஆன்மீக முயற்சியாகும்.

## 128. ஆன்மீக விழிப்பு

✢ சமுதாயம் என்பது தனிமனிதர்கள் பலர் சேர்ந்த ஓர் அமைப்பே! இதில் இன்று ஜாதி, மத, மொழி வேற்றுமைகளாலும், ஓரிருவர் சுயநலத்தினாலும், மக்களிடையே பகையுணர்வு ஏற்பட்டுள்ளது. அமைதியின்மையும் குழப்பமும் நிலவுகின்றன. இந்த நிலை மாற வேண்டுமானால் தனக்கும் சமுதாயத்திற்கு முள்ள இனிமை கெடாமல் வாழத்தக்க அளவு தெளிவான அறிவு ஒவ்வொரு தனிமனிதனுக்கும் வேண்டும். தன்னிலை விளக்கம் வேண்டும். ஆன்மீக விழிப்பு வேண்டும்.

## 129. ஆசிர்வாதம்

◊ ஆசிர்வாதத்தை கண்ணால் பார்க்க முடியுமா? நான் பல வருடம் உலக அமைதிபற்றி ஆராய்ந்து வந்தேன். ஒருநாள் ஐக்கிய நாட்டு சபையில் ஒரு உரை நிகழ்த்த வேண்டும் என்றார்கள். எனக்கு ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாது. உரை நிகழத்துவதற்கு முதல் நாள் இராமலிங்க வள்ளலை நினைத்துக் கொண்டே இருந்தேன். நல்ல கருத்துக்கள் காட்சிகள் வந்தது. பேசி விட்டேன். உரையைக் கேட்ட ஒருவர் உங்கள் உரை மிகவும் தெளிவாகவும் பொருள் உள்ளதாகவும் இருந்தது என்றார்.

## 130. ஆன்மீக முன்னேற்றம்

✣ அரசியல் பொருளாதார வழிகளில் ஒருவரது வாழ்க்கை வசதிகளை அதிகப்படுத்த முயற்சிகள் எடுப்பதோடு மனித சமுதாயத்தில் ஆன்மீக முன்னேற்றமும் ஏற்பட ஒரு வாய்ப்பு தரவேண்டும். ஏனெனில் தகுதியுடைய மக்கள் அனைவரும் ஆன்மீக அறிவில் குறிப்பிட்ட காலத்தில் மேம்பாடு அடைவர்.

## 131. ஆன்மீக மேம்பாடு

✲ ஆன்மீக மேம்பாடு என்றால் என்ன என்பதைக் கவனிப்போம். வாழ்கின்ற முறையில் மனம்தான் மையப் பொருளாக

உள்ளது. சிறப்பான இயக்கமாக உள்ளது. ஒருவன் மனத்தின் மதிப்பையும் அதன் அற்புதமான செயலையும் புரிந்து கொள்ளும்போது அவன் வெற்றிகரமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்க்கையை அனுபவிக்க முடிகிறது.

## 132. ஆன்மீக வளர்ச்சி

✷ உண்மையிலேயே ஆன்ம வளர்ச்சியை வேண்டுபவர் சிக்கல் களையும் பிணக்குகளையும் தாண்டி அறிவை சுதந்திரமாக இயங்கவிட வேண்டும்.

## 133. ஆன்மீக விளக்கம்

♬ எல்லா வளமும் ஓங்கிய உலகுக்கு உள்ள ஒரு குறைபாடு ஆன்மீக விளக்கம் இன்மை. இதனை முழுமை செய்து மனித குலத்துக்குத் தொண்டாற்ற நீங்கள் ஒவ்வொருவரும் முனைந்து நில்லுங்கள்.

## 134. ஆன்மீக விழிப்புணர்ச்சி

♀ மரம் என்ற ஒரு தோற்றத்தைப் பகுத்துணர்வால் அடித்தண்டு, கிளைகள், இலைகள், பூக்கள், காய்கள், பழங்கள் என்று பல பெயர்களால் அழைக்கிறோம். இவையெல்லாம் ஒரே தோற்றத்தின் உறுப்புக்களேயாகும். இதேபோன்று அணுக்கள், பஞ்சபூதம், கோள்கள், சூரியன், உலகம், உயிர்கள் என்று கூறுவதெல்லாம் ஒரே ஒரு இறைநிலையின் பரிணாமத்தால் மலர்ந்துள்ள பேரியக்க மண்டலத்தின் கூறுகளேயாகும்.

♀ ஆன்மீக வாழ்வு எனும் பண்பிலே பருப்பொருளுணர்வோடு நுண்பொருளுணர்வும் இணைந்து - இணைத்து வாழ்வில் வளமும் நலமும் பெருக்குகிறது. இதுவரையில் இத்துறையில் பெரும்பாலோர் போதிய அக்கறை செலுத்தவில்லை. இந்த அலட்சியத்தின் விளைவுகளே இன்று உலகில் மனித இன வாழ்வில் காணும் இன்பதுன்பங்களும் சிக்கல்களுமாகும். இனியும் காலம் தாழ்த்தாது மனித குலம் ஆன்மீக விழிப்புப் பெறல் வேண்டும்.

## 135. ஆன்றோர் கடமை

* நம்நாட்டு கட்சி அரசியல் தலைவர்கள் மாறிமாறி ஆளும் கட்சி அரசியல் திட்டங்களை - அது நன்மை பயப்பதாக இருந்தாலும் தாக்கிப் பேசி தடைசெய்வதையே கொள்கையாகக் கொண்டுள்ளார்கள். அதன் மூலம் அறியாத மக்களைக் கவர்ந்து - பிழைப்பு நடத்தி வருகின்ற குறுகிய நோக்குடையார் அரசியலில் பெருகி வருகிறார்கள். நாட்டின் நலனைவிட தங்கள் கட்சியின் நலனை முக்கியமாகக் கருதி - மக்களை நலிவுறச் செய்வது எத்தனை கொடுமை! இத்தகைய அறியாமையில் இருந்து மக்களை மீட்க - சிந்தனை ஆற்றலை உணர்த்துவது ஆன்மீக அறிஞர்களின் தலையாய கடமையாகும்.

* ஒருவனுக்கு அமைகின்ற பருவம், உடல் வலிவு, செயல் திறம், கல்வி, செல்வாக்கு, செல்வ வளம், சூழ்நிலை, அமைப்பு இவற்றைக் கொண்டு மற்றவரோடு தன்னை ஒப்பிட்டு நோக்கித்தான் உயர்வாகவோ தாழ்வாகவோ இருப்பதாக மனிதன் நினைத்துக் கொள்கிறான். இதுவே தன்முனைப்பு ஆகும். இது ஆணவம் என்றும் வழங்கப்படுகிறது.

## 136. ஆணவம்

- மனிதனின் துன்பமெல்லாம் அவனுடைய குறையெல்லாம் இயற்கையை அறியாமலும் அல்லது அறிந்தும் அதனை மதியாமலும் அவன் நடந்து கொள்வதாலேயே தோன்றுகின்றன. இந்நிலையைத்தான் ஆணவம் என்ற பெரியோர்கள் சொன்னார்கள். நாம் இதனைத் தன்முனைப்பு என்றும் கூறுகிறோம்.

## 137. ஆண்டவன்

- ஆண்டவனைக் கேட்டு இனிமேல் எதுவும் வாங்கிவிட முடியும் என்று நீங்கள் கணக்குப் போட்டால் அவன் ஏமாந்தவன் அல்ல. நீங்கள் செய்துவிட்டு கணக்குப்பார்த்து எனக்கு இவ்வளவு கூலி கொடுக்க வேண்டும் என்று கேட்டாலும்கூட கணக்கு சரியாக வராது. முன்பு பின்பு செய்திருந்தால்கூட செயல் பாக்கி இருந்தால் பிடித்துக் கொள்வான்.

❖ ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு இயக்கத்திலும் ஆண்டவனுடைய இருப்பைக் கண்டு கொள்ளலாம்.

❖ ஆண்டவனிடம் ஒரு நியதி இருக்கிறது. நீங்கள் என்ன செய்தீர்களோ அந்தச் செயலின் விளைவாக நல்லதையோ கெட்டதையோ உங்கள் நோக்கத்திற்குத் தக்கவாறு செய்யும் திறனுக்குத் தக்கவாறு அவன் செயல் விளைவாகத் தருவான்.

## 138. ஆண்டான் – அடிமை

♪ இயற்கையான முறையில் பாதுகாப்பு பெற வேண்டிய பெண்கள் ஆண்களிடம் அடைக்கலம் பெற்றார்கள். இந்தப் பொறுப்பே தான் காலத்தால் ஆண்டான் - அடிமை என்ற கருத்தாக வளர்ந்து இன்று பெண்ணுலகுக்கு அடிமை வாழ்வாக அமைந்து விட்டது.

## 139. ஆண்கள்

⌘ கணவன் வேலைக்குச் செல்லும்போது மனைவியானவள் 'அவர் பாதுகாப்பாக சென்றுவர வேண்டும்' என்று ஏதேனும் ஒரு தெய்வத்தை மனதிற்குள் வேண்டிக் கொள்வதை பார்க் கிறோம். சமுதாயத்தில் இது பழக்கமாக வந்துள்ள உயர்ந்த பண்பாக இருக்கிறது. ஆனால் ஆண்களோ - நல்லது செய்தாலும் கூட பெண்ணை பாராட்டுவதில்லை. பெண்களால் பெரிய நன்மைகள் பெற்றவர்கள்கூட இதில் கஞ்சத்தனம் காட்டுகிறார்கள்.

⌘ தானாக தன்னுடைய மனைவியைப் பாராட்டி அதிலே இருந்து இசைபட வாழும் இன்பத்தை அடைய மறுக்கும் உள்ளங்களுக்கு அன்பு எங்கே உண்டாகும்? பெண்களுக்கு சம உரிமை மட்டுமல்ல - அதைவிடப் பெரிய மதிப்பும் உண்டு என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். தினந்தோறும் ஒருவரை ஒருவர் வாழ்த்தி வாழ வேண்டும்.

⌘ மனிதகுலத்தில் நன்றி என்ற உணர்வு நல்ல பயனை அளிப்ப தாகும். இந்த அடிப்படைத் தத்துவத்தில் பெண்மையின் பால் நன்றியோடு இருப்பது ஆண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமையாகும்.

⌘ ஆண் மக்கள் தவறிப் போய்ப் பெண்களை வேலைக்காரியாக மட்டும் மதிப்பதும் - நடத்துவதும் எந்த அளவு நன்றி மறந்த செயல் என்பதை எல்லா ஆண் மக்களும் உணர வேண்டும்.

⌘ ஆண்களுக்கு மாத்திரம் சில கல்வி வசதி, செல்வவசதி இன்னும் அதிகார வசதி எல்லாமே வைத்துக் கொண்டு பெண்களுக்கு அவை மறுக்கப்பட்டால் என்ன ஆகும்? ஒரு புறம் அறிவிலே அல்லது செல்வத்திலே மற்ற எல்லாவற்றிலும் எழுச்சி, மற்றொரு பக்கத்திலே எல்லாவற்றிலும் தாழ்ச்சி. ஆங்கே பிறக்கக்கூடிய குழந்தைகூட அப்படித்தான் இருக்கும். இந்த ஏற்றத் தாழ்வினை நீக்கிக் கொள்ள வேண்டும்.

⌘ இறைவனுக்கு அடுத்தபடியாக உலக மக்களை உற்பத்தி செய்வதற்கும் வளர்த்துப் பாதுகாத்து வருவதற்கும் ஏற்ற திருஉருவங்களாகப் பெண்கள் இருக்கையில் அவர்களுக்கு மனித சமுதாயத்தில் இரண்டாந்தர மதிப்பைத்தான் அளிப்பது என்பது ஆண்மக்களிடம் நிலவி வரும் ஒரு நன்றியில்லா மன நிலையாகும்.

⌘ அன்பு நாடி வந்த பெண்ணுக்கு ஆதரவு கொடுக்க வேண்டியது அவசியம். சேர்ந்த இடத்திலே இந்த ஒரு பெரிய உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டியது ஆண் மக்களுடைய கடமை யாகும். சாதாரணமாக ஒரு மனைவி என்ற மதிப்பில் மாத்திரம் வேண்டியது அல்ல. பெண்மை என்ற மதிப்பிலே தாய்மை என்ற மதிப்பிலே எல்லோருக்கும் கொடுக்கக்கூடிய மதிப்பைப் போல நம் வீட்டுக்கு வந்த பெண்ணிற்குக்கூட அந்த மதிப்பு உண்டு என்று பார்த்து நடந்து கொள்ளலாம் அல்லவா?

⌘ அரசியல் சட்டங்கள் எழுதப்பட்ட விதத்தையும் புராணங்களும் கூட பெண்ணடிமை மனப்பான்மையோடு எழுதப்பட்டிருப் பதையும், சிந்தித்துப் பார்க்கும்போது அறிவில் சிறந்த ஆண்கள் வெட்கப்பட வேண்டியிருக்கிறது.

⌘ பெண்கள் ஆண்களுக்கு அடிமைபோல் தந்திரமின்றித்தான் வாழ வேண்டும் என்று ஆண்கள் நினைப்பதால், அதற்கொப்ப அரசியல் சட்டங்களும் எழுதப்பட்டது.

⌘ பெண்மையின் பெருமையை ஒவ்வொரு ஆண்மகனும் உணர வேண்டும். பெண்களைப் பாதுகாக்குகின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## 140. ஆண் பெண்

☯ வாழ்க்கையானது ஆண் பெண் என்ற இருவரும் இணைந்து தான் நடைபெறுகின்றது. இந்த உலகில் எல்லோருக்குமே இந்த இரண்டுபேர் கூட்டுறவில்தான் பிறவி தோன்றுகிறது.

## 141. இசை

☸ நல்ல இசை உடல் நலம் பயக்கும்: நோய்கள் கெடும்: நாடி நரம்புகளின் நலிபோக்கி முறுக்கேற்றும்: சொல்ல உயர் கருத்தும் சொற்றொடரும் கொண்ட இசை சூட்சுமம் உயிருக்குச் சுகம் - அறிவுக்கு இன்பம்.

## 142. இயக்கநியதி

- உலகில் வாழுகின்ற எந்த ஜீவனானாலும் அதற்கொரு இயக்க நியதி உண்டு.
- அவைகளின் உறுப்புகளையும் ஆற்றல்களையும் கணித்துப் பார்த்தோமானால் உடல், உயிர், சீவகாந்தம், கரு மையம், மூளை, உள்ளம், மனம், புலன்கள் என்ற எட்டு வகையான இயக்கச் சிறப்புகள் ஒன்று சேர்ந்த ஒரு நுண்மையான இயக்க நிலையுமே ஜீவனாகும். கடல், நிறம், ஆகாயம் மூன்றிலும் வாழ் உயிர்கட்கு இந்த எட்டில் ஒன்று செயல்படவில்லை யானால் தொடர்ந்து அது உலவ முடியாது.

## 143. இயல்புநிலை

- சு + தர்மம் = சுதர்மம் = இயல்புநிலை.
- ஒவ்வொருவரும் பிறருக்குத் துன்பமளிக்க வேண்டும் என்று விரும்புவதும் அதற்கு துணிந்து செயல்புரிவதும் பெரும் பாலான மக்களிடம் இயல்பாக வளர்ந்து வருகின்றது.

## 144. இயற்கை

✈ இயற்கை என்பதே தெய்வம்: சுத்தவெளி: பூரணம் இதுவேதான் பேராற்றல்: காலமுடன் பேரறிவுமாகும்.

- இயற்கையில் எந்தக் குறைவும் இல்லை. எனினும் மனித வாழ்வில் ஒவ்வொருவரும் பலப்பல சிக்கல்களாலும் துன்பங் களாலும் வருந்திக் கொண்டிருக்கிறார்கள்.
- மனிதனுக்குப் பிறப்பு வளர்ச்சி முதிர்வு என்பது இயற்கை நியதி.
- இயற்கை என்பது பருப்பொருள், நிலையிலும் நுண்பொருளான சூக்கும நிலையிலும், காரணப் பொருளான அலைநிலையிலும், இயங்கிக் கொண்டிருக்கின்றது.
- ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு நிமிடமும் இயற்கையானது மனிதனுக்கு அறிவின் பெருக்கத்திற்குரிய பாடங்களைத் தந்துகொண்டே இருக்கிறது.
- ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு இயக்கமும், ஒவ்வொரு உயிரும், ஒவ்வொரு அனுபோகமும், மனிதனுக்கு இயற்கையின் இரகசியத்தை பெருமையை மதிப்பை உணர்த்திக் கொண்டே இருக்கிறது.
- வாழ்வில் அவனுக்கு இனிமை, நிறைவு, மகிழ்ச்சி, அமைதி இவையெல்லாம் அமைகின்றன. இயற்கை தரும் பாடங்களை அலட்சியப்படுத்துபவனோ அறிவில் தேக்கமுற்று வாழ்வின் பயணத்திலே திசைமாறி துன்பம் நோய்கள் குழப்பம் சோர்வு இவற்றால் துன்பப்படுகின்றனர்.
- இயற்கை என்பதும் இறைநிலை என்பதும் ஒன்றுதான். இறை நிலையானது தெய்வம், கடவுள் மற்றும் பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் அது உருவமற்ற கருத்துருவமாக இருப் பதனால் அவரவர்கள் மொழியின்படி விளக்குவதற்கு ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள்.
- இயற்கை எனில் வெட்டவெளி அனைத்தண்டங்கள் எண்ணற்ற ஜீவ இனம் எல்லாம் ஆகும்.
- கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஐந்து உணர் கருவி களையும் கை, கால், வாய், பால்குறி, குதம் ஆகிய ஐந்து தொழில் கருவிகளையும் உடலில் இயற்கையானது அமைத்திருக்கிறது. அணுமுதல் அண்டகோடிகள் அடங்கிய பேரியக்க மணடலத் தையும் இறைவன் முதல் உயிர் வரையில் தொடர்ந்து இயங்கும் பரிணாம விதிகளையும் அறிந்து நிறைவு பெற ஏற்ற பேராற்றலுடைய மனம் என்ற ஒரு மாபெரும் மறைபொருளையும் இயற்கையானது அமைத்துக் கொடுத்துள்ளது.

- ✈ இயற்கையின் ஆதி நிலையான இருப்பு தனக்குள் அடங்கிய ஆற்றலால் மலர்ச்சி பெற்று வெவ்வேறாகக் காட்சியாகும் பரிணாம சரித்திரத்தில், ஒவ்வொரு நிலையையும் மற்றொன்றி லிருந்து வேறுபடுத்திக் காட்டும் குறிப்புகளே எந்த மொழியிலும் அடங்கிய சொற்களாகும்.

- ✈ அளவிட முடியாத ஆற்றலுடைய இப்பேரியக்கப் பெருங்களமான இயற்கையைப் பகுத்துப் பகுத்தும் தொகுத்துத் தொகுத்தும் உணரக் கூடிய சிற்றறிவு, பேரறிவு, மற்றறிவு என்ற மூன்று நிலைகளையும் அறிவின் சிறப்பாகப் பெற்றவன் மனிதன். இவ்வளவு சிறப்பையும் இயற்கையாலும் தன் செயலாற்றலாலும் சிந்தனை உயர்வாலும் பெற்ற மனிதன், ஏன் வாழ்வில் துன்பங் களையும் சிக்கல்களையும் அனுபவிக்க வேண்டும்.

- ✈ நட்பு நலத்தில் மனிதன் முழுமையடைய வேண்டும். இயற்கை யென்றாலும் இறைநிலை என்றாலும் ஒரு பொருள்தான்.

- ✈ இயற்கையை எவ்வளவுக்கெவ்வளவு நாம் அறிந்து கொள் கிறோமோ அவ்வளவுக்குத்தான் நம் மனம் விரிவும் திண்மையும் பெறும். மனதின் திண்மைக்கு ஏற்பவே செயல் திறம் அமையும். செயல் திறமைக்கு ஏற்ப வாழ்க்கையானது வெற்றியும் மகிழ்ச்சியும் நிரம்பியதாக விளங்கும்.

- ✈ இயற்கை தரும் பாடங்களை அலட்சியப்படுத்துபவனோ அறிவில் தேக்கமுற்று வாழ்வின் பயணத்திலே திசை மாறி துன்பம் நோய்கள் குழப்பம் சோர்வு இவற்றால் துன்பப்படுகிறான்.

- ✈ பஞ்சபூதங்களிலிருந்து ஓரறிவு உயிர் பரிணமித்து ஆறறிவு மனத்தின் வரை இறைவன் கருணையோடு நின்று அருள் பாலிப்பதை இயற்கையில் எங்கும் காணலாம்.

- ✈ ஆதிநிலையாக உள்ள சுத்தவெளி அதிலிருந்து எழுந்த பரமாணுவின் சேர்க்கையால் ஏற்பட்ட பஞ்ச பூதங்களால் ஏற்பட்ட பிரபஞ்சம் அதிலிருந்து உயிர்களாக எழுந்தபோது அதை உணரும் நிலையாக உள்ள உணர்ச்சி ஆக 1. சுத்தவெளி; 2. சக்தி; 3. பிரபஞ்சம்; 4. உணர்வு. இந்த நான்கையும் சேர்த்து ஒரே வார்த்தையிலே கச்சிதமாகச் சொல்ல வேண்டுமானால் அந்த வார்த்தைதான் இயற்கை. உயிர்களிலே உணர்வாக இருப்பதைத்தான் அறிவு என்கிறோம்.

- ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு நிமிடமும் இயற்கையானது மனிதனுக்கு அறிவின் பெருக்கத்திற்குரிய பாடங்களை தந்து கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு அனுபோகமும் மனிதனுக்கு இயற்கையின் இரகசியத்தை பெருமையை மதிப்பை உணர்த்திக் கொண்டே இருக்கிறது.

- இயற்கைத் தத்துவம் ஒரு பெரும் கடல். அதை யாராலும் முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியாது. மனிதன் தோன்றி எத்தனையோ காலமாக எத்தனையோ துறைகளாகப் பிரித்து அவன் இயற்கையை ஆராய்ந்து வருகிறான். அப்படி எவ்வளவோ அறிந்தும் இருக்கிறான். இது அதிகந்தான் ஆனாலும் இன்னும் அறியவேண்டியதை நோக்க இது அற்பமே.

- எங்கும் நிறைந்த ஒன்றிலே இருப்பாக இருந்து கொண்டு எல்லாவற்றையும் ஆக்கிக் காத்து வருகின்ற அந்த மாபெரிய சக்திதான் இயற்கை அல்லது இறைவன். இதைப் பூரணமாக உணர்ந்தால்தான் ஆன்மீக வாழ்வு ஒளி பெற்றுச் சிறக்கும். உண்டு வாழ்க்கை நீளம் பெறுவது இரையினால் (உணவினால்) உணர்ந்தது உயிராக்கம் பெறுவது இறையினால் (இயற்கையினால்).

- இயற்கை ரகசியத்தை உணர்ந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆர்வமும் உணர்ந்த பின் எய்துகின்ற மன நிறைவும் மனித இனத்துக்கு மட்டுமே உரியன.

- இயற்கையை மதித்தாலே அதனை அறிய முடியும். அறிந்தாலே அதை மதிக்க முடியும்: பின்னர் பயன் கொள்ளவும் முடியும். இயற்கையை மதித்தல் என்ற அடிப்படையில்தான் உலக மதங்கள் அனைத்தும் தோன்றின. பாம்பு வணக்கம் முதலியவைகூட இயற்கையை மதித்துப் பயன் கொள்ளல் என்ற அடிப்படையில் தோன்றியதே.

- இயற்கை என்பது தெய்வம், சுத்தவெளி, எல்லாம் வல்லது, கரும் பாய்மப்பொருள், சூழ்ந்தழுத்தும் ஆற்றல், எல்லாவற்றிலும் ஊடுருவக் கூடியது, ஏதொன்றையும் தன்வழியாக ஊடுருவ விடக்கூடியது, வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம், தன்னதிர்வு உடையது, புலன்களால் உணர முடியாது.

- இயற்கையினது எழுச்சி இயக்க நிலைகள் எப்போதும் எல்லா விடங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதற்கில்லை.

✈ இயற்கையின் அமைப்பை அறிந்து அதற்கேற்றபடி தேவைகளைப் பூர்த்தி கொள்ள முயன்றால் மனிதனால் ஆகாததும் உண்டோ?

## 145. இயற்கையின் இயக்க வேறுபாடுகள்

- பிரபஞ்சம் தோன்றியதே மெய்ப்பொருளின் இயக்கத்தால் தான். பிரபஞ்சம் தோன்றியது முதல் இன்று வரை அது இயங்கிக் கொண்டே இருக்கிறது. அதில் இயக்கங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. ஏனெனில் இயங்கிக் கொண்டே இருக்கின்ற பரமாணுக்களால் ஆனதுதானே பிரபஞ்சம். இந்த இயக்கங்களில் சில வேறுபாடுகள் உள்ளன. அவற்றை தன்னியக்கம் தொடரியக்கம் பிரதிபலிப்பு இயக்கம், விளைவு என நான்காய்ப் பிரிக்கலாம்.
- தன்னியக்கம் - ஒவ்வொன்றுக்கும் இயற்கையாக உள்ள இயக்க விரைவு தன்னியக்கமாகும்.
- தொடரியக்கம்: ஒரு இயக்கத்தின் காரணமாக இன்னொரு இயக்கத்தில் விரைவு மாற்றமோ திசை மாற்றமோ ஏற்பட்டால் அது தொடரியக்கமாகும்.
- பிரதிபலிப்பு இயக்கம் - தூண்டப்பட்ட இயக்கம் இன்னொரு இயக்கத்தைத் தாக்கி இயக்க வேறுபாட்டை விளைவிக்கும். இது பிரதிபலிப்பு இயக்கம்.
- விளைவு - ஒவ்வொரு இயக்கத்திலும் பயன் ஏற்படுவதுதான் விளைவு.

## 146. இயற்கையின் இயக்க ஒழுங்கு

☼ 1. எல்லாவற்றுக்குங் காரணமான மெய்ப்பொருள்; 2. எல்லாம் என்ற பிரபஞ்சத் தோன்ற நிகழ்ச்சிகள் அனைத்தும்; 3. அந்தத் தோற்றங்களையும் நிகழ்ச்சிகளையும் ஏன் மெய்ப்பொருளையே கூட அறிந்து கொள்ளுகின்ற உணர்ச்சி நிலை ஆகிய எல்லாமே இயற்கையின் இயக்கு ஒழுங்கு என்ற வரிசையில் அறிந்து கொள்ளப்பட வேண்டியவை.

☼ அமைப்பு வடிவத்தைக் குறிக்கிறது. தன்மை அதில் அடங்கிய குணங்கள் அத்தனையும் குறிக்கிறது. இயக்க ஒழுங்க காலத்தைக் குறிக்கிறது.

## 147. இயற்கை கருவூலம்

- இயற்கை என்பது ஒரு தெய்வீகப் பெருநிதி. உயிரினங்கள் தோன்றவும் வளரவும் இன்பமாக வாழவும் தேவையான அனைத்தும் இயற்கையில் உள்ளன. ஆறறிவு பெற்ற மனிதன் அறிவிலும், செயலிலும் சிறந்து புலனின்பமும் பேரின்பமும் துய்த்து வாழ்வில் நிறைவும், அமைதியும் பெறுவதற்கு எல்லா வளங்களும் நிறைந்த கருவூலமே இயற்கை.

## 148. இயற்கைத் தத்துவம்

- நான் கிணறு தோண்டிக் கப்பி போட்டுக் கொடுத்துவிட்டேன். மொண்டு பயன் கொள்ள வேண்டியது உங்கள் வேலை. விரிவானதும் சிக்கலானதும் கடினமானதுமான இயற்கைத் தத்துவத்தை நன்கு சிந்தித்துக் கண்ட தெளிவினால் சிக்கறுத்து வகைப்படுத்தி உங்கள் முன் வைத்துவிட்டேன். இந்த அடிப் படையில் உங்கள் அறிவையும் தவத்தையும் கொண்டு ஆராய்ந்தால் ஒன்றும் கடினமன்று. விரும்பி முயன்று அடைந்து பயன் பெறுங்கள்.

## 149. இயற்கையும் எண்ணமும்

- இயற்கையும் எண்ணமும் இணைகின்ற இடத்தில்தான் வாழ்வின் பயன் மிகுகிறது. எண்ணத்தின் வேகம் விவேகமாக மாற மாற இயற்கை ரகசியங்கள் எண்ணத்தில் வெளிப் படுகின்றன.

## 150. இயற்கை நியதி

- பெரும்பாலான விலங்குகள் மற்ற விலங்குகளின் உடல் சதையைச் சாப்பிட்டு வாழ்வது தேவையானதும் வல்லமை உள்ள இயற்கையோடு ஒருங்கிணைந்ததும் ஆகும்.
- ஆதிநலையில் இருப்புநிலையாக சுத்தவெளியாக உள்ள முற்றநிலை தவிர வேற எதுவும் இல்லை. இதே அறிவுதான் பரமாணுவாக மலர்ச்சி பெற்ற நிலையில் தன்மை துல்லியம் இயக்க ஒழுங்கு என்கிற இயக்க நியதியாக இருக்கிறது.

- மேட்டினிலே கொட்டும் நீர் பள்ளம் ஓடும். மேல்நோக்கி எறிந்த பொருள் நிலம் கவரும். கொடி வகையில் நட்புடன் மரத்திலே சுற்றிக் கொள்ளும். ஆண் பெண் உள்ளம் உடல் அணைய ஆர்வம் கொள்ளும்.

- எண்ணம் சொல் செயலால் ஆற்றப்படுகின்ற எந்தச் செயலானாலும் 1. இடம்; 2. காலம்; 3. தொடர்பு கொள்ளும் பொருள்; 4. நோக்கம்; 5. திறமை இவற்றுக்கேற்ப விளைவு உண்டு. இதுதான் இயற்கை நீதி.

- எந்த ஒரு செயலை யார் செய்தாலும் 1. இடம்; 2. காலம்; 3. தொடர்பு கொள்ளுகின்ற பொருள் மற்றும் 4. செயலாற்றும் திறன்; 5. செயலின் நோக்கம் இவற்றிற்கேற்பத் தனக்கோ பிறர்க்கோ இன்பமோ துன்பமோ விளையும். இது இயற்கை நியதி.

## 151. இயற்கை கம்ப்யூட்டர்

- நம் வினைப்பதிவுகள் அனைத்தும் புதையல்போல உயிர் எனும் இயற்கை கம்ப்யூட்டரில் அடங்கியுள்ளன. காலத்தால் மலரும் அப்பதிவுகளின் வெளிப்பாடுகளே எண்ணங்கள், செயலார்வம், நோய், இன்ப துன்பங்கள் யாவுமாகும்.

## 152. இயல்பூக்கம்

- ஒருவர் எந்தப் பொருளையோ - எந்தவொரு செயலையோ - எந்தக் குணத்தையோ - எந்த உயிரையோ அடிக்கடி நினைத்து வந்தால் - அப்பொருளின் தன்மையாய் நினைப்பவர் ஆற்றல் உள்ளத்திலும் உடலிலும் மாற்றம் ஏற்படும். இப்பெருமை இயல்பூக்கமாய் இயற்கையின் நியதியாகும்.

- வான்காந்தமோ சீவகாந்தமோ பருப்பொருட்களில் இயக்க அலையால் திணிவு பெறும்போது அது சமனாகும். இயக்க விளைவுகள் அழுத்தம் ஒலி ஒளி சுவை மணம் எனும் ஐந்து தன்மாத்திரைகளாக மாற்றம் பெறுவது இயல்பூக்கம்.

## 153. இன்சொல்

- இன்சொல்லையே உள்ளமும் உதடும் உபயோகப்படுத்த வேண்டும். இன்சொல்லினால் கெடுதல் ஒழிய நன்மைகள் பல பெறலாம்.

## 154. இன்பதுன்பம்

- இன்பமும் துன்பமும் மனநிலைகள்தான். இன்பத்தின் அளவு முறை மாறும்போது ஏற்படும் ஓர் பொருத்தமிலா உணர்வேதான் துன்பமாகும். இன்பமும் துன்பமும் மனஅலைகளே.
- பொதுவாக உடலில் இருந்து சக்தி வெளியேறும்போது ஏற்படும் உணர்வே இன்பமாகும். எந்த உணர்ச்சி இன்பமாக இருந்ததோ, அதுவே அந்த உணர்வில் அளவு மீறுகிறபோதும் தேவையில்லாத போதும், சக்தி அதிகமாக இல்லாதபோது, நாமாகப் பலவந்தப் படுத்தி அதை வெளியேற்றுகிறபோது, உடற்கருவிகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அப்போது ஏற்படுகின்ற உணர்வுதான் துன்பம்.
- புலன்கள் மூலம் ஆன்மா செயலாற்றும்போது தனது ஆற்றலை அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் இவையாக மாற்றி அதையே தனது இன்ப துன்ப உணர்ச்சிகளாக அனுபவிக்கின்றது.

## 155. இன்பமயம்

- இயற்கை - சமுதாயம் - சூழ்நிலை - தேவை - பழக்கம் இவ்வைந்து கோணத்தில் இயங்கும் மனிதன் இயற்கை சமுதாயம் இரண்டை உணர்ந்தும் மதித்தும் எஞ்சிய மூன்றைச் சீராய் இணைத்தாற்று இன்பமயம்.

## 156. இன்பம்

- சமமான உணர்ச்சிகளும் அதில் ஊக்கி விடப்பட்ட உணர்ச்சி களும் இன்பம் என்று சொல்லலாம்.
- உடலிலிருந்து வெளியேற வேண்டிய கழிவுப் பொருட்கள் தேக்கமுற்றிருந்து அது இயற்கையாக வெளியேறும்போதும் முயற்சியால் வெளியேற்றப்படும்போதும் உண்டாகும் உரசல்கள் இன்பம் எனப்படும்.
- அமைதி எனும் சம உணர்வே அறிவுக்கும் உடலுக்கும் பொருத்தமான உணர்வே உண்மையான இன்பமாகும்.
- உங்களைப் போன்றே இந்த உலகத்தில் அனைவரும் இன்பத்தை அனுபவிக்க வேண்டும். துன்பம் நீங்கிய உலகம் மலர வேண்டும்.

✧ துன்பத்தைப் போக்கிவிட்டோமானால் என்ன மிச்சம்? இன்பம் தான் மிச்சம். அது போதுமே! அதற்காகவே வாழ்வோம்.

✧ இன்பத்தின் அளவு முறையைச் சரியாகப் பார்த்துக் கொண்டால் இன்பம்தான் நிலைத்திருக்கும்.

## 157. இன்ப உணர்வு

★ இயற்கையாக எழும் ஒரு துன்பத்தைக் குறைத்துக் கொள்ளும் அனுபவமே ஒரு இன்ப உணர்வு ஆகும்.

## 158. இலக்கியம்

☆ இலக்கியம் என்றால் வாழ்வுக்கு வழிகாட்டக்கூடிய செயல் முறை விளக்கங்களாகும்.

☆ மொழிக்கு ஒழுக்கம் கூறுவது இலக்கணம். வாழ்க்கைக்கு ஒழுக்கம் கூறுவது இலக்கியம்.

## 159. இலக்கணம்

✪ மொழித்துறையில் மனிதன் பின்பற்றி வருகின்ற இத்தகைய ஒழுங்குமுறைதான் இலக்கணம் எனப்படுகிறது.

✪ இலக்கணம் என்ற மொழி ஒழுக்கம் எழுத்தாளர்களுக்குத் தேவையே இல்லை என்பதோ அனுபவத்தாலும் ஆராய்ச்சியாலும் பொங்கி எழுகின்ற கருத்துக்கு அவ்வொழுக்கத்தையோ எல்லா எழுத்தாளனும் விலங்காக மாட்டிக் கொள்ளத்தான் வேண்டுமென்பதோ சரியான முடிவு இல்லை.

✪ உலகில் அவ்வப்போது மக்களின் வாழ்வு சென்று கொண்டிருக் கின்ற பாதையை ஆராய்ந்தறிந்து தற்காலத் தேவைகளையும் சூழ்நிலைகளையும் உணர்ந்து எதிர்கால விளைவுகளை யூகத்தால் கணித்து பொறுப்புணர்ந்து சமய சந்தர்ப்பங்களுக் கேற்ப பயன் தருகின்ற முறையில் இலக்கணத்தை அமைத்துக் கொண்டு எழுத்தாளர் தனது மைகோலால் பணிவோடும் திறமையோடும் ஆட்சி புரிய வேண்டும்.

✪ மொழிப் பயிற்சியோ எழுதுகின்ற திறமையோ இல்லாத வாழ்க்கை அனுபவ ஆராய்ச்சிகளில் தேர்ந்த அறிஞர்கள் தங்கள்

கருத்துக்களை வெளியிடுகின்றபோது அவைகள் அவ்வறிஞர்கள் இன்றுவரையில் தாம் அறிந்துள்ள மொழியறிவுக்கேற்றவாறு சொற்களும் வாக்கியங்களும் கவிகளும் மலர்ந்து விடும். இவைகள் இலக்கணம் என்ற கட்டுப்பாடுகளைக் கடந்து புது இலக்கணம் வகுக்கும்.

✪ இலக்கணம் என்ற வரம்பைத் தாண்டி இருப்பது ஒன்றைக் கொண்டே இத்தகைய அறிஞர்கள் கருத்துக்கள் தவறு என்று கொள்ள முடியாது. இவ்வுண்மையை அறிந்து கொள்ளுகின்ற திறமைகூட இலக்கணத்தில் ஒரு பகுதியேயாகும்.

## 160. இல்வாழ்வு

☆ புனிதமுள்ள தாம்பத்திய உறவில் மட்டும் பொங்கி எழும் மாற்றம் அனைத்தும் கண்டேன் மனிதனால் இல்வாழ்வே அறிவின் பூரண இயல்பறியும் வாய்ப்புள்ளதாய் எவர்க்கும் சொல்வேன்.

☆ இருவருமே ஒருவருக்கு ஒருவர், இறைவனே என்னுடைய மனைவியினுடைய வடிவத்திலே வந்து எனக்கு உறுதுணையாக இருக்கிறாள் என்று எண்ணவும், இறைவனே எனக்குக் கணவன் என்ற உறவிலே வந்து உறுதுணையாக அமைந்திருக்கிறான், என்னுடைய வினையின் பயனாக ஏதோ ஆங்காங்கு சில துன்பங்கள் வந்தாலும், அதை நாம் போக்கிக் கொள்ள வேண்டும் என்ற அளவிலே இரண்டு பேருமே ஒருவரிடத்திலே ஒருவர் உண்மையான தெய்வநிலையைக் கானக்கூடிய அளவிலே தெய்வப் பிரசன்னத்தை அறியும் அளவிலே மனதை உயர்த்திக் கொண்டீர்களேயானால் இல்லற வாழ்க்கையிலே இதுவரை நீங்கள் அனுபவித்திராத ஒரு மலர்ச்சி உண்டாகும்.

## 161. இல்லறம்

★ இல்லறமே கடமைகளின் தொகுப்பு என்றும், இன்பதுன்பம் உடலுயிர் தத்துவம் உணர்ந்து இல்லறத்தைத் திறமையுடன் நடத்த ஏற்ற எண்ண நிலை துறவறம் என்றும் உணர்ந்தேன்.

## 162. இல்லறத்தார்

☆ சூத்திரன் வைசியன் ஷத்ரியன் பிராமணன் என்னும் நான்கு செல்வாக்குகளும் இல்லறத்தாரிடம் இக்காலத்தில் ஒன்று கூடிவிட்டன.

☆ மனவளக்கலையாகிய ராஜயோகமும் மெய்ப்பொருள் உணர்வு எனும் ஞானயோகமும் இல்லறத்தார்களுடைய வாழ்க்கையோடு வந்து இணையும் வாய்ப்பு இக்காலத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

## 163. இல்லற நோன்பு

☆ அன்பு ஊற்றாம் இல்லறத்தில் ஆண் பெண் இருபேரும் அவரவர்கள் துணைவர்களை மனம் வருந்தச் செய்தால், துன்ப உணர்வலை எழும்பி தாக்கியோரைத் தாக்கும் தொல்லைதரும் சாபமாம் நோய்கள் வரும் தேர்வீர். இன்ப ஊற்று இருவரிடைப் பெருக வாழ்த்தலோடு இன்முகமும் பொறுமை தியாகம் தகைமை காட்ட வேண்டும். தன் புகழ் விளங்கும் நல்ல தரமுடைய மக்கள் தழைப்பார்கள் இல்வாழ்வை ஆய்ந்து கண்ட உண்மை.

## 164. இல்லறமும் துறவறமும்

☆ இல்லறத்தில் மெய்ஞ்ஞானம் விளங்கி வாழ இயலாத காலமொன்று இருந்ததுண்டு. இல்லறத்தைவிட்டுப் பலர் துறவை நாடி எங்கெங்கோ சுற்றி அலைந்தார் அந்நாளில். இல்லறத்தில் கடமை செய்தே தவம் பயின்ற இறை நிலையையறியும் முறை கண்டு கொண்டேன். இல்லறமும் துறவறமும் ஒன்று சேர்ந்து இணைந்த உயர் அறம் கண்டோம் மகிழ்ச்சி பெற்றோம்.

## 165. இறப்பு

☆ எல்லா உயிர்கட்கும் எல்லா வகையான துன்பங்களிலிருந்து விடுபட இயற்கை ஒழுங்கமைப்பால் அமைந்துள்ள ஒரு நல்வரம்தான் இறப்பு.

## 166. இறை ஆற்றல்

- ✱ எந்த ஒரு தோற்றமும் நிகழ்ச்சியும் இறையாற்றலின் பகுதியே ஆகும்.
- ✱ இறையாற்றல் நமக்குள்ளாக அறிவுக்குள்ளே அறிவாக மனத்திற்கும் அறிவாக இருந்துகொண்டு பரம்பொருளாக இருந்து கொண்டு எல்லாக் காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறது.
- ✱ இறையாற்றல் என்பது சக்தியாகவும் அறிவாகவும் இருக்கிறது.
- ✱ இறையாற்றலின் தன்மாற்றமே பேரியக்க மண்டலம் என்கின்ற எல்லாக் காட்சிகளும், நிலைகளும், இயக்கங்களும், விளைவுகளும் என்பது விளங்குகிறதல்லவா?
- ✱ வற்றாயிருப்பு பேராற்றல், பேரறிவு, காலம் என்கின்ற நான்கு தன்மைகளையும் உடைய பாய்மப் பொருளாக உள்ளதே இறையாற்றல்.
- ✱ அறிவின் முழுமை பெற்ற பிறகு மனிதனின் செயல்கள் எப்பொழுதும் எந்த அளவிலும் இறையாற்றலின் நியதிக்கு முரண்படுவதில்லை.

## 167. இறைநிலை

- ✲ சீவகாந்தத்தின் செயல்களையும் அனுபவங்களையும் அலை வடிவத்தில் சுருக்கி அழுத்திக் கரு மையத்தில் பதிவு செய்து வைக்கிறது இறைநிலைதான்.
- ✲ சூரியன் பூமி மற்ற கோள்கள் அனைத்தும் சேர்ந்த சூரியக் குடும்பம் வரையில் கணக்கிட்டால் நம்மால் அளிக்க முடியாத அளவு எடை உடையனவாக இருக்கும். இதே போன்று பல இலட்சம் சூரியக் குடும்பங்கள் சுத்தவெளியில் உலவிக் கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் சுத்தவெளிதானே தாங்கிக் கொண்டிருக்கிறது. இவ்வளவு எடையுள்ள பொருட் களையெல்லாம் இலேசாக தன்னில் மிதக்கவிட்டுக் கொண்டிருப்பது சுத்தவெளிதான் என்றால் அதன் ஆற்றல் எத்தகையதாக இருக்கும்? அதனால்தான் அந்தப் பெருவெளியை எல்லாம் வல்ல முழுமுதற் பொருளான இறைநிலையென்று போற்ற வேண்டியுள்ளது.

* இறைந்தும், நிறைந்தும், எங்கும் எதிலும் ஊடுருவி ஒரு பாய்மப் பொருளாக இயங்கிக் கொண்டிருக்கின்ற புலன்களுக்கு எட்டாத ஒரு பேராற்றலே இறைநிலை எனப்படுகிறது.

* இறைநிலையானது உருவமற்ற ஒரு ஆற்றலாகவே இருப்ப தனால் இது இல்லாத பொருளோ இடமோ இருக்க முடியாது. ஒரே ஆற்றலானது இவ்வாறாக அனைத்துப் பொருட்களின் ஊடே நிரம்பி அதற்கு ஏற்றவாறு இயக்கச் சிறப்புகளையும் விளைவுகளையும் அளித்துக் கொண்டே இருக்கிறது. இதனைக் கால, தூர, வேகம், பருமன் என்ற நான்கு கணக்குக்கு உட்படுத்தி எல்லை கட்டி உணர்த்த முடியாது.

* இறைநிலை என்பது மனித உணர்வுக்கு எங்கும் நிறைந்த சுத்தவெளியாகவே உணரப்பெறும். அதன் தன்மைகள் நான்கு. வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும் நான்கினையும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கவே முடியாது. இறை நிலையிலிருந்தும் இந்நான்கில் எந்த ஒன்றையும் தனியாகப் பிரிக்கவே முடியாது.

* நாம் என்ன செயல் செய்தாலும் அதை அப்படியே அலை வடிவத்தில் சுருக்கி நிலையாக கரு மையத்தில் வைத்துக் கொண்டு மீண்டும் நாம் சும்மா இருக்கிறபோதெல்லாம் இறைவன் எடுத்துக் காட்டிக் கொண்டேயிருப்பான். இவ்வளவு உன்னுள்ளே இருக்கிறது. இவ்வளவு வைத்திருக்கிறாய் இன்ன இன்னது வைத்திருக்கிறாய். இதை இதைச் செய் திருக்கிறாய் என்று எடுத்துக் காட்டிக் கொண்டே இருப்பது இறைநிலைதான்.

* இறைநிலை என்பது பேரியக்க மண்டலம் முழுமையும் நடைபெறும் எல்லா இயக்கங்களுக்கும் மூலமான மறை பொருளாகும்.

* காந்த உடலில் இறைநிலையானது ஈர்ப்பு சக்தியாகவும் - மனமானது அலையாகவும் இருக்கிறது. இது இருப்பில் வைக்கிறது. அது திருப்பிப் பிரதிபலிக்கிறது. இருபத்தைந்து வருடத்திற்கு முன்னால் பார்த்தது இப்போது நினைவுக்கு வருகிறது. ஒன்று மாத்திரம் அல்ல. ஆயிரக்கணக்கான எண்ணங்களும் அனுபவங்களும் வருகின்றன. அத்தகைய பேராற்றல் எதுவோ அதுதான் இறைநிலை.

* இறைநிலை என்ற முழுமுதற் பொருள் அதன் பரிணாமச் சிறப்பால் அடைந்துள்ள மாறுதல்களைத் தனித்தனியாக விண் என்றும் பஞ்ச பூதங்கள் என்றும் கோள்கள் என்றும் உயிரினங்கள் என்றும் கூறுகிறோம்.

* நாம் காணுகின்ற பிரபஞ்சத்தில் நிகழுகின்ற எல்லா நிகழ்ச்சிகளும் எல்லா இயக்கங்களும் இறைநிலை என்னும் பேராற்றலிலிருந்துதான் தோன்றியுள்ளன.

* எந்தப் பொருளைப் பார்த்தாலும் முதலில் பொருள் அதற்கு மேலே அது அணு, அதற்கு மேலே ஆராய்ந்தால் இறைவன் என்று மூன்று உண்மைகளை ஒரே நேரத்தில் பார்க்கக்கூடிய பழக்கம் இன்றிலிருந்து வைத்துக் கொள்ளுங்கள்.

* பொருள் தோற்றம் இரண்டும் ஒன்றுதான். ஒரு பேனாவை எடுத்துக் கொள்ளுங்கள் உருவத்திலேதான் பேனா, மனிதன் மிருகம். ஆனால் அதைக் கடந்த விண்ணறிவுக்குப் போனால் அணு அணுவைக் கடந்து போனால் சிவம். அந்த மூன்றாவது படிக்குப் போய்விட்டால் எந்தப் பொருளுமே சிவம்தான். இறைநிலையேதான் இறைவனேதான். அசைவிலே அணுவாகி கூட்டிலே காட்சியாக இருக்கிறான்.

* வற்றாயிருப்பு பேராற்றல் பேரறிவு காலம் என்ற நால்வகைச் சிறப்புகளும் உடையதுதான் இறைநிலை.

* இறைநிலையில் இருப்பாக இருந்த பேராற்றல் ஆனது எப்போதும் பெருகிக் கொண்டேயிருக்கும் இயல்பினால் பரிணாமம் என்ற மலர்ச்சி ஏற்படுகின்றது.

* சுத்தவெளியே இறைநிலை. அதன் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் தோன்றும் விண் எனும் பரம அணு. அந்தப் பரமாணுவைச் சுற்றிலும் சூழ்ந்தும், அழுத்தியும் பரமாணுவிற்கு தற்சுழற்சி தருவது அந்தச் சுத்தவெளியே. அந்தப் பரமாணுவுக்குள் மையமாக இருப்புக் கொண்டு இயக்குவதே அதன் மையமாகும்.

* இறைநிலை கறைபடாது இருப்பதற்குக் காரணம் உண்டு. எந்தப் பொருளும் எல்லையுடையது. ஆனால் இறைநிலைக்கு எல்லை இல்லை. இறைநிலையில் தன்னதிர்வு இருப்பதனால் கறைபடாமல் இருக்கிறது. தன்னதிர்வே எப்போதும் எவர் இன்கிரிசிங் பெருகிக் கொண்டே இருக்கச் செய்கிறது.

* பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணமான மூல ஆற்றல் இறைநிலை எனப்படுகிறது. இவ்வாற்றலில் வற்றாயிருப்பு - பேராற்றல் - பேரறிவு காலம் எனும் நான்கு வளங்கள் உள்ளன. இதையே இறைவெளி என்றும் சுத்தவெளி என்றும் தெய்வநிலை என்றும் கூடக் கூறுகிறோம்.

* உயிரினம் என்பது பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம் இவை களுக்குட்பட்டது. இந்த நான்கிலிருந்தும் விடுபட்டுத் தூய நிலையான இறைநிலையோடு இணைய வேண்டியது மனிதனுக்கு இயல்பான அவசியம். ஆனால் ஒவ்வொரு மனிதனும் இறைநிலையை உணர வேண்டும்.

* இறைநிலையிலிருந்து நேராக விண்துகள் உற்பத்தியாகிவிட வில்லை. பரமாணு என்ற துகள்களிலிருந்து அவற்றின் கூட்டாக அணு (விண்துகள்) வந்தது.

* இறுக்க ஆற்றலான இறைநிலையானது அணுவின் நிலையில் தான் விலக்கும் ஆற்றலாகவும் மாற்றம் பெறுகிறது.

* பிரபஞ்சத்தில் எந்தப் பொருளும் இயக்கச் சிறப்புகளோடு தான் இருக்கின்றது. அந்த இயக்கங்களைக் கழித்துவிட்டால் எப்பொருளுக்கும் உட்பொருளாக உள்ள இறைநிலையை உணரலாம்.

* ஒரு திருடனைப் பார்த்து 'நீ திருடினாயா?' என்று கேட்கிற போது தான் திருடவில்லை என்று சொல்லுகிறான். ஆனாலும் உள்ளத்தில் நான் திருடினேன் நான் செய்தேன் என்று வரும், அப்படி எல்லாச் செயலிலும் உணர்த்திக் கொண்டு மனிதனுக் குள்ளே எப்பொழுதும் அவனை மாற்றிக் கொண்டே இருப்பது எது? இறைநிலைதான் அவனாக வேண்டி இடம் பார்த்து பள்ளம் பார்த்துப் போட்டு வைக்கவில்லை.

* பிரபஞ்சம் முழுவதும் நாம் பார்க்கக் கூடிய காட்சிகளெல்லாம் அலை நிலையில் உள்ளவை. இயக்கத்தால் ஒவ்வொரு சிறப்பைப் பெற்றவை. அந்த இயக்கத்திற்குள்ள அலை நிலையைக் கழித்து விட்டால் உட்பொருள் இறைநிலைதான்.

* இறைநிலை என்பது என்ன? இறைநிலையைத் தெய்வமென்றும், கடவுள் என்றும், ஊழ் என்றும், பிரம்மம் என்றும் நாம் மொழி வழக்கில் கூறி வருகிறோம்.

* **மனம் வாக்கினில் தட்டாமல் நின்றது** எது? என்று தாயுமானவர் கூறியுள்ளார். அதுவே இறைநிலை.

* இறைநிலை என்பது எங்கோ நமக்கு அப்பாலாக இல்லை. எங்கும் நிறைந்து நம் உள்ளுக்குள்ளும் ஊடுருவி நிறைந்து கண்களால் பார்க்கின்றபோது பிரபஞ்சம் முழுவதிலும் நிறைந்துள்ள தூயவெளியே இறைநிலையாகும்.

* இறைநிலை பேரியக்க மண்டலத் தோற்றங்களுக்கெல்லாம் மூலமானது. முடிவுமானது.

* அருட் பேராற்றலாக விளங்குகின்ற இந்த இறைநிலையைக் கடவுள் என்றும், தெய்வம் என்றும், பிரம்மம் என்றும், உண்மைப் பொருள் என்றும், மொழி வழியில் கூறி வருகிறோம்.

* தன்னிறுக்க ஆற்றலால்தானே நெருக்குற்று நுண்ணியக்கத் துகள்களாக மாறி இறைநிலை தன் மாற்றம் பெற்றது.

* வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்ற நான்கு தன்மைகளும் ஒன்றிணைந்த பேராற்றல் என்று போற்றும் பெருமைக்குரியது இறைநிலை.

* இறைநிலையானது தன்னிலிருந்து தன்மாற்றம் அடைந்த அணு முதல் அண்டங்கள் வரையில் ஒரு தூய பாய்மப் பொருளாக நிறைந்திருக்கிறது. இந்தப் பாய்மப் பொருளுக்கு வேறாகவோ அப்பாலாகவோ எந்தப் பொருளும் பேரியக்க மண்டலத்தில் இல்லை. இந்தப் பாய்மப் பொருள் தனது மலர்ச்சியில் எந்த நிலையாகவும் எந்தப் பொருளாகவும் தன்மாற்றமடையும் ஆற்றலுடையது.

* இறைநிலை என்று சொன்னால் அச்சொல் ஆதிநிலையாக உள்ள இறைவெளியை மாத்திரம் குறிப்பதில்லை. அதுவே எல்லாமுமாக இருக்கிறது எனவும் பொருள்படும்.

* இறைநிலையின் முழு வடிவமே பேரியக்க மண்டலமாகும்.

* பொன் என்றாலும் மோதிரம் என்றாலும் ஒன்றே. பொன் அடைந்துள்ள குறிப்பிட்ட மாறுதலையே மோதிரம் என்று கூறுகிறோம். அதே போன்று இறைநிலை என்ற முழுமுதற் பொருள் அதன் பரிணாமச் சிறப்பால் அடைந்துள்ள மாறுதல் களையே தனித்தனியாக விண் என்றும் பஞ்ச பூதங்கள் என்றும் கோள்கள் என்றும் உயிரினங்கள் என்றும் கூறுகிறோம்.

* கடலில் அலையைப் பார்க்கிறோம். நீர்தான் அசைகிறது. அது அலை எனப்படுகிறது. மேல் பக்கம்தான் அந்த அசைவு உள்ளே கீழே செல்லச் செல்ல நீர் அசையாமல் இருக்கிறது. அப்படி அசையாத நீராக இருக்கக்கூடிய நிலையிலே இறைநிலை என்று சொல்கிறோம். அசையுமிடத்திலே அலை என்கிறோம். நிலைத்த நிலையில் அறிவு அலையும் செயலில் மனம்.

* அறிவின் முழுமையைப் பெற்றால் இறைநிலையின் செயல் பாட்டோடு முரண்பாடு தோன்றாது.

* பயிற்சியின் மூலமாகத்தான் இறைநிலையை உணர முடியும். அலையாக இயங்கும் மனதைப் பயிற்சியினால் நிலையாக்கித் தான் அறிவே நான் என்று உணர முடியும்.

* இறைநிலையானது சுத்தவெளி ஒன்றுமில்லை. சூன்யம் என்று நினைக்கிறோம். அது சக்தியே இல்லாத ஒன்று என்பது நமது கற்பனை.

## 168. இறைநிலை உணர்ந்த அறிவு

* வேதாந்தப் பாடங்களாலும், மற்ற மத நூல்களின் போதனை களாலும், தெய்வத்தின் மீது பக்தியும் மதிப்பும் அதன் இருப்பையும் சிந்தனையிலுயர்ந்த பெரும்பாலோர் பெறலாம். ஆயினும் அதே தெய்வநிலை எவ்வாறு அறிவாக இருக்கிறது. இயங்குகிறது என்று உணர்ந்தால்தான் மனித அறிவிலே அன்பும் கருணையும் நடுநிலை நீதி உணர்வும் ஏற்படும். மனிதனை மனிதன் மதித்து ஒத்தும் உதவியும் வாழும் அறிவின் உயர்பண்பும் உண்டாகும்.

## 169. இறைநிலைத் தவம்

* அகத்தவத்தில் முற்றும் உணர்ந்து முழுமையடையும் நிலைதான் சிவகளத்தவம் என்கின்ற இறைநிலைத் தவம். எல்லையற்ற வற்றாயிருப்பு பேராற்றல், பேரறிவு, காலம் எனும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளி அளவுக்கு மனதை விரித்து அந்த எல்லையற்ற இறைநிலையோடிணைந்து ஆற்றுகின்ற தவம்தான் இறைநிலை தவம் ஆகும்.

## 170. இறைநிலை தன்மாற்றம்

✳ இயற்கை என்ற தெய்வத் திருவிளையாடல் இன்றி ஒரு செயலும் இல்லை. ஒரு பொருளும் இல்லை. மனிதன் தன் கையைப் பார்த்து 'என் கை' என்று சொல்கிறான். உண்மையிலேயே அவன் கையில் ஒரு விரலைக்கூட மனிதன் செய்ததில்லை. இவையெல்லாமே இறைநிலையே தன்மாற்றமடைந்த சிறப்புகளாகும்.

## 171. இறை நீதி

✡ எங்கும் நீக்கமற ஒவ்வொரு இயக்கத்திலும் அதற்கேற்ற துல்லிய மான விளைவை ஏற்படுத்துவது 'இறைநீதியே' ஆகும்.

✡ இயற்கைக்கு ஒரு நியதி இருக்கிறது. அதனை இறைநீதி என்கிறோம்.

✡ **இறைநிலை எங்குமே உள்ளது. அதை உணர்ந்தால் அது செய்யக்கூடிய காரியமெல்லாம் நீதியானது என விளங்கும். எந்த இடத்திலும் தவறு இருக்கவே முடியாது. இதை நல்ல முறையிலே தெரிந்து கொண்டால் 'ஐயோ! நான் கடவுளுக்கு ஐந்து தேங்காய் உடைத்தேனே! இன்னும் என் குழந்தைகள் சரியாகவில்லையே' என்று வருந்தமாட்டோம். தேங்காய் உடைக்கும் முன், நாம் செய்த தவறுகள் எத்தனை? அதெல்லாம் அல்லவா இப்போது துன்ப விளைவாக வருகின்றன.**

✡ அந்த இறைவனுக்கு கண் இல்லையே! என்று சொல்லும் அளவுக்கு போகக் கூடாது. இறைவன் செய்வதில் தவறு ஏற்படாது என்ற உண்மையை உணர்ந்து, இறைவனுடைய செயல் எல்லா இடத்திலும் நீதியாகவே இருப்பதைக் கண்டு கொள்ளுங்கள். அந்த இடத்திலே பிறப்பதுதான் அமைதி.

## 172. இறைவன்

✶ இறைவனைக் கண்டு கொண்டேன் அறிவாய் இறைவனைக் காணுகிறேன்.

✶ வள்ளுவரும் 'நீ இறைவனை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால் - அவர் உன்னை நோக்கி பத்து அடி எடுத்து வைப்பார்' என்ற

குறிப்பைத் தருகிறார். இந்த உண்மையை நான் உலகில் சென்ற இடங்களில் எல்லாம் ஆராய்ந்து இறை உணர்வற்ற மனித வாழ்வானது இருட்டில் செய்யும் பிரயாணம் போன்றது. மனிதகுலம் முழுவதும் இறையுணர்வு பெற வேண்டும். மனிதகுல வளர்ச்சிக்கும் வாழ்க்கை பண்பாட்டிற்கும் முழுமைப் பேற்றிற்கும் இறையுணர்வு அவசியம். உண்மை நிலையை அறிவதற்கு ஒரே தெய்வம் என்ற கருத்துக்கு மனிதகுலம் வந்துவிட வேண்டும்.

✶ எவரொருவர் உலகில் மனிதருடைய தேடுதலில் ஒரு விளக்கம் கண்டாலும் அவ்விளக்கம் உலகில் உள்ள அனைவருக்குமே போய்ச் சேர வேண்டும். இது ஒரு மாற்றமுடியாத தவிர்க்க முடியாத இறைநீதியாகும்.

✶ இறைவன் இல்லாத இடமே இல்லை. அதற்கு அடையாளம் என்ன? நீ எந்தச் செயலைச் செய்தாலும் அதற்கு விளைவாக வருபவனும் இறைவன்தான்.

✶ கடவுள் எங்கேயோ இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவன் மனிதனின் மன இயக்கத்தில் இருக்கிறான். ஆம். தெய்வம் அதற்குள்ளாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. வேறு வேறாக இல்லை. இறைவன் மனிதனிடம் ஒன்றுபட்டுத்தான் இருக்கிறான்.

✶ ஆசை என்பதைச் சீரமைத்து விட்டோமேயானால் இறைவனைக் காணலாம். ஆசையை அனுமதித்துக் கொண்டே இருந்தால் அதை ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு ஆண்டும் செயலாக்கிக் கொண்டுதான் இருப்போம். அந்த வகையில் வேலை இருந்து கொண்டே இருக்கும். ஆனால் ஆசை சீரமைக்கப்பட்டது என்றால் ஒரு பளுவும் இல்லை. ஆகையினால் மனம் துல்லியமாக நிறைவாக இருக்கும். அங்கே இறைவன் இருப்பான்.

✶ செயலிலே விளைவைக் காணும் இந்த ஒரு எண்ணத்தை வளர்த்துக் கொண்டால் அவ்வாறு வளர்த்துக் கொண்ட பிறகு எப்பொழுதும் வைத்துக்கொண்டால் இறைவனே நீதான்.

✶ இன்றைக்கு நம்மிடம் ஒரு பொருள் இருக்கிறது. அதை கொடுத்தவன் இறைவன். உடல்நலம், அறிவு, செல்வம், பதிவு இவ்வளவையும் கொடுத்தவன் இறைவன். ஆனால், இன்னும் எனக்கு வரவேண்டிய பதவி உயர்வு வரவில்லையே! எப்போதோ வர வேண்டுமே! இன்னும் வரவில்லையே! என்று குறைபடுகிறோம். அதனால் என்ன ஆனது? நமக்கு இருக்கின்ற

ஆனந்தம், இன்பம் எல்லாவற்றையும் விட்டுவிடுகிறோம். கற்பனையினால் எல்லைகட்டி ஒரு வரையறை செய்து கொள்கிறோம். இருந்த இன்பமும் போய்விடுகிறது. இவ்வளவையும் கொடுத்தவன் இறைவனேதான்.

✶ எல்லை கட்டிய மனநிலையில் நாம் இப்படித்தான் இருக்க வேண்டும். அப்படித்தான் இருக்க வேண்டும். இதுதான் நல்லது அது கெட்டது என்று நினைக்கிறோம். இது உண்மையில் நல்லதா? நல்லதாகவும் இருக்கலாம். கெட்டதாகவும் இருக்கலாம். ஆனால் கற்பனையில் நாம் வரையறை செய்து கொள்கிறோம். கற்பனையான நிலையில் இருக்கும் வரையில் நாம் இதுவரை பெற்றதைப் பாராட்டாமல் அதை அனுபவிக்கத் தெரியாமல் 'அந்தப் பொருள் இருந்தால் நன்றாக இருக்கும் இந்தப் பொருள் இருந்தால் நன்றாக இருக்கும் என்று மனதை மறுபுறம் திருப்பி விட்டுக் கொள்கிறோம். இவ்வளவையும் அனுபவிப்பது யார்?' இதுவரைக்கும் இவ்வளவையும் கொடுத்தானே இறைவன் அதை மறந்து விடுகிறோம்.

## 173. இறைவனின் கம்ப்யூட்டர்

✣ இந்த உலகத்தையே அறிந்து கொள்ளவும் உலகத்தில் உள்ள அணு முதற்கொண்டு அண்டங்கள் வரை உற்பத்தியாகிற ரகசியங்களை உணர்ந்து கொள்ளவும் கூடிய அளவிற்கு மனிதனுடைய அறிவு உயர்ந்திருக்கிறது. உடலில் இருக்கக் கூடிய அமைப்பு இறைவனின் கம்ப்யூட்டர். மனிதன் தயாரிக்கும் கம்ப்யூட்டர்அமைப்பில் ஒரு சில விஷயங்களைத் தான் புகுத்தி மீண்டும் மீண்டும் பயன்படுத்திக் கொள்கிறான்.

✣ உடலில் நடக்கக் கூடிய இறைவனின் கம்ப்யூட்டர் அமைப்பைப் பாருங்கள். நாம் சாதத்தை உள்ளே போட்டால், ஏழு தாதுக்களாக மாற்றி எந்தெந்த இடத்தில் எந்தெந்த அணுக்கள் வெளியேறி விட்டதோ அந்தந்த இடத்திற்குத் தக்கவாறு பொருந்தி வைத்து உடலை நடத்தி வருகிறது என்றால் இது என்ன விந்தையான அமைப்பு? விந்தையான கம்ப்யூட்டர்.

✣ மனிதன் செய்த கம்ப்யூட்டரை மாத்திரம் பெரிதாக எண்ணு கிறோம். கம்ப்யூட்டர் மூலமான இறை ஆற்றலை உணர்ந்து கொள்வதற்கும் வழி இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அந்த கம்ப்யூட்டருக்கும் மனிதனுக்கும் மூலமாக எந்த

ஆற்றல் இவைகளையெல்லாம் இயக்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது மனிதன் தன்னையும் உணர்ந்து கொள்வான். பிரபஞ்சத்தையும் உணர்ந்து கொள்வான்.

## 174. இறைவணக்கம்

✷ மனிதகுலத்தில் சிந்தனை ஓங்கிய காலம் முதல் உலகில் ஆங்காங்கே வாழ்ந்த தத்துவ ஞானிகள் இருப்பு நிலையாகவுள்ள இறைநிலையை உணரவேண்டும் என்ற உண்மையை வலியுறுத்தி அதற்கு இறைவணக்கம் என்ற பெயரையும், முறையையும் தந்தார்கள்.

✷ இறைவணக்கம் அறநெறி என்கின்ற இந்த இரண்டு தத்துவங்கள் தான், எல்லா மதங்களிலும் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. என்றாலும் இறைநிலை என்னும் இருப்பு நிலையை எந்தக் காலத்திலும் எந்த மதத்தாலும் எந்தத் தத்துவஞானியாலும் உள்ளது உள்ளபடி அதன் உண்மையான நிலையில் காட்ட முடியவில்லை. கற்றுக் கொள்ளவும் முடியவில்லை.

## 175. இறைவெளி

✤ எல்லையற்ற பேராற்றலாக விளங்குவது பிரபஞ்சம் முழுவதும் நிறைந்துள்ள இறைவெளியே என்பதாகும்.

✤ பூரணம் பேரறிவு பேராற்றல் மூன்று தன்மைகளும் ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்க முடியாதபடி இருப்பு நிலையாக உள்ளதே இறைவெளி.

✤ எந்தப் பொருளிலும் எல்லா இடங்களிலும் ஊடுருவி நிறைந் துள்ளது சர்வ வல்லமையுடைய இறைவெளியே.

✤ ஒவ்வொரு விண் எனும் பரம அணுவைச் சுற்றிலும் இருப்பது இறைவெளியே.

✤ உடலிலும் சரி பிரபஞ்சத்திலும் சரி அணுவிலும் சரி அணுவைச் சுற்றிலும் சரி எங்கும் நிறைந்த ஆற்றலாக இருப்பது அந்த எல்லாம் வல்ல இறைவெளி ஒன்றுதான்.

✤ இயக்கமே, வேகமே இல்லாத இடம், இறைவெளிதான்.

விண்ணில் நடுவில் இருக்கும் இறைவெளிக்கும் விண்ணின் எல்லாப் பக்கமும் இருக்கும் இறைவெளிக்கும் தொடர்பு இருக்கும்.

- ✤ எண்ணிப்பார்த்தால் எத்தனை கோடிக்கணக்கான கோள்கள் நட்சத்திரங்கள் பருப்பொருட்கள் இன்னும் எத்தனை தோற்றங்கள், காட்சிகள், நிகழ்ச்சிகள் இவையெல்லாம் சேர்ந்து எவ்வளவு எடை இருக்கும்? எல்லா இயக்கங்களும் சுத்த வெளியிலே தானே உருண்டு மிதந்து இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துச் சூழ்ந்தழுத்திப் பிடித்துக் கொண்டிருப்பதே இறைவெளி.
- ✤ பிரபஞ்சம் முழுவதையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டு இருக்கிற இறைவெளியானது சர்வ வல்லமை உள்ளது. அதனுடைய வலிமைக்கு ஈடு எதுவுமே இல்லை. இது பிரபஞ்சம் முழுவதும் ஊடுருவி இருப்பது அல்லாமல் பிரபஞ்சத் திற்கப்பாலும் எல்லை கடந்த அளவில் காணப்படுகிறது.

## 176. இறையுணர்வு

- ✷ இறையுணர்வு மறந்ததனால் எழுந்த தன்முனைப்பு ‘யான்’ ‘எனது’ இரண்டு உளப்போக்காக விரிந்தது.
- ✷ இந்த சமுதாயம் நமக்கு ஒவ்வொரு நாளும் எத்தனையோ பொருட்களைக் கொடுத்து நம்மை வாழ வைத்துக் கொண்டிருக் கிறது. இந்தச் சமுதாயத்துக்கு, எந்த வகையிலும் யாருக்கும் நான் செய்வது துன்பமாக இருக்கக் கூடாது. இந்த இரண்டு நோக்கத்தோடு செயலைச் செய்து வந்தால் தொடக்கத்தில் சிறிது சிரமமாக இருந்தாலும் பழகப் பழக எளிமையாகச் செய்ய இயலும் என்ற அளவிலே வரும். அப்படி வந்து விட்டதானால் இறை உணர்வும் வந்து விடும். அற உணர்வும் வந்துவிடும்.
- ✷ இயற்கையின் தன்மையை உணர்ந்து கொள்வது இறையுணர்வு எனப்படுகிறது.
- ✷ விஞ்ஞான முறையில் விளக்கமும் அகத்தவப் பயிற்சி முறையும் இணைத்துக் கொள்ளுங்கள்.
- ✷ சிந்தனை ஆற்றல் உள்ள அத்தனை பேருமே இறை உணர்வைச் சரியாகப் பெற முடியும்.

- ✷ இறையுணர்வு என்றால் இறைவனைப் பற்றி நன்றாகத் தெளிவாக உணர்ந்து கொண்டு இறைவனே தனக்குள் அறிவாகவும் அதாவது தானாகவும் பேரியக்க மண்டலப் பொருட்கள் அனைத்திலும் இயக்க ஒழுக்காற்றலாகவும் இருப்பதை அகக்காட்சியாகக் கொண்டு எண்ணம், சொல், செயல்களை அதற்கேற்றவாறு முறைப்படுத்திக் கொள்ளும் ஆன்மாவின் தூய்மையான வாழ்க்கை நிலையாகும்.

- ✷ அறவுணர்விலே இருந்துதான் அறம் தழைக்கும்.

- ✷ இறைநிலையே அதன் பரிணாமம் என்ற தெய்வீகப் பயணத்தில் மனிதனிடத்தில் மனமாக நிறைவு பெற்றிருக்கிறது என்ற உண்மை உயர்வுதான் பிரம்மஞானம் அல்லது இறையுணர்வு ஆகும்.

- ✷ இறையுணர்வும் அறநெறியும் இணைந்த வாழ்வில்தான் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் எல்லா வளங்களும் அமையும்.

- ✷ மனம் தூய்மை அடைந்தால் அந்த வினாடியே இறையுணர்வு கிட்டும்.

- ✷ இறைநிலை உணர்வு என்பது மனிதனுக்கு இன்றியமையாத அறிவின் ஆக்கமாகும்.

- ✷ இறையுணர்வு பெற்றால்தான் மனிதன் மனிதனாக வாழ முடியும். வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்து வளம் பெற்று நலமடைய வேண்டும்.

- ✷ அன்பும் கருணையும் மகிழ்ச்சியும் நிறைவும் வேண்டுமானால் இறைநிலை உணர்வு எல்லோருக்கும் வரவேண்டும்.

- ✷ இறையுணர்வில் முழுமை பெற வேண்டும். அப்போதுதான் மக்களை சீரிய முறையில் வழி நடத்தவும் வாழ வைக்கவும் முடியும்.

- ✷ இறையுணர்வு என்பது பெரும் மதிப்படைய அறிவின் முழுமைநிலை.

- ✷ இறையுணர்வு என்பதைச் சரியாகப் பெற்றுவிட்டோமானால் நமது வாழ்க்கையே அறநெறியாக அமையும். இறையுணர்வும் அறநெறியும் இணைந்த வாழ்வில்தான் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் எல்லா வளங்களும் அமையும்.

- ✷ இறையுணர்வில் ஆர்வமுடையோர் எல்லோருமே அந்த இறை உணர்வைப் பெறலாம் என்ற உறுதியை நான் தருகிறேன்.
- ✷ மனிதன் துன்பங்களைத் தவிர்த்து வாழ இறையுணர்வு பெற வேண்டும். இறையுணர்வு மூலமாகத் தன்முனைப்பு தவிர்க்கப்படுகிறது.

## 177. இறைவழிபாடு

- ☼ நிறைநீதி செயல் விளைவு கூர்தலறம் உணர்ந்து - நெறிநின்று வாழும்முறை இறைவழிபாடு ஆகும்.
- ☼ இந்த உடலுக்கு உணவு, ஓய்வு, உடலுறவு, எண்ணம், உழைப்பு இந்த ஐந்தையும் அலட்சியம் செய்யாமல் அதிகமாக அனுபவிக்காமல் முரணாக அனுபவிக்காமல் நாம் பார்த்துக் கொள்வோம். உடல் நலமாக இருக்கும். மனமும் அமைதியாக இருக்கும். அப்படி அறிவின் தெளிவோடு உடலை நலமாக வைத்துக் கொள்வதும் இறைவழிபாடுதானே!
- ☼ இயற்கையின் திருவிளையாடல்களால் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்திலும் மறுக்கவோ மாற்றவோ முடியாத நியதியாக அமைந்திருக்கும் அன்பையும் கருணையையும் அந்தத் தோற்றங்களில் ஒன்றான மனிதனானவன் உணர்ந்து தன் வாழ்விலும் செயல்களிலும் பின்பற்றி வாழ்வதே இறைவழிபாடு ஆகும்.
- ☼ இறைநிலையானது தனது காந்தமென்ற ஆற்றலால் உடலைச் சீராக நடத்தும்போது எனது புலன் உணர் ஆர்வத்திலெழும் செயல்களாகிய உணவு - உழைப்பு, ஓய்வு, உடலுறவு எண்ணம் ஆகிய ஐந்து செயல்கள் இறையாற்றலின் செயல்களைச் சீர் குலைக்கவோ தடை செய்யவோ முரண்படுத்தவோ கூடாது. அதற்கு ஒத்த வழியிலேயே என் புலன் மனம் விருப்பச் செயல்களை அமைத்து, அந்த இறைநெறி வழிபட்டு அதன் வழியே வாழ வேண்டும் என்ற விளக்கமும் அதற்கேற்ற செயல்களும்தான் இறைவழிபாடு.
- ☼ எனது உடல், உள்ளம் இவற்றில் இறையாற்றல், அதன் அருட்செயலை ஆற்றுவதுபோல் எல்லா மனிதரிடத்திலும் செயல் புரிகின்றது. சிவனின் உடலில் மாத்திரமல்ல. எல்லா

சடப்பொருளிலும் அவ்வியற்கை ஆற்றலின் அறிவாட்சித்தரத்தை மதித்து நான் செயல்புரிய வேண்டும் என்ற இறையுணர்வில் தெளிந்த அறிவின் விழிப்பில் வாழும் வாழ்க்கையே உண்மையான வழிபாடாகும்.

☼ இச்சமுதாயம் நமக்கு ஒவ்வொரு நாளும் எத்தனையோ பொருட்களைக் கொடுத்து நம்மை வாழ வைத்துக் கொண்டிருக் கிறது. இந்தச் சமுதாயத்துக்கு எந்த வகையிலும் யாருக்கும் நான் செய்வது துன்பமாக இருக்கக் கூடாது. இந்த இரண்டு நோக்கத்தோடு செயலைச் செய்து வந்தால் தொடக்கத்தில் சிறிது சிரமமாக இருந்தாலும் பழகப் பழக எளிமையாகச் செய்ய இயலும் என்ற அளவிலே வரும். அப்படி வந்து விட்டதனால் இறை உணர்வும் வந்து விடும். அற உணர்வும் வந்துவிடும்.

☼ யூகத்தால் சிவநிலையை உணரமுடியாதோர்க்கு உருவவழி பாட்டுமுறை உளம் அறிந்தோர் கற்பித்தார். யூகமது நற்குணமாய் ஓர்மையால் உறுதிபெற்றால் உலக வாழ்வில் வெற்றி யுண்டாகும் எனவறிந்து.

☼ இறைநிலையே புலனுக்கு எட்ட முடியாத அனைத்தூடுருவும் பளிங்கு நிலைப் பாய்மப் பொருளாகும்.

☼ எல்லாப் பொருட்களும், இறைநிலையின் தன்மாற்றமே.

☼ ஒரேயொரு பொருளான இறைநிலைக்கு மொழிகளைக் கொண்டே பல பெயர்கள் வழங்கலாயிற்று.

## 178. இறைத்துகள்

✚ இறைத்துகள்கள் தனித்தனியே இருந்தாலும் - அவை விண் எனும் தொகுப்பில் இருந்தாலும் விண் கூட்டு நிலைகளான தோற்றப் பொருட்களில் இருந்தாலும் தற்சுழற்சி, விரைவு, இயல்பு மாறாமலேயே இயங்கிக் கொண்டிருக்கும்.

✚ பிரபஞ்சப் பரிணாமத்தில் விண்தான் முதலில் தோன்றியது. அதன் தொகுப்பாக காற்று, நெருப்பு, நீர், நிலம் இவையெல்லாமே இறைத்துகள்களின் தொகுப்பு நிலைகள்தான்.

✚ பரமாணுக்களின் கூட்டுத்தான் 'விண்' ஆகி இறைநிலையின் அழுத்தத்தால் அதே விண் விரைவான சுழல் இயக்கம் பெறு கின்றபோது அவ்விண்ணில் அடங்கியுள்ள இறைத்துகள்கள்

அனைத்தும் காந்த ஆற்றலைப் பெறுகின்றன. இக்காந்த ஆற்றல் திணிவு பெறுகின்றபோது இறைத்துகளின் சுழல் விரைவு அதிகரிக்கின்றது. இந்தச் சமயத்தில் விண்ணினைச் சூழ்ந்துள்ள இறைவெளியின் அழுத்தமானது விண்ணில் உள்ள இறைத்துகள்களை வெளியேற்றுகின்றது.

- ✚ இறைத்துகள்கள் இல்லாத எப்பொருளுமில்லை. இயக்கங்களும் இல்லை. இதில் ஆழமான ஒரு தத்துவ உண்மை அடங்கி யுள்ளது. இறைத்துகள் என்பது நுண்ணிய பரமாணுக்களாக இருந்தாலும் அதன் தோற்றமும் இறைநிலையே ஆகும்.
- ✚ கடலிலிருந்து ஒரு கையளவு நீரை அள்ளுகிறோம். இது அளிவிலே கடலைவிடக் குறைவாக இருந்தாலும் கடல்நீரின் தன்மையெல்லாம் இந்தக் கையளவு நீரிலும் இருக்குமன்றோ? இதே போன்று இறையாற்றலாக உள்ள பரம் பொருளிலிருந்து சிற்றுருவாகத் தன் மாற்றமடைந்து தோன்றிய ஒரு மூலக் கூறுதான் இறைத்துகள் என்னும் பரமாணுவாகும்.

## 179. இறைவனின் பேச்சு

- ✜ மௌனத்தில்தான் நாம் இறைவனோடு பேசிக்கொண்டு இருக்கிறோம் அல்லது இறைவன் நம்மோடு பேசிக்கொண்டு இருக்கிறான். நாம் சாதாரணமாக இருக்கும்போது எத்தனை எண்ணங்கள் வருகின்றன? யார் அதைக் கொடுக்கிறார்கள்? என்ற கேள்விகளுக்கு நீங்கள் மௌனத்தில் இருக்கும் போது தான் விடை பெற முடியும்.
- ✜ இறைநிலை அறிவாகவும் - அதன் அலை மனமாகவும் இருக்கிறது. மனம் என்பது ஜீவகாந்தத்தின் அலை. அவை புலன்களோடு உறவாடுகின்றபோது வான் காந்த அலைகளின் மோதல்களுக்கு ஏற்ப அழுத்தமாக - ஒளியாக - ஒலியாக - சுவையாக, மணமாக, மனமாக மாற அதனால் ஏற்படுகின்ற உணர்ச்சிகளால் இன்பமோ துன்பமோ அனுபவிக்கிறோம். மன அலைச்சுழல் குறைந்து அமைதி நிலைக்கு செல்லும் போதே இறைவனின் பேச்சு நமக்குக் கேட்கிறது.

## 180. இருப்புநிலை

- ✷ **இருப்புநிலை சூன்யம் ஒன்றுமில்லாதது என்று பலரும் எண்ணுகின்றனர். இது தவறானது. இருப்புநிலை எல்லாவற்றையும்**

***தன்னுள் பெற்றுள்ளது. அனைத்துப் பொருளும் இங்கிருந்து தான் ஆரம்பிக்கின்றது. இதனுள் இயங்குகின்றது. இருப்பு நிலையை கடல் என்று நாம் எண்ணினால், பிரபஞ்சத்தில் உள்ள மிகச்சிறிய பொருள்களிலிருந்த மிகப்பெரிய பொருள் வரை அதன் இயக்கங்கள் சக்திகள் அனைத்தும் கடலில் தோன்றுகின்ற அலைகளாகும். அலைகள் கடலில் தோன்றி கடலின்மேல் அசைந்து கடலில் முடிவடைகின்றது. அதேபோன்று மிகச்சிறிய பொருளிலிருந்து மிகப்பெரிய சூரியன் வரை உள்ள அனைத்துப் பொருள்களும் உயிர்வாழும் ஜீவன்களும் இருப்புநிலையிலிருந்து தோன்றி அதனுள் இயங்கி அதனுள்ளே முடிவடைகின்றது.***

✷ *நீக்கமற நிறைந்துள்ள பூரணத்தில் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் இருப்பு நிலையில் மிதக்கின்றன அசைகின்றன.*

✷ *தண்ணீரில் அதன் நுரை மிக நன்றாகத் தெரியும். நீரில் நுரை மிதப்பதைப் போன்று அனைத்துப் பொருள்களும் பூரணத்தில் மிதந்து கொண்டு உள்ளன. எண்ணிப் பாருங்கள் ஒரு பொருள் அதன்மேல் மற்றொரு பொருள் இதில் எது சக்திவாய்ந்தது. அசைகின்ற ஒவ்வொரு பொருளையும் தன்னிடம் பிடித்துக் கொண்டிருப்பது இருப்புநிலை.*

✷ *இருப்புநிலையே எல்லாம் வல்லது. அதுவே ஆதிநிலை.*

## 181. இன்ப ஊற்று

✢ *இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா எங்கும் இன்ப ஊற்றாய்ப் பெருகும் இறைவா! அன்பு ஊற்றாய்த் தோற்றங்கள் அனைத்துக் குள்ளும் அறிவாய் இன்ப ஊற்றாய்ப் பெருகும்.*

✢ *நீ எங்கு எப்படி எவ்விடத்தில் இருக்கிறாய் என்று கணித்துக் கொள்ள வேண்டும். அதாவது வயதிலே வாழ்விலே, கல்வியிலே, செயல் திறமையிலே, அறிவின் நுட்பத்திலே பொருள் வளத்திலே, அதிகாரத்திலே, எந்தநிலையிலே நீ இருக்கிறாய் என்று கணித்துக் கொள். இவற்றைக் கொண்டு உனக்கு குடும்பத்துக்கு, சுற்றத் தாருக்கு, ஊருக்கு, உலகுக்கு, என்ன நன்மை செய்ய முடியும் என்று கணித்துக் கொள். முடிந்த அளவிலே செய்து கொண்டிரு. இந்தத் தொண்டினை ஆற்றுவதற்கு என் திறமையை எந்தெந்த முறையில் வளர்த்துக் கொள்ள முடியுமென்று திட்டமிட்டு முறையான பயிற்சியின் மூலம் வளர்த்துக்கொள். இங்கே ஒரு பெரிய இன்ப ஊற்று உள்ளத்திலே ஊறத் தொடங்கி விடும்.*

✢ பிறரிடமிருந்தும் அல்லது எவரிடமிருந்தும் எதையும் எதிர் பாராதே. எதிர்பார்த்தல் பெரும்பாலும் ஏமாற்றத்தில்தான் முடிகின்றது. இந்த ஏமாற்றம் இன்ப ஊற்றை அடைத்துவிடும்.

✢ இயற்கை அமைப்பை நிகழ்ச்சிகளை எண்ணத்தின் ஆற்றலை சமுதாயத்தை உலகத்தை ஆகாயத்தில் மிதந்து உலவிக் கொண்டிருக்கும் பலகோடி அண்டங்களை அடிக்கடி ஞாபகப் படுத்திக்கொள். இவைகளோடு உனது அறிவை இன்ப துன்ப அனுபோகங்களை அடிக்கடி ஒப்பிட்டுப்பார். இதனால் உடலுக்கும் அறிவுக்கும் ஒருங்கே அமைதி தரத்தக்க இடையறாத இன்பஊற்று பெருக ஆரம்பித்துவிடும்.

✢ நீங்கள் ஒரு அதிகாரியாக இருக்கலாம். உங்கள் அதிகாரத்தின் கீழ் ஆயிரமாயிரம் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கக் கூடும். நீங்கள் இந்தப்புறம் திரும்பி நாம் அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்று எண்ணிவிட்டீர்களேயானால் அத்தனை ஆயிரம் மனிதர்களும் அவர்களின் தேவைகளும் நேரடியாக உங்களுக்குத் தெரியத் தொடங்கும். அதைச் செய்ய ஆரம்பித்தீர் களேயானால் அவ்வாறு செய்யச் செய்ய இன்ப ஊற்றுதான் மனதிலே வளரும். தெய்வத்தோடு தெய்வமாகவே நிற்கும் நல்ல காட்சி உள்ளத்தில் ஏற்படும்.

✢ இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா எங்கும் இன்ப ஊற்றாய்ப் பெருகும் இறைவா! அன்பு ஊற்றாய்த் தோற்றங்கள் அனைத்துக் குள்ளும் அறிவாம் இன்ப ஊற்றாய்ப் பெருகும் இறைவா!

## 182. ஈசன்

◊ இன்ப துன்ப நிலை கடந்தால் ஈசன் நாம்.

## 183. ஈகை

✲ ஒரு சமுதாயத்தில் குழந்தை முதற்கொண்டு முதியோர்கள் வரை வாழ்கின்றனர். மனிதன் என்றால் தன் அறிவு மற்றும் உழைப்பின் மூலம் பெறுகின்ற ஊதியத்தைக் கொண்டே வாழ வேண்டியது இறைநீதி என்றாலும் குழந்தை வயதில் முதிய வயதில் உடல் நோயுற்றிருக்கும் காலங்களில் இன்னும் மற்ற

காலங்களில் மனிதன் தனது உழைப்பைப் பயன்படுத்தி வாழ முடியாது. அக்காலங்களில் எல்லாம் பிறர் உழைப்பின் பயனாகத் தான் வாழ வேண்டும். இவ்வாறான தவிர்க்க முடியாத நிலையில் தனது உழைப்பின் பயனைக் கைமாறு கருதாது பிறருக்கு அளித்து வாழ்வை நடத்துவது ஈகையென்பதாகும்.

* உயிர்கள் படும் துன்பத்தைப் போக்க வேண்டும் என்று எண்ணி அதற்காகச் செய்யும் காரியங்களை 'ஈகை' என்று சொல்லு கின்றோம். எனவே ஈகை என்பது இருக்கும் துன்பத்தைப் போக்கும் முயற்சி, செயல் ஆகும்.

* இன்பத்திற்காகப் பொருள் தேடுவதும் அனுபவிப்பதும் சலிப்பிலும் நோயிலும் முடியும். பொருள் வரவிற்கும் செலவிற்கும் ஒத்துப் பார்க்க வேண்டும். அதில் வரவே மிகுதியாக இருக்க வேண்டும். அப்படி மிகுதியிருந்தால் தனது வருமானத்தில் 100-ல் ஒரு பங்கு தன்னலமற்ற ஈகையாக்கி அறம் வளர அன்பு ஓங்க வழி வகுக்க வேண்டும்.

* தவிர்க்க முடியாத நிலையில் தனது உழைப்பின் பயனைக் கைமாறு கருதாது பிறருக்கு அளித்து வாழ்வை நடத்துவது ஈகையென்பதாகும்.

## 184. ஈட்டலினும் காத்தல் வேண்டும்

* மனிதன் ஒவ்வொருவரும் தன் அடிப்படைத் தேவையான உணவு உடை உறைவிடம் இல்லாமல் வாழ முடியாது. இத்தேவைகள் நிறைவேற பொருள் தேவை. உடல்வலுவும் அறிவு நுட்பமும் பெற்ற எல்லோருடைய தலையாய கடமை பொருளீட்டல் ஆகும். பொருளீட்டல் எவ்வளவு முக்கியமோ அதனினும் முக்கியம் அதைக் காத்தல் ஆகும்.

* காப்பதில் திறமையில்லாத பொருளீட்டல் தாழ்ப்பாள் இல்லாத கதவு போலாகும். அறநெறியில் பொருள் தேடினாலே அது நிலைத்து நிற்கும். நமக்கும் நற்பயன் கொடுக்கும். பிறருக்கும் பயன்படும். ஆம்! நம் தேவையை நிறைவேற்றிய பின் ஈட்டும் பொருளைச் சேமிக்க வேண்டும். சேமிக்கும் பொருளை பொருளீட்ட முடியாது. குழந்தைகள் வயதானவர்கள் நோய் வாய்ப்பட்டவர்களுக்கும் பிரதிபலன் எதிர்பாராமல் உதவ வேண்டும். இந்த அறம் நம் பொருளைக் காத்து நிற்கும்.

## 185. ஈரேழுலகம்

♬ நாம் வசிக்கும் பூமியில் இருந்து சூரியனை நோக்கிய வரிசையில் பூமி - சந்திரன் - புதன் - சூரியன் - ராகு - கேது ஆகிய ஏழு கோள்களின் வரிசை அமையும். இதை மேலேழுலகம் என்றார்கள் முன்னோர்கள்.

♬ பூமியிலிருந்து மறுபக்கம் நோக்கினால் செவ்வாய் - வியாழன் - சனி - யுரேனஸ் - நெப்டியூன் - புளூட்டோ ஆகிய ஆறு கோள்களும் உள்ளன. அதற்கப்பால் சுத்தவெளிதான் உள்ளது என்றெண்ணிய முன்னோர்கள் ஏழாவதாக உள்ளதை பாழ்தளம் என்றனர். இதுதான் பேச்சு வழக்கில் பாதாளம் என்றாகியது. இதைக் கீழேழுலகம் என்றார்கள். இன்றைய விஞ்ஞானக் கூற்றுப்படியும் இவைதான் காண முடிகிறதே தவிர வேறு மேலேழு - கீழேழுலகங்கள் இல்லை.

## 186. உடல்

♀ உடல் அணுக்கள் பல சேர்ந்த கூட்டு. உயிர் என்பதோ அணுவின் நுண்துகள்கள் ஆகும்.

♀ தந்தை தாய் ஈருயிரும் ஒன்று சேர்ந்து தழைத்தொரு உடலாகி உலகில் வந்தேன்.

♀ தெரிந்தோ தெரியாமலோ நாம் உடம்பை இதுவரைக்கும் கெடுத்துக் கொண்டிருக்கிறோமே அதையெல்லாம் சரி செய்ய வேண்டும்.

♀ 1. பருஉடல்; 2. நுண்ணுடல்; 3. காந்தம் எனும் அலைச் சுழல் மூன்றும் ஒன்றில் ஒன்றாக இணைந்து இயங்கிக் கொண்டிருக் கின்றன.

♀ சிறுசிறு செல்களால் இணைக்கப்பெற்ற ஒரு முழுமையான கட்டுக் கோப்புத் தோற்றமே பரு உடல். அந்தப் பரு உடலுக்குள் நுண்ணுடல் என்பது ஒன்றுடன் மற்றது நெருங்காத நுண் - விண் துகள்களின் ஓட்டச் சுழல். இதுவே சூக்கும உடல் சூக்குமமாகக் கருதப்படும் வேதான் எனும் நுண் விண்ணானது அதனைச் சுற்றியுள்ள இறைவெறியால் சூழ்ந்தழுத்தப் படும் போது இறைவெறியிலிருந்து வெளியாகும் சிற்றலைகளே காந்தம் ஆகும்.

♀ உடல் மரணத்திற்குப் பின் சிதைந்து விடுகிறது. பேரணுக்களால் கட்டப்பட்ட உடல் சிறப்பு முறையிலேயே பிரிந்து மீண்டும் அதே பேரணுக்கள் நிலையை அடைந்து விடுகிறது.

♀ நமது உடலியக்கச் சக்தி சதாகாலம் செலவாகிக் கொண்டிருக் கிறது. வந்து கொண்டேயும் இருக்கிறது. அவை. 1. உணவிலிருந்து ஒரு பகுதி. 2 காற்றிலிருந்து ஒரு பகுதி. 3. கோள்களிலிருந்து வரும் கதிர்வீச்சிலிருந்து ஒரு பகுதி; 4. பூமிப்பரப்பிலிருந்து வரும் அணுத்துகள்களிலிருந்து ஒரு பகுதி ஆக நான்கு வகை களில் நம் உடலிலுள்ள செல்கள் நமக்குத் தேவையான சக்தியை அவ்வப்போது தேவையான அளவுக்குப் பெற்றுக் கொள்கின்றன.

♀ மனிதனிடம் எல்லாச் சடப்பொருட்களின் சிறப்புகளும் பல கோடி உயிரினங்களின் தன்மைகளும் சிறப்புகளும் அடங்கி யுள்ளன. மேலும் இவற்றையெல்லாம் மனதை விரித்தும் குவித்தும் கூர்ந்தும் அறியக்கூடிய பேரறிவும் மனிதனிடம் சிறந்து விளங்குகின்றது. எனவே இத்தகைய பேரறிவானது வாழ்க்கை அனுபவங்களால் சிறப்படைய மனித உடலே முழுமையான அமைப்பு உடைய கருவியாகும்.

♀ மன உணர்வை விரிந்த அளவில் வளர்த்து அறிவில் உயர்வு பெற்று உயிரின் மதிப்பும் சிறப்பும் உணர்ந்து நிறைவான வாழ்வைப் பெறுவதற்கு உடலை நலமோடும் வளமோடும் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

♀ நாம் பிறந்தது முதல் இன்று வரை என்னென்ன செயல்களைச் செய்து பழகினோமோ , அந்தச் செயல்களுக்குத் தகுந்தவாறு செல்கள் நமது உடலில் அமைந்துள்ளன. அதை நன்மையான முறையில் மாற்றி அமைக்கவில்லையென்றால் மனதால் ஒன்றைச் செய்யலாம் என்ற நினைத்தாலும் உடலானது அதற்கு ஒத்துவராது. அதனால் செல்களின் இயக்கத்தைச் சரிப்படுத்த வேண்டும்.

♀ உடல் நலம் அறிவின் உயர்வுமே பெருநிதி. கடமையின் சிறப்பே களங்கமிலா வாழ்வு.

♀ மனித உடலானது சிறுசிறு செல்களால் அற்புதமாகக் கட்டப் பட்டுள்ளது.

♀ சீவகாந்தம்தான் பிரணவ உடல் ஆகும். கருமையத்தில் பருவுடல், சூக்கும உடல், காரண உடல் மூன்றும் அடங்கியுள்ளன.

♀ பருஉடலில் நீர்வெப்பம் காற்று உயிர் என்னும் நான்கு திரு உருவங்கள் ஒன்றில் ஒன்றாகிச் செயலாற்றும் ஒரு இயற்கை ஒழுங்கமைப்பை உணர்ந்துவிட்டால் அம்மனிதன் கருவிளங்கி தெய்வம் அகக் காட்சியில் பெற்றே களிப்பான்.

♀ பருவுடல் என்பது பேரணுக்கள் மற்றும் பஞ்ச பூதங்களால் கட்டப்பட்ட வியப்புக்குரிய அருளாற்றலின் ஒரு நன்கொடையே ஆகும்.

♀ உடல் தானாகவே காற்றில் இருந்து கோள்களின் அலை வீச்சிலிருந்து சக்தியை எடுத்துக் கொள்ள முடியும்.

♀ உயிர் தன் மூலத்தை அறிந்து கொள்ள எடுக்கின்ற முயற்சிக்கும் இந்த உடல் தேவைப்படுகிறது.

♀ பருஉடல் பருஉடலுக்குள் நுண்வின் எனும் வேதான்கள் தனித்தனியே தற்சுழல் விரைவோடு ஓடிக் கொண்டிருக்கும் நுண்ணுடல் நுண்ணுடலாக இயங்கும் ஆற்றல் தொடர்பாக சூக்சூம உடல்; 3. சூக்சூம உடலில் அமைந்துள்ள நுண்விண்கள் தனித்தனியே விரைவு கொண்டு இயங்கும் தற்சுழற்சியால் எழும் அலைகள் கூடிய சீவகாந்தக்களம் ஆகிய மூன்று இயக்க நிலையங்களும் ஒன்றுக்குள் ஒன்றாக இணைந்து ஒன்றால் ஒன்று ஆக்கவும் காக்கவும் பெறும் ஒரு சிறப்பியக்க நிலையம்தான் மனிதஉடல்.

♀ பருஉடலானது பலகோடி சிற்றறைகளால் (செல்) கட்டப் பட்டுள்ளது. ஒவ்வொரு செல்லும் ஒரு நகராட்சி நிர்வாகத்தைப் போலும் ஒரு இரசாயன தொழிற் சாலையைப்போலும் பல்வேறு சிறப்பியக்கங்கள் கொண்டதாகும்.

♀ அறிவின் உயர்வு பெற்ற உயிரின்மதிப்பும் சிறப்பும் உணர்ந்து பெறுவதே மனிதப் பிறவியின் நோக்கமெனினும் அது வெற்றிபெற உடலை நலமோடும் வளமோடும் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

♀ இறைநிலையே விண்ணாகி விண் கூட்டுச் சேர்க்கையால் ஏற்பட்ட கோடிக்கணக்கான பரு உருவத் தோற்றங்களில் ஒன்றாகப் பருவுடல் விளங்குகின்றது.

♀ ஆறாவது அறிவான நுண்மாண நுழைபுலனறிவால் நாம் உணரும்போது பருவுடல் பிரம்மமாகவே விளங்குகின்றது.

♀ மனித உடல் அமைப்பு அதன் இயக்க மேன்மை, பேணிக் காக்க வேண்டிய பொறுப்பு, இவற்றை ஒவ்வொருவரும் உணரச் செய்ய வேண்டும்.

♀ உனது உடல் மிக நுட்பமாக உனக்கு உயர் வாழ்வு அளிக்கவே இயற்கையால் நீண்ட காலமாகப் பல தலைமுறைகளால் வடிவமைக்கப்பட்டது.

♀ உன் எந்த எண்ணம் அல்லது செயலாலும் உனது உடலில் உள்ள எந்த உறுப்பும் நலியாமலிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டியது.

♀ இதுவரை மனிதனிடம் ஏற்பட்டுள்ள களங்கங்கள் பாவப் பதிவுகள் நீங்கினால்தான் உயிருக்கு வீடுபேறு விடுதலை கிடைக்கும். பாவப்பதிவுகள் எப்படிப் போகும். உடலை எடுத்தால்தான் அந்தப் பாவப் பதிவுகள் துன்பமாக அனுபோகமாகி நீங்கும் அல்லது யோக சாதனைகள் மூலம் நீக்கிக் கொள்ளலாம். அதற்குத்தான் இந்த உடலை உயிர் எடுத்து வந்தது. உயிர் தன் மூலத்தை அறிந்து கொள்ள எடுக்கின்ற முயற்சிக்கும் இந்த உடல் தேவைப்படுகிறது. ஆகவே உடலை உயர்வாகக் கருதி சீர்கேடு அடையாமல் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் ஆன்மீகப் பயணம் தடைபடாமல் இருக்கும்.

♀ உடல் இயக்கத்திற்குத் தேவையான சக்தி 1. உணவு; 2. நீர்; 3. கோள்; 4. விண் ஆகியவற்றிலிருந்து கிடைக்கிறது.

♀ சீவகாந்த இருப்பை அதிகம் சேமித்து வைத்துக் கொண்டால் உடல் நலமாக இருக்கும்.

♀ மனிதனின் இந்தக் குறுகிய வாழ்க்கைக் காலத்திற்குள் அவனது உடலிலே ஏற்படுகின்ற பல்வேறு விந்தைகளை யாரும் இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்ளவில்லை.

## 187. உடல் கழிவு

✻ நீயே உன் உடல் கழிவை நிந்தித்துப் பழிக்கின்றாய் நினைத்துப் பார். அவை உன்னையே கழித்து வெளியேறியுள்ளன.

## 188. உடல் காந்தம்

- ஐம்புலன் உணர்வு அனுபவங்களும் எண்ணங்களும் உடல் அசைவு நிகழ்ச்சிகளும் சுருங்கி அலைகளாகி உடல் காந்தக் களத்தில் சேர்ந்து இருப்பாகி விடுகின்றன.

## 189. உடல் வளம்

- உடலுக்கு ஆகாரம் உழைப்பு வேண்டும். உள் அமைதிக்காக உற்சாகம் ஊட்ட, கடல்நதிகள், மலைக்காடு இயற்கை காட்சி கண்டுகளித்திட உலகம் சுற்றும் வாய்ப்பும் நடன முதல் களிப்பூட்டும் கலைகள் வேண்டும். ஞாபகத்தைப் பண்படுத்தும் தியானம் வேண்டும். விடவேண்டும் தேவையற்ற அனு போகங்கள் விளையாது பெருகாது துன்பம் வாழ்வில்.

## 190. உடற்பயிற்சி

- உடலை வலுவடையதாகவும் எக்கோணத்திலும் இயங்கக் கூடியதாகவும் திறன்மிக்கதாகவும் இளவயதிலேயே பழக்கி வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு பள்ளியில் படிக்கின்ற காலத்தில் மாணவர்கள் அனைவரையும் விளையாட்டில் நல்ல தேர்ச்சி பெறச் செய்தல் வேண்டும். வயது வந்தவர் களுக்கு உடலைக் காக்கின்ற நல் உடற்பயிற்சியே தேவை.
- வாழ்க்கையில் வெற்றியும் மகிழ்ச்சியும் வேண்டுமெனில் உடல்நலம் இன்றியமையாதது. மனித வாழ்வில் உடல் பயிற்சியின் அவசியத்தை உணர்ந்த சிறுவர் முதல் வயோதிகர் வரை செய்து பயன் பெறக் கூடிய எளிய முறையிலான உடற்பயிற்சித் தொடர் ஒன்றை உருவாக்கினேன். இவற்றை ஏழு நிலைகளாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் ஏழு பயிற்சிகளாக வகுத்துள்ளேன்.
- முப்பது நிமிடத்தில் செய்யக்கூடிய இப்பயிற்சிகள் உடலில் இரத்த வெப்ப காற்றோட்டத்தை சீராக்கி உள்ளுறுப்புகளை முழு அளவில் இயக்கி நோய் வராமல் காப்பதுடன் நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடனும் இருக்க வைக்கும்.

♪ உடற்பயிற்சித் தொடரோடு எளிய முறைத் தியானமும் பயின்று நீங்களும் உங்கள் அன்புக் குடும்பமும் உடல் நலமும் மனவளமும் பெற்று மகிழ்ச்சியோடு வாழ்வீர்களாக.

♪ எளியமுறை உடற்பயிற்சி ஏழு வகையான பயிற்சிகளைக் கொண்டது. 1. கைப்பயிற்சி; 2. கால்பயிற்சி; 3. மூச்சுப்பயிற்சி; 4. கண் பயிற்சி; 5. மகாசனம்; 6. மசாஜ் அக்கு பிரஷர்; 7. உடம்பைத் தளர்த்துதல்.

♪ எளியமுறை உடற்பயிற்சியால் உடலில் இரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம், காற்றோட்டம், உயிரோட்டம், காந்த ஓட்டம் என்ற ஐந்து ஓட்டங்களும் சீராக நடைபெறுகின்றன.

♪ இக்காலங்களில் எல்லோருக்கும் உழைப்பும் குறைந்து போய்விட்டது. உழைப்பின்மையால் ஏற்படும் உடல்நலம் குறைவைச் சரிக்கட்ட வேண்டுமென்றால் எல்லோரும் உடற்பயிற்சி செய்துதான் ஆகவேண்டும்.

♪ உலகம் முழுவதும் பார்த்தால் எத்தனையோ உடற்பயிற்சி முறைகள் உள்ளன. நான் அவற்றை எல்லாம் சேர்த்துக் கூட்டி தொகுத்து ஒழுங்குபடுத்தியுள்ளேன். ஒவ்வொரு விதமான பயிற்சியையும் நானே செய்து பார்த்தேன். நல்விளைவுகளைத் தரும் பயிற்சிகளை மட்டும் ஒன்று திரட்டினேன். அவைதான் நீங்கள் இப்போது செய்து வரும் உடற்பயிற்சிகள்.

♪ நமது உடற்பயிற்சிகளை இன்றுள்ள வடிவத்தில் வடிவமைப்பதற்குள் எனக்கு முதுமை வந்துவிட்டது. ஆனால் நான் உருவாக்கிய பயிற்சிகளினால் நானே முழுமையான பயனை அடைய முடியவில்லை.

## 191. உடல் நலம்

⌘ உடலை நலத்தோடு வைத்துக் கொள்ள வேண்டுமாயின் உடலுக்கும் உயிர்ச்சக்திக்கும் இடையே உள்ள இரத்தம், வெப்பம், காற்று ஆகிய மூன்றுக்கும் ஊறுநேராதபடி பாதுகாத்துக் கொள்வது அவசியம் ஆகிறது.

⌘ உயர்ந்த எண்ணங்களாலும் சிறந்த சொல் செயல்களாலும் உங்கள் மனதையும் உடலையும் நலமாக வைத்துக் கொள்ளுங்கள்.

## 192. உதவி

- நீ மற்றவர்களுக்கு என்ன மாதிரியாக உதவ முடியுமோ அதற்கு மனதை விரித்து வைத்துக் கொண்டு தயாராக இருந்தால் உனக்கு வேண்டியதெல்லாம் உனக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

- பிறருக்கு உதவி புரிவதில்கூட நாம் இக்காலத்தில் விழிப்போடு இருக்க வேண்டியுள்ளது. உதவி தேவைப்படுபவர்கள்தான் அதற்குத் தகுதியுடையவர்கள்தான், நம்மை நாடி வருகிறார்கள் என்று நினைப்பதற்கில்லை. அப்படித் தகுதியுடையவர் களாயிருப்பினும் தகுதி பெற்ற எல்லோருக்குமே நாம் உதவி செய்ய முடியுமா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

- நாம் ஒரு கனிமரம் வளர்க்கிறோம். கனிகளை மட்டும்தான் கொடுத்து உதவி செய்யலாமே ஒழிய மரத்தையே வெட்டிக் கொடுத்துவிட்டால் பிறகு கனி எப்படிக் கிடைக்கும். பொருள் பறிக்கவே சிலர் பற்பல வேடங்களில் நம்மை நாடி வரும் இக்காலத்தில் பிறர்க்கு உதவி செய்வதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியுள்ளது. பிறர் உதவி என்பது கூரிய ஆயுதம் போன்றது. தவறி மாட்டிக் கொண்டால் அதற்கு நாமே பலியாகி விடுவோம்.

- விழிப்பு நிலையோடுதான் நம் அளவுக்குத் தக்கபடிதான், நாம் பிறர்க்கு உதவவேண்டும். நீதிபதி முன் நிறுத்தப்படும் குற்றவாளியே எப்படி அந்நீதிபதி அவன் குற்றமற்றவனாகவும் இருக்கக் கூடும் என்று விசாரணையைத் துவக்குகிறாரோ அதேபோல நம்மிடம் உதவி நாடுபவரை ‘இவன் ஏன் ஏமாற்றுக்காரனாய் இருக்கக் கூடாது’ என்று ஒரு கேள்வி எழுப்பிக் கொண்டு பிறகு நல்லவன்தான் என்று சோதித்து அறிந்த பிறகே, அளவோடு உதவி அளிக்க வேண்டும்.

- பிறர்க்கு உதவி செய்வேன் ஒவ்வொருவருக்கும் என்னால் இயன்றதைச் செய்து கொண்டே இருப்பேன் என்று சொல்லும் போது அது ஊற்று மாதிரியாகவே வற்றாது சுரக்கும்.

- பிறர்க்கு உதவி செய்யும்போது எங்கிருந்து செய்யப் போகிறீர்கள்? இருப்பிலிருந்துதான் கொடுக்கிறோம் இருப்பதைத் தான் செய்கிறோம். அங்கே இல்லையானால் செய்ய முடியாதல்லவா?

ஆகையினால் செய்யச் செய்ய வந்து கொண்டேதான் இருக்கும். நல்ல முறையிலே அது வளர்ந்து கொண்டேதான் இருக்கும்.

- மனிதன் நல்ல எண்ணத்தோடு முயற்சியோடு ஒரு அடி எடுத்து வைத்தால் இறைவன் பத்து அடி எடுத்து வைப்பான் என்று சொல்லப்பட்டள்ளது. இதன்பொருள் என்னவென்றால் நீங்கள் உங்களுடைய மனம் நாடினால் போதும். ஏனென்றால் அங்குதான் இருப்பு இருக்கிறது. நான் யாரிடமும் எதையும் எதிர்பார்க்கமாட்டேன் என்ற நிலைக்கு வந்தோமானால் என்ன ஆகும்? நல்ல எண்ணம், மனத்தூய்மை கொண்ட ஒருவர் ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு எல்லாம் வல்ல இறைவன் என்னை கவனித்துக் கொள்வான் என்றிருந்தால் அவரது தேவையை நிறைவேற்ற உதவிகள் எல்லாத் திசையிலிருந்தும் வந்து சேரும்.

- எந்த உயிருக்கும் அதன் துன்பத்திலிருந்து விடுபட இயன்ற வழியில், அளவில் உதவி செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

## 193. உபநயனம்

- பதினாறு வயதுக்கு மேல் மெய்யுணர்வு தீஷையைப் பெற்று, கடுந்தவம் புரிந்து வரலாம். இந்த வழக்கம் இந்திய நாட்டில் முற்காலத்தில் பரவலாக இருந்திருப்பதாகத் தெரிகிறது. உபநயனம் அதாவது நெற்றிக்கண் திறப்பு என்ற சடங்கு மெய்யுணர்வு தவம் அறிவிக்கும் சடங்கேயாகும். இக்காலத்தில் அச்சடங்கு ஒரு பூணூலைப் போட்டுக் கொள்ளவும் சில மந்திரங் களைப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு சடங்காகி விட்டது.

## 194. உயர்ந்த இலட்சியம்

- எண்ணத்தில் உறுதியும் ஒழுங்கும் இருந்தால் நாம் எண்ணுவது நிச்சயம் நிறைவேறும்.

- நம்முடைய குறிக்கோள் எப்பொழுதும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். அமெரிக்க நாட்டின் சிறந்த ஜனாதிபதியாகத் திகழ்ந்தவர் ஜான் கென்னடி. அவர் நாள்தோறும் பார்வை யாளர்களை சந்திப்பார். ஒரு மாணவனிடம் உன் எதிர்கால லட்சியம் என்ன? என்று கேட்டார். அதற்கு அந்த மாணவச் சிறுவன் இன்று நீங்கள் அமர்ந்திருக்கும் இதே மாளிகையில்

இதே நாற்காலியில் நான் உட்கார வேண்டும். இந்த பதிலைக் கேட்டதும் கென்னடியின் விழிகள் வியப்பால் விரிந்தன. உதடுகளில் பூக்களின் மலர்ச்சி. வாழ்த்துக்கள் என்று கூறினார். காலமும் கடந்தது. அதே சிறுவன் அதே இடத்தில் அதே நாற்காலியில் வந்து அமர்ந்தான். அவர்தான் பில்கிளிண்டன். இது எவ்வாறு நடந்தது? உயர்ந்த இலட்சியம். இலக்கை நோக்கிய பயணம். பயணம் தொடர்ந்தால் சக்தி பிறக்கும். சக்தி பிறந்தால் வெற்றி கிடைக்கும்.

## 195. உயர்வு

* நாம் உயர்ந்தால்தான் மற்றவர்களது உணர்வை மாற்றவும், ரசிக்கவும் முடியும்.
* தேவையுணர்வு தொழில்திறமை இன்ப துன்ப அனுபோக அனுபவங்கள் சிந்தனை அறிவின் தெளிவு இவைகளுக்கேற்ப மனிதர் வாழ்வு அறிவியல், சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம் என்ற ஐந்து துறைகளிலே நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வருகின்றது. முன்னேற்றம் வேகம் கொள்ளுகிறது.

## 196. உயர்கருத்து

* நேர் வழியில் விஞ்ஞானம் ஆக்கத் துறைகட்கே நீடித்துப் பயனாக உலக விரிவாக நில உலகில் பல அரசும் கூடி ஒப்புக் கொள்ள நிலையான உயர்கருத்தைப் பரப்பிடுவோம் வாரீர்.

## 197. உயர்வு தாழ்வு மனப்பான்மை

* பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது வான்புகழ் வள்ளுவனின் கருத்து. அந்நிலையிலே உலகில் பிறந்த அனைத்து உயிர்களும் ஒன்றே. பிறப்பால் அனைவரும் சமமே. செயல்திறன் வேறுபாடு கடமைகளை ஆற்றுவதற்கே உரியன. இந்த நினைவை அழுத்தமாகக் கொண்டால் உயர்வு - தாழ்வு மனப்பான்மை எனும் உள்நோய் நீங்கிவிடும்.

## 198. உயர்புகழ்

☼ உயர் புகழ் என்றால் என்ன? தம்முடைய செயல் எல்லோருக்கும் நல்லபடியாக அமைவது அமையும்போது தன்னால் பயன் பெற்ற மக்களுடைய பாராட்டுத்தான் புகழ். ஆகவே புகழ் என்பது ஏதோ நமக்குத் தனிப்பட்ட சொத்து அல்ல. நான் செய்யக்கூடிய காரியங்கள் எல்லாம் எல்லோருக்கும் நன்மை அளிக்கட்டும் என்பதுதான் புகழில் இருக்கக் கூடியது.

☼ எப்படியும் புகழ் பெறலாம் இருக்கலாம் எப்படி வேண்டு மானாலும் பெறலாம் என்பது அல்ல. நல்ல உயர்புகழ் உலகத்துக்கு நன்மையான காரியங்களையே செய்து அதனாலே மக்கள் மனம் ஒரு நிறைவு பெற்று, அவர்கள் வாழ்க்கையிலே துன்பங்கள் நீங்கி, இன்பம் மலரக் காணும் பொழுது, அந்த மக்களால் அளிக்கக்கூடிய ஒரு வாழ்த்து ஒரு மன நிறைவுதான் புகழ்.

☼ புகழ் என்பது தான் விரும்பிப் பெறுவதோ நானே ஏதேனும் ஒன்றைச் செய்து அதன் மூலமாக மக்கள் காட்டும் மனநிலை தான் புகழாக இருக்கும். அதுவே உயர் புகழாகவும் இருக்கும்.

☼ நல்ல முறையில் ஆற்று கடமையின் மூலமாக எத்தனையோ பேருடைய வாழ்க்கை செழிப்புறும். அவர்களுடைய உள்ளங்கள் மலரும். நிறைவு பெறும். அதுவே அந்த வாழ்க்கை அந்த நினைவேதான் ஒரு மனிதனுக்குப் புகழ் என்று கூறப்படுகிறது. அத்தகைய புகழ்தான் உயர்புகழ் ஆகும்.

## 199. உயிர்

* உயிர்கள் எல்லாம் தெய்வமன்றி பிறவொன்றில்லை. ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம் பயிலுமுயிர் வகை மட்டுமன்றியிங்கு பார்க்கின்ற பொருளெல்லாந் தெய்வம் கண்டீர்.

* உயிர் என்ற ஆற்றலுக்கு மரணமில்லை. உணர்வில் விளைவில் இடத்தால் நிலைவேறாகும்.

* ஆதிநிலை வெட்டவெளி அதுதான் மெய்ப்பொருள். அசையும் நிலை அணுகாந்தம் அதை உயிர் என்று உரைக்கின்றோம்.

* உயிர் என்பது பிரபஞ்சத் தோற்றங்கள் அனைத்திற்கும் அடிப்படையான இயக்க மூலக்கூறு ஆகும்.

* இந்த உடலிலே திடப் பொருள், நீர்ப் பொருள், வெப்பம், காற்று, உயிர் என்று இவற்றை எடுத்துக்கொண்டு பார்த்தோமானால் அந்த உயிரானது மிகமிக நுண்ணிய பரமாணுக்கள்.

* கோடி கோடி பரமாணுக்கள் அந்த விண் துகள்கள் கூட்டாக இயங்கிக் கொண்டிருப்பதுதான் உயிர்.

* உடல் சிறந்ததா? உயிர் சிறந்ததா? உயிர்தான் சிறந்தது. அது எத்தனையோ காலமாக இருக்கிறது. இன்று இந்த உடல் இருக்கிறதே. அதில் உயிர் இருப்பதால்தான் இன்று அந்த உடலுக்கு மதிப்பு வந்த காரணமே அத்தகு உயிரின் தன்மை என்ன? அதனுடைய மூலம் என்ன? பரம்பொருளே அதன் எழுச்சி நிலையே உயிராக இருக்கிறது.

* இறைநிலைக்கு - சுத்தவெளியே அதனுடைய உடல் என்று நீங்கள் கொண்டால் - அந்த சுத்தவெளியின் அதிர்வுதான் உயிர்.

* இந்த உடலில் உயிர் இருந்தாலும் அதற்கு அதன் பரம்பொருள் தன்மையின் தொடர்பு அறியப்படாமலேயே இருக்கிறது. இந்த அறிவை முதலில் பெற வேண்டும். அப்போதுதான் மனம் விரியும். தன்முனைப்புத் திரை விலகத் தொடங்கும்.

* உலகில் பிறந்து வாழ்ந்த எந்த உயிரும் எக்காலத்தும் அறிவுறுவதில்லை. வினைப்பயனாக ஏற்படும் பழிச்சுமைப் பதிவுகள் வாழ்வில் கண்ட விளக்கம் அல்லது உலக இன்பம் துய்க்கும் வேட்பு இவற்றிற்கு ஏற்ப இயங்குவதில் இடமாற்றம் பெறுகின்றன. வாழும் உயிர்களுக்கு நலமோ கேடோ தருவனவாக அமைகின்றன.

* ஆழ்ந்து மனித சமுதாயத்தில் வாழ்க்கை நிலையை, அறிவு நிலையைச் சிந்தித்தோமானால் ஒவ்வொரு மனிதனுடைய உயிரும் இன்று வாழும் மக்களுடைய உயிரில் மலர்ந்து வீசிக் கொண்டிருக்கும் நினைவலைகளோடும், இதுவரையில் வாழ்ந்து இறந்து போன உயிர்களில் அடங்கியுள்ள ஆற்றலோடும் தொடர்பு கொண்டுதான் இயங்குகிறது என்ற உண்மை தெளிவாகும்.

* ஒரு உயர்ந்த குறிக்கோளோடு மனித உயிர்கள் இவ்வுலகுக்கு வந்துள்ளன. மன உணர்வை விரிந்த அளவில் வளர்த்துக்

கொள்ளவும் அறிவில் முழுமை பெற்ற இயற்கையை உணர்ந்து ரசித்து அதனோடு ஒன்றி வாழ்ந்து நிறைவு பெறும் நிலையான அமைதியைப் பெறவும் உள்நோக்கமாக அமைந்துள்ளதே மனித உயிர்.

* உடலுக்குள்ள இயங்கும் உயிர். அதன் மதிப்பு இயக்கச் சீர்மை விளைவுகள், இவ்வுயிரை ஒழுங்காக இயங்கச் செய்ய நாம் தெரிந்து கொள்ள வேண்டிய நெறிமுதலியவற்றை எல்லாரும் உணர வழி செய்ய வேண்டும்.

* உயிரைப் பற்றிய ஆராய்ச்சியின் முடிவு தன்னிலை விளக்கத்தில் முடியும். இந்த இடமே எல்லா ஆராய்ச்சிகளின் முடிவு.

* அருள்துறைக்கு உயிர் என்ற சொல்லை மையமாக வைத்து ஆன்மீகம் என பெயர் வைத்திருக்கிறார்கள்.

* பரிணாமச் சிறப்புகளில் உயிர் வகைதான் உச்சக் கட்டம். எல்லா உயிர் வகைகளையும் விட மனிதன் என்ற அமைப்பு மிகவும் உணருதற்கரிய ரகசியமான தன்மை உடையது.

* இந்த உடலில் உயிர் இருந்தாலும் அதற்கு அதன் பரம்பொருள் தன்மையின் தொடர்பு அறியப்படாமலேயே இருக்கிறது. இந்த அறிவை முதலில் பெற வேண்டும். அப்போதுதான் மனம் விரியும். தன்முனைப்பு திரை விலகத் தொடங்கும்.

* பஞ்சபூதங்கள் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் பொருந்தி இருக்க அதில் மீண்டும் ஆகாசமாகிய முதல் பூதமே மேலும் ஒரு மடிப்பியக்கம் பெறுகின்றபோது அங்கே விளைவாகச் சீவன் (உயிர்) தோன்றியது.

* உணர்ச்சி நிலையுடைய உருவங்களுக்குள் இந்த விண் துகள் தான் உயிர் எனப்படுகிறது.

## 200. உயிர்நிலை:

✣ விண் என்ற சுழல் விரைவு ஆற்றலே உயிர் நிலையாகும்.

## 201. உயிராற்றல்

❖ உயிராற்றல் மிகுதியாகச் செலவாகாமல் காத்துவர வேண்டியது அவசியம். ஐம்புலன்கள் மூலமாக உயிராற்றல் மிகுதியாகச் செலவானால் ஐம்புலன் கருவிகள் கெடும். உயிராற்றலின்

அளவும் அழுத்தமும் உடலில் குறைந்து உடல்நலம் மனநலம் இரண்டும் குழப்பமடையும். இதன் அவசியத்தையே திருவள்ளுவர் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்றைந்தின் வகை தெரிவான் கட்டேயுலகு என்ற அருளியதையும் நினைவு கூற வேண்டும்.

## 202. உயிர் உணர்வு

- ✯ உயிரைப் பற்றிய உணர்வு மறைந்துள்ள நிலையை பொருளுணர்வு என்கிறாம்.
- ✯ உயிரைப் பற்றிய தெளிவான அறிவும் அந்த விளக்கத்தை மறவாத நிலையும் உயிருணர்வு அல்லது மெய்ப் பொருள் உணர்வு எனப்படும்.
- ✯ உயிருணர்வோடு செய்யப்படும் எச்செயலும் சிறக்கும். விளைவும் சிறக்கும். உயிருணர்வு பெறுவதற்காகவே எடுத்தது இந்தப் பிறவி. அவ்வுயிருணர்வின்படி மறவாது வாழ வேண்டும். அதுவே ஆன்மீக வாழ்வு, ஒவ்வொருவரும் இப்படி வாழ்வோமாயின் உலகத்திலே அமைதி நிலவும்.
- ✯ உண்மையில் இயற்கையில் ஒரு கோளாறும் இல்லை. பொருளுணர்வோடு மனிதர்கள் செயல்படுவதாலேயே வறுமையும் துன்பமும் தோன்றின. நிலவுகின்றன வளர்கின்றன. இன்று உலகத்தில் இல்லாதது ஒன்றே ஒன்று தான். மனிதனை மனிதன் மதித்து புரிந்து கொண்டு ஒத்து உதவி வாழும் உணர்வைத் தரும் உயிர் உணர்வு இல்லை.
- ✯ உயிர் உணர்வு இல்லாததாலேயே குழப்பங்கள் பஞ்சம் இன்று மேலிட்டிருக்கின்றன. உலகத்தில் பாதுகாப்புக்காக உற்பத்தி செய்யப்படும் தளவாடங்களை நிறுத்தி ஆக்கப்பூர்வமான உற்பத்தியாக மாற்றினால் வாழ்க்கைத் தேவைப் பொருட்கள் இரண்டு பங்காக உயரும்.

## 203. உயிரறிவு:

- ✠ காலவெள்ளம் நம்மை அடித்துச் செல்கிறது. நாமும் இந்த வெள்ளத்தின் மத்தியில்தான் வாழ்கிறோம். வாழும் காலத்தில் செய்யும் எந்தச் செயலும் உயிரறிவு பெற்றாலன்றிச் சிறக்காது. விஞ்ஞானத்தின் மூலம் ஏற்பட்டுள்ள வளர்ச்சி வெற்றி பெற வேண்டுமானால் ஆன்மீகம் தழைக்க வேண்டும்.

## 204. உயிர்காந்தம்:

✡ உயிர்க்காந்தம் உடலின் மின் குறுக்கு ஆனால் உடலில் வலி நோய்கள் இவையாக மாறும்.

✡ உயிர்க் காந்தம் மின்குறுக்கால் வற்றிப்போனால் உயிர் தாங்கும் விந்துடையும் உயிரும் போகும்.

✡ உயிர்க்காந்தம் உடலில் அணு அடுக்கைக் காக்கும் உடலியக்கம் மனஇயக்கம் நடத்தி வைக்கும்.

## 205. உலகம்:

✢ நாம் ஒரு மரத்தைப் பார்க்கிறோம். மரம் என்பது என்ன? இறைநிலையே அணுவாகி அனுக்கள் இணைந்து பஞ்சபூதங் களாகி அண்டங்களாகி அவற்றில் ஒன்றுதான் உலகம்.

## 206. உலகக் குடும்பம்:

✣ நாம் எல்லோரும் உலகம் என்ற மண்மீது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமக்கிருப்பது ஒரு சூரியன்தான். நமக்கு ஏற்படும் நீர்த் தேவைகளை முடிப்பதற்கு இருப்பது ஒரே கடல்தான். நாம் எல்லோரும் மூச்சு விடுவதற்கு உள்ள காற்றும் ஒன்றுதான். இவற்றில் ஒன்றைக்கூட நம்மில் எவருமே உற்பத்தி செய்தது இல்லை. நமது முன்னோர்களும் செய்ததில்லை.

✣ எல்லாம் வல்லதாகிய இறைநிலை என்னும் இயற்கையானது தனது பூரணம், பேராற்றல், பேரறிவு என்ற மூலதனத்தைக் கொண்டும் அதன் பரிணாமம், இயல்பூக்கம், கூர்தலறம் என்ற இயக்க நியதிகளைக் கொண்டும் வான்மண்டலத்தையும் உலகையும் உருவாக்கி, இந்த அழகிய வளம் நிறைந்த உலகின் மீது நம்மையும் உருவாக்கி வாழ வைத்திருக்கிறது.

✣ நமக்கு அன்னையாகவும் தந்தையாகவும் உள்ள அருட் பேராற்ற லான இயற்கை நாம் அனைவரும் நலமாகவும் மகிழ்ச்சி யாகவும் வாழ எல்லா வளங்களையும் நிறைவாக அமைத்துக் கொடுத்திருக்கிறது.

✣ நமது சிந்தனையை உயர்த்தி இவற்றை எல்லாம் நாம் உணரும் போது நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உடன் பிறந்தவர்கள் என்பது சந்தேகமில்லாமல் தெரிகின்றது அல்லவா?

## 207. உலக அமைதி தோன்றிய விதம்:

✦ என்னுடைய ஏழாவது வயதிலே எனது தந்தையார் ஒரு பாட்டுச் சொல்லிக் கொடுத்தார். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. இருந்தாலும் பிறர் படித்துச் சொல்ல அதை வரைப் படுத்திக் கொள்வார். அந்தப் பாடல் பார்த்தசாரதி மாலை என்ற ஒரு சிறிய நூலில் சேர்க்கப்பட்டிருந்தது. ஒருவனே தெய்வம் அல்லால் வேறெதும் இல்லை. உயிர் எல்லாம் ஒன்றாமே உற்றுப் பார்த்தால் - கதிரவனால் உலகம் எல்லாம் பிழைத்து நிற்கும். உருவான நட்சத்திரங்கள் இருபத்தேழில் - உள்ளபடி நடக்கும் வேறெதுவும் இல்லை - பரிமளமே திருவல்லிக்கேணி யிடை வாழும் பார்த்தசாரதியே - என்பதுதான் அந்தப் பாடல்.

## 208. உலக சமாதானம்:

✧ உலக சமாதானம் தோன்ற அரசியல் தலைவர்களும் விஞ்ஞானி களும் ஆசிரியர்களும் ஆன்மீகத் தேர்ச்சி பெறல் வேண்டும்.

## 209. உலக சரித்திரம்:

★ 1. பொருள்துறைத் தலைவர்கள். 2. மதத்துறைத் தலைவர்கள். 3. அரசியல் துறைத்தலைவர்கள். இந்த மூன்று துறைத் தலைவர்களும் உலகத்திற்குச் செய்ததில் நன்மைகளும் தீமைகளும் உண்டு. ஆனால் அவர்களில் **முட்டாள்களாக இருந்தவர்கள் செய்த தீமைகளின் தொகுப்புத்தான் இந்த உலகச் சரித்திரம்.** உலக வரலாற்றில் தனி மனிதன் எப்படி உயருகின்றான் என்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதா? இல்லை. இந்த மூன்று பிரிவுத் தலைவர்களும் உலகத்திற்குச் செய்த அநியாயங்கள்தான் உலக வரலாறு.

## 210. உலகம் உய்ய:

☆ குழந்தைகளைக் கொண்டு உலகைச் சீர்திருத்தக் கொடுமை யின்றிக் கருத்து - செயல் இரண்டும் வாழ்வில் இணைந்துயரும்: படிப்படியாய் உலகம் உய்யும்.

## 211. உலகப் பொது ஆட்சி:

✪ எங்கள் நாடென்றெவரும் பிரித்துச் சொல்ல இடமில்லா உலகப் பொது ஆட்சி காண்போம்!

## 212. உலகப் பேரரசு:

☆ வறுமை எனும் கொடுந்துன்பம் வராது வளவாழ்வு பெறுவதற்கு ஓர் உலகப் பேரரசு வரவேண்டும்.

## 213. உலக சகோதரத்துவம்:

★ மனித மனம் உடல் அளவில் எல்லைகட்டும் பொழுது பொருள் - புகழ் - அதிகாரம் - புலன் இன்பத்தில் சிக்கி உயர்வு தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கும். மனம் உயிரில் தோய்ந்தது எல்லாவற்றுக்கும் மூலமான இறைவெளியில் விரிந்து நிற்கும்போது அதுவே எல்லாத் தோற்றங்களாகவும் உயிர்களாகவும் மலர்ந்திருப்பதை உணர முடியும். அந்த உணர்வே உண்மையான உலக சகோதரத்துவத்தை உண்டாக்கும்.

☆ உலக சகோதரத்துவம் என்பது ஒரு பேச்சளவில் இருக்கிற கொள்கையாக இருக்கக் கூடாது. அது மெய்ஞ்ஞானிகளாலும் விஞ்ஞானிகளாலும் சிந்தனையாளர்களாலும் வரையறுத்துச் சொல்லப்பட்ட உண்மை உணர்வாக இருக்க வேண்டும். உலகில் வாழும் ஒவ்வொரு மனிதருடைய அனுபவ அறிவாக அறிவாட்சித்தரம் அமைய வேண்டும்.

## 214. உலக சமாதானத் திட்டம்:

☆ உலக சமாதான சங்கம் ஒன்றை நிறுவி அதன் கிளைகளைப் பரவச் செய்து - உலகப் பொதுநோக்குள்ள அறிஞர்களை அரசியல் மன்றங்களுக்குத் தேர்ந்தெடுத்து - எல்லா தேசங்களுக்கும் உலகப் பொது ஆட்சி நிறுவுதல்.

☆ மனிதர்களிடையே காணப்படும் அனைத்துத் துன்பங்களைப் போக்கவும் - எதிர்காலச் சமுதாயம் குற்றமற்றதாக உருவாகவும் ஒரே வழி உலகில் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளும் பொதுச் செல்வமாக்கப்பட வேண்டும்.

☆ பொருளாதாரத் துறையில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்தல்.

☆ உலகில் பரந்துள்ள அனைவரும் தினமும் நான்கு மணி நேர உழைப்பைக் கொடுத்து - வாழ்க்கைத் தேவைகளைப் பெற்று - ஐம்பது வயதிற்குள் உலகைச் சுற்றி வந்து - இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளித்து மகிழ்ச்சியுடன் வாழ வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

## 215. உலக சமுதாய சேவா சங்கம்:

✯ ஒவ்வொரு உறுப்பினரும் ஏதோ ஒரு வகையில் சங்க நலத்திற்கு உதவியவர்களே. சிறிய உதவியானாலும் மறந்து விடக் கூடாது. அவர் நற்செயல்களைப் பாராட்டி குறைகளைந்து அவர் மனம் நிறைவு பெற இயன்றதைச் செய்ய வேண்டும். தன்முனைப்புக்கு இடமில்லாத இடம் ஆன்மீகத் துறையும் பொது நலத் தொண்டுமேயாகும். இந்த இரண்டும் இணைந்த இயக்கமே நமது உலக சமுதாய சேவா சங்கம்.

✯ ஒரு இயக்கம் வளர்ச்சி பெற்று விரிவடையும்போது சில சிரமங்களைத் தாங்க வேண்டி இருக்கும். அதில் இணைந்து பணியாற்றும் பயன்பெறும் அன்பர்கள் கருத்தில் ஒவ்வொரு அளவில் உயர்ந்தவர்களாக இருப்பார்கள். காலத்திற்கு ஏற்ப இயக்கத்தில் சில திருத்தங்களும் மாற்றங்களும் வரும்போது மனம் விரிந்து அம்மாற்றங்களை ஏற்றுக் கொள்ள முடியாமல் சிலர் தவிக்க நேரும். இயக்க நிர்வாகப் பொறுப்பிலுள்ளவர்கள் விரிந்தும் இணைந்தும் கொடுத்து கருத்து வேறுபாடுகளைக் களைந்து குறிக்கோளை நோக்கி முன் செல்ல வேண்டும். **குறை கண்டு சொல்பவர்களிடம் வெறுப்புக் கொள்ளாது குறை களைந்து நிறைவு காண முயற்சிக்க வேண்டும்.**

✯ உலக சமுதாய சேவா சங்கம் தொடங்கி 24 ஆண்டுகள் சென்று விட்டன. நமது இடையறா உழைப்பின் பலனை இனிதான் காண நல்ல வாய்ப்புகள் உள்ளன. நமது குண்டலினியோக முறை மனிதகுல வாழ்வின் மேலான பண்பாட்டுத் திட்ட மாகும். இது உலகப் பொதுப் பண்பாடாக எல்லா மதங் களையும் ஒன்றிணைத்துக் கொண்டு வளர்ச்சி பெறும் அகில உலக வாழ்க்கைப் பண்பாடாகப் பரவும் வாய்ப்புத் தெரிகிறது. முயற்சியோடு நாம் இப்போது உழைக்க வேண்டும்.

✯ உலக சமுதாய சேவா சங்கம் விரைவில் கல்லூரியாக - ஆன்மீகச் கல்விச் சாலையாக மலரும்.

✯ நமது சங்கம் முழுக்க முழுக்க அருட்தொண்டு நிலையம். இங்கு அதிகாரத்திற்கோ - பொருள் கவர்ச்சிக்கோ இடமே இல்லை. எல்லோரும் சமுதாய நலம் நோக்கியே தொண்டு புரிந்து வருகிறோம். ஒருவரை ஒருவர் மதித்தும் பாராட்டியும் சங்கம் வளர உழைக்க வேண்டியது நமது எல்லோருடைய கடமையாகும்.

✯ இன்றைய உலக சமுதாய சூழ்நிலையில் விரிந்த கண்ணோட்டத்திற்கு மக்களுக்குத் தொண்டு முறையில் ஆன்மீக அறிவை ஊக்குவிக்கவும் அதனைத் தடுத்துக் கொண்டிருக்கும் கற்பனை புகையையும் துன்பங்கள் சிக்கல்கள் இவற்றை குறைப்பதற்காகவும் திட்டமிட்டுத் தொடங்கப் பெற்ற நிறுவனமே உலக சமுதாய சேவா சங்கமும் அதன் செயல்விளைவாகிய மனவளக் கலையுமாகும்.

✯ வேண்டுவோர்க்கும் தகுதியுடையோருக்கும் இல்லறத்திலேயே ராஜயோகம் பயின்று ஞானயோகம் என்னும் முழுமைப் பேறு அடைய உதவி செய்கின்ற கடமையே உலக சமுதாய சேவா சங்கத்தின் பெரு நோக்கமாகும்.

## 216. உலகயுத்தம்:

✱ உரிமையுடன் பலர்கூடி பொருள் சேமித்து ஒற்றுமையாய்ப் பகிர்ந்துண்டு வாழ்ந்திருந்தால் உலகயுத்தம் எதுவுமே நடந்திராது.

## 217. உலகை அழிக்கலாமா?

✲ இந்த உலகத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் எத்தனையோ பேர் வாழ்ந்து விட்டுப் போய் விட்டார்கள். இனி வருங்காலத்தில் எத்தனையோ கோடி மக்கள் வரப் போகிறார்கள். நாம் வாழ்ந்து விட்டோம். இனிவரும் அவர்களுக்கு நல்ல உலகத்தை விட்டு வைக்கலாம் அல்லவா? இதையும் அழித்து விட்டுப் போய்விட்டால்?

## 218. உரிமை:

✳ ‘குழந்தைப் பேறுக்கு உரிய ஆண் - பெண் இருவருமே சம உரிமை - அறிவிலே திறமை - நுட்பம் இவை நிறைந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும். ஆண்களுக்கு மாத்திரம்

கல்வி வசதி - செல்வ வசதி இன்னும் அதிகார வசதி எல்லாமே வைத்துக் கொண்டு அவை மறுக்கப்பட்டால் என்ன ஆகும்?

✳ ஒரு தொழிலைச் செய்து பொருள் ஈட்டிக் காத்து உண்டுடுத்தும் கடமை செய்யும் உரிமை வேண்டும்.

✳ உரிமைத் தத்துவம் பிறந்த அந்த நாளில் - ஒருவர் தன் முயற்சியினால் பெரும் பொருள்கள் உரிமையாம் அங்குள்ள மனிதர்க்கென்றும் உடல் உழைப்பு கட்டாயமென்றும் செய்து - உரிமையுடன் பலர் கூடி பொருள் சேமித்து ஒற்றுமையாய்ப் பகிர்ந்துண்டு வாழ்ந்திருந்தால் உரிமை என்ற உணர்வு ஒழுக்கம் சிதறிக் கண்ட உலக யுத்தம் எதுவுமே நடந்திராது.

## 219. உரிமைத் தத்துவம்:

✳ உரிமைத் தத்துவம் பிறந்த அந்தநாளில் - அதற்குப் பதிலாக - எல்லோரும் கூட்டமாகப் பொருள் சேமிக்க வேண்டும் - கட்டாயம் உழைக்க வேண்டும். எல்லாப் பொருள்களையும் பொதுவாகச் சேமித்து நிரவி அனுபவிக்க வேண்டும் என்ற கூட்டுறவுத் தத்துவம் வேரூன்றி இருந்தால் - 'உரிமை' என்ற உயர்ந்த ஒழுக்கம் - நல்ல திட்டம் - தவறாக மதிக்கப்பட்டு - சீரழிந்து அதன் விளைவாக உலகத்தில் இதுவரையில் நடந்த யுத்தங்கள் தோன்றி இரா.

## 220. உருவ வழிபாடு:

✳ யூகத்தால் சிவ நிலையை உணர முடியாதோர்க்கு உருவ வழிபாட்டு முறை அறிந்தோர் கற்பித்தோர்.

✳ வாழ்வில் வெற்றி பெற ஏழு வகையான சம்பத்துக்களையும் பெற உருவ வழிபாடு வேண்டியதுதான்.

✳ உருவ வழிபாடு என்பது அறிவின் ஆழ்ந்த ஆராய்ச்சியினால் சிந்தனைத் தெளிவில் வகுக்கப்பட்ட செயல் முறையேயாகும். உளவியல் தத்துவத்தின்படி ஆழ்ந்த ஆராய்ச்சியின் மூலமாக வாழ்க்கையில் அமைந்த அனுபவங்களின் மூலமாக உணரப் பெற்றவையே அவை. உருவ வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட பக்தி நிலையின் உண்மை விளக்கம் இதுவேயாகும்.

## 221. உவமை

✶ இந்தக் காலத்தில் உவமையினாலே மறைபொருட்களைச் சிந்தனையால் விளக்க முடியும். முன்காலத்தில் இது முடியாமலிருந்தது. ஏன் என்றால் அந்தக் காலத்திலே விஞ்ஞான சாதனங்கள் அவ்வளவு அதிகமாக இல்லை. இந்தக் காலத்திலே விஞ்ஞான சாதனங்கள் உவமைக்கு உதவுகின்றன.

## 222. உழைப்பு:

- உழைப்பின் உயர்வை உணரவைக்க வேண்டும்.
- உணவையும் வாழ்க்கை வளங்களையும் உருவாக்குவதற்கே உழைப்பு என்ற நோக்கம் குறைந்து விட்டது.
- உழைப்பு சுரண்டப்படும் பொருளாக மாறிவிட்டது.
- விலங்கின வித்தின் மூலம் பறித்துண்ணுகிற பண்பாடு மனித குலத்தில் தொடர்ந்து வருகிறது. முதலில் இந்த பறித்துண்ணு கின்ற பண்பாட்டிலிருந்து மனிதன் உழைத்துண்ணுகின்ற உயர்பண்புக்கு மாற வேண்டும்.

## 223. உளப்பயிற்சி:

✷ விருப்பம் சினம் வஞ்சம் மதம் பால்கவர்ச்சி விளைவறியாக் கடும் பற்று என்ற ஆறும் உருக்குலைந்து நிறைந்தமனம், சகிப்புத் தன்மை, உளமார்ந்த மன்னிப்பு - மெய்யுணர்வு கருத்துடைய கற்புநெறி ஈகையென்ற, களங்கமிலா நற்குணங் களாக மாற்றும் பொருத்தமுள உளப்பயிற்சி முறை பயின்று புகழ் - இன்பம் அமைதிபெற வாரீர்! வாரீர்!

## 224. உள்ளது உள்ளபடியே:

✤ தமக்கு வேண்டிய நபர் பற்றியும் - பிடித்த பொருள் பற்றியும் பேசும்பொழுது உண்மைக்கு மேலும் உணர்வூட்டிப் பேசுவதும் - தான் விரும்பாத ஒன்றைப் பற்றியும் வேண்டாத நபர் பற்றியும் பேசும் பொழுது உண்மையைத் தாழ்த்திப் பேசுவதும் தன்னுள் இயங்கும் இறைநிலைக்குத் தீங்கு செய்வதாகும்.

## 225. உள்ளம்:

- உடலுக்கு மூலசக்தி உள்ளமாகும்.

- நாம் உடலால் வேறுபட்டு இருக்கின்ற போதிலும் உள்ளம் என்ற நிலையால் நமக்கும் தெரியாமலே உலக மக்கள் அனைவரோடும் ஒன்றுபட்டே இருக்கின்றோம்.

## 226. உள்ளுணர்வு:

- வளர்ச்சி பெற்று விழிப்பும் சிந்தனையும் கூடும்போது அறிவு பெறும் உயர் திறனே உள்ளுணர்வு ஆகும்.

- மெய்யறிவை அறிய வேண்டுமென்றால் மன அலைச்சலைச் சுருக்கி கூர்மை, ஆழ்ந்து சிந்தித்தல், அகன்று நோக்குதல், நீண்ட கால பரிணாமத்தோடு தொடர்பு கொண்டு அறிதல், என்ற நிலைக்கு மனதைப் பழக்க வேண்டும். அதனால் ஒவ்வொருவருக்குள்ளும் உள்ளுணர்வு மிளிரும்.

## 227. உள்ளத்தை உணர்தல் – நல்லதைச் செய்தல் – அல்லதை விடுதல்

- உண்மைப் பொருளான மெய்ப்பொருள் நிலையை ஒவ்வொருவரும் வாழ்வில் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். மனித வாழ்க்கையே இறைநிலையை நோக்கிய பயணமாகும். அதற்கு தன்னை உணர்ந்து தனக்குள் அவனே தான் உண்மைப் பொருளாக உள்ளான் என்பதை உணர்ந்து அந்தத் தெளிவில் வாழ்வின் நோக்கத்திற்கு முரண்படாமல் வாழ வேண்டும். இதுவே உள்ளதை உணர்தல்.

- உண்மையை உணர்ந்த தெளிவில் எவ்வுயிர்களுக்கும் துன்பம் விளைவிக்காமல் தன்னால் இயன்ற நன்மைகளைத் தொடர்ந்து செய்து கொண்டு வரவேண்டும். உள்ளதை உணர்ந்து கொண்டு நல்லதைச் செய்வதற்காகவே மனிதன் ஆறாவது அறிவைப் பெற்று வந்துள்ளான்.

- வாழ்வின் நோக்கத்திற்கு உதவாத அறுகுணங்களையும் விட்டு மனிதன் குணநலப்பேறு பெற வேண்டும். இடைவிடாத

தற்சோதனையின் மூலம் தேவையற்ற குணங்களைவிட்டு மனிதன் மனிதனாக வாழ வேண்டும். இதுவே அல்லதை விடுதல்.

## 228. உரிமை:

❖ பிறந்தது முதல் இறக்கும் வரைக்கும் வாழ்க்கைக்கு அவசியமான வசதிகள் அனைத்தையும் காலா காலத்தில் பெற்று அனுபவிக்க எல்லோருக்கும் உற்ற சுதந்திரமே உரிமை எனப்படுகின்றது.

## 229. உறக்கம்:

✷ இப்பொழுது ஒரு பத்து விதைகளைப் போட்டு இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். ஒரே மண் ஒரே தண்ணீர். ஆனால் அந்தப் பத்து விதைகளும் விதைகளிலே இருக்கக்கூடிய தன்மைக்குத் தக்கவாறு இந்தத் தண்ணீரையும் இந்த மண்ணிலேயிருந்து அவை எடுக்க வேண்டிய அணுக்களையும் எடுத்துக் கொண்டு, வேப்பம் விதையென்றால் வேப்பஞ் செடியேதான் முளைக்கும், கரும்பு என்றால் கரும்புதான் வரும். மாங்காய் என்றால் மாங்காய்தான் வரும். அது போலவே நமது உடலும் உயிர்ச்சக்தியை ஈர்த்துக் கொண்டு சேமிக்கவும் செலவிடவும் செய்கிறது. வரவு செலவு இரண்டுக்கும் மத்தியிலே இருப்பது ஒன்று எப்போதும் இருக்கும். அந்த இருப்பு மிகவும் குறைவாகப் போய்விட்டால் சோர்வு வரும். நோய் கூட வரும். நாள் முழுவதும் நாம் ஏதாவது பணி செய்து கொண்டிருப்பதால் மாலை நேரமானால் அந்த இருப்பு குறைந்திருக்கும். பொதுவாக அந்த இருப்பை அதிகரிக்கச் செய்வதற்குத்தான் உறக்கம் வருகிறது.

✷ உறங்கும்போது என்ன நிலைமையென்றால் மன இயக்கம் இல்லை. உடலியக்கம் மாத்திரம் நடக்கிறது. இரண்டிலே ஒரு இயக்கம் தவிர்க்கப்படுவதால் உயிர்ச்சக்தி சேமிக்கப் படுகிறது. காலையிலே அந்தச் சேமிப்பு சரியான இடத்துக்கு வருகிறபோது அதனுடைய திணிவு அதாவது அழுத்தம் போதிய அளவு வந்து விட்டதனால் நரம்பு மண்டலத்திற்கு இயல்பான தொடர்பு மீண்டும் வந்து விடுகிறது. நாம் கண்விழித்து எழுகிறோம்.

## 230. உறவு:

✢ உண்மை உணராத மயக்கத்தில் கொள்ளும் கருத்தே பற்று - உறவு.

✢ கணவன் மனைவி உறவில் அன்பும் ஒற்றுமையும் திகழ உங்கள் முயற்சியெல்லாம் முழுமையாகப் பயனாகட்டும்.

✢ பகிர்ந்து கொள்ளக்கூடிய உறவு எஜமானனிடம் ஏற்பட்ட பிறகு ஆரம்பத்தில் உணர்வு மட்டும் இருந்த அந்தப் பணியாளரிடம் என்ன ஏற்படும் என்றால் அவனுக்கும் அதே உறவு ஏற்படும்.

✢ உறவு என்பது உறைந்து போவது, தோய்வு என்றும் சொல்லலாம் அதனை. அந்தத் தோய்வானது இரண்டற இருக்க வேண்டும்.

✢ நமது உயிருக்கும் உடலுக்கும் ஒத்த உறவு இனிமையான உறவு இருக்கும் வரையில்தான் உடல் நலம் மன நலம் பாதுகாக்கப்பெறும். இந்த உறவானது நீடித்திருப்பதற்கு ரத்த ஓட்டம் வெப்ப ஓட்டம் காற்று ஓட்டம் இவை மூன்றும் சரியாக இருக்க வேண்டும. அளவிலே முறையிலே இவை சரியாக இருந்தால்தான் உயிருக்கும் உடலுக்கும் ஒரு தொடரியக்கம் நட்பு உறவு சீராக இருக்கும்.

✢ எந்தக் காரணத்தினாலே ரத்த ஓட்டம் வெப்ப ஓட்டம் காற்று ஓட்டம் இந்த மூன்றிலே ஒன்று தடுக்கப்பட்டாலும் திசை மாறினாலும் வெளியேறினாலும் அளவிலே குறைந்தாலும் ஓட்டத்திலே குழப்பம் அடைந்தாலும் அந்த இடத்தில் அணு அடுக்குச் சீர்குலைவு ஏற்படும்.

## 231. உணர்வு:

◊ உணர்வு என்பதை அறிவு என்றும் மனம் என்றும் இடத்திற்கு ஒப்பக் கூறுகிறோம். உணர்வு எனும் இயக்கம் உணர்ச்சி, கணிப்பு, நினைப்பு, தெளிவு, என்கின்ற நான்கும் செயல்களாக இயங்கி வருகிறது.

◊ மெய்ப்பொருளே உணர்வாக இயங்கினாலும் உணர்ச்சி என்கிற இயக்கம் புலன்களைக் கொண்டு தொடங்குகிறதால் அது ஆற்றல் களமாகிய பேரியக்க மண்டலத்தில் ஒரு எல்லைக்குட்பட்டு இயங்குகிறது.

## 232. உணர்தல்:

✳ ஐந்து புலன்கள் மூலம் அறிகின்ற விஷயங்களுக்கு மேலாக மறைபொருட்களாக உள்ள இறைநிலை, விண்துகள் காந்தம் ஜீவகாந்தம், கருமையம், புலனியக்கம் இவற்றையெல்லாம் தான் இறைநிலை முதல் பேரியக்க மண்டல ரகசியங்கள் வரை எல்லாவற்றையும் உணர முடியும்.

## 233. உணவு:

♀ காலையிலே புஞ்சை தானியத்தாலான கஞ்சியொன்று தேங்காயோடெங்கும் ஒக்கும். வேலை முடிந்திட்ட பின்னர் கல் சப்பாடு விதவிதமாய்க் கறிவகையோடரிசிச் சாதம். மாலையிலே காய்கறிகள் கோதுமையின் மாக்கொண்டு தயாரிக்கும் உணவு போதும். பாலைத் தனியாகக் காய்ச்சி இனிப்பும் கூட்டிப் பருகிடலாம்: டீ காப்பி தேவையில்லை.

♀ உணவின் அளவு முறைமாறிட மீறிட உணவாகவே உடல் மாறியும் போமன்றோ!

♀ எந்த உணவைச் சாப்பிட்டாலும் சுத்தமாகவும் - நல்ல சத்துடைய தாகவும் இருப்பதுடன் பசித்த அளவாய் உண்ணலே சிறப்பாகும்.

♀ உணவிலே உலக ஒற்றுமை கண்டிடு. உழைப்பினால் பதில் உலகுக்குத் தந்திடு.

♀ உண்ணுங்கால் எண்ணு: உண்ணும் உணவு உனக்குக் கிடைத்த வகை எண்ணி யுண்ணிடல் என்றும் உன் கடன்.

♀ உடல் நலத்தை விரும்புவோர் எதை உண்ணுதல் எவ்வளவு உண்ணுதல் என்று ஆராய்ந்து உண்ண வேண்டும்.

♀ சரியான உணவுகள் சரியான நேரத்தில் அளவு முறை மிகாமல் குறையாமல் இருத்தல் வேண்டும்.

♀ இருப்பது நாம் புசிப்பதற்கே என்பார்கள் பாமரர்கள். இருப்பதற்கே புசிக்கின்றோம் என்பால் ஆராய்ச்சியுள்ளோர். இருப்பதனால் புசிக்கின்றோம் என்பார் முடிவறிந்தோர்?

♀ சுத்தமானதும் எளிமையானதும் சத்து நிறைந்ததுமான உணவு வகை அன்றாடம் நமது உடலுக்குத் தேவை. காரம், புளிப்பு, உப்பு, சர்க்கரை இவற்றையும் மிதமாகக் கொள்ள வேண்டும்.

♀ உணவில் அளவும் தரமும் முறையும் தவறினால் நோய்கள் உண்டாகும். அவ்வப்போது தக்கபடி மருந்து எடுத்துக்கொணடால் சரியாகிவிடும் என்று இலேசாக நினைப்பதும் சரியல்ல.

♀ உணவே உடலாக வந்துள்ளது. ஆகையினால் உணவை உண்டுதான் உயிர் வாழவேண்டும். உணவில் அளவுமுறை மீறிட மீறிட உணவாகவே உடல் மாறியும் போமன்றோ?

♀ அளவோடு முறையாடு சாப்பிட்டால் 80 வயது அல்ல 100 வயது கூட ஆரோக்கியத்தோடு இருப்போம்.

## 234. உண்மை:

* எங்கெங்கும் உலகினிலே பிறப்போர்க்கெல்லாம் இவ்வுலகம் சொந்தமென்ற உண்மை ஏற்று.

* உண்மையைத் தேடுவது என்பது அபூர்வமானது விந்தையானது: தனிப்பட்டது: இணையற்றது ஒப்பற்றது. அதைத் தேடும்போது மனச் சிதறலோ முன் கூட்டியே கொண்ட அபிப்ராயங்கள் அடிப்படையில் தேடுவதோ கூடாது.

* உண்மையை நாடி முயற்சி மேற்கொள்பவரின் மன அலைகள் முறைமாறித் தடுமாறி மனமானது - பொருள் - புகழ் - செல்வாக்கு - புலனின்பம் இவற்றை அடைவதிலேயே முழுமையாக ஈடுபட்டு விடுகிறது.

* நாம் இருந்து கொண்டு வாழும் உலகம் தன்னைத் தானே மணிக்கு 1000 மைல் வேகத்தில் சுற்றிக் கொண்டே சூரியனை ஒரு நாளைக்கு பதினைந்து லட்சத்து ஐம்பதாயிரம் மைல் விரைவில் சுற்றிக் கொண்டிருக்கிறது. நாம் அதை விட்டு விலகியா நிற்கிறோம்? இந்த பூமியின் சுழல் வேகத்தில் நாமும் பற்றிக் கொண்டுதான் சுழலுகிறோம் ஓடுகிறோம் என்றாகிலும் இந்த உண்மையை நினைத்துப் பார்த்ததுண்டா?

* நம் உடலில் உண்ணும் உணவு ஏழு தாதுக்களாக மாற்றம் பெற்றுக் கொண்டே இருக்கின்றனவே - அது எவ்வாறு யாரால் நடைபெறுகிறது என்று சிந்தித்துப் பார்த்தோமா? ஆனால் உண்மையை அறியும்பொழுது எல்லையில்லா மகிழ்ச்சியால் உள்ளம் பூரித்து இறைநிலையின் பேராற்றலை உணர்ந்து உணர்ந்து மகிழ்கிறோம்.

* எந்தப் பொருளிலும் எந்த இடத்திலும் எந்த இயக்கத்திலும் எந்தவித விளைவுகளிலும் என்னைக் காண வல்லவன் எவனோ அவனை விட்டு நான் நீங்குவதில்லை: என்னை விட்டு அவன் நீங்குவதில்லை. இந்த ஆழமான உண்மைகளை அறிந்து கொள்வதற்கு மனித குலத்தில் தோன்றி வாழ்ந்து சிந்தித்த பெரியார்கள் ஆராய்ந்து கண்ட விளக்கங்கள்தான் பேரியக்க மண்டல உண்மைகளாகும்.

* உண்மையை நாடிப் போகிற பயணத்தில் தடங்கல் ஏற்படுகிறது. ஆன்மீகத் தாகமானது முழுக்க முழுக்க பொருள் பற்றாக மாறி விடுகிறது. இதனால்தான் உண்மையைத் தேடி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும் பலர் இறுதியிலே பொருள் நாட்டத்திலே தங்கள் கவனத்தை முழுமையாக செலவிடுபவர்களாக மாறிவிடுகிறார்கள்.

* உண்மை என்பது ஒப்புவமை இல்லாதது. அது முழுமையானது.

* வான்காந்தத்தையும் சீவகாந்தத்தையும் விளங்கிக் கொள்வதன் மூலம் ஒருவர் வாழ்க்கையின் எல்லா உண்மைகளையும் பிர பஞ்சத்தின் எல்லா இரகசியங்களையும் தெரிந்து கொள்ள முடியும்.

## 235. உண்மை உணர்வுக்கு வழி

❖ இறைவனைப் பற்றிய உண்மை அறிவு மறைந்த கற்பனைக் கருத்துக்கள்தான் நேற்றுவரை போதிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் மனித குலத்தில் ஏமாற்றமே நிலவி வந்திருக்கிறது. காந்த தத்துவமானது விஞ்ஞான முறையில் பிரம்ம ஞானத்தை யூனிபைடு போர்சாக ஆகக் காட்டி இறைநிலையை உண்மையான முறையில் உணர்வாகப் பெற வழிவகுப்பதால் சிக்கலும் துன்பமும் இல்லாத வாழ்க்கையை இனி உலக மக்கள் பெற முடியும்.

## 236. உண்மை விளக்கம்:

⌘ மனம் அதற்கு மூலமானது உயிர் அதற்கும் மூலமான இருப்பு நிலை மெய்ப்பொருள் என்ற உண்மை விளக்கம்பெற்றதால் தான் தன்னிடம் பிரகாசிக்கும். அதே மெய்ப்பொருள்தான் எவ்விடத்தும் எவரிடத்தும் இருந்து பிரகாசிக்கிறதென்கிற விழிப்பேற்படும்.

## 237. உணர்ச்சி:

☯ காந்த ஆற்றல் உடல் முழுவதும் விரைவாக ஓடும்போது அது உடலோடு பெறும் உரசல்தான் 'உணர்ச்சி'யாகும். இந்த உணர்ச்சியானது உறுப்புக்கள் அசைவுகளாலும் புலன்கள் மூலம் காந்த ஆற்றல் பெறும் தன் மாத்திரை அளவுகளாலும் தக்க அளவில் ஏற்றங்கள் உண்டாகும்.

☯ ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற ஐந்து பூதங்களுக்கும் முறையே அழுத்தம், ஒளி, ஒலி, சுவை, மணம் என்ற ஐந்து தத்துவங்களும் இயக்க விளைவென்றால் இங்கே சீவனுக்கு இயக்க விளைவு உணர்ச்சி எனலாம்.

## 238. ஊரல் – உரசல் – உறுத்தல் – ஒழுங்கிடுதல்

☸ ஊரல் உடலில் ஒவ்வொரு கழிவும் அதன் பைகளில் தேக்கம் பெற்று பிறகு வெளியேறும். அவ்வாறு உடல் கழிவுகள் தேக்கம் பெறுவது 'ஊரல்'

☸ உரசல் தேக்கமுற்ற கழிவு அழுத்தம் பெற்று உடல் அணுக்களை வருடிக் கொண்டு வெளியேறுகிறது. அந்த வருடலில் ஏற்படும் உணர்ச்சி நிலை 'உரசலாகும்'. அது அளவோடு பொருத்தமாக அமையும்போது இன்பமாக உணரப்படுகிறது.

☸ உறுத்தல் என்பது கழிவுகளில் வெளியேற்றம் இயற்கையாக இருந்தாலும் அதைச் சந்தர்ப்பம் கருதிச் சிறிது கட்டுப்படுத்தித் தேக்கி வைத்திருந்தால் ஏற்படும் பொருந்தா உணர்வு 'உறுத்தல்'.

☸ ஒழுங்கிடுதல் கழிவைச் சரியாக முறையாக வெளியேற்ற உடல் உறுப்பை இயல்பான நிலைக்குக் கொண்டுவருதல் 'ஒழுங்கிடுதல்' ஆகும்.

## 239. ஊற்று:

⁕ பிறர்க்கு உதவி செய்வேன் ஒவ்வொருவருக்கும் என்னால் இயன்றதைச் செய்து கொண்டே இருப்பேன் என்று சொல்லும் போது அது ஊற்று மாதிரியாகவே வற்றாது சுரக்கும்.

⁕ பொருள்துறைக்கும் அருள் துறைக்கும் ஆட்சித் துறைக்கும் ஒரு மனிதன் ஆற்றும் தொண்டு அவை சிறப்புற்று ஓங்க,

தனி மனிதன் எடுக்கும் முயற்சியும் செயலும் கோடானு கோடி மக்களுக்கு நீண்ட காலத்திற்கு வாழ்வில் வளம் தரும் ஊற்றாகும்.

## 240. ஊழ்:

◆ விதை போட்டால் மரம் முளைக்கும்: இது விதி. பலா விதை போட்டால் பலா மரம் முளைக்கும்: இது வினை. பலாக் கனி விளைவு. விளைவை வேண்டி வினையைத் தேர்ந்தெடுக்கிறோம். அதுவும் ஒரு விதியை அனுசரித்தே தேர்ந்தெடுக்கிறோம். சூரியன் விதை என்றால் கறை வினை நிழல் விளைவு. இந்த விதையையும் வினையையும் ஊழ் என்றும் சொல்வார்கள்.

## 241. எத்தர்கள்:

☼ மூளையின் அமைப்பாலும், நீண்டநாள் அப்பியாசத்தாலும், ஒருவிதமான மூளை வியாதியாலும், மனிதனுடைய ஞாபகம் பிறர் மூளைகளில் ஊடுருவித் தொடர்பு கொண்டு வித விதமான அபூர்வமான செயல்களைச் செய்கிறது என்ற மனோதத்துவ உண்மைகளை அறியாத பாமர மக்களிடம், மேலே சொன்ன வாய்ப்புகளைப் பயன்படுத்தி மெஸ்மரிஸ உறிப்னாடிச முறைகளில், சில ஜாலவித்தைகளைக் காட்டி, இறந்தவர்களிடம் பேசலாமென்று பிதற்றி பொதுமக்களை ஏமாற்றித் திரியும் எத்தர்கள், உலகில் அதிகரித்துக் கொண்டே வருகிறார்கள்.

## 242. எதைவிடலாம்:

● புலால் மறுத்தலுக்கு ஒரு முழு அதிகாரத்தையும் - கொல்லாமைக்கு ஒரு அதிகாரத்தையும் வள்ளுவர் ஒதுக்கிய போதும் - திருவள்ளுவர் மீது மதிப்பு வைத்து புலாலை விட்டவர்களும் உண்டு அல்லது புலாலின் மீது மதிப்பு வைத்து திருவள்ளுவரை விட்டவர்களும் உண்டு. எங்கும் எப்பொழுதும் இரு பிரிவினர் இருக்கத்தான் செய்வார்கள்.

## 243. எதிர்காலம்:

❄ ஒரு மனிதன் இன்னொரு மனிதனை நினைந்து அவனுக்கு நலமோ அல்லது தீதோ செய்ய வேண்டும் எனத் திட்டமிட்டால் அவருடைய எண்ணங்கள் செயலுக்கு வரும் முன்னே இவனிடம் பிரதிபலித்து அகக்காட்சியாகும். பின்னர் அந்த எண்ணங்கள் செயலாக மாறி நிகழ்ச்சி நடைபெறும்போது இது முன்னமே எனக்கு எப்ப தெரிந்தது என்ற வியப்புத் தோன்றும். உண்மையில் எதிர்காலம் உணர்தல் என்பது இறையாற்றலில் நிகழும் ஓர் சாதாரண நிகழ்ச்சியே.

## 244. எதிர்பார்த்தல்:

❀ பிறரிடமிருந்து நீ எதையும் எதிர்பாராதே. எதிர்பார்ப்புகளே ஏமாற்றங்களுக்குக் காரணம். எதிர்பார்த்தலில் நான்கு பரிமாணங்களுண்டு. அவை தேவை - அளவு - தன்மை - காலம் என்பவையாகும். இந்நான்கு பரிமாணங்களும் சேர்ந்ததுதான் எதிர்பார்த்தல் என்பது.

❀ இவர் யாரிடமிருந்து எதிர்பார்க்கின்றாரோ - அவருடைய அறிவு நிலை - சிந்தனை - நிர்ணயம் இவைகள் எல்லாம் வேறு படுகின்றன. இதனால் எதிர்பார்க்கும் அளவிற்குக் கிட்டாது போய்விடும். இதனால் வாழ்வில் ஏமாற்றம் - தவிப்பு - பிணக்கு - துன்பம் இவைதான் ஏற்படும். எனவே மனிதன் பிறரிடம் எதிர்பார்த்தல் என்பதிலிருந்து விடுபட வேண்டும்.

❀ கற்பனையான எதிர்பார்ப்பை விட்டுவிடுங்கள். ஏமாற்ற மில்லாமல் வாழலாம்.

❀ எதிர்பார்த்தல் என்பது பிச்சைக்காரனாகத்தான் ஆக்கும். சரி - இவ்வளவையும் கொடுத்து அவற்றை அனுபோகிக்க - உடலையும் கொடுத்து உயிரையும் கொடுத்து வாழ வைத்துக் கொண்டிருக்கக் கூடிய இயற்கைக்குக் கொஞ்சம் கூட நாம் நன்றி செலுத்த வேண்டாமா? அந்த நன்றி உணர்வோடு தானே கோயிலுக்குப் போய் மனிதன் மொட்டை அடித்துக் கொள்கிறான்? முடியைக் கொடுக்கிறான்.

❀ இன்றைய தினத்திலிருந்து ஒரு சிறிய பயிற்சியைச் செய்து பாருங்கள். எதையுமே யாரிடமிருந்தும் எதிர்பார்க்க மாட்டேன் என்று. அது எப்படி முடியும்: குழந்தைகள் படிப்பதை

எதிர்பார்க்காமல் இருக்க முடியுமா? மனைவியிடம் கணவன் எதையுமே எதிர்பார்க்காமல் இருக்க முடியுமா? என்று எண்ணுவீர்கள். எதிர்பார்க்காததினாலேயே மட்டும் அவர்கள் செய்வதில் தடை இருக்காது. செய்து வருவதும் நிற்காது. அதற்கு முன்னே நீங்கள் செய்த செயலுக்குத் தக்க விளைவாக உங்களுக்கு வரவேண்டியது வந்து கொண்டேதான் இருக்கும்.

- நீங்கள் முதலில் பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கக் கூடாது. இயற்கையிலேயே உங்களிடம் அபரிமிதமான ஆற்றல்களும் திறமைகளும் அமைந்திருக்கின்றன. இதை உணருங்கள். அவற்றைப் பெருக்கி நீங்களும் பயன் பெற்று பிறருக்கும் தாராளமாக உதவமுடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

- அமைதியாக உட்கார்ந்து நீங்கள் ‘எங்கு எவ்வாறு என்னவாக இருக்கிறீர்கள்? என்று கணித்துக் கொள்ளுங்கள். அதாவது வயதில், உடல் வலுவில் , உடல்நலத்தில், கல்வியில், தொழில் திறனில், அறிவு வளர்ச்சியில் அதிகாரத்தில் செல்வ நிலையில் சூழ்நிலையமைப்பில் நீங்கள் எவ்வாறு இருக்கின்றீர்கள் என்று கூர்ந்த அறிவோடு கணித்துக் கொள்ளுங்கள். இவ்வளவு இருப்பையும் வைத்துக் கொண்டு நீங்கள் ஏன் பிறரிடமிருந்து எதையோ எதிர்பார்க்க வேண்டும்?

- நீ எதிர்பார்த்தது எதிர்பார்த்தபடியே பிறர் மூலமாகக் கிடைக்காது. ஒவ்வொரு மாற்றத்திலும் பிணக்குற்று பிணக் குற்று ஏமாற்றத்திற்கு, ஆட்பட்டு அதனாலே துன்பமானது பெருகிக் கொண்டே போகிறது. இந்த அடிப்படையை தெரிந்து கொண்ட பின்னர் எதிர்பார்த்தல் என்பதை விட்டு விடுவது நல்லது எனத் தெரிகிறதல்லவா?

- தொடக்கத்தில் ஒருவார காலம் யாரிடமிருந்தும் எதையும் எதிர்பார்ப்பதில்லை என்ற முடிவினை எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் அதை ஒரு மாத காலத்திற்கு நீட்டித்துக் கொள்ளுங்கள். அதற்குரிய விளைவு நிச்சயமாக உண்டு.

- நீ எதிர்பார்த்தாலும் எதிர்பார்க்காவிட்டாலும் நீ என்ன செயல் செய்கிறாயோ அந்தச் செயலுக்குத் தக்க விளைவு வந்துதான் ஆக வேண்டும். நல்லதை எண்ணி நல்லதை விளங்கிக் கொண்டு பயனை உணர்ந்து கொண்டு இப்பொழுது செய்கிறேன்: வருவதை ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன். இந்த அளவு வரும் எனக்கூட எதிர்பாராது நல்லதைச் செய்யும்போது நிச்சயமாக

நன்மை பிறக்கும் என்று செய். அவ்வாறு செய்வதற்கு முன்னதாக இன்னொரு ஆராய்ச்சியும் தேவை. அதாவது உன்னைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

- எதிர்பார்ப்பதில் நான்கு தன்மைகள் உண்டு. அதாவது உங்களிடம் இருந்து நான் எதிர்பார்த்தேனானால் அதில் தேவையில் ஒரு நீதியுணர்வு, அதன் அளவு, தன்மை, காலம், இந்த நான்கும் இருக்கிறது. யார் எதை எதிர்பார்த்தாலும் அல்லது பிறரிடமிருந்து கேட்டாலும் இந்த நான்கும் இருக்கும்.
- எதிர்பார்ப்பதை விட்டு விடுங்கள். எதிர்பார்ப்பதை விட்டுவிட்டால் ஏமாற்றமே இருக்காது. மகிழ்ச்சியின்மைக்கும் முகம் சுழிப்பதற்கும் என்ன காரணம் என்றால் எதிர்பார்த்தலில் உண்டான ஏமாற்றம்தான்.
- எப்பொழுதும் பிறரிடம் எதிர்பார்ப்பதினாலேயே நாம் பிச்சைக்காரர்களாக மாறுகிறோம். முக்கியமாக நீங்கள் கவனித்துப் பார்த்தீர்களானால் எதிர்பார்ப்பவர்கள் எப்பொழுதும் ஏழ்மையில்தான் இருப்பார்கள்.
- எதிர்பார்ப்பதை விட்டுவிட்டு நாம் என்ன செய்ய வேண்டும். நமது ஆற்றல் செல்வம் வசதி செல்வாக்கு இவற்றைக் கொண்டு என்னென்ன வகையில் பிறருக்குச் சேவை உதவி செய்ய முடியும் என்று எண்ணுகிறபோது நமக்கே நிறை செல்வம் இருக்கிற மாதிரி நமது மனதிற்கு ஒரு நிறைவு உண்டாகும்.
- எனக்கு என்ன வேண்டும் என்று உன்னையே நீ வினவிக் கொள். மனநிறைவும் மகிழ்ச்சியும்தான் தேவை என்பது விளங்கி விடும். இதுவே மனிதப் பிறவியின் பெரு நோக்கம். பிறரிட மிருந்தும் அல்லது எவரிடமிருந்தும் எதையும் எதிர்பாராதே! எதிர்பார்த்தல் பெரும்பாலும் ஏமாற்றத்தில்தான் முடிகின்றது. இந்த ஏமாற்றம் இன்ப ஊற்றை அடைத்து விடும்.

## 245. எண்ணம்:

- எண்ணம், சொல், செயல்களெல்லாம் ஒன்றுக்கொன்று இணைந் துள்ள தன்மையதைக் காணும்போது எண்ணமே அனைத்துக்கும் மூலமாகும்.
- எண்ணமாவது உணர்ச்சி வசப்படும் நிலையில் ஆசை - சினம் - கடும் பற்று - முறையற்ற பால் கவர்ச்சி - உயர்வு - தாழ்வு - வஞ்சம் என ஆறு குணங்களில் வெளிப்படுகிறது.

✠ எண்ணத்தின் வலிமையை எல்லோரும் அறியச் செய்ய வேண்டும்.

✠ **பல வருடங்களில் எண்ணிறந்தோர்களால் செய்து முடிக்கக் கூடிய காரியங்களை நீ ஒரு நிமிஷத்தில் எண்ணத்தால் திட்டமிலாம். இத்தகைய சக்தியுடைய நீ எப்போதுமே எதிர் காலத்தைப் பற்றி திட்டமிட்டுக் கொண்டிருக்காதே. இதனால் அவ்வப்போது செய்ய வேண்டிய கடமைகளை மறந்து விடுவாய்.**

✠ அன்பு - பண்பு - இனிமை - வாழ்த்து இவைகளெல்லாம் ஒரு மனிதனுக்கு வேண்டிய நல்ல எண்ணங்கள்.

✠ கோபம் - வெறுப்பு - சாபம் - வஞ்சம் போன்ற எண்ணங்கள் மனதில் இருந்தால் நம்முடைய நலமும் - மனநலமும் பாதிக்கப்படும்.

✠ கெட்ட எண்ணம் தன்னைக் கெடுத்து வெளியிலும் பாய்கிறது. ஆகவே இது முரண்பாடான எண்ணம் பொருந்தாத எண்ணம் - வாழ்வைச் சீரழிக்கும் எண்ணம்.

✠ எண்ணம் எங்கும் செல்லும் வல்லமையது. விழிப்பு தவறும் போது அது அகத்திலும் செல்லும். அப்படித் தோன்றும் தவறான எண்ணங்களை உஷாராக இருந்து தவிர்க்க வேண்டும். அதற்கு ஒரே வழிதான் உண்டு. நல்ல எண்ணங்களை நாமே விரும்பி முயன்று மனதில் இயங்க விட்டுக் கொண்டிருக்க வேண்டும். உயர்ந்த ஆராய்ச்சியின் பேரிலேயே எண்ணத்தை விழிப்புடன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

✠ எண்ணத்தின் அளவையொட்டியே மனதின் தரமும் உயர்வும் அமைகின்றன. மனதின் அளவில்தான் மனிதனின் தரமும் உயர்வும் உருவாகின்றன.

✠ எண்ணத்தைப் பண்படுத்த வேண்டும். எண்ணத்திற்கு உயர் வூட்ட வேண்டும். எப்படி? எண்ணத்தைக் கொண்டுதான் எண்ணத்தைப் பண்படுத்த வேண்டும். எண்ணத்தின் தன்மையைப் பயன்படுத்தித்தான் எண்ணத்திற்கு உயர்வூட்ட வேண்டும்.

✠ எண்ணத்தைச் சீரமைத்துக் கொள்ள வேண்டும். நல்ல எண்ணங் களையே எண்ணுதல் வேண்டும்.

✠ வாழ்வாவது எண்ணம் - இதில் வளமானது திண்ணம்.

- ✠ பேராசை இல்லா எண்ணத்திற்கு எல்லாத் தேவைகளும் இயற்கையிலேயே கிடைக்கும்.

- ✠ எண்ண இயக்கம்தான் வாழ்வு. அது உடலில் இரத்த ஓட்டம் இருக்கும் மட்டும் நித்திரை காலம் தவிர மீதி நேரத்தில் இயங்கிக் கொண்டேதான் இருக்கும். எண்ணத்தைப் பண் படுத்தவும் பயன்படுத்தவும் வழிகாண வேண்டும். பழக வேண்டும். அந்தப் பெரு நிதியை அழிக்க வேண்டுமென்று நீ வீணான முயற்சி கொள்ளாதே! அதுதான் மரணம் என்ற இடத்தில் தானாகவே நின்றுவிடப் போகின்றதே! எண்ணம் நின்றுவிட்டால் நீ என்பது தனித்து ஏது?

- ✠ எண்ணத்தை நிறுத்த முயலாதே அது அதிகமாக அலையும், அதை அறிய முயன்றால் அப்போதுதான் அது தானே சிறுகச் சிறுக அமைதி பெறும்.

- ✠ எண்ணம் வேறு நீ வேறு அல்ல. சிந்தித்துப் பார். அது காலம், இடம், பருமன், இயக்கம், என்ற நான்கு வித தன்மைகளோடு இயங்கிக் கொண்டும் அவற்றைக் கடந்து மௌன நிலை யடைந்தும், மாறி மாறி நிற்கும் மாயாஜாலப் பொருள். உன் எண்ணத்தின் நிலையை அறிந்து கொண்டால் நீ உன்னை அறிந்து கொண்டாய் என்பதுதான் பொருள். அது வரையில் சந்தர்ப்பங் கிடைக்கும் போதெல்லாம் எண்ணத்தைப் பற்றி ஆராய்ந்து கொண்டே இரு.

- ✠ எண்ணம் எங்கும் செல்லும் வல்லமை உடையது. விழிப்பு தவறும்போது அது தாழ்வு நோக்கியும் செல்லும்.

- ✠ மனம் இயங்கிக் கொண்டுதான் இருக்கும். அதன் இயல்பு அறியாமல் மனத்தின் போக்கிற்கு எண்ணத்தை விட்டு விட்டால் அழிவு. உயிர்ச் சக்தியின் இயக்க விளைவுதான் எண்ணம். அது அறியும் திறனுடையதால் அறிவென்றும் கூறப்படுகிறது.

- ✠ மனம் என்றாலும் எண்ணம் என்றாலும் ஒன்றுதான். மனத்தின் இயக்கத்தையும் இயக்க நிலையையும் எண்ணம் என்ற சொல் சிறப்பாகக் குறிக்கிறது.

- ✠ உடலில் இரசாயன மாற்றம் ஏற்படுவதில் நமது எண்ணம் பெரும் பங்கு வகிக்கிறது.

- ✠ ஒளி ஒன்றுதான். அது ஆற்றிய செயல்களும் விளைவுகளும் பலப்பல. அதுபோல எண்ணம் ஒன்றுதான் என்றாலும் அது ஆற்றும் செயலும் விளைவுகளும் கணக்கிட முடியாதன.

✠ எண்ணத்தை ஆராய்ச்சியிலும் தூய்மையிலும் வைத்திருப்பவன் அறிஞன். மகான். ஞானி. எண்ணம் என்பது எப்படி இயங்கு கின்றது. அதிலிருந்து பல்வேறு அகக்காட்சிகள் எப்படி இயங்கு கின்றது - அதிலிருந்து பல்வேறு அகக்காட்சிகள் எப்படித் தோன்றுகின்றன என்று அடிக்கடி ஆராய்ந்து பாருங்கள். சில நாட்களுக்குள் நீங்களும் அறிஞர்களாகவே திகழலாம்.

✠ உயர்ந்த பயனளிக்கும் நோக்கத்தில் எண்ணத்தைப் பயிற்று விப்பது சிறந்தது. பல களங்கங்களைப் போக்கி நல்ல நிலையில் எண்ணத்தைத் தூய்மையாக வைத்திருக்க அப்பயிற்சி உதவும். தன் உருவ நினைவு அறிவில் தெளிந்த பெரியோரின் உருவ நினைவு, இவை எண்ணத்தில் நிலை பெற பழகுவது மனிதனை வாழ்வில் சிறப்படையச் செய்யும்.

✠ தீய எண்ணங்களைக் கண்டு பயப்பட வேண்டும். நீங்களே முயற்சி செய்து ஒரு நல்ல எண்ணத்தைத் தொடர்ந்து மனதில் வைத்திருங்கள். தீய எண்ணம் வருவதற்கு இடமிருக்காது. எந்நேரமும் ஏதேனும் ஒரு சங்கற்பத்தை மனதில் சுழலவிட்டுக் கொண்டு இருந்தாலும் கூட அது தீய எண்ணத்தை விலக்கும்.

✠ தீய எண்ணத்திற்கு ஒருபோதும் மனதில் இடம் அளிக்காதீர்கள் நல்ல எண்ணத்தைத் தேடிப்பிடித்து மனதில் ஏற்றி வையுங்கள் உங்கள் மனதில் அடிக்கடி வந்து போகும் எண்ணங்களையும் அவ்வப்போது தோன்றும் எண்ணங்களையும் ஆராயுங்கள் விழிப்பு நிலை எண்ண ஆராய்ச்சியை வளப்படுத்தும். எண்ண ஆராய்ச்சி விழிப்பு நிலையை ஊக்குவிக்கும்.

✠ எண்ணம்தான் அனைத்துமே. எண்ணத்துக்கப்பால் ஒன்றுமே இல்லை. நன்மையும் தீமையும் எண்ணத்துள்ளே. வெற்றியும் தோல்வியும் சிறிதும் பெரிதும் எண்ணத்துள்ளே. வெற்றியும் தோல்வியும் எண்ணத்தாலே. பிரபஞ்ச இயக்கங்கள் அனைத்திலும் எண்ணம்தான் உயர்வானது. இன்பமோ துன்பமோ எண்ணத்திற்கு அப்பால் இல்லை.

✠ எண்ணத்தின் விளைவறியாது எண்ணி எண்ணி அது விளைவாகிச் செயலாக மலரும்போது அவற்றைத் தாங்க முடியாமல் மனிதன் திணறுகிறான்.

✠ ஒரு எண்ணம் ஒருமுறை மனதில் தோன்றிவிட்டால் போதும். அது உயிரணுக்களில் பதிவாகி அவற்றுக்கிடையே பிரதிபலித்து

அந்தப் பிரதிபலிப்பு மீண்டும் மீண்டும் வந்துகொண்டே இருக்கும். இதுவும் எண்ணத்தின் இயற்கை.

✠ நான் பேசாதபோது இறைவன் பேசிக் கொண்டிருக்கிறான் என்பது அறிவிற் சிறந்தோர் காட்டும் குறிப்பு. நாம் பேசாமல் இருக்கும்போது கண்களை மூடிக்கொண்டு அமர்ந்து கொண்டால் எத்தனை எத்தனை எண்ணங்கள் எழுச்சி பெற்று உணர்த்து கின்றன. இந்த எண்ணங்கள் நீங்கள் உண்டு பண்ணுகிறீர்களா? நாம் உண்டு பண்ணுவதும் இல்லை. அது நம் விருப்பத்துக்கு அடங்குவதும் இல்லை.

✠ நமது எண்ணங்களை நமது உள்ளங்களிலிருந்து அலை யலையாக எழுப்பிக் கொண்டிருப்பது யார் வேலை? யாருமில்லை. இறைவனேதான். எவ்வாறு? உடல் உறுப்புகளின் மூலம் உணரும் இன்ப துன்பங்கள் அனைத்தும் உயிர் மையத்திலுள்ள இருப்பு நிலையாகிய அறிவு சீவ காந்த ஆற்றலால் படர்க்கை நிலையெய்தி மனமாக இயங்கி உணர்கின்றது.

✠ ஒரு தீய எண்ணத்தை ஒருமுறை உள்ளே விட்டுவிட்டால் போதும் மறுபடியும் உதிக்காமல் செய்வது அத்தனை எளிதன்று.

✠ விருந்தாளி - வேண்டாத விருந்தாளியேயாகிலும் முகத்தைச் சுளித்தால் போய்விடுவார். எண்ணத்தை விரட்ட விரட்டத்தான் மீண்டும் மீண்டும் வரும். விரட்டும்போது நீங்கள் அந்த எண்ணத்தோடுதான் உறவு கொண்டவாறே இருக்கிறீர்கள்.

✠ வெறும் எண்ணம் மட்டுந்தானே நான் என்ன செயலிலா இறங்கு கிறேன்? என்று ஒரு தீய எண்ணத்திற்கு இடங்கொடுத்து விடக் கூடாது. விளைவஞ்சி அந்த எண்ணத்தின் வழி நீங்கள் செயலில் இறங்காமல் இருந்து விடலாம். ஆனால் எழுந்த எண்ணம் சும்மா போய்விடாது. ஒத்த தரம் உடைய இன்னொருவர் மனதில் நுழைந்து அது தனக்குச் செயலுருவம் கொடுத்துக் கொண்டு விடும். அத்தகைய ஆற்றல் பெற்றது எண்ணம்.

✠ ஒவ்வொருவருடைய எண்ணம்தான் வாழ்வின் சிறப்பாக உள்ளது.

✠ எண்ணமற்ற மனம் - தூய்மை. அதிக எண்ணங்கள் - மாசு.

✠ எண்ணத்துக்கு காவலாக எண்ணத்தையே வைக்க வேண்டும்.

✠ எண்ணத்திற்கு நீதிபதியாகக் கூட எண்ணத்தைத்தான் நியமித்தாக வேண்டும். ஏனென்றால் வேறு ஆள் இல்லை. மேலும் வேறு யாராலும் இக்காரியத்தை முடிக்க முடியாது. காரணம் ஒருவரது எண்ணத்தை அறிந்து கொள்ள அவருடைய எண்ணத்தைத் தவிர வேறு யாராலும் முடியாதே.

✠ எண்ணம் எப்பொழுதும் விழிப்புடன் இருக்க வேண்டும். எண்ணம் எப்பொழுதும் தன்னையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

✠ எண்ணம் தன்னை கண்காணித்துக் கொண்டு தன்னையே நெறிப்படுத்திக் கொண்டு தன்னையே திருத்திக் கொண்டு இருக்க வேண்டும்.

✠ எண்ணம் நின்று விட்டால் நாமாக இருக்கும் என்று இயற்கைக்குப் பொருந்தா நினைவு கொள்ள வேண்டாம். உயிர் வாழும்போது விழித்திருக்கும்போது எண்ணங்கள் இயங்கிக் கொண்டுதான் இருக்கும்.

✠ தூங்கும்போது எண்ணங்களில்லையே அதனால் என்ன பயன்பெற்று வருகிறீர்கள் மரணத்தில் எண்ணம் அடியோடு நின்றுவிடும். பிறகு என்ன உணர்வைக் காணமுடியும்.

✠ எண்ணம் இயங்கிக் கொண்டிருக்கும்போதே முறைப்படுத்தி பயனைக்கண்டு சிறப்படையுங்கள். தவத்தில் பழக்கம் எண்ணம் வாழ்வில் எல்லாத் துறைகளிலும் சிறப்பளிக்கும்.

✠ வாழ்வு என்பதற்குச் சான்று எண்ணங்கள்தான். தானாக இயங்கும் நரம்பு வழி இயக்கங்களைச் சேர்ந்தது எண்ணங்கள்.

✠ எந்த எண்ணமும் தோல்வி அடைவதில்லை. தோல்வி ஏற்பட்டால் எண்ணுகிற எண்ணத்தில் ஒழுங்கு இல்லை என்பதுதான் பொருள்.

✠ எண்ணம் வேறு நீ வேறு அல்ல. சிந்தித்துப் பார் எண்ண இயக்கம்தான் வாழ்வு. எண்ணம் நின்றுவிட்டால் நீ என்பது தனித்து ஏது?

✠ நாம் சும்மா உட்கார்ந்தால் எத்தனை எண்ணங்கள் ஒவ்வொன்றாக வருகின்றன. இவற்றை வெளியாக்கி எண்ணங்களாக மலரச் செய்வது யார்?

✠ எண்ணி எண்ணிடில் இனிதே பயக்கும், எண்ணம் எழுந்து தானே இயங்காமல், எண்ணத்தில் எண்ணமாய் இரு என்ற கருத்தை மனதில் கொள்ளுங்கள்.

✠ எண்ணம் என்பது என்ன? முன்னமே செய்த செயல்களின் பதிவு திருப்பி வந்து கொண்டே இருக்கிறதல்லவா இதுதான் எண்ணம்.

✠ நாம் செயல் செய்யாதிருந்தால் எண்ணம் வராது.

✠ ஓர் எண்ணத்தை எடுத்து ஆராய்ந்து பார்த்தீர்களானால் நாம் முன் செய்த செயல்தான் எண்ணமாக இருக்கிறது என்பது தெரியவரும். சில சமயம் பிறர் எண்ணம் கூட நமக்கு நமது எண்ணம் போல் வரும்.

✠ எண்ணம் அவ்வளவு பரவலானது. சக்தி வாய்ந்தது.

✠ எண்ணம்தான் நம்முடைய சொத்து. என்ன செய்தோமோ அதுவரைக்கும்தான் எண்ணமாக எண்ணப் பதிவாக இருக்கும். செய்யாதது எண்ணமாக வராது.

✠ ஐயோ! ஏன் அடிக்கடி இந்த எண்ணம் வந்து பாதிக்கிறதே! என்று வருந்த வேண்டாம். நாம் செய்ததுதான் அது.

✠ எண்ணம் ஆராய்தல் என்பது முதன்மையான தற்சோதனை பயிற்சியாகும்.

✠ மனிதனுடைய எல்லா வகையான குற்றங்களையும் மாற்றி மனிதனுடைய எல்லா வகையான சிக்கல்களையும் தீர்த்து, மனிதனை மனிதனாக, எண்ணம் ஆராய்தல் பயிற்சி வாழச் செய்யும்.

✠ தேவை, பழக்கம், சூழ்நிலை, பிறர் மனத் தூண்டுதல், கருவமைப்பு. அல்லது பாரம்பரியம், தெய்வீகம் என்கின்ற ஆறு வகையான அடிப்படையில்தான் எண்ணங்கள் எழுகின்றன. ஒவ்வோர் எண்ணமும் எழுகின்றபோது இது எங்கேயிருந்து வருகிறது. என்ன காரணம் இப்படி ஓரிரு நாட்களுக்குப் பழகிக் கொண்டால் எந்த எண்ணம் எழுந்தாலும் இதைச் செய்வதா? செய்யக் கூடாதா என்பதையெல்லாம் சிந்தித்து தேவையானது என்றால் செய்வோம். தேவையில்லை என்றால் விட்டுவிடு வோம். இதுதான் எண்ணம் ஆராய்தல் பயிற்சி.

## 246. ஏமாற்றம்:

✡ வாழ்க்கையில் என்றும் மகிழ்ச்சி நிலை வேண்டும். அதற்கு ஏமாற்றமில்லாமல் வாழ வேண்டும். ஏமாற்றம் என்பது துன்பமும் சோர்வும் அளிக்கின்ற ஒரு மனநிலை. அது தன்னாலும் வரலாம். பிறராலும் வரலாம். இயற்கையாலும் கூட எழலாம்.

✡ பேராசை அறியாமை தப்புக் கணக்கு பழிப்பின்மை பகை இயற்கைச் சீற்றம் ஆகிய ஆறு வகையில் ஏமாற்றங்கள் வருகின்றன.

✡ ஏமாற்றத்தின் அளவுக்கேற்ப அதிர்ச்சியும் துன்பமும் விளையும்.

✡ அவ்வப்போது ஈடு செய்துவிடக் கூடிய சிறு சிறு ஏமாற்றங்களும் உண்டு. நீண்ட நாட்களுக்குத் துன்பம் தொடரக் கூடிய ஏமாற்றங் களும் உண்டு. வாழ்நாள் முழுவதிலும் கூட ஈடு செய்துவிட முடியாத ஏமாற்றங்களும் உண்டு.

✡ எல்லோரும் தங்கள் வாழ்வில் காணும் துன்பங்களுக்கு இந்த ஏமாற்றமே பெரும்பாலும் காரணமாக இருப்பதால் ஏமாற்றத்தைத் தவிர்க்கக் கூடிய சிந்தனையும் அந்தச் சிந்தனை தந்த விளக்கத்தைச் செயலுக்குக் கொண்டு வருகின்ற அறிவு மேன்மையும் வேண்டும்.

## 247. ஏமாற்றும் நிகழ்ச்சிகள்:

✣ அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் இந்த ஆறு நிகழ்ச்சிகளும் தோன்றுவதும் மறைவதுமாக இருக்கும். எங்கே தோன்றுகின்றன? விண் விண் கூட்டுச் சேர்க்கை இவற்றில் தோன்றுகின்றன. எங்கே மறைகின்றன? சுத்தவெளியில் மறைகின்றன. சக்தியில் தோன்றி சிவத்தில் அடக்கம் பெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சி தான் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம். இவற்றுக்கு நிலைபேறு கிடையாது. தன்னாட்சி என்பதே கிடையாது. தோன்றி மறைந்து கொண்டே இருக்கும். அவற்றின் தொடர் செயலின் தொடர் விரைவில் ஏதோ தொடர்ந்து இருக்கிற மாதிரி இருக்கும்.

✣ விளக்கிலிருந்து வெளிச்சம் வந்து கொண்டே இருக்கிறது. அந்த இயக்கம் மாறி மாறி வெளிச்சம் வெளியாகிக் கொண்டே இருக்கிறது. ஆனால் தொடர்ந்து வெளிச்சம் இருக்கிறது என்று நினைக்கிறோம். தொடர்ந்து வந்து கொண்டே

இருக்கவில்லை. வரும்போதே மறைந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் அது விட்டு விட்டு மீண்டும் தொடர்பு கொண்டிருக் கிறது. அதாவது ஒரே வெளிச்சமாக இல்லை.

- ஓர் ஆற்றைப் பார்க்கிறோம். ஒரு நிமிடத்திற்கு முன்பு பார்த்த ஆறு. இப்போது இல்லை. அந்தத் தண்ணீர் அவ்வளவும் ஓடிப் போச்சு: இப்போது வேறு தண்ணீர் வந்திருக்கிறது. இன்னும் அடுத்த நிமிடத்தில் இந்தத் தண்ணீர் இருக்கப் போவதில்லை. வேறு தண்ணீர் வந்துவிடும். இருந்தாலும் ஆறு தொடர்ந்து ஓடிக் கொண்டே இருக்கிறபோது ஆறு என்பது நிலையான ஒன்றாகத் தெரிகிறது.

## 248. எண்ண அலைகள்:

- இயற்கையை உணர்ந்து, அறவழி ஒழுகி, அறியாமையை தூய்கக் வல்ல ஒரு மதிப்புள்ள உயர் மனிதனாக இருந்தும், தன்தகைமையும், இயற்கையாற்றலின் இயக்க நியதியும் அறியாமல், மனிதன் தனது எண்ண ஆற்றலைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான்.

- தன் குடும்பம் சமுதாயம் வேறுநாட்டு மக்கள் இவர்மேல் சினம் வெறுப்பு பகை கொண்டு அவன் எண்ண அலைகளை எப்போதும் வெளியிட்டுக் கொண்டே இருக்கிறான். இவ்வெண்ண அலைகள் அணு ஆற்றலாகவே பரவி மனித இன உடல்களிலும் மூளையிலும் பொருந்தா உணர்வுப் பதிவுகளாகவும் அமைகின்றன. இப்பதிவுகளை பாவப்பதிவுகள் என்றும் சாபம் என்றும் அறிவறிந்த முன்னோர்கள் கூறியுள்ளனர்.

- மனித எண்ண ஆற்றல் இயற்கை ஆற்றலின் ஒரு பகுதி இயக்கமே என்று முன்னரும் விளக்கியிருக்கின்றேன். அதன் விளைவு என்னவாகும்? மனித குல வாழ்வில் துன்பங்களும் சிக்கல்களும் பெருகும். இயற்கைச் சீற்றம் போர் மழையின்மை இவ்வாறாக இயற்கை ஆற்றலும் மனித ஆற்றலும் கூடி மனித எண்ண ஆற்றலால் தீய விளைவுகளாகின்றன.

- மனிதன் - மனிதன் மதிப்பை உணர்ந்து பிறர்க்குத் துன்ப மளிக்காமலும் இயன்ற அளவில் உதவி செய்துகொண்டும் எல்லோரும் இன்புற்று வாழவேண்டுமென்று மனமார வாழ்த்தி நல்லெண்ண அலைகளைப் பரப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.

## 249. ஏழ்மை:

✦ மனித குலத்தில் ஏழ்மை என்பது இருக்கவே கூடாது. அப்படி இருக்கிறது என்றால் - அதற்குக் காரணம் மனித சமுதாயத்தில் நிர்வாகத் துறையில் ஒழுக்கப் பழக்கங்களில் உள்ள குறைபாடுகளே ஆகும்.

## 250. எழுத்து:

✧ எந்தெந்தக் காலத்தோ இடம், காலம் தேவை. இவையொப்பத் தோன்றின எத்தனையோ செயல்கள் அவைகளையெல்லாம் இன்று எழுத்து உருவில் காண்கிறோம்.

## 251. ஏழு தலைமுறைகள்:

★ பிறவிகள் ஏழு மட்டும் என்பதல்ல. அவை பெருங்கடலாக நீளும். செயல்பதிவு அல்லது வினைப்பதிவு என்பது ஒரு முறை நம்மிடம் பதிந்துவிட்டதென்றால் அது மீண்டும் பிரதிபலிக் காமல் செயலிழக்கச் செய்ய ஏழு தலைமுறைகள் ஆகும்.

★ ஒரு தலைமுறை என்பது இருபது ஆண்டுகள் என்று வைத்துள்ளார்கள். ஒரு செயலின் பதிவுக்கு நூற்று நாற்பது ஆண்டுள்ளவரை திரும்பத் திரும்பப் பிரதிபலிக்கும் வேகம் உண்டு. அதன் பிறகு அது வான்காந்த ஆற்றலால் தானாகவே மறைந்துவிடும்.

## 252. ஏழு பிறவிகள்:

☆ எந்தத் தலைமுறையில் அந்தப் பதிவிற்குப் பிரதிபலிக்கும் வாய்ப்பைக் கொடுத்தாலும் அந்தப் பதிவைப் புதுப்பித்துக் கொண்டதாகும். அங்கிருந்து அது மேலும் ஏழு தலை முறைக்கு எழுச்சி வேகம் பெறும். அதனாலேயே ஒரு செயலின் பதிவுக்கு, ஏழு தலை முறைகளிலும் விளைவு வரும் என்பதை ஏழு பிறவிகள் என்று முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள்.

☆ தனக்கு முன்பு தந்தை வழியாக ஏழு தலைமுறைகளில் பெற்ற பதிவை, முன் ஏழு பிறவி என்றும் அப்பதிவுகள் புதுப்பிக்கப் பட்டாலோ அல்லது புதியன செய்தாலோ அவை மேலும் ஏழு தலைமுறைகள் தொடரும் என்பதைப் பின் ஏழு பிறவிகள் என்றும் கொள்ள வேண்டும்.

## 253. ஐங்கரன்:

- சக்தியும் சிவமும் சேர்ந்து பிறந்தது பிரணவம் என்று சொல்வார்கள். பிரணவம் என்பது காந்தம்தான். இறையாற்றலாகிய சிவமும் அதனுடைய சக்தியான இயக்க அலையும் சேர்ந்தது தான் காந்தம் விண் நுண் துகள்களால் ஆனது. அதன் அடர்த்திக்குத் தகுந்தவாறு விண்வெளி, காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற ஐந்து நிலைகளை அடைந்தது. ஒவ்வொரு பௌதீக நிலையிலும் அந்த காந்தம் தன் மாற்றமடைகிறது. விண்வெளியில் அழுத்தமாகவும், காற்றில் சப்தமாகவும், நெருப்பில் ஒளியாகவும், நீரில் சுவையாகவும், நிலத்தில் மணமாகவும் மாற்றமடைகிறது. வேதாந்தத்தில் இதை 5 கரண் என்று சொன்னார்கள். பிற்காலத்தில் வந்தவர்கள் அதை ஐங்கரன் என்று மாற்றி ஐந்தாவது கரமாக யானைமுகத்தைக் கொடுத்தார்கள். அக்கதையே இன்று வரை வழக்கத்தில் இருந்து வருகிறது.

## 254. ஐந்து துறைகள்:

- வாழ்க்கையை தெரிந்து கொள்ள வேண்டுமானால் வாழ்வாங்கு வாழ வேண்டுமானால் ஒவ்வொரு மனிதனுக்கும் ஐந்து துறைகளிலே அறிவு வேண்டும்.
- அறிவு - சுகாதாரம் - பொருளாதாரம் - அரசியல் - விஞ்ஞானம். ஆகிய ஐந்தும் வாழ்க்கைத் தத்துவங்கள். வாழ்க்கைக்கு இந்த ஐந்தும் தேவை. ஒவ்வொரு மனிதனும் இந்த ஐந்திலேயும் நிறைவு பெற வேண்டும்.
- சிறு குழந்தை முதற்கொண்டு 15 - 20 ஆண்டுகள் வரையிலே இந்த ஐந்து துறைகளிலும் அறிவு பெற வேண்டும். அதன் பின்பு வாழ்க்கையிலே புகுந்தால் தன்னிறைவாக இருக்கும். யாரிடமும் ஒன்றும் கேட்க வேண்டியதே இல்லை. எல்லாவற்றையும் அவரவரே உணர்ந்து திருந்தி அவர்கள் செயல்பாடுகளைச் செய்வதற்கு நல்ல வாய்ப்பிருக்கும்.

## 255. ஐந்து ஒழுக்கப் பண்பாடு

- ஐந்தொழுக்கப் பண்பாடு என்பது தனி மனிதனுக்கு மாத்திரம் அல்ல. குடும்பத்திற்கே ஒரு பெரிய சொத்தாகும் அது. உற்றார் உறவினர்களுக்கெல்லாம் கூட அது ஒரு பெரிய இன்ப ஊற்று. உலகுக்கு நலமளிக்கக் கூடிய ஓர் ஒளி விளக்கு.

## 256. ஐவகை அறிவு:

- ★ இயற்கை அறிவு எல்லா உயிர்களுக்கும் பொது. இயற்கையின் வளமான இருப்புகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப தனது தேவைகளை முறைப்படுத்திக் கொள்ளும் சிறப்பாற்றலே இயற்கை அறிவாகும்.
- ★ விளைவைக் கணித்த விழிப்பில் முயற்சியொடும் சிந்தனை யோடும் செயல்புரியும் பண்பாய் வளருவதே நுண்மாணு நுலைபுலனறிவாகும்.
- ★ வளர்ச்சிபெற்று விழிப்பும் சிந்தனையும் கூடும்போது அறிவு பெறும் உயர் திறனே உள்ளுணர்வு ஆகும்.
- ★ தனது அனுபவத்தாலும், பிறர் சொல் மூலமும், நூல் வாயிலாகவும் வளர்த்துக் கொள்ளும் அறிவே தேர்ந்த அறிவாகும்.
- ★ அணு முதல் அண்டங்கள் வரையில், மெய்ப்பொருள் முதல் உயிர்கள் வரையில், இயற்கை முதல் எண்ணம் வரையில், ஒன்று கூட்டித் தொகுத்துணரும் பேரறிவே மெய்யறிவாகும்.
- ★ துறவும், உணர்ந்துதெளிந்த அறிவு, உறுதி அயரா விழிப்பு விளங்கிய வழியில் பிறழாத செயல்புரியும் பண்பு, அனைத்துயிர் களின் வாழ்க்கை நல விழைவு, இவையெல்லாம் அடக்கமாகக் கொண்டதே மெய்யறிவாகும்.

## 257. ஐம்புலன்கள்:

- ☆ ஐம்பூதங்களான இப்பிரபஞ்சத்தை அறிய ஐம்பூதங்களான உடலைவிட்டு வெளியேற எண்ணிய உயிர் ஐம்பூதங்களுக் கேற்பவே ஐந்து வாசல்களை வெளியேறுவதற்காக வழிகளை வைத்துக் கொள்கிறது. அப்படி அமைந்தனவே ஐம்புலன்கள்.

## 258. ஐயுணர்வு:

- ☆ மனிதனிடம் தன்னிலையை அறியத்தக்க ஆறாவது அறிவு நிலை கூடியுள்ள போதும் அவன் உடல் ஐயுணர்வு உயிர்கள் மூலமே பரிணாம வரிசையில் தோன்றியதால் ஆறாவது அறிவு வளர்ச்சி பெறும் வரையில் ஐயுணர்வு மயக்கத்தில்தான் வாழ்ந்து வருகிறான்.

இந்த நிலையில் உணர்ச்சி மயமாகிப் புரியும் செயல்களின் விளைவாகப் பலவிதச் சிக்கல்களை வாழ்வில் ஏற்படுத்திக் கொண்டு துன்பங்களை அனுபவிக்கின்றான்.

- ✯ இயற்கையில் உள்ள எல்லாமே நம்மை அறிவதற்கு விளக்கிக் கொண்டே இருக்கிறது. நாம் திருப்பிப் பார்க்கவில்லை. பலன் அளவில் எல்லை கட்டிய உணர்வில் அவ்வப்போது உள்ள தேவை இன்ப துன்ப அனுபவம், உயர்வு, தாழ்வு இவற்றிலேயே நின்று கொண்டு இருப்பதனால் அமைதி நிலைக்கு வந்து அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முடியாததனால், நாம் எல்லைக் கட்டி கொண்டு நமக்கு நாமே கவசம் போட்டுக் கொண்டு இருக்கிறோம்.
- ✯ ஒரு காலியான பாத்திரத்தை நிமிர்த்தித் தண்ணீருக்குள் அழுத்த, அதில் நீர் நிறைந்துவிடும். பின்னர் அதை விட்டு விட்டால், அது நீரில் முழுகி மறைந்து போகும். அதுபோலவே பார்த்தல், கேட்டல், முகர்தல், ஊறு உணர்தல், சுவைத்தல் ஆகிய ஐயுணர்வுகளில் செயலாற்றப் பழகிவிட்ட அறிவானது உணர்ச்சி நிலை எய்தி, உணர்ச்சிமயமாகி தன் உண்மை நிலையினை இழந்து விடுகிறது.
- ✯ தன்னிலையை அறியத்தக்க ஆறாவது அறிவு மனிதனிடம் கூடியுள்ள போதும் ஐயுணர்வு உயிர்கள் மூலமே பரிணாம வரிசையில் அவன் உடல்தோன்றியதால் ஆறாவது அறிவு வளர்ச்சி பெறுகின்ற வரையில், ஐயுணர்வு மயக்கத்தில்தான் அவன் வாழ்ந்து வர வேண்டியிருக்கிறது.
- ✯ ஐயறிவின் வல்லமையோடு, மெய்யறிவின் திறமையானது பிறவிக்குப் பிறவி கூடிக் கொண்டே இருக்கின்றது. தேவையுணர் வாலும் பழக்கப் பதிவுகளாலும் ஏற்பட்டுள்ள ஐயுணர்வின் வளமான செயல்களையோ அனுபவத்தாலும் ஆராய்ச்சியாலும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.

## 259. ஐயுணர்வும் மெய்யுணர்வும்:

- ✰ சுவையாக இருக்கிறது என்ற எண்ண சுவையிலே மயங்கி நிற்பது ஐயுணர்வு. இதற்கு மேலாகப் போனால் உயிருக்குத் துன்பம் என்ற அளவோடு நிறுத்திக் கொள்வது மெய்யுணர்வு ஆகும்.
- ✰ ஐயுணர்வினால் மனிதன் உணர்ச்சிவயப்படுகிறான். மெய்யுணர் வினால் மயக்கம் தெளிந்து ஞானம் பெறுகிறான்.

☆ ஒருவன் ஐயுணர்வை பெற்ற போதிலும், அவன் மெய்யறிவு பெறாது போனால் அந்த ஐயுணர்வும் நம் பிறப்பு, வாழ்க்கை யாவும் பயனற்றதாகப் போய்விடும். இந்தப் பகுத்துணர்வில் தொகுத்துணர்வு பெற வேண்டுமானால் அகத்தவம் பயில வேண்டும். அதைப் பயில பயிலத் தானாகவே மெய்யுணர்வு பெறுவீர்கள். எடுத்து முடிக்கக் கூடிய காரியங்கள் எதுவானாலும், இப்பிறவியில் இயலவில்லை என்றாலும் பிறக்கக் கூடிய குழந்தைகளாவது அதைச் செய்து விடுவார்கள்.

☆ மெய்யுணர்வின் எழுச்சி இயக்கமும், சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஏற்படுத்துகின்ற ஐயுணர்வு வயச்செயலும், ஒன்றை ஒன்று மீறிச் செயலாற்றுகின்றன.

☆ ஐயுணர்வின் உந்துதலுக்கேற்ப மெய்யுணர்வு தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு செயலாற்றுகின்றபோது காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாா்ச்சரியம் ஆகிய ஆறு துர்க்குணங்களும் ஏற்படுகின்றன. ஆனால், மெய்யறிவு நிலைக்கேற்ப ஐயுணர் வானது தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு செயலாற்றும் போதோ அறநெறி மலர்ந்த நிலை பெறுகிறது.

☆ அறிவின் நிலை உணர்ந்து ஆராய்ச்சி மேம்பட்டு உடலியக்கத் தேவைகளை செம்மைப்படுத்தி, மெய்யுணர்வு நிலைக்கு ஐயுணர்வைக் கட்டுப்படுத்தி, வாழ, அறிந்து கொண்டவன் தான் அறிஞனாவான்.

☆ இந்தப் பிறவியிலும் சரி, தொடர்ந்து வரக்கூடிய பிறவிகளிலும் சரி, குழந்தைகளுக்கும் சரி, உங்கள் குடும்பங்களுக்கும் சரி, உலகத்திற்கும் சரி, ஐயுணர்வின் வழியிலேயிருந்து அனுபவிக் கின்றபோது பற்று பாசம் உண்டாகும். மெய்யுணர்விலே இருந்து அனுபவிக்கின்ற போது பற்று பாசம் நீங்கி விடுகிறது. பிறவியினுடைய நோக்கத்தைப் புரிந்து காரியம் செய்கின்ற போது பற்று கொள்வது விலகி விடுகிறது.

## 260. ஐந்து பழி:

✭ தேவைக்கு மேல் அதிகமாகத் துய்த்த தீங்குகளே ஐந்து பழி வியாதி ஏழ்மை.

## 261. ஒத்துப்போதல்:

* நாம் எல்லோரோடும் ஒத்துப்போகக் கூடிய அளவில் நம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும். எல்லாரோடும் ஒத்துப் போக வேண்டும். எல்லாருடைய தேவைகளையும் ஒத்துக் கொள்ள வேண்டும். தேவையில் நீதி - தேவையில் தரம் - தேவையில் அளவு - தேவையில் காலம் இந்நான்கிலும் பிறருடைய கருத்துக்கு ஒத்துப் போகும் அளவுக்கு நாம் மனவிரிவு கொண்டு விட்டால் அலுவலக உத்தியோகத்தினராக இருந்தாலும் சரி கடைநிலை ஊழியராக இருந்தாலும் சரி எந்த இடத்திலும் பிணக்கு இருக்காது.

## 262. ஒத்துழைப்பு:

* அறிவிலே தெளிவும் பிறருடைய நோக்கமும் தெரிந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டும்.

## 263. ஒப்புக்கொள்ளுதல்:

* நமது பொறுப்புணர்ச்சி, கடமை இவற்றின் கூறாக உலகையும் மக்களையும் நம்மோடு வாழ்வில் தொடர்பு கொள்வோர்களையும், அவர்கள் தன்மை, செயல் இவைகளையும், அவை அமைந்துள்ள வாறு ஒப்புக் கொள்ள வேண்டும்.

## 264. ஓமம் – தருமம் – தவம்:

* கிருமி நாசம், ஓமப் புகையாலுண்டாம். தருமமோ பொருள் நிரவும் அன்புச் செய்கை. தவம் யோகம் தனையறியத் தகுந்த பாதை.

## 265. ஒன்றுமில்லாதது:

* ஒன்றுமில்லா ஒன்று இருள் பூர்ணம். மௌனம் உள்ளுணர்ந்த ஒடுங்கிநிற்கும் நிலையைப் போன்று ஒன்றுமல்லா ஒன்றுக்கு ஆதியில்லை. ஒலி - வெளிச்சம் - இயக்கம், அணு, அதன் பூரிப்பு, ஒன்றுமில்லா ஒன்று, அந்த நாலானாலும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாததாகும். ஒன்றுமில்லா ஒன்றின் இரகசியத்தைக் கண்டால் உண்டு என்பது இல்லை என்பது இரண்டும் ஒக்கும்.

## 266. ஒழுக்கம்:

- ✶ தம்பதிகள் அல்லாமல் ஆண்கள் பெண்கள் தனித்து மறு பலரோடிருக்க மாட்டார் வாழ்க்கையிலே ஏற்படாத - வரம்பு கட்டும் ஒழுக்கமிது ஆய்ந்து பாரீர்.
- ✶ உயிர்கட்குத் துன்பமிலா வகையிலாற்றும் உயர்ந்த செயல் ஒழுக்கமாகும்.
- ✶ வாழ்விற்கு உயர்வு அளிக்கும் பழக்கங்கள் ஒழுக்கம் எனப்படும்.
- ✶ ஒழுக்கங்களில் கற்பு ஒழுக்கமே தலையாயது.
- ✶ கற்பொழுக்கம் தவறினால் ஏற்படும் விளைவு தனி மனிதன் வாழ்விலும், சமுதாய வாழ்விலும் எதிர்கால மக்கள் வாழ்விலும், மனோதத்துவ சுகாதாரத் துறைகளிலும் பல கேடுகளைப் பயப்பதை ஒவ்வொருவரும் கூர்ந்து ஆராய்ந்து ஞாபகத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.
- ✶ மனித இனமானது வாழ்விலே தனிமனிதன் கடமை, கூட்டு வாழ்வின் கடமை என்ற இரண்டையும் சரிவர நிறைவேற்றி வருவதற்கு ஒழுக்கம்தான் மிகவும் சிறந்த பாதையாகும்.
- ✶ வெகுகால அனுபவத்தால் ஆராய்ச்சியால் அறிவின் உயர்வில் கண்ட விளக்கமே ஒழுக்கம் ஆகும். மனித வாழ்க்கையைச் சீர்படுத்தும் செம்மைப்படுத்தும் ஒரு சிற்பி என்றும் சொல்லலாம் ஒழுக்கத்தை.
- ✶ எண்ணம், சொல், செயல்களின் விளைவால், தனக்கோ, உணர்ச்சிக்கோ, கேடு உண்டாகும் எனில் அதைச் செய்யக் கூடாது என்று அறிஞர்கள் ஆராய்ந்து கண்ட முடிவுதான் பலவிதமான ஒழுக்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.
- ✶ ஒவ்வொரு மனிதனோடும் சமுதாயம் ஒரு சங்கிலி போல் பிணைப்புற்று இருக்கிறது. யாரொருவருடைய செயலும் மற்வர்களுக்குப் பாதகமாக அமையாமல் எல்லோருக்கும் நன்மையாக அமையும்படிப் பார்த்து பிறரை மதித்து வாழ வேண்டும். இதுதான் ஒழுக்கம்.
- ✶ ஏதேனும் ஒருவகையில் ஒழுக்கத்தில் தவறிய ஒருவர், ஒழுக்கத்தின் உயர்வையும், சிறப்பையும் எடுத்துக் கூறுதல், தகாது என்று சிலர் நினைக்கிறார்கள். அது சரியல்ல. ஒழுக்கம்

தவறியதால் தான் அடைந்த அனுவத்தை ஆதாரமாகக் கொண்டு, அத்தகைய செயலில் மற்றவர்கள் ஈடுபடாமல் தடுக்கும் பெரு நோக்கத்தில் அவர்கள் ஒழுக்கத்தைப் பற்றி பேச உரிமை உடையவர்களே.

✶ தான் ஒழுக்கத்தில் தவறியோ தவறாமலோ இருந்த போதிலும் காலத்தின் போக்கும் காரணமும் அறியாமல் ஒரு ஒழுக்கத்தை குறை கூறுவது மன்னிக்க முடியாத தவறு ஆகும்.

✶ ஒருவர் வாழ்வை இன்னொருவர் துன்புறுத்தாததாக சிரமப்படுத் தாததாக குறுக்கிடாததததாக உதவி செய்து கொண்டே வாழக்கூடிய முறை. அது தான் இசைபட வாழ்தல். அதுதான் ஒழுக்கம். இசைபட வாழ்தல் என்பது ஒழுக்கம்.

## 267. ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள்:

✣ ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள் உள்ளுணர்வு பெற்றோர்கள் உடல் நலமும் மனவளமும் உயர் அறிவும் பெறுவார்கள். அழுக்காறு, அவா, வெகுளி, அனைத்துக் களங்கம் மறையும் ஆன்மீக உணர்வு மிகும். அறிவறியும் பேறுகிட்டும். வழுக்காமல் நந்நெறியில் வாழ்வார்கள். அவர் தொண்டு வாழ்மக்கள் அனைவர்க்கும் வழி காட்டியாய் அமையும். பழக்கத்தால் நல்வினையே ஆற்றுவதால் உலகுக்கு பயனுடைய செயல் பலவும் எளிதாகும் அவர் வாழ்வில்.

## 268. ஒழுங்கமைப்பு:

✷ வெளியே உள்ள ஒழுங்கமைப்பும் அழகும் உள்ளத்தை நிறைவாக அமைதியுறச் செய்யும்.

✷ எந்த இயக்கமும் தனியாகத் துண்டுபட்டு நடைபெறுவதில்லை. பேரியக்க மண்டலம் என்ற கோர்வையில் அமைந்துள்ள இயற்கை ஒழுங்கமைப்பை நாம் காரண - விளைவு நியதி என்று கூறுகிறோம்.

## 269. ஒளி விளக்கு:

✤ உண்மையின் உணர்வாகப் பெற்று அருள்பேராற்றலின் அன்புக் குரலைக் கேட்கும் வல்லமை பெற்றவர்கள் - விழிப்புநிலையோடு ஆன்மீகப் பயணமாகிய அறநெறி வாழ்க்கையினைத் துவங்கு

கிறார்கள். ஆன்மீக வழி அமைந்த அறநெறி வாழ்வானது - அதைக் கடைப்பிடிப்பவருக்கு அமைதி, நிறைவு, பேரின்பம் இவற்றை அளிப்பதோடு சந்ததியினர்கள் மூலமாகவும் சமுதாயம் மூலமாகவும் தொடர்ந்து வரும் பற்பல தலைமுறையினருக்கும் நல்ல உயர் பலன்களை நல்குகிறது. அத்தகைய அறநெறி வாழ்வு வாழும் ஆன்மீகப் பெரியார்கள் மனித இனத்தின் ஒளி விளக்குகளாகத் திகழ்கிறார்கள்.

## 270. ஒற்றுமை:

- ✷ உலகில் ஒற்றுமையும் உலக சமாதானமும் வேண்டும்
- ✷ உலகம் திருந்தி உலக மக்கள் ஒன்றாய் வாழ வேண்டும்.
- ✷ பொது மொழியால் உலகம் ஒன்றாகும்.
- ✷ ஒன்றல்லவோ மனித இனம் பேதமெங்கே?
- ✷ நாம் உடலால் வேறுபட்டு இருக்கின்ற போதிலும் உள்ளம் என்ற நிலையால் நமக்கும் தெரியாமலே உலக மக்கள் அனைவரோடும் ஒன்றுபட்டே இருக்கின்றோம்.
- ✷ நாம் சிந்தனை செய்யும்போது நமது அறிவின் கூர்மைக்கும் வேகத்திற்கும் ஏற்ப பல அறிஞர்களோடு ஒன்றுபடுகிறோம். நமது அனுபவத்திற்கும் எட்டாத விஷயங்கள் பலவற்றை நாம் அறிந்து கொள்வதே இதற்குச் சான்று.
- ✷ நாம் கோபம் அடையும்போது பல முரடர்களோடும் முட்டாள் களோடும் ஒன்றுபடுகிறோம். நாம் விரும்பாத நாமே வெட்கப் படத்தக்க நாமே வருந்தத்தக்க சில செயல்களை நாம் கோபத்தின்போது செய்து விடுவதே இதற்குச் சான்று ஆகும்.

## 271. ஒருமைத் தத்துவம்:

- ☼ உன்னுள்ளே நானடங்க என்னுள்ளே நீ விளங்க உனது தன்மை ஒளிர எனதுள்ளம் தூய்மை பெற்றேன்.
- ☼ பழுத்த நிலை வரும்வரையில் நீ நான் என்போம் - பதமடைந் தோம் ஒன்றானோம் பரமானந்தம்.
- ☼ வேதத்தை யான் படித்ததில்லை. ஆனால் வேதத்தின் உட் பொருளாய் என்னைக் கண்டேன். வாதத்தில் யான் கலந்து

கொண்டதில்லை. வாதிப்போர் அனைவருக்கும் பொருளாய் உள்ளேன். போதித்த அண்டங்கள் உயிர்கட்கெல்லாம் பிறப் பிமாய்க் கருப்பொருளாய் என்னைக் கண்டேன். சோதிப்போர் புலனறிவால் என்னைக் காணார் சுயநிலையை அகத்துணர அவன் நான் ஒன்றே.

## 272. ஓர் உலக ஆட்சி

- இயந்திர - விஞ்ஞான உலக மக்கள் எண்ணிக்கை இவை மிகுந்த இக்காலத்தில் அந்தந்த நாட்டவர் தம் எல்லை காக்க - அடுத்து நாட்டை தாக்க - எந்தச் சமயத்திலுமே பயந்து கொண்டே இருப்பதெனில், மனிதரது வாழ்வென்னாகும்? இந்நிலையை மாற்றி அறத்தைக் காக்க ஏற்படுத்த வேண்டும் ஓர் உலக ஆட்சி.
- பொருள், தேவை, முழுமை பெற - பாதுகாப்புடன் வாழ அருள் நெறியில் ஒழுக்கமுடன் அனைத்துலகும் மனிதன் இருள் ஒழிந்து - இயற்கையதன் இனிமை நன்றாய்த் துய்க்க - பொருள் நிறைந்த ஒருலக அரசைப் பெற்றுய்வோம்.
- ஓர் உலக ஆட்சியினால் யுத்தபயம் ஒழிந்துவிடும். போர் ஒழிந்தால் வீரர்களும் பொருட்களும் நற்சேவைக்காகப் பார் முழுதும் ஏழ்மைபோம். பண்பாடு சிறந்தோங்கும். சீர்திருத்த வாழ்வு அப்போ சித்திக்கும் சிந்திப்பீர்.

## 273. ஓய்வு:

- ஒய்வு நாட்கள் மாதம் இரண்டே ஆகும். ஒன்று சந்திரன் முழுதும் ஒளி வீசும் நாள். தேய்ந்து ஒளி அற்றிருக்கும் நாள், அத்தினங்களில் ஓர் வேளை ஊண் - தியானம் கொள்வார்.

## 274. ஒவ்வாமை:

- மனிதன் பல தடவை உணவை உட்கொண்டு இருக்கிறான். அதன் அளவும் முறையும் சரியாக இருந்தால்தான் அது உடலில் நல்ல முறையில் ஜீரணமாகி அவனது வாழ்வுக்கு அந்த உணவானது வளத்தை அளிக்கும். அளவும் முறையும் பொருந்தாத விதத்தில் மாறி விட்டால் நல்ல முறையில் பயன்படாது என்பதுடன், மேலும் உடலியக்கத்திற்கு ஒவ்வாமை ஏற்படும்.

## 275. ஓவியம்:

✢ இயற்கையாகப் பூத்துக் குலுங்குகின்ற செடிகளையும் அவைகளிலுள்ள நிறங்களையும் பார்த்து இன்பங்கண்ட மனிதன் அதே போன்று பல வர்ணங்களைத் தோற்றமளித்தும் அவற்றைக் கொண்டு உருவங்களை எழுதிப் பார்த்தும் அச்செயலில் திறமையைப் பெற்று ஓவியம் என்ற கலையைத் தோற்றுவித்தான்.

## 276. கடமை:

✮ அருள் வாழ்வுக்கென என்னை ஒப்படைத்துவிட்டேன். எனது கடமையை முடிந்த வரையில் ஆற்றியே ஆக வேண்டும். எனது உடலை எனக்குச் சொந்தமான கருவியென்று நான் கருதுவதில்லை. சமுதாயத்தால் வளர்க்கப்பட்ட காக்கப் பெற்று வருகின்ற ஒரு பொது நிதியாகவே நான் என்னைக் கருதுகின்றேன். அதனை முடிந்தவரை நல்ல முறையில் பேணிக்காக்க வேண்டியது எனது கடமைகளில் தலையாயது.

✮ தான் வாழ்வதற்காக உதவியுள்ள சமுதாயத்திற்கு பிரதி பலனாக ஒவ்வொருவரும் கட்டாயமாகச் செய்ய வேண்டியவை என்று வாழ்க்கை அனுபவத்தில் தேர்ந்த அறிஞர்களால் வரையறுத்துக் கூறப்பட்ட உடல், குடும்பம், பந்து, ஊர், தேசம், உலகம் என்று அறுவகை நலன்களுக்காகவும் புரிய வேண்டிய செயல்கள் கடமை எனப்படும்.

✮ நாம் இந்த உலகத்திற்கு வந்தோம். ஒரு நாள் இதைவிட்டுப் போகப் போகிறோம். இந்த பூமியில் நம்முடன் எதுவும் கொண்டு வரவில்லை. நாம் புறப்படும் பொழுது எதுவும் எடுத்துச் செல்ல முடியாது. ஒவ்வொருவருடைய தன்மைக்கேற்ப சூழ்நிலை சந்தர்ப்பங்களால் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை ஏற்படுகிறது. ஒவ்வொரு செயலிலும் எந்த அளவு நன்மை செய்ய மடியும் என்பதை சிறிது எண்ணிப் பாருங்கள்.

✮ நாம் எங்கு எவ்வாறு என்ன நிலையில் இருக்கிறோம். இவற்றைக் கொண்டு பிறர்க்கு என்ன செய்ய முடியும் என்ற அன்போடு அகம் நோக்கி நின்று முடிவு கண்டு நமது கடமையை இயன்றவாறு செய்வோம்.

✮ அவர்களது உடலாற்றலையும் அறிவாற்றலையும் அந்தந்த நேரத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றபடி குறைவில்லாமல் சமுதாயத்

திற்கு அர்ப்பணமாகச் செலவிடல்தான் கடமை. உடலைக் கொண்டுதான் இந்தக் கடமையை ஆற்ற வேண்டும்.

- ✯ உங்கள் மனதை கடமையில் செலுத்துங்கள். உங்கள் முயற்சிக்கு அப்பால் எது நடந்தாலும் அது இறைவனின் விருப்பம் என்று எடுத்துக் கொள்ளுங்கள். அதுதான் இயற்கைச் சட்டம். நாம் பிறப்பதற்கு முன்பே அந்த ஆற்றல் இருந்து கொண்டிருக்கிறது. நாம் இறந்த பின்பும் அந்தப் பேராற்றல் இருந்து கொண்டிருக்கும். இதில் நாம் கவலைப்படுவதற்கு எண்ண இருக்கிறது. கவலையை கவலைப்படுவதற்கு விட்டுவிடுங்கள்.
- ✯ நாம் வாழுங்காலத்தில் நமக்காகவும் சமுதாயத்திற்காகவும் ஆற்ற வேண்டிய பொறுப்புக்களை பெற்றிருக்கிறோம். அவற்றை நன்குணர்ந்து நல்ல முறையில் நமக்கும் மற்றவர்களுக்கும் திருப்தி தரும் வகையில் நம் கடமைகளை செய்ய வேண்டும். அதன் பிறகு மனம் அமைதியடையும். உங்கள் பிரச்சனைகளை தீர்ப்பதற்குரிய வகையில் புதுப்பிரச்சனைகளைமேலும் ஏற்படுத்தாத வகையில் பேராற்றல் பெற்று உங்கள் மனம் சிறந்து விளங்கும்.
- ✯ சமுதாயத்தில் நீ ஒரு பொறுப்பை ஏற்றுத் தொழில் புரிவதால் உன்னை வளர்த்து வாழவைத்த சமுதாயத்திற்கு நீ கடனைத் தீர்க்கிறாய். குழந்தைகளை ஒழுக்கத்திலும் கல்வியிலும் சிறப் படையச் செய்வதும் சமுதாயத்திற்கு ஆற்றும் ஒரு சிறந்த கடமைதான்.
- ✯ வாழ்க்கைத் தேவைகளைப் பெறவும் அளவு முறையொடு அனுபவிக்கவும் அறியாதவர்களுக்கும், இயலாதவர்களுக்கும், இயன்றவர்களும், தெரிந்தவர்களும் உதவி செய்ய வேண்டியது கடமை எனப்படுகிறது.

## 277. கடன்:

- ◊ பிறர் துன்பதைதயும் தம் துன்பம் போல எந்நாளும் பேணி அதனால் பெறும் அறனை அறிதல் சான்றோர் கடனாகும்.
- ◊ தான் அடைந்துள்ள உடல் வளம், கல்வி, தொழில், திறம், செல்வாக்கு ஆகிய நான்காலும் நலமும் வளமும் ஓங்கும் வகையில் தொண்டாற்றிச் சமுதாயத்திற்கு அளிக்க வேண்டிய கடனைத் திருப்பித் தந்து கொண்டிருக்க வேண்டும். கடன் திருப்பம் கருத்தே, கடமை எனும் சொல்லாக கடன் - மை - கடமை என்று வழக்கில் வந்துள்ளது.

♢ நாம் ஒவ்வொருவரும் சமுதாயத்தால் உருவாக்கப்படுகிறோம். காக்கப் பெறுகிறோம். வாழ்வளிக்கப் பெறுகிறோம். ஒவ்வொருவர் வாழ்விலும் ஒவ்வொரு நாளிலும் எண்ணிறந்த மக்களின் உழைப்பும் உதவியும் பயனாகின்றன. ஒரு பிடி உணவை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தால் அது எத்தனை மக்களின் உழைப்பால் நம் கைக்கு வந்துள்ளது எனும் உண்மை விளங்கும். இது போன்று உடை, உறைவிடம் மற்றும் பல வசதிகளும், பல மக்கள் உழைப்பாலும், உதவியாலும், ஒருவருக்குக் கிடைப்பது விளங்கும். எனவே ஒவ்வொரவரும் சமுதாயத்திற்குக் கடன்பட்டவரேயாவார். இந்தக் கடனை எவ்வாறு தீர்ப்பது?

## 278. கடவுள்:

✺ கடவுள் எனப்படுபவனே மனிதனானான். கருத்தியங்கிக் கருத்துயர்ந்து, கருத்தறிந்தான கடவுளாய் அனைத்தையுமே கண்டுவிட்டான் காண்பவனே ஆதியந்தமாகி நின்றான். கடவுள் நிலையறிந்தவனே அறியாதோர்க்குக் கருத்துணர்த்தும் நூல்கள் பல எழுதிவைத்தான். கடவுள் இரகசியம் அதனை வெளியாய்க் காட்டும் கடமையே சிறந்த தெனக் கண்டான் ஞானி.

✺ கடவுளைக் காண முடியுமா? என்றால் காண முடியும் எந்தக் கண்ணால் பார்க்க வேண்டுமோ எந்த நோக்கத்தோடு பார்க்க வேண்டுமோ அப்படிப் பார்த்தால் காணலாம்.

✺ ஒரு செயல் செய்கிறோம். எந்தச் செயல் செய்தாலும் ஒரு விளைவு இருக்கிறதல்லவா? கையைத் தட்டினேன். சப்தம் நான் செய்தேனா ஒலியை நான் செய்தேனா நான் கொண்டு வந்தேனா? இல்லவே இல்லை. இருப்பில் இருந்து என்னுடைய செயலினால் குவிந்தது காதுகேட்கின்ற அளவுக்குக் குவிந்தது. அவ்வளவுதான் சொல்லலாம். ஆகவே இறைவன் இல்லாத இடமே இல்லை.

## 279. கடவுள் வணக்கம்:

♀ நீ செய்யும் செயலுக்குத் தக்கவாறு பொருளுக்குத் தக்கவாறு உனக்கு இன்பமோ துன்பமோ வெகுமதியாகவும் தண்டனை யாகவும் கொடுத்துக் கொண்டே இருப்பது எதுவோ அதுதான் எல்லாம் வல்ல இறை. ஆகவே அந்த இறைவனை உன்னுடைய செயலின் விளைவாகக் காலையிலிருந்து மாலை வரையில்

பார்த்து மதிப்புக் கொடுத்து வா. அதுவே கடவுள் வணக்கம். அதைவிட்டு தனியாக ஒரு கடவுளைத் தேட வேண்டாம்.

## 280. கடவுளுக்கு மரியாதை:

* எல்லாம் வல்ல இறைவன்தான் உணர்ச்சி நிலையில் எல்லா உயிர்களிடத்திலும் இருக்கிறான் என்பதை தெரிந்து கொண்டால் உயிர்களுக்கு நேரத்திற்குக் கொடுக்க வேண்டிய உணவு அளவோடு கொடுக்க வேண்டிய வேலை, அந்தந்த ஜீவனுக்கு கொடுக்கக் கூடிய கருணை இவையெல்லாம் கொடுக்கப்பட வேண்டும். அதுதான் நாம் கடவுளுக்குக் கொடுக்க வேண்டியது. கடவுளுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதை அவ்வளவுதான்.

## 281. கடவுளைத் தேடாதே:

❖ ஒரு கடவுளும் வேண்டாம். ஏனென்றால் எந்தச் செயல் செய்தாலும் அங்கே விளைவு கடவுள் செயல்தான். அது இயற்கையினுடைய விளைவுதான். நீ செய்யும் செயலுக்குத் தக்கவாறு பொருளுக்குத் தக்கவாறு உனக்கு இன்பமோ துன்பமோ, வெகுமதியாகவும், கொடுத்துக் கொண்டே இருப்பது எதுவோ அதுவேதான் எல்லாம் வல்ல இறை. ஆகவே அந்த இறைவனை உன்னுடைய செயலின் விளைவாகக் காலையிலிருந்து மாலை வரையில் பார்த்து மதிப்புக் கொடுத்து வா. அதுவே கடவுள் வணக்கம். அதைவிட்டுத் தனியாக ஒரு கடவுளைத் தேட வேண்டாம்.

## 282. கட்சி:

⌘ கட்சி என்றால் சமுதாயத்தில் சிறுபான்மையான மக்கள் கூட்டமாகும். இந்தச் சிறுபான்மையோர் ஆட்சிக்கு வந்தால் பெரும்பான்மையோராக உள்ள சமுதாய மக்கள் அனைவரையும் சட்டத்தின்மூலம் தங்கள் விருப்பம்போல அடக்கியாள வாய்ப்பாக அமைந்துள்ளது.

⌘ குடியாட்சி முறையில் மக்கள் நல்ல நோக்கும் அடிப்படை உரிமைப் பாதுகாப்பும் சட்டங்கள் மூலமாக அமைந்தாலும், சட்டம் செய்பவர்களுக்குப் போதிய தகுதியை அதற்குரிய கல்வியின் மூலம் அமைத்து நடத்தவில்லை. உதாரணமாகக்

குடியாட்சி முறை என்றால் எல்லா மக்களும் சமம் என்ற உணர்வு தொக்கி நிற்கிறது. இந்தப் புனிதமான ஆட்சி முறையில் கட்சிகளின் ஆட்சிமுறையை நுழைத்து விட்டிருக்கிறார்கள்.

## 283. கருத்து:

☯ ஒரு சொல்லில் உள்ள ஒரு கருத்து எத்தகைய பயன்தரும் என்பது தான் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய தெளிவே தவிர அக்கருத்தை அறிவிக்க எழுத்துக்களோ கருவிகளோ முக்கியம் இல்லை.

## 284. கருத்துப் பிணக்கு:

☸ எந்த இடத்தில் ஐவகைப் பற்றுக்களால் அறிவு குறுகி, மயங்கி தன்பிறவி நோக்கத்தையும் வாழ்வில் நெறியையும் மறக்கின்றானோ, அதே நேரத்தில் மனிதனிடம் அமைந்துள்ள அடித்தள அறிவாற்ற லாகிய பேரறிவு குறுகி நிற்கும் புற அறிவை நேரான வழிக்கு திசை திருப்புகிறது. அப்போது விருப்பங்கள் செயல்கள் இவற்றில் தடைகள் விளைந்து வாழ்வில் மாற்றங்கள் தோன்றுகின்றன. அதுவே துன்பமாக சிக்கலாக கருத்துப் பிணக்காக பெற்று புறமனம் குழப்பமடைகிறது.

## 285. கருவிலே திரு:

◆ வெளியாம் அருட்பேராற்றல் பரம அணுவாகி விண்ணாகி இயங்கிப் பெற்றவையனைத்தும் கருமையப் பெட்டகமாக உடலில் அமைந்துள்ளமையால் ‘உள’ அரணாம். மனிதனது அனுபவச் சேகரிப்பு அரணாகத் தக்கசமயத்தில் உதவுவதை இச்சொற் குறிப்பால் உணரலாம். அன்ன மனோமய கோசங் களேயன்றி, விஞ்ஞானமய கோசமும், மானிடப்பிறப்பின் சிறப்பம்சத்தால் பிரபஞ்ச ரகசியங்களும் கருவிலே திருவாக என்றும் உள்ளமையை அறியலாம்.

## 286. கருமையம்:

⁕ கருமையம் என்னும் தெய்வீகப் பெட்டகத்தை எவ்வளவு தூய்மையாக நாம் வைத்திருக்கிறோமோ அவ்வளவு அன்போடும் கருணையோடும் அமைதியோடும் நாம் வாழ முடியும்.

- உயிரினத்தின் ஒவ்வொரு செயலும் அனுபவமும் காந்த அலையாக சுருக்கப்பட்டு கருமையத்தில் தொகுத்து வைக்கப் படுகிறது. இது அந்தத் தனி நபரின் பண்பேற்றக் குறிப்புப் பெட்டகமாகும். இவ்வாறு தொகுத்து வைக்கப்பட்ட பதிவுகள் அவருடைய வாழ்நாள் முழுவதும் எண்ணங்களாகவும் நினை வாற்றலாகவும் பிரதிபலித்துக்கொண்டேயிருக்கும். மேலும் இவை ஒருவரின் சந்ததியினர்களுக்கும் மரபுத் தொடராகச் செலுத்தப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

- கருமையம் அறியாமல் அறிவினை அறிவதோ மாந்தராக வாழுகின்ற மாண்புடைய எவருக்கும் மாற்றுவழி தத்துவத்தில் விஞ்ஞானத்தில் இல்லையே.

- பிரபஞ்ச இயக்கம் அத்தனையும் கருமையத்தில் பதிவாகியுள்ளன. உலகில் வாழுகின்ற சிற்றுயிர்கள் முதற்கொண்டு மனிதன் வரையில் உள்ள எல்லா ஜீவ இனங்களின் தரம் திறம் இவற்றைக் காக்கும் மறைபொருள் பெட்டகமே கருமையம் ஆகும்.

- பிறப்புக்கும் வாழ்வுக்கும் இறப்புக்கும் இயக்க நிலையாக உள்ளது கருமையம்.

- காந்தச் சுழலில் மைய ஈர்ப்பு உயிரியக்கமான சூக்கும உடலின் இயக்க மையம், விந்து நாதக் குழம்பின் இருப்பு மையம், மூன்றும் ஒன்று கூடிய வியக்கத்தக்க ஓர் உயிரின மறைபொருள் புதையல்தான் எந்த உயிரினத்திற்கும் மையப் பகுதியில் அமைந்தள்ள கரு மையம் ஆகும்.

- கருமையம்தான் ஆன்மா சீவன். அகம் உள்ளம் உயிரினக் கருவூலம் - நெஞ்சம் என்ற சொற்களால் வழங்கப்பெறுகின்றது.

- கருமையத்தில் அடங்கியுள்ள ஆற்றலையும் அதன் மதிப்பையும் எவராலும் மொழியைக் கொண்டு உணர்த்திவிட முடியாது.

- மனிதனுடைய கருமையத்தில் இறைநிலையில் பரிணாமம் இயல்பூக்கம் எனும் முறையான நிகழ்ச்சிகளால், இறை நிலையி லிருந்து தொடங்கி இன்று வரையில் நிகழ்ந்த அத்தகைய தன்மை வாய்ந்த காந்த அலைத் திவலைகளாகச் சுருங்கி அமைந்துள்ளன.

- தக்க காலத்தில் தேவையாலும் மன இயக்க நிலையாலும் சூழ்நிலையாலும் கருமையத்துள் சுருங்கியிருக்கும் ஒவ்வொன்றாக எண்ணங்களாகவும் செயல்களாகவும் உருவங்களாகவும் வெளிப்படும்.

* பேராற்றல் அமைந்த தெய்வீகத் திருவிளையாட்டின் சூட்சும அரங்கமே கருமையம் ஆகும்.

* கரு மையத்தில் காலம், தூரம், பருமன், இயக்கம் என்ற நான்கு கணக்குகளுக்கும் எட்டாத இறைநிலையிருந்து இன்று நாம் காணும் விரிந்த பேரியக்க மண்டலத்தில் நிகழும் கோடானு கோடி இயக்கங்களையும் பிரதிபலிக்கும் காந்தக் கண்ணாடியாகவும் விளங்கும் தெய்வீகத் திருநிதியே கரு மையம் ஆகும்.

* கருமையம்தான் ஒருவரது தற்போதைய வாழ்க்கையில் எற்படும் உணர்வுகளுக்கெல்லாம் உற்பத்திக் கூடமாகவும் கருத் தொடராக வந்த பதிவுகளுக்கெல்லாம் களஞ்சியமாகவும் விளக்கு கிறது. ஒவ்வொருவரும் கருமையத்தின் பெருமையை தெரிந்து கொள்வதோடு அதை மதிக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும்.

* கருமையத்தின் தன்மைகள்தான் ஒரு சீவனின் முற்பிறவிகள் பலவற்றுக்கும் பின்பிறவிகள் பலவற்றுக்கும் கருத்தொடர் விளைவாகத் தொடர்புற்றிருக்கின்றது.

* வாழ்க்கையை வாழ்வதற்கும் இன்பம் அமைதி பேரின்பம் ஆகிய வற்றை அனுபவிப்பதற்கும் அறிவின் முழுமை பெறுவதற்கும் கருமையத்தை எப்போதும் வளமாகவும் தூய்மையாகவும் வைத்துக்கொள்ள வேண்டும்.

* பன்னெடுங்காலமாக இயற்கையின் ஒவ்வொரு அதிசயமும் மனிதனுடைய கருமையத்தில் சுருக்கி இருப்பாக வைக்கப் பட்டிருக்கிறது.

* நம் வினைப்பதிவுகள் அனைத்தும் புதையல் போல உயிர் எனும் இயற்கை கம்ப்யூட்டரில் அடங்கியுள்ளன. காலத்தால் மலரும் அப்பதிவுகளின் வெளிப்பாடுகளே எண்ணங்கள் செயலார்வம் நோய்கள் இன்ப துன்பங்கள் யாவுமாகும்.

* பேரியக்க மண்டலத்தின் மூலமான எல்லாம் வல்ல இறை நிலைக்கும் அதன் பரிணாமத்தின் உச்சக்கட்ட நிலையிருக்கும் மனித மனத்துக்கும் இணைப்பு இயக்க மையமாக உள்ள மனிதனிடம் அமைந்துள்ள சீவகாந்தம் கரு மையம்.

* கருமையம் இயற்கையின் மூலதனக் கருவூலம்.

* கருமையமே இயற்கையின் முத்திறமும் இணைந்து செயல் புரியும் தொழிற்சாலை.

- கருமையத்தில் விளையும் சிறப்புகள் அத்தனையும் வெளிக்கொண்டு வரும் வாயில்தான் மனித மூளை. செயல் வீரன்தான் நமது மனம். மனதைக் கொண்டு உருவாக்கும் எண்ணங்கள், உடல் கருவிகள் மற்றும் புலன்களைக் கொண்டு செய்யும் செயல்கள் இவையனைத்தையும் காந்த அலைகளாகச் சுருக்கிக் கொண்டு வந்து கருமையத்தில் சேர்த்து இருப்பு வைப்பது இயற்கையெனும் பேராற்றலின் செயல்களே!
- மனித மனம், செயல் புரிகின்றது. இறைவனாகிய இயற்கை அத்தனையும் அலைவடிவில் இறுக்கிச் சுருக்கிப் பதிவு செய்த கருமையத்தில் இருப்பு வைக்கிறது.
- செயல்விளைவு வழுவாத நீதி மன்றத்தைக் கொண்ட கரு மையம் என்னும் ஆட்சி மன்றத்தை அமைப்பாகக் கொண்ட மனிதன் விளைவு அறிந்த விழிப்புடன் செயல்புரிந்தால் அவன் வாழ்வில் துன்பமே தோன்றாது.

## 287. கருமையப் பதிவுகள்:

- மூளை செல்களுக்கு வந்து சேருகின்ற எந்த அலையானாலும் அது உடனே கரு மையத்தால் ஈர்க்கப்பட்டு உடலில் இருக்கும் சீவகாந்த ஆற்றலின் காரணமாக இருப்பாக வைக்கப்படுகிறது.
- தேவையின் காரணமாகவோ வேறு தூண்டுதல் காரணமாகவோ அல்லது வேறு ஏதாவது காரணத்தாலோ மன அலைச்சுழல், அதே அலைவரிசை ஏற்படும்போது மூளை செல்கள் ஏற்கனவே அந்த அலை வரிசையில் விளைந்த பதிவுகளை விரித்துக் காட்டும். அப்படி விரித்துக் காட்டப்படும்போது பார்ப்பவர் பழைய அனுபவங்களையும் உணர்வுகளையும் எண்ணங்களாக நினைவு கூர்ந்திட முடியும்.

## 288. கலாச்சாரம்:

- ஆங்கிலேயர்கள் நமது நாட்டுக்கு வந்தபோது பார்த்தார்கள். நல்ல அழகான சொல்லாக இருக்கிறது நாம் உச்சரிக்கலாம் என்று நினைத்தவர்கள் இடையிலேயுள்ள நெடிலை விட்டு விட்டு ‘கல்சர்’ என்று தங்கள் அகராதிக்கு எடுத்துச் சென்றார்கள்.
- கலாச்சாரம் என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு பார்த்தோ மானால் எப்பொழுதுமே இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக

மாற்றி அறிவினாலோ கைத்திறனாலோ உருமாற்றி அழகு படுத்தியே துய்த்து வாழக்கூடியவர்களாகவே நாம் இருக்கிறோம்.

## 289. கவலை:

❄ கவலையை விட்டு கடமையில் நில்

❄ கவலை என்பது ஒருவகை உள்நோய். தனது இயலாமையை உணர்ந்து நினைத்து அல்லது கற்பித்துக்கொண்டு வருந்தி அமைதி இழந்து இயங்கும் மனோநிலைதான் கவலை.

❄ தவறான கணிப்பால் ஏற்படுகின்ற ஓர் மன நோய்தான் கவலை.

❄ நிகழ்ச்சிகளுடனோ அல்லது பொருள்களுடனோ எந்தத் தொடர்பும் இல்லாமல் மனதுடன் தொடர்பு கொண்டுள்ளது கவலை.

❄ மனம் பிரச்சனைகளை அறிந்து கொள்ள முடியாமல் போனால் பிரச்சனைகளை முடிக்க முடியவில்லை எனில், அந்தப் பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியாவிட்டால், கவலையின் பிடியில் சிக்கிக் கொள்கின்றது.

❄ தேவைக்கும் இருப்புக்கும் இடையே இடைவெளி எதிர் பார்ப்புக்கும் பெறுவதற்கும் இடையே இடைவெளி தனக்கும் பிறர்க்கும் இடையே ஏற்படும் முரண்பாடு. ஆசைக்கும் திறமைக்கும் இடையே உள்ள வித்தியாசம். இவையாவும் கவலைக்கு வித்தாகின்றது.

❄ மனதை கடமையில் செலுத்தி இடையறாத முயற்சியுடன் முறையான திட்டத்துடன் செயல்பட்டால் கவலைகள் அனைத்தையும் சரிசெய்ய முடியும்.

❄ விழிப்பின்மையால் அலட்சியம், அசிரத்தை, சோம்பல் இவற்றுக்கு இடம் கொடுத்தால் செயல்திறன் குன்றிவிடும். அம்மாதிரியான மனநிலையில் செயலாற்றி அதன் காரணமாக வெற்றி தவறிப் போகும்போது கவலை வரும்.

❄ சிந்தனையின்றி இயற்கையின் நியதிப்படி அமைந்த விளைவு களை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்பார்த்த ஆசையையும் அப்படியே வைத்துக் கொண்டு ஏமாற்றத்தையும் ஒப்புக் கொள்ளாமல் ஏற்படும் மனப் பிணக்குத்தான் கவலை.

- ❄ திறமையின்மை, அச்சம் இரண்டும் கவலைகளைப் பெருக்கும் நிலைகளாகும்.
- ❄ கவலையினால் உடல், உள்ள நலன்கள் கெடுகின்றன. ஏன் வாழ்வே துன்பமாகவும் தோல்வியாகவும் அமைந்து விடுகிறது. இதனை மனிதன் ஒழித்தேயாக வேண்டும்.
- ❄ கவலையை ஒழிக்க வேண்டுமெனில் இயற்கையின் ஒழுங் கமைப்பை அறிய வேண்டும் சிந்திக்கும் திறனைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். தன்னம்பிக்கை வேண்டும். முயற்சி வேண்டும் துணிவு வேண்டும்.
- ❄ நினைப்பதற்கும் நடப்பதற்கும் இடையே காணும் முரண்பாடு தான் கவலைக்கு அடிப்படைக் காரணம். இயற்கை ஒழுங் கமைப்பை உணராத அறிவில் எழும் தப்புக்கணக்குத்தான் நினைப்பில் தவறாக விளங்குகிறது. கவலையை உண்டு பண்ணுகிறது.

## 290. கலாசாலை:

- ❀ இந்த உலகம் ஒரு பழமையானதும் பெரியதுமான கலாசாலை யாகும். சூழ்நிலைகளுக்கேற்றபடி உலகில் வாழும் ஒவ்வொரு வருக்கும் தினந்தோறும் புதிய புதிய பாடங்கள் பலாத்காரமாக போதிக்கப்படுகின்றன. இந்தப் படிப்பை யாராலும் ஒதுக்கிவிட முடியாது.

## 291. கல்வி

- ✠ கல்வி கற்கும் காலத்திலேயே கல்வியின் ஒரு பகுதியாக நீதி உணர்வையும் உணர்த்த வேண்டும்.
- ✠ கல்வியிலே உயர்ந்த அருட்கல்வி இல்லையானால் கற்றபெற்ற அத்தனையும் சுயநலமாம்.
- ✠ எக்கல்வியால் வாழ்வை இனிதாக்கி உள்ளத்திலெழும் அக்கேள்விகட்கெல்லாம் அறிவு விடை கண்டிடுமோ இக்கல்வி தான் இயற்கை, இயல்பறியும் தத்துவமாம். சிக்கல்கள் வாழ்வில் எழா சிந்தனையும் சிறப்படையும்.
- ✠ பெருத்துவரும் பழிச்செயல்கள் மாறி உலகுய்ய பேருலகம் இணைந்த ஆடசி கல்வி இவை வேண்டும்.

✠ இக்காலத்தில் கல்வியிலும் மனித இனப் பண்பாட்டிலும் செயல் விளைவு என்ற கல்வியை மக்களுக்கு உணர்த்தி தெளிவோடு வாழச் செய்ய வேண்டியது அறிஞர்களின் கடமையாகும்.

✠ அறிவாட்சித் திறத்தை உருவாக்க உயர்த்திக் கொள்ளும் பயிற்சியே கல்வி எனப்படும்.

✠ மனித சமுதாயம் காலத்தால் மாற்றம் பெற்றுக் கொண்டே யிருக்கிறது. ஜனத்தொகை பெருக விஞ்ஞானக் கருவிகள், விரைவான செய்தி வசதிகள் இவற்றின் பெருக்கத்திற்கேற்ப கல்வி முறையும் மாற்றம் பெற வேண்டும்.

✠ அன்றைய கல்வி அறம்செய்ய விரும்பு: ஆறுவது சினம் என்ற உயர்ந்த விழுமியங்களை வலியுறுத்தி ஆரம்பித்ததைப் பார்க்கலாம். தனி மனிதன் சமுதாயமாக வாழத் தொடங்கிய தற்கேற்ப தனிமனிதன் சமுதாயம். இதனைச் சீரமைக்க எழுந்ததே நம் இதிகாசங்களும் காவியங்களும். இவை தனிமனித ஒழுக லாற்றையும் மனித நேயத்தையும் வளர்ப்பால் எழுந்தனவேயாம்.

✠ அண்மைக்காலத்தில் பொருளை ஈட்டுவதற்கான வல்லமையைத் தரவல்லதே கல்வி என்ற தடம்புரண்ட எண்ணத்தினால் ஒரு தொழில் முறையைப் போதிப்பதற்கு நாம் எடுத்துக்கொள்கிற முயற்சியாகக் கல்வியை மாற்றிவிட்டோம்.

✠ கணினியைப் பற்றியும் அதை எப்படித் திறம்பட இயக்குவது என்பதைப் பற்றியும் கவலைப்படும் நமது கல்வி முறை நல்ல கருத்துக்களை நல்ல உள்ளங்களை உருவாக்குகிற உயர்ந்த மதிப்புக்களை மாணவர்களுக்குத் தரவேண்டும் என்று அவ்வளவாக அக்கறைப்படவில்லை. இதன் விளைவு? அந்தத் திறமையோடும் புதிய வேகத்தோடும் சீரிய முறையில் செயல் படுகின்ற கணினிகள் பெருகுகின்றன. ஆனால் இயந்திரமய மாக்கப்பட்ட விஞ்ஞான உலகில் மனிதர்களின் உள்ளங்கள் சீரழிந்தன. இதனால் பலவகையான சமுதாயச் சிக்கல்கள் பெருகலாயின.

✠ கல்வியை கற்பித்து வைத்தால் அதுவே அழிக்க முடியாத பெரும் சொத்தாகும்.

✠ செயலிலே விளைவு இருக்கின்றது என்பது தெளிவாகவும் உறுதி யாகவும் உணர்ந்து கொள்ளப் பெற்றால் ஒரு ஆசை எழும்போது

அதனை நிறைவேற்றிக் கொள்ளச் செயலில் இறங்கும்போது நல்லது அடைவோம் என்று நன்மை செய்வான். தீமைவரும் என்று அஞ்சி அதை தடுத்துக் கொள்வான். இந்த முறையிலே தான் தற்காலத்திற்கு கல்வி முறை அவசியம்.

## 292. கற்பனை மயக்கம்:

- உண்மையில் நிகழ முடியாத சம்பவங்கள் நிறைந்த கற்பனைக் கதைகளும் அவற்றைச் சித்தரித்துக் காட்டும் நாடகங்களும் நமக்குத் தேவையில்லை.
- பாலுணர்ச்சியைத் தூண்டிவிடும் அதிகரிக்கச் செய்யும் நடனங் களும் களியாட்டங்களும் நமக்கு வேண்டியதில்லை.
- பாலுணர்ச்சியைத் தூண்டத்தக்க கற்பனை நாடகங்களையும் நடிப்புகளையும் அறவே மனித சமூகம் ஒழிக்க வேண்டியதே. அதனால் எத்தகைய தீமைகள் விளைகின்றன என்று நீங்கள் அறிய உங்கள் ஆராய்ச்சியைத் தூண்டி விடுகின்றன.

## 293. கற்பொழுக்கம்:

- எண்ணம் சொல் செயல்களின் விளைவால், தனக்கோ, உணர்ச்சிக்கோ கேடு உண்டாகும் எனில் அதைச் செய்யக் கூடாது என்று அறிஞர்கள் ஆராய்ந்து கண்ட முடிவுதான் பல விதமான ஒழுக்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.
- கற்பொழுக்கம் தவறினால் ஏற்படும் விளைவு தனி மனிதன் வாழ்விலும் சமுதாய வாழ்விலும் எதிர்கால மக்கள் வாழ்விலும் மனோதத்துவ சுகாதாரத் துறைகளிலும் பல கேடுகளைப் பயப்பதை ஒவ்வொருவரும் கூர்ந்து ஆராய்ந்து ஞாபகத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.
- ஒழுக்கங்களில் கற்பு ஒழுக்கமே தலையாயது.

## 294. கணவன் மனைவி:

- எல்லாம் சரியாகப் பார்க்கும் போது சாதாரணமாக ஆணுக்கு ஆண் என்ற நட்பிலே ஒரு எல்லை வரையில் தான் இருக்கும். ஆனால் கணவன் மனைவி உறவிலே இருக்கக்கூடிய இந்தப் பண்பாடு தியாகம் இதைச் சரியாக உணர்ந்து நடப்பீர்களே

யானால் அதைவிட ஒரு பெரிய இன்பம் இந்த உலகத்தில் வேறு இருக்க முடியாது. அதை நல்ல முறையில் காப்பாற்றிக் கொள்வதற்கு வாழ்த்தி வாழ்த்தி அந்த வாழ்த்திலே வளம் காணலாம்.

❖ குழந்தைப் பேறு உண்டாவதற்கு முன்னதாகவே கணவன் மனைவி உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதை நமது பண்பாட்டில் நாம் வளர்க்க வேண்டும்.

## 295. காசு:

✦ காசு என்ற கருவியினை ஒழித்துவிட்டால் கடமையிலே வழுவாமல் மக்கள் வாழ்வர்.

## 296. காந்தம்:

✧ எல்லாத் தோற்றங்களுக்குள்ளும் அலைநிலையில் உள்ள காந்தம்தான் அழுத்தம், ஒளி, சுவை, மனம் என்ற சிறப்பு நிகழ்சிகளாகத்தான் மாற்றம் பெற்று விளங்குகின்றது.

✧ காந்த தத்துவ ஞானம் ஒன்றே எல்லா மறைபொருள் உண்மை களையும் பருப்பொருள் உண்மைகளையும் விளக்கும்.

✧ அனைத்து விஞ்ஞானம் மெய்யறிவு நோக்கி முழுமையாக உய்ய ஓர் சிறந்த வழி உயர்ந்த காந்த தத்துவம்.

✧ மையப் பொருளே விண்ணாகி அலை நிலையில் காந்தமாய் மேலும் விண்ணடர்த்தி நிலைக்கேற்ப பூதம் ஐந்துமாய் ஐயுணர்வாய் மெய்யுணர்வாய் அனைத்துயிராய் பெருகியே அகம் அறிவாய் புறம் உடலாய் அடுக்கு தோற்றமாச்சுது.

✧ அந்தமாம் மெய்ஞ்ஞானத்தோடு ஆன விஞ்ஞானம் இரண்டையும் அறிந்து உய்யப்பாலம் போன்ற ஆக்க ஞானம் காந்தமே.

✧ காந்தமானது உயிரற்ற பொருள்களின் அழுத்தம், ஒலி, ஒளி, வெப்பம், சுவை, மணமாகவும் உயிரினங்களில் கூடுதலாக மனமாகவும் எப்போதும் தன்மாற்றம் அடைந்து கொண்டிருக்கிறது.

✧ மனித வாழ்க்கைக்குக் காந்தத்தைப் பற்றிய அறிவு மிகவும் முக்கியமானதாகும். இயற்கையோடு முரண்பாடில்லாமல் அறநெறியில் வாழ்வதற்கு இந்த அறிவே அடிப்படையான

தாகும். காந்தத்தைப் பற்றித் தெளிவாகப் புரிந்துகொண்ட பின்பே மனித அறிவு முழுமை பெற்றதாகக் கருதப்படும். எனவே காந்த ஆற்றல் ஞானமே நம் சிக்கல்களுக்கு வெற்றிகர மான தீர்வு ஆகும்.

✧ காந்த நிலையறியாமல் கடவுள் நிலையறிவதோ?

✧ அறிவின் தத்துவமதை ஆராய்ந்தேன். காந்த அலை இயக்கமே அன்றிவேறு இல்லை.

✧ செய்யும் தொழில் வளம்நோக்கம் இடம் காலம் ஒக்கவே சீர்விளைவாய் காந்தவழி திகழும் அருளாற்றலே வையகத்தில் வாழ்வோர்க்கு இன்பம் துன்பம் அமைதியும் வான் உணர்வாம் பேரின்பம் துய்ப்பதுணர்ந்துய்வோம்.

✧ சுத்தவெளி மெய்ப் பொருளில் சுழல் அலை சேரக் காந்தம்.

✧ ஆதியில் எழுந்த சுழல் அலை விண்ணாகும். அவ்விண்ணின் விரிவலையே காந்தம்.

✧ நடனமிடும் விண்சுழல் இருப்பில் நட்புக் கொள்ள இக்கூட்டு காந்தமாச்சு.

✧ காந்தம் சிவம் சக்தியாம் கருத்தில் அர்த்த நாரியாம் காட்டானாம் அரூபமும் காணுகின்ற உருவமும் காந்த ஆற்றலென்று உணர்ந்தோர்.

✧ சிறைப்பட்ட இறைத்துகள்கள் விண்ணிலிருந்து ஓடுவதே காந்தம்.

✧ காந்த நிலை உணர்ந்திடில் கடவுள் மனம் அதனிலே கண்டிடலாம் அதன் மாயத் திரு நடனக் காட்சியாய்.

✧ காந்தமோ பரம்பொருளின் எழுச்சி ஆற்றல் கருதும் நம் அறிவோ அவ்வெழுச்சியின் எழுச்சி.

✧ விண் துகள் சுழற்சி விரைவில் சூழ்ந்துள்ள இருப்பு நிலையாகிய இறைவெளியல் உரசும்போது எழும் அலையே காந்தம்.

✧ காந்தம், விண் களம், காற்று, அழுத்தக் காற்று, நீர், நிலம் ஆகிய ஐம்பூதங்களில் முறையே அழுத்தமாக ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாகத் தன்மாற்றம் பெறுகிறது.

✧ காந்தமானது சீவ இனங்களில் மனமாக இயங்குகிறது.

✧ இறைநிலையிலிருந்து விண்துகளின் உரசலால் எழுந்த காந்த அலை அதே விண்துகள் கூட்டு இயக்கங்களான பஞ்ச பூதங்களில் பஞ்ச தன்மாத்திரைகளாகவும் உயிரினங்களில் மனமாகவும் இயல்பூக்கம் பெற்று இயங்குகிறது. அதே காந்த ஆற்றல்தான் ஒரு சீவன் உண்ணும் உணவை இரசம் இரத்தம் சதை கொழுப்பு எலும்பு மூளை சுக்கிலம் ஆகிய ஏழு தாதுக்களாக மாற்றி உடலைச் சீராக நடத்துகிறது.

## 297. காந்த அலைகள்:

★ இறைநிலை தன்னிறுக்கத்தால் துகள் நிலையை அடைகிறது. இதுவே காந்த அலையாகத் தன்மாற்றம் பெறுகிறது. இக்காந்த அலைகள்தான் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் எனும் அறுவகை மாற்றங்கள் பெற்று முடிவில் இறை நிலையாகி விடுகிறது.

## 298. காதல்:

☆ இருவர் உளம் ஒன்றுபட்டு உலகில் வாழ எண்ணத்தால் முடிவு கொண்ட செயலே காதல்.

## 299. காயகல்பம்:

✪ விந்து நாதங்களின் புனிதப் பொருளாகக் கருதி அவற்றின் தூய்மையைப் பராமரித்து அவற்றுக்கு மேன்மையளிக்க வேண்டும். அதற்கு உதவுவதுதான் காயகல்பக் கலை.

✪ உடல் நலமும் மனவளமும்தான் வாழ்வில் வெற்றியையும் நிறைவையும் அளிக்கும். அவற்றைக் காயகல்பம் கொடுக்கும் என்பது தெரியும்போதுதான் இன்றைய மக்கள் குலத்தினர் அக்கலையைக் கற்க முன் வருவார்கள்.

✪ காயகற்பக் கலையைக் கற்க வேண்டிய சரியான வயது உயர்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரிப் பருவம்தான்.

✪ எந்த அளவுக்கு இளைஞர்கள் காயகல்பத்தின் மூலம் உடல் வளமும் அறிவு உயர்வும் பெறுகிறார்களோ அந்த அளவுக்குத் தான் எதிர்கால சமுதாயத்தில் இனிமையும் அமைதியும் நிலவ முடியும்.

- ✪ உடலை நன்கு உறுதியாக வைத்துக் கொண்டு ஆன்மாவை வளர்த்துக் கொள்வதற்குப் பெருந்துணை புரியும் கலைதான் காயகல்பக் கலை.
- ✪ காயகல்பக் கலையை ஒழுங்காகச் செய்து வந்தால் மனிதன் எந்த நிலைக்கு உயர வேண்டுமோ அந்நிலைக்கு உயரலாம்.
- ✪ குண்டலினி யோகம் செய்வதற்கு உயிராற்றல் போதிய அளவு வேண்டும். அந்த உயிராற்றலுக்கு வித்து ஆற்றலும் வேண்டும். இதையெல்லாம் உறுதிப்படுத்திக் கொடுக்கக் கூடியதே காயகல்பம்.
- ✪ காயகல்பம் குண்டலினி யோகத்திற்கு உதவியாக இருக்கிறது. குண்டலினி யோகம் காயகல்பத்திற்கு உதவியாக இருக்கிறது.

## 300. காயகல்ப விதிகள்:

- ☆ ஆணோ பெண்ணோ பருவம் அடைந்தபின் அதாவது 14 வயதுக்குப் பின் காயகல்பக் கலையைக் கற்கப் பழகிப் பயன்பெறலாம்.
- ☆ உணவு அருந்திய உடனே இந்தக் காயகல்பப் பயிற்சியைச் செய்யக்கூடாது. உணவுக்கு முன்னமே செய்வதுதான் நல்லது. உண்டபின் மூன்று மணி நேரத்திற்குப் பின்பு இப்பயிற்சியைச் செய்யலாம்.
- ☆ இதய நோய் உடையவர்களும், இரத்த அழுத்த நோய் உடையவர்களும் காயகல்பப் பயிற்சியோடு குண்டலினி யோகம் கற்றுக்கொண்டு தவம் செய்து வந்தால் ஆச்சரியப் படத்தக்க அமைதியும் நலமும் உண்டாகும்.
- ☆ தொடக்க காலத்தில் ஒரு வாரம் உடல் உறவை தவிர்த்தால் பயன் அதிகமாகக் கிட்டும்.

## 301. காயகல்பப் பயிற்சியின் நன்மைகள்:

- ✯ உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் இவற்றை அலட்சியப்படுத்தாமலும் அளவுக்கு அதிகமாக அனுபவிக் காமலும் முரண்பாடாக அனுபவிக்காமலும் சமநிலை காப்பதும், உள்ளத்தில் நல்ல எண்ணங்களே உருவாகும் விதமாக வைத்துப் பழகுவதும், பொதுவாக வாழ்வுக்கு நலம் தரும். காயகல்பமும் அதிகமாக சீக்கிரமாக நன்மை அளிக்கும்.

- ★ உடலில் உள்ள நரம்பு மண்டலங்கள் வலுப்பெற்ற உடல்கட்டு உண்டாகும்.
- ★ ஆணுக்கு விந்தும், பெண்ணுக்கு நாதமும் கெட்டிப்பட்டு அளவும் இருப்பும் அதிகரிக்கும்.
- ★ உடல் நலமும் மன வளமும் உண்டாகும்.
- ★ ஆஸ்துமா, நீரிழிவு, மூக்கில் நீர் வடிதல், மூலநோய், தோல் வியாதிகள் இவைகள் கட்டுப்பாட்டிற்கு வரும்.
- ★ நீண்ட நாட்கள் காயகல்பம் பயின்றுவர பரிபூரண குணமும் கிட்டும்.
- ★ இளமையிலே துறவு கொள்ளவும் பொதுத் தொண்டில் ஈடுபடும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கற்பையும் உடல் நலத்தையும் காத்துக்கொள்ள இந்தப் பயிற்சி ஒரு வரப்பிரசாதமாகும்.
- ★ நாளுக்கு நாள் அறிவு வளமும் மேலோங்கி மெய்ப்பொருள் விளக்கம் ஏற்படும்.
- ★ நீண்ட காலமாக நிலவிவரும் நோய்கள் படிப்படியாகக் குணமடைந்து உடல் நலமுறும்.
- ★ உடல் நலமும் அறிவு வளமும் உடைய குழந்தைகள் உண்டாகும்.
- ★ தானே விரும்பும்வாறு குழந்தை பெறுவதோ தடுத்துக் கொள்வதோ இயல்பாக முடியும்.
- ★ காயகல்பப் பயிற்சியினால் கண்கள் நன்றாகும். பிணிகள் நீங்கும். புத்துணர்வும் இறையருளும் கிட்டும். மரணமிலாப் பெருவாழ்வு சித்தியாகும்.
- ★ சுக்கிலத்தை மேலேற்றி மனதை வைத்துத் துரியநிலை நின்று தவம் ஆற்றும் யோகம் சுக்கிலத்து தவம், குதத்துப் பயிற்சி கூட்டி தூக்கம் போகம் உணவு முன்னம் செய்ய சுக்கிலமே கெட்டியாகும். ஆண்மை ஓங்கும்.
- ★ கறை போக்கி வித்ததனை உறையச் செய்யும். காயகற்பப் பயிற்சியினால் உளநோய் நீங்கும். நிறைமனம் ஈகையோடு பொறுமை கற்பு நேர்நிறையும் மன்னிப்பும் இயல்பாய் ஓங்கும். இறையுணர்வு விழிப்பு நிலை, அறிவுக் கூர்மை, இனியசொல், எண்ணத்தின் உறுதி மேன்மை, மறைபொருளாம் மனம், உயிர் மெய் உணர்வு கிட்டும். மாதவமாய்ப் பிறப்புத் தொடர் அறுக்கும்.

## 302. காய்கறி ஆகாரம்:

- ✯ கடினமாக ஜீரணமாகி மெதுவாக உடலில் சேரும் காய்கறி ஆகாரத்தைச் சாப்பிடப் பழகுவதால் குடலுக்கு வலிவும் ஏற்படும். சுலபமாக உடலுடன் கலந்த சத்தாக மாறிவிடும்.

## 303. குடும்பம்:

- ✯ இந்தப் பேருலகம் சத்திரம் போன்றது. பிறக்கும் ஒவ்வொரு வரும் உலகம் என்ற சத்திரத்தில் தங்குகிறோம். நாம் குடிபுகும் அறையில் முன்னமே சிலர் இருந்தார்கள். பிறகும் சிலர் வந்து சேர்கிறார்கள். இதுவே குடும்பம். அவரவர்கள் தங்க வேண்டிய காலம் முடிந்தவுடன் புறப்பட்டு இயற்கையோடு கலந்து விடுகிறார்கள்.

## 304. குடும்ப அமைதியின்மை:

- ☆ பெரும்பாலோர் குடும்பத்தில் வரவிலேயும் செலவிலேயும் தான் பிணக்குகள் தோன்றுகின்றன.
- ☆ குடும்ப உறுப்பினர்களுடைய குறைகள்.
- ☆ குடும்பத்தை நிர்வகிக்கும்போது அறிவுக்குத்தான் முதலிடம் தர வேண்டும். எந்தக் காரணத்திற்காகவும் உணர்ச்சிகள் முதலிடம் பெறக் கூடாது.
- ☆ மனைவிக்குத் தெரியாமல் கணவனோ கணவனுக்குத் தெரியாமல் மனைவியோ சம்பாதிப்பதும் செலவு செய்வதும் சேர்த்து வைப்பதும் பின்னால் பிணக்குக்கு இடம் தரும்.
- ☆ போதுமான அளவு பொருட்கள் இருக்கும்போதே மேலும் வாங்குவது போன்ற செலவுகள் அமைதியைக் கெடுக்கும்.
- ☆ சிறிய காரணத்திற்காகவும் பெரிய காரணத்திற்காகவும் குடும்பத்தில் பிணக்கு எழலாம். அவை நான்கு பகுப்புகளாக அமையும். அவை. தேவை, அளவு, தன்மை, காலம். இவற்றில் ஏதேனும் ஒன்றையோ அல்லது இரண்டையோ மையமாக வைத்து பிணக்குத் தோன்றும்.
- ☆ கணவன் மனைவி பால் உறவு சமநிலையாக இல்லாமை.

☆ கணவன் மனைவி ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டிருந்தால் அந்தச் சூழலில் வளரும் குழந்தையின் குணமும் ஊனமுற்று அதன் வாழ்க்கையில் பல குறைகள் தோன்றும்.

## 305. குழந்தைகள்:

✯ சின்ன வயதுக் குழந்தைகளே சீக்கிரம் காலையில் எழுந்திருங்கள். அன்னை தந்தை இருவருக்கும் அன்பான வணக்கம் செலுத்துங்கள்.

✯ குழந்தைகள் நலமே உலக நலம்.

✯ குழந்தைகள் மூலமே உலகைச் சீர்திருத்த இயலும்.

✯ குழந்தை வளரும் விதத்தில்தான் எதிர்காலச் சமூக அமைப்பு இருக்கிறது.

✯ குழந்தைகளை மக்கள் இனத்தின் உயர்ந்த குறிப்பான செல்வமெனக் கொண்டு விட்டோம்.

✯ பெற்றோர்கள் குழந்தைகளை வளர்த்தல் இந்தப் பேருலகில் எங்கும் பழக்கமாச்சு பெற்றோரால் சாதி மதம் மொழி இவற்றால் பேதங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்து நிற்கும். இது குழந்தைகளின் மனநலனையும் பாதிக்கிறது. உடல் நலனையும் பாதிக்கிறது. எனவே பெற்றோர் தம் மக்கள் தமைச் சமுதாயத்தின் பேரறியுர்வு வளர்த்துவிட உலகம் சீராம்.

✯ குழந்தைகள் ஐந்தாண்டு முதல் பேதமின்றிக் குருகுலத்தில் வளர்வதற்கோர் திட்டம் வேண்டும். சுகாதாரம் உளநூல் வல்லோர், குற்றமற வளர்த்துவிட உலகம் உய்யும். ஒழுக்கம், நீதி, இன்பம், நேர்மை, உயர்வு எனும் சொற்களைப் புரிந்து வளரும்படி அவர்களைப் பண்படுத்தவும் வேண்டும். பல கலைகளைப் பயிற்றுவிக்கவும் வேண்டும்.

✯ பூமியிலிருந்து செவ்வாய் கிரகத்திற்குப் போக வேண்டும் என்ற ஆசையையும் திட்டத்தையும் சில காலம் ஒதுக்கிவைத்து மனித இனத்திற்கு உயர்தர வாழ்வளித்து அனைவரும் அன்பாகவும் ஆனந்தமாகவும் வாழ அடிப்படையாக உடனே தேவையாக உள்ள குழந்தைகளை வளர்க்கும் திட்டத்தை ஆரம்பிக்க அமுல் நடத்த உங்கள் சேவையைப் பயன்படுத்த வாருங்கள் என்ற அகில உலக அறிஞர்களையும் அழைக்கிறேன்.

- ✯ குழந்தை பிறந்த பிறகும் வளர்க்கும் முறையில் மிகவும் எச்சரிக்கையோடிருக்க வேண்டும்.
- ✯ குழந்தை எந்த எந்தச் செயலில் ஈடுபடக் கூடாது என்று நினைக் கிறோமோ அந்தச் செயல்களைப் பெற்றோர்கள் குழந்தையின் எதிரில் செய்யவே கூடாது.
- ✯ ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொண்டீர்களானால் அந்தக் குடும்பம் நலம் பெற வேண்டும். அந்தக் குடும்பத்திலே நல்ல குழந்தை பிறக்க வேண்டும். அந்தக் குழந்தை அறிவுடையவனாக சமுதாயத்தில் பொறுப்புள்ள பிரஜையாக வாழ வேண்டும். குடும்பத்திற்கு நல்ல உறுதுணையாக இருக்க வேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்புகிறோம்.
- ✯ மனித இனத்திற்கு வாழ்க்கை அறிவும், செயல் திறமையும் தான் செல்வமாகும். அந்தச் செல்வம் குழந்தைகளிடத்திலே சிறுவயது முதலே வளர வேண்டும். இதுவரையில் மனிதன் அடைந்துள்ள முன்னேற்றங்களின் இறுதிப் பயனாக இருக்க வேண்டியது உயர்தர முறையில் குழந்தைகளை வளர்ப்பதேயாகும்.

## 306. குழந்தைகளுக்கு அறிவுரை:

- ✲ குழந்தைகளே காலையில் சீக்கிரம் துயிலெழுங்கள்.
- ✲ அன்னை தந்தையரிடம் அன்பாயிருங்கள். உடற் தூய்மை இறை வழிபாடு செய்யுங்கள்.
- ✲ பள்ளிப் பாடத்தை உள்ளத்தில் ஏற்று இருதடவை படியுங்கள்.
- ✲ கணக்கைப் போட்டு விடையை நீங்களே சரிபாருங்கள்.
- ✲ நாட்டுக்கு உழைத்த நல்லோரை நினைவு கூறுங்கள்.
- ✲ ஆகாரம் அளவாய் உண்ணுங்கள்.
- ✲ காலம் தவறாமல் கடமையாற்றுங்கள்.
- ✲ ஊக்கமும் உணர் நோக்கும் உங்களுக்கும் தேவை.
- ✲ குழுவாகச் சேர்ந்து மாலையில் விளையாடுங்கள்.
- ✲ எதையும் கண்டு உணர்ந்து மெய்ப்பொருள் காணுங்கள்.
- ✲ இயற்கையோடு ஒன்றி வாழுங்கள்.
- ✲ உண்மையறியுங்கள் தன்னையறியுங்கள்.

## 307. குரு:

* தட்டுங்கள் திறக்குமென்றார் தனக்குள்ளே பேராற்றல் புதையல் கண்டோர். தக்கவழி அருட்குருவின் தாள் பணிந்து தவம்பயின்று தனைஉணர்தல்.

* எவரொருவர் குருவைத் மதித்து ஒழுகினாலும் தப்பாது குருவுயர்வு மதிப்போ தம்மைத் தரத்தில் உணர்த்தி பிறவிப் பயனை நல்கும்.

* குரு என்றால் யார்? குரு என்றால் அவர் தன்னை அறிந்தவர். அவருடைய உதவி இவனுக்குக் கிடைப்பதற்கு இங்கே அவன் ஒரு நிமிடமாகிலும் சிந்தித்திருக்க வேண்டும். தேடி இருக்க வேண்டும். நான் பிறந்து வந்துள்ளேனே என்னைப் பற்றி எதுவுமே தெரியவில்லையே தெரிந்து கொள்ள வேண்டும், என்று இவனாக நினைத்திருந்தாலும் சரி, அல்லது இவனுடைய பெற்றோர்கள் நினைத்து இருந்தாலும் சரி, அந்த எண்ணம் நிறைவேறாமல் தொடர்ந்து வந்து இருந்தாலும் சரி, அது கட்டாயம் அதற்குரிய ஒரு குருவைத் தேடிக்கொடுத்து விடும்.

* ஆத்மதாகம் கொண்ட மனிதன் இந்த நினைப்பிலே உருகி நிற்கும்போது அந்த நினைப்பானது குருவை அவன் முன்கொண்டு வரும். குரு வருவதற்கு வேறு மார்க்கமேதும் கிடையாது.

* ஒரு ஏற்புத் தன்மை இருந்தால் குரு தானே இங்கே வருவார். எனவே குருவைத் தேடி அலைய வேண்டியதில்லை. தன்னை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உயரட்டும். தானாகவே அவனுடைய எண்ணம் உயர் நிலையில் பக்குவப் படட்டும். குரு தானாக வருவார்.

* மனிதனுடைய எண்ணம் என்பது என்ன? அது பிரம்மத் தினுடைய சாயைதானே? பிரம்மத்தினுடைய இயக்கம்தானே எண்ணமாக அறிவாக இருக்கிறது? உணர்ந்த நிலையில் அறிவாகவும் மயக்க நிலையில் மனமாகவும் அதுவே குறிப்பிடப்படுகிறது. அது தானாக அமர்ந்த நிலையில் பிரம்மமாக உள்ளது. பக்குவப்பட்டவன் நினைத்தால் குரு வர வேண்டியதுதானே?

## 308. குருவின் சேர்க்கை:

* ஒருவர் எந்தப் பொருளையோ எந்தவொரு செயலையோ எந்தக் குணத்தையோ எந்த உயிரையோ அடிக்கடி நினைத்து

வந்தால் அப்பொருளின் தன்மையை நினைப்பவர் ஆற்றல் உள்ளத்திலும் அறிவிலும் உடலிலும் மாற்றம் ஏற்படும். இப்பெருமை இயல்பூக்க நியதியாகும்.

✳ எவர் ஒருவர் குருவை நினைத்து மதித்தும் ஒழுகி வந்தால் குரு உயர்வாக மதிப்போரை தரத்தில் உணர்த்துவதோடு அவருக்கும் பிறவிப் பயனையும் நல்கும்.

## 309. குருவின் உதவி:

✴ தந்தை தாய் ஆகிய இரண்டு உயிர்கள் ஒன்று சேர்ந்ததன் விளைவாய் ஒரு உடலாகி இந்த உலகிற்கு வந்தேன்.

✴ தந்தை தாய் இரண்டு உயிர்களும் பாவமோ புண்ணியமோ ஆகியவற்றால் அளித்த பதிவு எல்லாம் என் சொத்தாச்சு.

✴ அரிய மானிடப் பிறவியின் முன்வினைகளையெல்லாம் அறுத்து எல்லையில்லாத எங்கும் நிறைந்திருக்கும் மெய்ப் பொருளை அடைவதற்கு வந்த ஒரு உதவியாகும்.

## 310. குறை:

✳ எந்தக் குறையும் உங்கள் செயலின் பதிவே என்று உணர்ந்து ஏற்றுக்கொண்டு சிந்தையிலும் அறவழியாலும் சீர் செய்ய முயலுங்கள். உ ங்கள் குறை தீர்க்க நீங்கள் முயலாவிடில் வேறு யாராலும் முடியாது. பிறர் மூலம் உங்கள் குறை முடிய எதிர் பார்க்கவே வேண்டாம்.

## 311. குறைபாடு:

✶ எல்லாம் வல்ல இறைவன் அருளால் அமைந்தது எத்தனை எத்தனையோ ஆயிரம் ஆயிரம் நலன்கள். இதையெல்லாம் எண்ணி எண்ணி மகிழலாமே! ஏதேனும் ஒரு குறைபாட்டை நாமாக கற்பித்துக் கொண்டு இது இல்லையே என்று துன்பப்படுவதை விட்டுவிட வேண்டும். இந்த முறையில் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு நிமிடமும் இந்தக் குறைபாடுகளைந்த நிறைவை ஏற்படுத்திக் கொண்டு மனநிறைவாக வாழ்வதற்கு இறை உணர்வும், உயிர் உணர்வும் வேண்டும். அந்த உயிர் உணர்வைப் பெறுவதற்கு இறை உணர்வைப் பெறுவதற்கு தவம் இருக்கிறது. அற உணர்வை பெறுவதற்கு நல்ல செயல்கள் செய்யச் செய்ய தானாகவே அது மலர்ந்துவிடும்.

## 312. குறுகிய நோக்கம்:

✣ உலகம் இயற்கையின் பரிணாம வேகத்தால் தோன்றியுள்ள கோடான கோடி உடலுருவங்களிலும், அறிவிலும், அங்க அமைப்பிலும், திறமையிலும், சிறந்த மனிதர்கள் நலமுடன் வாழ்வதற்கு இயற்கையாகவும், செயற்கையாகவும், பலவித மான வசதிகள் இருக்கும்போது, பொன்னையும், பொருளையும் மாத்திரம் பெரிதாக நினைவில்கொண்டு: நான் எனது என்ற குறுகிய நோக்கத்தாலும் மனிதர் உண்மையாகப் பண்போடு வாழ எது தேவை? எது தேவையில்லை என்னும் ஆராய்ச்சியின்மை யாலும் பல அழிவுக் கருவிகளையும் அணுகுண்டையும் கூட கண்டுபிடித்து வாழ்வில் அச்சத்தைப் பெருக்கிக் கொண்டார்கள்.

## 313. குற்றம்:

✷ சமுதாய அமைப்பு சீர்திருந்திய பொருட்கள் சமத்துவமாய் அனைவருக்கும் கிட்டுமெனில் உலக சமுதாயத்தில் குற்றம் நிகழ இடமேது?

✷ குற்றங்களைக் குறைக்கவும் தோன்றாமலிருக்கச் செய்யவும் வேண்டி குற்றங்கள் செய்வோர்களைத் தண்டிப்பதற்குப் பல சட்ட திட்டங்களை வகுப்பதோடு அமுல் நடத்துவதோடு - அந்தக் குற்றங்கள் எப்படி எந்தக் காரணத்தினால் தோன்றுகின்றன? என ஆராய்ந்து கண்டு அவைகளை அந்தக் காரணங்களை போக்கப் பெருமுயற்சி எடுக்க வேண்டும்.

✷ சமூக வாழ்வில் பலவித இன்னல்களைத் தரும் சாதி மதம் தேசம் மொழி இனபேதங்கள் தன உடமைப் பற்று என்றவைகளை மனிதன் கொள்வது குற்றமல்லவா? இவ்விதக் குற்றங்களிலிருந்து நீ விடுபட்டவனா?

## 314. குற்றங்கள் பிறக்குமிடம்:

✤ கொடிய வறுமை, அறிவின் மயக்கம், அளவுக்கு மீறிய செல்வம், குற்றமில்லாச் செய்கைகளைக் குற்றம் எனக் கற்பித்து வைத்திருக்கும் பலவிதமான அவசியமற்ற சட்டங்கள் என்று அவைகளே குற்றங்களை உற்பத்தி செய்யும் அதிகரிக்கச் செய்யும் மூலங்களாகும்.

## 315. குற்றவாளி யார்:

- ***தண்டனைக்கு அகப்படாத குற்றவாளிகள் எவ்வளவு பேர் உலகில் இருக்கின்றார்கள் என நீர் அறியவில்லை போலும்.***
- ***வியாபாரி என்ற முத்திரையின் கீழே பகல் கொள்ளைக்காரர்கள் பலர் இல்லையா?***
- ***அதிகாரம் என்ற சுவர்களின் மறைவில் நின்று கொண்டு பொது மக்களின் பணத்தைக் கொள்ளையிடும் கள்ளர்களைப் பற்றி நீர் கேள்விப்பட்டது இல்லையா?***
- ***பணம், புகழ், அந்தஸ்து குருபீடம், சன்யாசி வேடம் என்ற இருட்டறைகளுக்குள் பதுங்கி நின்று பெண்களின் கற்பைச் சூறையாடுகின்ற கயவர்கள் பலர் இல்லையா?***
- ***சமுதாய வாழ்வின் ஒழுக்கத்தைக் கலைக்கின்ற வகையிலும் படிக்கின்றபோது உற்சாகமாக இருந்து பின் விளைவாக மனதுக்கும் உடலுக்கும் வியாதிகள் பல தோன்றக் காரணமான பாலுணர்ச்சி களை ஊட்டுகின்ற வகையிலும் புத்தகங்களை எழுதி விற்றுப் பணம் சம்பாதித்து ஆன்மீக வாழ்வு காணுகின்ற அறிவுத் துரோகிகள் உலகில் எத்தனை பேர் உள்ளார்கள் தெரியுமா?***
- ***விளைவறியா வேகத்தில் கவர்ச்சிகரமான திறமையுள்ள பேச்சின் மூலம் மூர்க்கத்தனமான உணர்ச்சிகளைப் பொது மக்களுக்கு ஊட்டி, ஆட்சிமுறையின் ஒழுங்கையே குலைத்து வருகின்ற புகழ் வெறி கொண்ட புல்லர்கள் எத்தனை பேர் அரசியல் தலைவர்கள் என்ற போர்வையில் இருக்கின்றார்கள் என்பதைப் பற்றி நீர் இன்னும் அறியவில்லையா?***
- *கலை என்ற பெயரில் காமத்தீயை வளர்த்து அதன் மூலம் பணம் ஈட்டுகின்ற கயவர்களைப் பற்றி நீர் இன்னும் அறிந்து கொள்ளவில்லையா?*
- ***அறம் வளர்க்க என ஓர் அறக் கட்டளையைத் தோற்றுவித்து அக்கிரமங்கள் பலபுரிய அதை இடமாக்கி கொண்டுள்ள வஞ்சகர்கள் இருப்பது தெரியாதா?***
- *அன்பனே! இவர்கள் அனைவருமே நமது சகோதரர்கள்தான் என்பதை மட்டும் மறந்துவிடாதே. குற்றவாளிகள் அனைவரையும் தண்டிக்க எக்காலத்திலும் மனித வர்க்கம் ஒரு நெறியை காண முடியாது. ஆனால் குற்றங்களுக்குரிய காரணங்களைப் போக்கி மனிதர்களைக் குற்றமற்றவர்களாக வாழச் செய்ய முயற்சித்தால்*

அது சாத்தியம். பொருளாதார சமத்துவமும் கல்வி நலமும் மக்கள் அனைவருக்கும் கிட்டச்செய்கின்ற ஓர் ஆட்சிமுறையின் மூலமே இது எளிதாகும் என விளங்கிக் கொள்வீராக.

## 316. குண்டலினி யோகம்:

☼ இருவிழிகள் மூக்குமுனை குறிப்பாய் நிற்க எண்ணத்தைப் புருவங்களிடை நிறுத்தி ஒருமையுடன் குருநெறியில் பழகும் போது உள்ளொளியே பூரித்து மூலமான குருவுக்கு மேனோக்கு வேகமூட்டும் கருத்துக்கு இந்நிகழ்ச்சி உணர்வெய்தத் தோன்றும் அருவ நிலையாம் ஆதி உருவாய் வந்த அத்துவித ரகசியமும் விளக்கமாகும்.

☼ உலகில் விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ற மெய்ஞ்ஞான வளர்ச்சி யில்லாத காரணத்தால் மக்கள் வாழ்வில் துன்பங்களும் சிக்கல் களும் குழப்பங்களும் பெருகியுள்ளன. எளிய முறைக் குண்டலினி யோக வாழ்க்கை நெறி மனித குலத்தை வழி நடத்த ஒப்புயர்வற்ற ஒளி விளக்காகத் திகழ்கிறது.

☼ உலகில் மனிதகுல வாழ்வில் எத்தனையோ மாற்றங்கள் இது வரையில் ஏற்பட்டன. மனவளமும் உடல் நலமும் அமைதி வாழ்வும் அளிக்கக்கூடிய நமது குண்டலினியோக வாழ்வே மனித குலத்துக்கு எல்லா வகையிலும் நலம் பயக்க வல்லது.

☼ உண்மை விளக்கம் பெறவும் அந்த விளக்கத்தின் ஒளியில் வாழ்வை சீரமைத்துக் கொண்டு உடல் நலத்துடனும் பொருள் வளத்துடனும் சிறப்பாக வாழவும் வழி செய்வது குண்டலினி யோக முறை.

## 317. கூர்தலறம்:

✚ வான்கோள்கள் உலகம் உயிரினம் ஓரறிவு முதல் ஆறாம் வற்றாது பெருகிவரும் வளர்ச்சியே தன்மாற்றம் வற்றாது பெருகும் பேரண்டத்தில் உயிர்வகையில் வழுவாத செயல் விளைவு நீதியே கூர்தலறம் உண்மை.

## 318. கூலி:

✜ பெரியவன் அங்கே இருக்கிறான்: எங்கும் நிறைந்த ஒரு சக்தியாக இருந்து கொண்டு காலத்தாலே இணைப்பை துண்டித்து

காலத்தாலே மீண்டும் இணைப்பு ஏற்படுத்துகிறான். கூலி மட்டும் நாம் கொடுக்கிறதே இல்லை.

## 319. கூட்டுறவு:

- ✷ வீடு விளைநிலம் தொழிற்சாலை வியாபாரம் ஆகிய நாலும் நாடு முழுதும் கூட்டுறவில் நடந்து முறையினை அமுலாக்க ஓடும் வறுமை பொருள் பெருகும் உழைப்பிற்கே நன்மதிப் புண்டாம். ஈடு வட்டி கடன் கோர்ட் ஏது அங்கே? சிந்திப்பீர்.

- ✷ தனித்தனியாகப் பொருட்களை விற்பனை செய்வதையும் கொள்முதல் செய்வதையும் நாளாவட்டத்தில் குறைத்துக் கொண்டே அதற்குப் பதிலாக கூட்டுறவு முறையிலேயே எந்தப் பொருளையும் விற்க வாங்க உற்பத்தி செய்ய வேண்டும். இந்தத் திட்டமும் அகில உலகத் திட்டமாகப் படிப்படியாக மாறவேண்டும். இதனால் மனித இனத்திற்கு பொருளாதாரத் துறையில் ஏற்படும் பெரும் நன்மையை விரித்துக் கூறுவதென்றால் அதுவே பெரிய நூலாகி விடும்.

- ✷ கூட்டுறவு முறையில் இப்போது சிறு அளவில் நடந்துவரும் வியாபாரங்களிலே பல ஊழல்கள் இருக்கின்றனவே இத்தகைய முழு அளவான திட்டம் எப்படி நடத்த முடியும் எனவும் சிலர் ஐயுறலாம். ஒருபுறம் கூட்டுறவும் ஒரு புறம் தனிமனிதன் வியாபாரமும் நடந்துவரும் வரைக்கும் அத்தகைய சிரமங்கள் இருக்கும். எல்லா இடத்திலும் எல்லா வியாபாரங்களையும் கூட்டுறவு முறையில் நடத்தினால் எந்தச் சிக்கலும் எழாது. சில கஷ்டங்கள் ஏற்பட்டாலும் சகித்துக் கொண்டுதான் முன்னேற்றம் காண வேண்டும்.

## 320. கூட்டு வாழ்வு:

- ✣ இயற்கை என்ற ஒரே மூல சக்தி அணு முதல் அண்டங்கள் ஜீவராசிகள் அனைத்துமாகி இயங்கி அதுவே நினைக்கும் நிலையிலும் ரசிக்கும் நிலையில் அறிவாகவும் இருக்கும் என்ற ஆன்மீக நிலையை அறிந்த கூட்டுவாழ்வின் தத்துவத்தை அறிந்து பொறுப்பு உணர்ந்து கடமை செய்யும் பண்பே ஓங்கி நிற்கும். அந்த உலகப் பொது சமாதான ஆட்சியின் கீழ்.

## 321. கூட்டுப்பண்ணை:

♢ கூட்டாக கிராமத்திலுள்ள விவசாயிகள் எல்லா நிலங்களையும் கூட்டுப் பண்ணை முறையில் பயிர் செய்ய வேண்டும். விளைவு களை ஒன்று சேர்த்து செலவு கழித்து மீதியை மூன்றில் ஒரு பங்கு நிலச் சொந்தக்காரர்களுக்கும், இரண்டு பங்கு விவசாயி களுக்கும் அவர்கள் வேலை செய்த மணிக்கணக்கு அல்லது நாள் கணக்குப்படியும் பங்கு செய்து கொடுத்து விடலாம்.

## 322. கெட்ட எண்ணம்:

✺ நமது வாழ்வு நலமுற வேண்டுமெனில் எந்தவிதமான கெட்ட எண்ணத்தையும் நமது உள்ளத்தில் ஊன்றவோ வளரவிடவோ கூடாது.

## 323. கேடு:

♀ இயற்கை நியதியை, அறியாமலோ அலட்சியம் செய்தோ, உணர்ச்சி வயப்பட்டோ, மனிதன் செயலாற்றும்போது ஏற்படும் விளைவுகள்தான் துன்பங்கள், பொருளிழப்பு, ஏழ்மை நோய்கள், உறுப்பிழப்பு, அகால மரணம் ஆகிய அனைத்துக் கேடுகளுமாகும்.

## 324. கொடுஞ்செயல்கள்:

✻ ஒரு சாலையில் ஒரு மனிதன் பொறுப்புடைய பதவியை வகிக்கிறான் என்ற காரணத்தால் தலைவன் என்ற சுட்டுப் பெயரால் அழைக்கப்படுபவன், மோட்டார் காரில் போக வேண்டுமானால், அதற்காகக் காலை, பகல், மாலை எவ்வேளை என்றாலும் பல மைல் தூரம் சாலைகளில் இரு மருங்கிலும் போலீஸ்காரர்கள் கால் கடுக்க காவல் இருந்துகொண்டு, அத்தலைவன் வர நீண்ட நேரத்திற்கு முன்னமே அந்தச் சாலையில் போகும் ஆயிரக் கணக்கான பேர்களையும் பலவிதமான வண்டி வாகனங்களையும் நிறுத்தி வெளியில் நிற்கச் செய்து துன்புறுத்தும் முறையற்ற கொடுஞ்செயல்கள் இருக்கக் காரணமே இல்லை.

## 325. கொலைத்திருட்டு:

❖ பிறர்பொருளை அபகரித்தால் திருட்டு என்போம். இந்தப் பேருலகில் மக்கள் எல்லாம் பரமென்பார் இதனை பிற

உயிரை ருசிக்கும் உணவிற்கும் கொன்று பிழைத்தல் கொலை திருட்டு இரு இணைப்பு குற்றமன்றோ?

## 326. கொள்கை:

❖ என்னிடம் தறிவேலை செய்யும் தொழிலாளர்களுக்குத் தாராளமாகக் கூலி கொடுத்தேன். பிறகு ஆண்டுதோறும் நிகர இலாப வருவாயில் 25 சதவீதம் போனசாகக் கணக்குப் போட்டு நெசவாளர் எல்லோருக்கும் கொடுத்து வந்தேன். நெசவாள மனைவி குழந்தைபெற்றால் உடனடியாக ரூ.15 இனாமாக வழங்கவும் எற்பாடு செய்தேன். நெசவுத் தொழிலையும் துணி விற்பனையையும் எப்படி நடத்த வேண்டுமென்ற ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டேன்.

## 327. கோபம்:

☯ கோபத்தை அடக்கிக் கொள்ள நம்மால் முடியவில்லை எனில் பிறர் மீது எப்படி ஏன் கோபம் கொள்ள வேண்டும் என்று ஒரு கேள்வியை எழுப்பிக் கொள்ள வேண்டும்

☯ கோபம் முதலில் உங்கள் உடலுக்கும் மனதிற்கும் பாதிப்பு செய்துவிட்டுத் தான் மற்றவரை சென்று தாக்கும் என்பதை நீங்கள் அனுபவத்தில் உணர்ந்திருக்கலாம்.

## 328. ஞானக்கன்:

☸ இரு புருவ மையத்தில் இருள் நீக்கி, அருள் விளக்கும் ஒரு வாசல் உண்டதுவே உயிர் நிலையை உற்றுணரும் திருவாசல் உயிர் அறிவாய் தெய்வ நிலை எய்தும் வழி கருவாசலும் ஞானக் கண் என்பதும் இதுவே.

## 329. ஞானம்:

✻ ஞானம் என்பது பிரபஞ்சத்தை இயக்கும் சீர்காந்த அறிவாகும்.

✻ ஒரு கூர்மையான கத்தியை மருத்துவர் கையாளும்போது உயிரைக் காப்பாற்றப் பயன்படுகிறது. அதே கத்தி ஏதுமறியாத குழந்தையின் கையிலிருக்கும்போது அவற்றை முறையாகப் பயன்படுத்தி வாழ்க்கையில் வெற்றியும் மகிழ்ச்சியும் பெறலாம். இந்த ஞானம் இருக்கும்போது அவற்றை முறையாகப்

பயன்படுத்தி வாழ்க்கையில் வெற்றியும் மகிழ்ச்சியும் பெறலாம், இந்த ஞானம் இருக்கும்போது, இந்த ஞானம் இல்லாதபோது அவற்றால் நாமும் துன்பம் அடைந்து மற்றவர்களையும் துன்பத்திற்கு ஆளாக்குகிறோம்.

* தறியாட, நூல் ஓட, ஆடை காணும் தனையுணர்ந்தோர் கருத்துணர ஞானம் தோன்றும்.

* ஞானத்தை புறக்கணித்த வாழ்வு நிறைவற்றது. இனிமையற்றது. அமைதியற்றது.

* வாழ்க்கையையும் வாழ்க்கையின் நோக்கத்தையும் அந்நோக் கத்திற்கேற்ற வாழும் முறை என்ன என்பதையும் அறிந்து கொள்வதுதான் ஞானம்.

* ஞானமானது நம் நாட்டில் பிறந்ததுதான்.

* மன அமைதியைப் பேணும் வகையில் தியானம், சிந்தனை அகத்தாய்வு இவற்றில் தொடர்ந்த ஈடுபாடு. உடற்பயிற்சியை நன்கு செய்து வா. இவ்வாறு தொடர்ந்து ஒட்டு மொத்தமான வாழ்க்கைப் பயிற்சியை கைக்கொண்டால் வேறு எந்த ஞானமும் வேண்டாம்.

* ஞானம் என்றால் ஞாபகத்தின் இயல்பறிந்து, நான் என்ற இயற்கை தத்துவம் உணர்தலாகும்.

* கற்பனையாகவும் பழக்கத்தை ஒட்டியும் எழும் விருப்பங்களை அப்படியே செயல்படுத்த, எண்ணத்தை, உடலை இயங்க விடும்போது உனக்கு அமைந்த ஞானத்தைப் பயன்படுத்தாத வீணனாகிறாய்.

* வெளிச்சத்திலே பொருட்களைத் தெளிவாகப் பார்ப்பது போல முறையாக அடக்கிவைத்த பொருட்களில் தேவையான ஒன்றைக் கால நீளமின்றி குறிப்போடு எடுத்துக் கொள்வது போல மனிதன் எளிதாகவும் செம்மையாகவும் வாழ்வதற்கு ஞானம் உதவுகின்றது.

* தன்னையறியா அறிவு நிலை மாயையாகும். ஒப்பற்ற உயிரறிய ஞானமாகும்.

* தனது நோக்கம் குறித்து சிந்திக்கத் தொடங்குகின்றபோது தனது மூலம் நோக்கி ஆராய்கின்றபோது சிறிது சிறிதாக மயக்க நிலையிலிருந்து விழிப்பு நிலை உண்டாகின்றது. முழு விழிப்பு நிலையை ஞானம் என்றும் மெய் விளக்கம் என்றும் கூறுகிறோம்.

- அறிவு அழிவுக்கு துணை போகும் ஞானம் ஆக்கத்திற்கு அச்சாணியாக இருக்கும்.
- துறந்து கொள் தான் தனது என்று சொல்லும் சிற்றறையை விட்டு வெளியே வா, அகன்று நோக்கி பறந்துவா, உலக சமுதாயத்தின் பரப்பகத்தில் பற்று அறும் கடமையினால் ஞானம் பழுக்கும்.

## 330. ஞானவழி:

- புத்தி வழி மூலம் பண்பட்டு, ஞான வழிக்கு வருவதுதான் பாதுகாப்பானது. ஏனென்றால் கற்பனைகளாலும் சடங்குகளாலும் தீமை செய்யாதிருக்கவும் நன்மையே செய்யவும் பக்தி வழி உதவியாக இருக்கிறது.

## 331. ஞானயோகம்:

- முற்றும் உணர்ந்த பின் ஒரு சிறு குடும்பத்திற்குத் தனது கடமையை ஆற்றுவதற்குப் பதில் உலக சமுதாயத்தையே ஒரு குடும்பமாகக் கொண்டு கடமையாற்றி வாழுகின்ற பெரும் பேறு ஞானயோகம்.

## 332. ஞானியர்கள்:

- நித்தியமாமம் நிலையறிந்த ஞானியர்கள் நிலவுலக மக்களுக்கு எடுத்துச் சொன்ன அத்தனையும் சேர்ந்து ஒரு தொகுப்பாய்ச் செய்தால் அனைத்தும் இணைந்த ஒரு கருத்தால் இருக்கக் காண்போம்.
- தேவையை ஒட்டியதாகவே விருப்பத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டால் நீயே ஞானி.

## 333. ஞாபகம்:

- நெற்றி உச்சியில் ஞாபகமாயிரு.

## 334. சங்கற்பம்:

- என்னைச் சிவமாய் உணர்ந்தேன் இளமை காப்பேன். ஈரல் இருதயம், மூளை, கண்கள், நாக்கு, அன்னப்பை, குடல், நீர்ப்பை, குண்டிக்காய்கள், ஆசனப்பை வலுவடைந்து நலமாய் வாழ்வேன்.

❁ உடல்நலம், அறிவு, உயர்புகழ், செல்வம், கடமை இவற்றில் யான் கருத்தோடு உயர்வேன். வாழ்வேன் வளமுடன் வாழ்நாள் வரைக்கும் வாழப் பிறரையும் வாழ்த்தி வாழ்ந்திடுவேன்.

❁ இன்று இந்தப் பொதுவான வாழ்க்கை நலச் சங்கற்பம் தமிழ் நாட்டில் தவச்செல்வர்கள் அருட்செல்வர்கள் அருள்நித்யர்கள் எல்லோருடைய உள்ளங்களிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த தன்மந்திரம் கருவில் கூடப்பதிந்து அதை ஓதுவோர்கள் சந்ததிகட்கும் பலதலைமுறைகட்கும் நலமளிக்கும் என்ற எண்ணத்தின் ஆற்றலறிந்த யான் உறுதியாகக் கூறுகிறேன்.

## 335. சடங்குகள்:

✠ சந்தர்ப்ப சூழ்நிலையால் என்றென்றோ சர்வ தேசங்களிலும் மனிதர் கொண்ட எந்தெந்தச் செயல்களோ காரணமோ இன்றி இன்று பல சடங்குகளாய் வழக்கமாகி வந்துள்ளவைகளிலே, பல நம் வாழ்வின் வளமிழக்கும் நச்சாகி இருக்கக் கண்டோம். சிந்தித்தோர் முறைவகுப்போம் தேவையற்ற தொல்லைதரும் சடங்குகளை ஒழித்துக்கட்ட.

## 336. சட்டம்:

✡ ஒருவருக்கொரு பெண் போதும் ஒவ்வாத போதும் வாழ்வு திருமணம் மாற்றிக்கொள்ளும் தெய்வீக வாழ்வு தன்னை இருவருக்கும் ஈந்து பெற்றோர் ஈட்டிய மிகுதியான பொருளிலே சமபங்கு ஈயும் சட்டம் வேண்டும்.

✡ ஆட்சிச் சட்டங்கள் எல்லாம் செல்வந்தர் தம்மை அதிகாரி களைப் பாதுகாத்தல் கண்டோம். ஆட்சியாளர் சட்டத்தை அவ்வப்போது அமைந்த சூழ்நிலைகளுக்கு ஏற்பச் செய்தார்.

## 337. சமத்துவம்:

✢ உணவு மட்டுமே ஒருவருடைய வயிற்றுப் பசியை நீக்கும். வாழ்க்கையில் அமைதியை நாடுபவர்கள் பொருளாதாரச் சமத்துவத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

## 338. சமூகப்பிளவு:

✶ ஆடம்பரம் ஒருபுறம் வறுமை ஒருபுறம் என்ற சமூகப்பிளவு நிலை ஏற்பட்டுள்ளது.

## 339. சந்தோஷச் செய்தி:

- சிந்தையை அடக்கி சும்மா இருப்பதற்குரிய வழிமுறைகளை அறியச் செய்த குருவே என்னுடைய மகிழ்ச்சியான செய்தியைக் கேட்பாயாக.
- சிந்தனைகளை அடக்கி சும்மா இருக்கின்ற வேறு நிலையில் அறிவு அசைவற்று இருக்கின்றது. அப்பொழுது பெரும் ஆனந்தம் பொங்குவதை உணர்கின்றேன்.
- அதுமட்டுமல்ல இந்தப் பெரிய உலகில் எத்தனையோ பிறவிகள் எடுத்து இறுதிப் பிறவியாகிய மனிதப் பிறவியெடுத்து எனக்கு அமைதியான சாந்தமான வாழ்வினை வாழ்க்கையில் கொடுத்துள்ளது. இது எனக்குப் பெரிதும் மகிழ்ச்சியான செய்தியாகும்.

## 340. சாதி:

- வேத மத ஜாதி இன வேறுபாட்டை வேரோடு போக்கி உலகெங்கும் மக்கள் சோதரர்களாய் ஒன்றுபட்டு வாழவேண்டும்.

## 341. சினம்:

- நம் மனதில் முன்னதாகவே ஒரு ஒத்திகை செய்து கொள்ள வேண்டும். அவர்களோ அறியாதவர்கள் பயிற்சி செய்யாதவர்கள். அவர்கள் என்ன கூறினாலும் எவ்வாறு சினமூட்டினாலும் நான் சினப்படாமல் எதிர்த்துக் கூறாமல் 'என் வினைப் பதிவு தான் கழிகிறது' என்று மனதில் ஏற்றுக் கொண்டு அவர்களை வாழ்த்துவேன் என்ற தீர்மானத்தை மனதில் ஆழமாக உறுதியாக வைத்துக் கொண்டால் யார் என்ன கூறினாலும் அதைப்பற்றி மனம் வருந்தவேண்டிய அவசியம் வராது.
- சினம் எழும்போது நமது சீவகாந்த சக்தியானது அதிகமாக வெளியேற்றப்படுகிறது. சீவகாந்த சக்தி அதிகமாக வெளியேற்றப் பட்டால் அது உடலையும் தாக்கும். மனதையும் கெடுக்கும்.
- சினத்தால் உடலிலே உள்ள உயிர்ச்சக்தி விரைவு கொள்கிறது. குருதி அழுத்தம் ஏற்பட்டு இரத்தவேகம் அதிகரிக்கின்றது. கண்கள் சிவக்கின்றன. நரம்புகளில் படபடப்பு ஏற்பட்டு அவை பலவீனம் அடைகின்றன.

## 342. சீவகாந்தம்:

☆ உயிர் உடல்களில் உண்டாகிச் சுழன்றியங்கிக் கொண்டிருக்கும் இந்தக் காந்த அலைதான் சீவகாந்தம் ஆகும்.

☆ பஞ்சபூதக் கலவையான பரு உடலில், சீவகாந்தமானது அழுத்தமாக ஒலியாக, ஒளியாக, சுவையாக மணமாக, மாற்றம் பெற்று இயங்கும் போது அந்தத் தன்மாற்றத்தின் முழுமைப் பேறாகவும் மனமாகவும் சீவகாந்தம் இயங்குகின்றது. எனவே மனம் என்பது சீவகாந்த அலையன்றி வேறு ஒரு தனிப் பொருள் அன்று.

## 343. சிக்கல்:

✪ இயற்கையை அறியாமல் இருப்பதே வாழ்வில் முதல் சிக்கல்.

## 344. சீர்திருத்தம்:

☆ வாழ்வின் இனிமைக்குத் தக்க சீர்திருத்தம் செய்து கொள்ள வேண்டும். மக்கள் குலம் மனஒருமையோடு முயற்சி செய்து இயற்கையின் இருப்பையும் அன்பையும் கருணையையும் உணர்ந்துகொண்டு பயன்பெற வேண்டும். அதாவது இயற்கை யோடு இணைந்த வாழ்வுதான் சிறந்த வாழ்வாக அமைய முடியும் என உணரவேண்டும்.

## 345. சுதந்திரம்:

★ சுதந்திரம் என்பது உண்மையாக எல்லோருக்கும் வேண்டுமானால் பிறருடைய சுதந்திரத்தை ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ளக் கூடிய கட்டுப்பாடுகள்தான் எல்லோருடைய சுதந்திரமும் காக்கப்படும். ஒவ்வொரு தனி மனிதனுடைய பாதுகாப்பும் அச்சமின்றி அமையும்.

## 346. செயல்விளைவு:

✯ இறைநிலை என்கின்ற மெய்ப்பொருள் எவ்வாறு எல்லாம் பொருட்களிலும் உயிர்களிலும் ஊடுருவி நிறைந்து, ஒவ்வொரு செயலுக்கும் ஏற்ற விளைவை இறைநீதியாக அளிக்கிறது என்ற உண்மையை, ஆராய்ந்தறிந்து, அவ்விளக்கத்தைப் பின்பற்ற

விழிப்போடு செயலாற்றி பயன் பெற்றுச் செம்மையாக வாழ வழிகாட்டுகின்ற தத்துவம்தான், செயல்விளைவு நீதியாகும். செயல்விளைவுத் தத்துவத்திலும் எச்செயலுக்கும் விளைவாக வருவது இறைநிலையின் ஆற்றலே. ஆயினும் அந்த ஆற்றலுக்குப் பிறப்பிடமான இறைநிலையைப் புலன்களால் உணர முடியாது. விளைவுகளைத்தான் உணரலாம். இத்தகைய செயல்விளைவு தத்துவ ஆராய்ச்சியின் தெளிவில் எப்பொழுதுமே நாம் இறையாற்றலின் விளைவுகளால் அந்த மாபெரும் தெய்வீக ஆற்றலோடு இணைந்தே இருப்பதை உணரலாம். கற்பனைகளால் ஏற்படுகின்ற மன மயக்க விளைவுகளில் இருந்து விடுபட்டு முழுமையான சுதந்திரத்தோடு நமது அறிவு இயங்கி உணர்ந்து மகிழலாம்.

- இயற்கை நியதிப்படி ஒவ்வொரு செயலுக்கும் தக்க விளைவு உண்டு. அதன்படி மனிதன் செய்யும் எந்தத் தவறுக்கும் வாழ்க்கைச் சிக்கலையோ நோய் முதலிய துன்பங்களையோ அனுபவிக்கத்தான் வேண்டும். இவ்வாறு துன்பத்தில் ஆழ்ந் தவர்கள் தாங்களே சிந்திக்கவும் முடியாது. தங்கள் வாழ்வைச் சீரமைத்துக் கொள்ளவும் முடியாது.

- செயல்விளைவுத் தத்துவத்தை உணரும்பொழுது மனித வாழ்வில் பொறுப்புணர்வு அதிகமாகிறது. இறைவனே செயலுக்கு விளைவாக வருவதால் இறைவனைத் தனியே தேடுகின்ற காலமும் மிச்சமாகிறது. நாம் செயல்களை ஒழுங்குபடுத்தும் பொழுது எத்தனை தேவையற்ற சடங்குகள் ஒழிகின்றன. உயிர்களை மதித்து வாழும் பண்பு வளர்கிறது. இதை உலகிற்கு உணர்த்த வேண்டியது சிந்தனையாளர்களின் கடமையாகும்.

## 347. செல்வம்:

- வரி வட்டி லாபம் போன்ற உழைப்பு சாராத செல்வம் வணிகர்களிடமும் அரசாங்கத்திடமும் குவிந்து வருகிறது.

## 348. சொல்லெங்கே? செயலெங்கே?

- பல்லாயிரம் புழுக்கள் பதைபதைக்க வதைத்தெடுத்த பட்டு என்னும் கொடிய பாபக் குறிப்பை உடுத்தி சொல்லாயிரம் கொத்துத் துதிபாடி தெய்வத்தை சொர்க்கலோகம் வேண்ட சொல்லெங்கே? செயலெங்கே?

## 349. சொந்தம்:

✯ புரிந்துவிட்ட மனிதனுக்கு வளர வாழ பேருலகம் எங்கெங்கும் சொந்தமாகும்.

## 350. சொரூபம்:

✱ சொல்லாத முன் இருந்த சொல்லைப் போல சொரூபமெல்லாம் பூரிக்க முன் அரூபம்.

## 351. சோம்பேறி:

✲ தனி மனிதனின் உடைமை, உரிமை என்ற தப்புக்கணக்கின் கீழ் உலகில் விளைகின்ற பெரும்பகுதி உழைக்காத சோம்பேறி களின் பேரேடுகளில் வரவு வைக்கப்படுகின்றது.

## 352. தத்துவங்கள்:

✳ தத்துவத்தைத் தெளிவாக்கும் கலை வேதாந்தம்

✳ தத்துவம் வேதாந்தம் விஞ்ஞானம் மூன்றும் தனித்தனியாம் வெவ்வேறு பிரிவென்பார்கள். தத்துவமோ இயற்கையதன் உண்மை கூறும்.

✳ தனித்தனியாய் தோன்றும் எந்தத் தரமுடைய பொருளில் தத்துவமாம் தெய்வம் உள்ள தன்மையும் விளங்கியும் கனிந்த அந்தப் பேரறிவில் கருத்துணர்ந்த ஞானிகள் கண்ட உணர் பிரம்மஞானம் காட்டினார் மறைகளில்.

✳ இறைநிலை இறைத்துகள்கள் அணு. அணுக் கூட்டான தோற்றங்கள் ஒவ்வொரு அணுவிலுமிருந்து பிரிந்தோடும் காந்த அலைகள் அந்த அலைகளின் தன்மாற்றங்களான அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் எனும் ஆறு வகை நிகழ்ச்சிகள் இவையே பேரியக்க மண்டலம் எனும் பிரபஞ்சத்தில் நாம் காணும் கருதும் அனைத்துத் தத்துவங்களுமாகும்.

## 353. தமிழன்:

✴ தமிழன் என்றால் யார்? தமிழைப் பேசுவோனா? தமிழ்நாட்டில் பிறந்தோனா? தொன்று தொட்டு தமிழர் என்ற பரம்பரையில்

தோன்றினோனா? தமிழ்நாட்டில் வாழ்வோனா? தகமை சான்ற தமிழ் நூல்கள் கற்றவனா? மனிதப் பண்பில் தனிச் சிறப்புப் பெற்றவனா? என ஆராய்ந்தால் தமிழன் நான் என்பவன் தன் கடமை காண்பான் தரணிக்கே நலம் விளைவிக்கும் சாந்தனாவான்.

## 354. தவறு:

- தவறு செய்பவர்கள் அதன் விளைவை அனுபவிக்காமல் மன்னிக்கப்படுவதில்லை. தவறு செய்பவர்கள் அச்செயலில் விளைவை அனுபவித்தே தீர வேண்டும். இந்த விளைவால் ஏற்படும் துன்பம்தான் இனியொரு முறை தவறு செய்யாது இருக்க வைக்கக்கூடிய நல்லறிவாகும்.

- மனித வாழ்க்கையில் துன்பமும் துயரமும் நேர்வதற்கு மூன்று சூழ்நிலைகள் உள்ளன. அவை ஆகாம்ய கர்மம், ப்ராப்த கர்மம், சஞ்சித கர்மம் ஆகும். சஞ்சித கர்மம் என்பது நம் முன்னோர்கள் செய்த புண்ணிய பாவத்தின் தொகுப்பாகும். அவை வழி வழியாகச் சந்ததிகளுக்கு வந்து சேரும் வினைப் பதிவாகும். எனவேதான், ஒரு மனிதனுக்கு அவன் எந்தத் தவறும் செய்யா விட்டாலும் கூட துன்பமும் துயரமும் உண்டாகிக் கொண்டிருக் கின்றன. அந்த சஞ்சிதகர்ம வினைப்பதிவுகளைப் பிராயச்சித்தம் தவம் போன்றவைகள் மூலம் தீர்த்துக் கொள்ளலாம்.

## 355. தவமுறை:

- கொள்பவர்க்கு வயது பதினாறின் மேல் ஆகும். பெண்களுக்கும் இந்தத் தவம் ஒத்ததாகும். புகைகுடிகள் ஆகாது. ஒழுக்கம் வேண்டும். கொண்டவர்கள் குடும்பத்தில் கடமையாற்றி குரு காட்டும் தவமுறை.

## 356. தள்ளவேண்டியவை:

- பிறர் செயலில் வாழ்க்கையினில் குறுக்கிட்டேதன் பெருமை யினைத் தன்முனைப்பை வளர்க்க வேண்டாம். பிறர் ஏழ்மை எளிமையிலே வாழ்ந்தபோதும் பேராற்றல் மன அலைக்கு உண்டு. பிறர் உள்ளம் வருத்தச் செய்துலகில் வாழும் பேதை மனம் பெற்றவர்க்கு அமைதி கிட்டா. பிறர் மகிழத் தான் மகிழ்ந்து சலிப்பில்லாத பேரின்ப வாழ்வடையும் மேன்மை ஏற்போம்.

## 357. தவிர்த்தல்:

✷ தேவையில்லாத துன்பமே தருகின்ற கருத்துக்களையும் செயல் களையும் விட்டுவிட வேண்டும்.

✷ அறிஞர் பெருமக்கள் கூடி ஓர் ஐம்பதாண்டுக் காலத்திட்டம் வகுத்து படிப்படியாகத் தேவையில்லாதவற்றைத் தவிர்க்கவும் தேவையுள்ள அனைத்தையும் புகுத்திக் கொள்ளவும் வழி வகுத்துக் கொண்டு வாழவேண்டும்.

## 358. தன்னடக்கம்:

✤ அந்த வழியிலே ஒருவர் முன்னால் போனார். மற்றவர்கள் பின்னால் வந்து கொண்டிருக்கிறார்கள். தெரிந்தவர்கள் தெரியாத வர்களை வழிநடத்தி அழைத்துக் கொண்டு போகிறார்கள். அதுதான் நீங்களும் நானும் ஒன்று கூடி ஒருவர் அனுபவத்தை ஒருவருக்குச் சொல்லிக் கொடுக்கிறோம். அதிலே குரு என்னவோ பெரிய வரப்பிரசாதம் பெற்றவர் என்றோ நீங்கள் ஏதோ குறையுடையவர்கள் என்றோ இல்லை.

## 359. தாவர இனங்கள்:

✹ எல்லா உயிர்வகைகட்கும் உணவாகவும் மற்றும் வாழ்க்கை வசதிகளாகவும் சிக்கலில்லாமலும் வரையறை இன்றியும் தங்களது வளர்ச்சியை அர்ப்பணித்து உலகைக் காத்து வருகின்றன தாவர இனங்கள்.

✹ தாவர வர்க்கங்களை அன்போடும் கருணையோடும் உருவாக்க இதர உயிரினங்களுக்கு அளித்துள்ள பேரன்புக்காகவும் கருணைக் காகவும் இறைநிலைக்கு நன்றி கூறி அப்பெருமகிழ்ச்சியான பேரின்ப வெள்ளத்தில் திளைப்போம்.

## 360. தானம்:

☼ தானமும் தியானமும் உங்களை உயர்த்தும்.

## 361. திருவிழா:

- இன்றைய காலக்கட்டத்தில் தேவையற்ற திருவிழாக்களும் தேர்த் திருவிழாவும் எந்த வகையிலேயும் நம்மையளிக்கவில்லை. மனித குலத்திற்கு ஆற்றல் விரயம் பண விரயம் இவற்றோடு பலர் கூடுவதால் தொத்து நோய் முதலியவைகளும் உண்டா கின்றன.

- மனிதன் இறந்த பிறகு அவனுடைய ஆன்மாவுக்கு தேவை களும் உணர்ச்சிகளும் இருப்பதாகக் கற்பித்து இங்கே உலகில் கடவுளுக்கென்று கொடுக்கும் பொருட்களெல்லாம் சொர்க்கத் திற்குப் போன ஆன்மாக்களுக்குப் போய் கிடைப்பதாகப் பலகாலம் பலராலும் கூறப்பட்டு இந்நம்பிக்கையில் கடவுளுக்கு என்ற உணவு அளிக்கத் திருவிழாக்களும் கடவுளுக்கென்று பல வகையான பொருட் காணிக்கைகளும் நடைபெற்று வருகின்றன.

- ஒரு பாத்திரத்தில் நீர் வைத்தால் அதிலிருந்து தண்ணீர் வீண் விரயமாகும். பொத்தல்கள் இல்லாமல் இருக்க வேண்டும். அதே போன்றுதான் மனித ஆற்றலும் பொருள் விரயமும் எந்த சமுதாயத்தில் இருந்தாலும் அந்த சமுதாயம் வாழ்வில் முன்னேற முடியாது. எனவே தேவையற்ற விழாக்களைத் தவிர்க்க வேண்டும்.

## 362. திரைப்படத்துறை:

- தனி மனித ஒழுக்கம் என்பது மனிதன் கடைப்பிடிக்கக் கூடிய தலையாய கொள்கை ஆகும். சமுதாயத்தில் பெருகிவரும் ஒழுக்கச் சீர்கேட்டிற்குத் திரைப்படத்துறையும் காரணமாக அமைகிறது.

## 363. திருமணம்:

- இல்வாழ்வில் பெண்ணை விட ஆணின் ஆண்டு ஈறாறின் மேல் இருக்கலாகாது.

- உடன்பிறந்தோர் என்று கண்டால் வாய்விட்டுச் சொல்லி தடை விதித்துக் காப்போம். வாழ்க்கையிலே இத்தவறு நேர்ந்திடாமல்.

- திருமணத்தில் கூட சிக்கல்கள் இருக்கின்றன. அந்த சிக்கல் களை எல்லாம் தவிர்த்து புதுமாதிரியான திருமணத்திற்கு வழி

செய்து, இப்போது எத்தனையோ திருமணங்கள் குறைந்த பொருட் செலவில் நடைபெற்று வருகின்றன. எனக்குத் தெரிந்த வரையில் நம் நாட்டில் 80 சதவீத குடும்பங்கள் சொத்தை இழந்து சமுதாயத்தில் சங்கடப்படுவதெல்லாம், திருமணத்தில் பட்ட கடன். அதுவே ஒரு தலைமுறை இரண்டு தலைமுறையாக வந்து இருக்கக் கூடியதையெல்லாம் உறிஞ்சிக் கொண்டு போய் விடுகிறது. இதுமாதிரி இருக்கின்றதாலே திருமண முறைகளில் சமுதாயத்திலே இப்போது ஒரு விழிப்புணர்ச்சி வேண்டும்.

✷ பெண்கள் தம் பொருள் வருவாய் ஆண்களைப் போல பெற்ற சம உரிமையுடன் வாழும் காலம் பெண்கள் நம் விருப்பம் போல் கணவன் தேர்ந்த பிரியமுடன் காதல் வாழ்வெய்தல் நன்று.

✷ ஆணாக இருந்தாலும் ஒழுங்குடன் மகிழ்வுடன் வாழ துணை தேவை. தவிர்க்க இயலாத காரணங்களால் துணையைப் பிரியநேரிடின் மற்றொரு துணையைத் தேடலாம். இது தனி மனிதப் பாதுகாப்பு முன்னேற்றம் கருதி மேற்கொள்ள வேண்டுமே தவிர அழகு இச்சைகருதி அமைந்திடக் கூடாது.

## 364. தொழில்:

◊ இயற்கை விளைவுகளை வாழ்வின் வளமாக்கும் செயல்தான் தொழில்.

## 365. தொண்டு:

✛ உற்ற செல்வம் உடலுழைப்பு அறிவு இவை கொண்டு உலகுக்கு உதவியருட் தொண்டாற்றி மகிழ்வோம்.

✛ அன்பும் கருணையுமாய் அகன்ற நிலையில் உள்ளாய் என்மனதை விரித்து இணைத்துக்கொண்டாய் உன்னுள்ளே கன்ம வினைகள் எல்லாம் கழிந்தன உணர்கின்றேன். உன்னை உணர்ந்து உய்ய உலகோர்க்குத் தொண்டு செய்வேன்.

## 366. தொண்டு நிலையம்:

✺ உலக ஆட்சியின் கீழ் அகில உலகப் பேரறிஞர்களைக் கொண்ட ஒரு தொண்டு நிலையம் அமைக்கப்படும். அது அவ்வப் போது மனித இன வாழ்வின் உயர்வுக்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்கவும், மக்களுக்குத் தொண்டாற்றவும், ஒரு

சமுதாய சீர்திருத்த இணைப்பு நிலையமாகப் பணி ஆற்றும் ஆன்மீகம், பொருளாதாரம், சுகாதாரம், விஞ்ஞானம், அரசியல் என்ற ஐந்து வகையையும் இணைத்து அறிஞர்களும் நிபுணர்களும் கூடிய ஆராய்ச்சிக் குழுவினரால் மக்கள் வாழ்வை அவ்வப் போது சீர்திருத்த ஏற்றபடி வழிகளை வகுத்துக் காட்டும்.

## 367. தெய்வம்:

- ♀ எல்லாம் வல்ல தெய்வமது எங்கும் உள்ளது நீக்கமற. வல்லாய் உடலில் இயக்கமவன். வாழ்வில் உயிரில் அறிவுமவன் கல்லார் கற்றார் செயல்விளைவாய் காணும் இன்ப துன்பம் அவன்.
- ♀ பரவெளியாய் பரந்து விரிந்துள்ள பெரும் பொருளே பற்றற்ற தெய்மென்று பற்றினேன் உணர்ந்தேன். சிரம் அமர்ந்து மன அலையைச் சீரமைத்த பேற்றால் சிறப்படைய பேரண்ட சீரியக்கம் கண்டேன்.
- ♀ கடவுளை வணங்கும்போது கருத்தினை உற்றுப்பார் நீ. கடவுளாய்க் கருத்தே நிற்கும் காட்சியாய் காண்பாய் அங்கே.
- ♀ தெய்வத்தின் பெயரால் அழைக்கப்படும் மதம் ஒன்று கூட இல்லை.
- ♀ ஓர்மைநிலை பெற்ற மன ஆற்றலைக் கொண்டு என் வாழ்வில் இன்னஇன்ன பேறுகள் வேண்டுமென்றும் இவற்றை அருள்வாய் என்றும் தனக்கு அப்பாலுள்ளதாகக் கருதப்படும்.
- ♀ தெய்வத்தைப் போற்றி வழிபட்டு வாழ்வோர் சிந்தனையும் மேற்கொண்டால் சிறந்துயர்வார். ஐயுணர்வும் சீர்திருத்தும் ஆற்றல் ஓங்க அவர் தகைமை நன்குணர்வார் அறம் தழைக்கும்.

## 368. தெய்வநிலை:

- ✻ மனிதனுக்கு இனி ஒரு மதம் போதும். மதத்திற்கு அடிப்படை யாகத் தெய்வநிலை ஒன்று போதும். அதை அடைவதற்கு தெய்வம் ஒன்று போதும்.
- ✻ அலையலையாய் இயங்குகின்ற மனத்தை நிலையாக்கி நேரடியாகத் தானே அதுவாகி அனுபவபூர்வமாக உணரக் கூடியது.

❖ ❖ ❖

அருள்நிதி **பானுமதிகுமார்**<br>**பொறுப்பாசிரியர்**

**அன்பகம்,**<br>**செங்கற்பட்டு.**

# பொன்மொழிகளின் பொற்குவியல்கள்

'என் சிந்தை கோயிலென வாழும் குரு' என்ற தாயுமானவரின் வாக்கின்படி மானுடத்தின் சிந்தைகளில் வாழுகின்ற ஞானகுரு வேதாத்திரி மகரிஷி. அறிவார்ந்த பெருங்கருணையும் தவஞ்சான்ற நல்லமைதியும் ஒன்றாகக் கலந்து இயங்கும் பெருங்கடல். உலக அமைதியை நாடுகின்ற நமது குரு, அறிவியல் ஆன்மீக சித்தராகவும், சிறந்த மகானாகவும், அருள் வள்ளலாகவும், பிரம்ம ரிஷியாகவும், தத்துவ ஞானியாகவும் வாழ்ந்தவர்.

தத்துவம், விஞ்ஞானம், வாழ்க்கை நெறி என்ற சமுதாயத்தின் மூன்று அம்சங்களையும் பாமரரும் புரியும் வண்ணம் மகரிஷியின் எழுத்துக்களில் இருப்பது எல்லாமே பொன்மொழிகளாகும். இந்தப் பொன்மொழிகளைப் படித்து பரவசமடைந்திருப்பீர்கள்! பொன்மொழிகள் ஒவ்வொன்றிலும் உயிர்த்துடிப்பின் சீரான ஒலியைக் கேட்டுக்கொண்டே இருப்பீர்கள்.

குருவின் மூளைக்குள்ளேதான் எத்தனை ஆயிரம் விருட்சங்களின் விதைகள். இந்த விதைகள் - உலகெங்கும் உள்ள மானுடத்தின் மீது - இந்தப் பொன்மொழிகள் மூலம் விதைக்கப்பட்டுள்ளன. திறந்து கிடக்கும் ஞான இரகசியங்களை இனி எளிமையாக ஊடுருவிப் பார்க்க முடியும்.

குருவின் நூற்றாண்டில் இந்தப் பொன்மொழித் தொகுப்புகளை குருவுக்கே அர்ப்பணித்து மகிழ்கிறோம்.

குருவின் தொண்டில்<br>**கே. பானுமதிகுமார்.**

## துணை நின்றவை

- அறிவுத் திருக்கோயில் மலர்கள்.
- அருள்தந்தையிடம் நேரிடையாக கேட்ட உபதேசங்கள்.
- அருள்தந்தையின் பயிற்சிகளிலும் விழாக்களிலும் கருத்தரங்குகளிலும் சேகரித்த விபரங்கள்.
- அருள்தந்தையிடம் நெருக்கமாக இருந்தவர்களிடம் நேரிடையாக எடுத்த பேட்டிகள்.



# ஆசிரியரின் படைப்புகள்

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 பாகம் I & பாகம் II
4. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
5. மாவீரன் நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
6. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
7. தியானம் பழக 100 நற்சிந்தனைகள்
8. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
9. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்
10. பாரதியாரின் 100 பதில்கள்
11. தன்னம்பிக்கை மலர்கள் (நாளொரு நற்சிந்தனைகள்)
12. ஞாபகம் வருதே ஞாபகம் வருதே...
13. மன்னார்குடி வரலாறு
14. ஓய்வுகால வாழ்க்கை
15. செயலே விளைவு (சிறுகதைத் தொகுதி)
16. தவம் (சிறுகதைத் தொகுதி)
17. டென்ஷனை வெல்வது எப்படி?
18. காலமே உன் உயிர்
19. இடைக்காட்டுச் சித்தர்
20. ஏழு ஆலயங்கள்
21. சிம்லாவில் ஐந்து நாட்கள்
22. உடம்பின் உன்னதங்கள்
23. அறிவறிந்த மக்கட்பேறு
24. நினைவாற்றல் கலை
25. தித்திக்கும் திருவாரூர் (அரிய செய்திகள் ஆயிரம்)